
# 2002 அவ்யக்த முரளி



<u>**பொருளடக்கம் - 11**</u>

**18.01.2002** சிநேகத்தின் (உள்ளன்புடன் கூடிய நட்பு) சக்தி மூலமாக, சமர்த் (சக்திசாலி) ஆகுங்கள். எல்லா ஆத்மாக்களுக்கும் சுகம், சாந்தியின் அஞ்சலி வழங்குங்கள்!

**03.02.2002** இலக்ஷியம் மற்றும் இலக்ஷணம் இரண்டையும் சம நிலையில் கொண்டு வாருங்கள். எல்லா பொக்கிஷங்களும். நிரம்பப் பெற்றவராகுங்கள்!

**24.02.2002** பாபாவை பிரத்யக்ஷம் செய்வதற்காக, தன்னுடைய மற்றும் பிறருடைய விருத்தியை (உள்ளுணர்வு) ஆக்கபூர்வமானதாகச் செய்யுங்கள்!

**11.03.2002** விசேஷங்கள் பரமாத்மாவின் அன்பளிப்பு -இவைகளை உலக சேவையில் அர்ப்பணியுங்கள்! (சிவ ஜெயந்தி)

**28.03.2002** இந்த ஆண்டை பணிவு மற்றும் நிர்மலமான (மாசற்ற) ஆண்டாகவும் வீணானவைகளிலிருந்து விடுதலை அடையும் ஆண்டாகவும் கொண்டாடுங்கள்!

**08.10.2002** ஆன்மீக அன்பின் மூர்த்திகளாகி அறிவுரையும், கூடவே ஒத்துழைப்பும் தாருங்கள் (விசேஷமாய் மதுபன் வாசிகளுடன் சந்திப்பு)!

**25.10.2002** பிராமண வாழ்க்கையின் ஆதாரம் தூய்மை என்னும் உயர் நாகரீகம் (ராயல்ட்டி)!

**14.11.2002** பிராமண வாழ்க்கையின் அஸ்திவாரம் மற்றும் வெற்றிக்கு ஆதாரம் -நிச்சய புத்தி!

**30.11.2002** திருப்பி கொடுத்தல் என்ற சப்தத்தின் ஸ்மிருதி (நினைவு) மூலம் பாபாவிற்கு சமமாக ஆகுங்கள் மேலும் திரும்பி பயணம் செல்லும் நினைவு சொரூபம் ஆகுங்கள்!

**15.12.2002** சமய பிரமாணம் லட்சியம் மற்றும் லட்சணத்தின் சமநிலையின் மூலம் பாபா சமமாக ஆகுக!

**31.12.2002** இந்த புத்தாண்டில், எல்லா பொக்கிஷங்களையும் பயன்படுத்தி வெற்றி மூர்த்தி ஆவதற்கான விசேஷத்தைக் காட்டுங்கள்!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## 18.01.2002 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## சிநேகத்தின் (உள்ளன்புடன் கூடிய நட்பு) சக்தி மூலமாக, சமர்த் (சக்திசாலி) ஆகுங்கள். எல்லா ஆத்மாக்களுக்கும் சுகம், சாந்தியின் அஞ்சலி வழங்குங்கள்!

இன்று சக்திசாலியாக இருக்கின்ற தந்தை தன்னுடைய ஸ்மிருதி (நினைவு) சொரூபமாகவும், சக்தி சொரூபமாகவும் இருக்கின்ற குழந்தைகளை சந்திப்பதற்காக வந்துள்ளார். இன்று விசேஷமாக நாலா பக்கங்களிலுமுள்ள குழந்தைகளின் சிநேகத்தின் உற்சாகம், அலை அலையாக வந்து கொண்டேயிருக்கின்றது. விசேஷமாக பிரம்மாபாபாவின் சிநேகம் நிறைந்த நினைவுகளில் குழந்தைகள் மூழ்கியிருந்தனர். இந்த சிநேகம், ஒவ்வொரு குழந்தைக்கும் இந்த வாழ்க்கையில் ஒரு வரதானமாகும். பரமாத்ம சிநேகம் உங்கள் எல்லோருக்கும் புதிய வாழ்க்கையைப் கொடுத்திருக்கிறது. ஒவ்வொரு குழந்தையிடமுள்ள சிநேக சக்திதான் பாபாவினுடையவராக ஆக்கியிருக்கின்றது. இந்த சிநேக சக்தி எல்லாவற்றையும் சுலபமாக்கி விடுகிறது. எப்போது சிநேகத்தில் மூழ்கியிருக்கின்றீர்களோ, அப்போது எந்த ஒரு பிரச்சினையும், கஷ்டமாகத் தெரியாமல், சுலபமானதாக அனுபவம் செய்கிறீர்கள். பாப்தாதாவும், சதா சிநேகத்தில் மூழ்கியிருங்கள் என்று தான் கூறுகின்றார். சிநேகம் பாதுகாப்பு குடைநிழலில் இருப்பது போன்றதாகும். இந்த பாதுகாப்பில் மாயாவினுடைய எத்தகைய நிழலும் பட முடியாது. சுலபமாக மாயாஜீத் ஆகி விடுகிறீர்கள். யாரொருவர் நிரந்தரமாக சிநேகத்துடன் இருக்கிறார்களோ அவர்கள் எந்த ஒரு விஷயத்திலும் கஷ்டப்பட வேண்டியதிருக்காது. சிநேகம் சகஜமாக பாபா சமானமாக ஆக்கி விடுகிறது. சிநேகம் இருக்கும் போது, எதையும் அர்ப்பணம் செய்வது எளிதாகி விடுகிறது.

ஆகவே, இன்றும் அமிர்தவேளை முதல், ஒவ்வொரு குழந்தையும் சிநேகம் என்ற மாலையை பாபாவுக்கு அணிவித்தனர். பாபாவும் கூட சிநேகம் என்ற மாலை அணிவித்தார். எப்படி இந்த விசேஷமான நினைவு நாளில் அதாவது சிநேகம் நிறைந்த நாளில், சிநேகத்தில் மூழ்கியிருந்தீர்களோ, அதுபோலவே சதா மூழ்கியிருங்கள். இப்படியிருந்தால், கஷ்டப்பட்டு புருஷார்த்தம் (முயற்சி) செய்ய வேண்டியதிருக்காது. ஒன்று, சிநேக சாகரத்தில் மூழ்கியே இருப்பது, இன்னொன்று சிநேக சாகரத்தில் கொஞ்ச நேரம் ஒரு முழுக்கு போட்டுவிட்டு வெளியே வந்து விடுவது. அநேக குழந்தைகள் மூழ்கி இருப்பதில்லை. சீக்கிரமாகவே வெளியில் வந்து விடுகிறார்கள். ஆகையால் சுலபமானதும் கூட கஷ்டமாகி விடுகிறது. அப்படியானால் மூழ்கியிருக்கத் தெரியுமா? தெரியுமா? எப்படி மூழ்கியிருப்பதென்று? மூழ்கியிருப்பதிலே தான் ஆனந்தம் இருக்கிறது. பிரம்மாபாபா சிவபாபாவின் மீதுள்ள சிநேகத்தை உள்ளத்தில் அடக்கி வைத்திருந்தார். இதன் ஞாபகார்த்தம் கல்கத்தாவில் காண்பிக்கப்பட்டிருக்கிறது. (பிரம்மபுத்திரா நதி, முகத்துவாரத்தில் கடலுடன் நிரந்தரமாக சங்கமித்திருக்கிறது என்பது தான்).

இப்போது பாப்தாதா குழந்தைகளிடமிருந்து என்ன எதிர் பார்க்கின்றார் என்றால் பாபாவிடம் உண்மையாகவே அன்பு இருக்குமானால் அவருக்குச் சமானமாக ஆகிக் காட்டுங்கள் என்கின்றார். சதா சங்கல்பத்தில் சக்திசாலியாக இருங்கள். இப்பொழுது வீணாவற்றிற்கு நிறைவு விழா கொண்டாடுங்கள். ஏனென்றால், வியர்த்தம் (வீணானது) சமர்த் (சக்தி சாலியாக) ஆக விடாது. மேலும் எதுவரையிலும் நிமித்தமாக இருக்கின்ற குழந்தைகளாகிய நீங்கள் சமர்த் ஆகவில்லை அதுவரையிலும் விஷ்வத்தின் (உலகின்) ஆத்மாக்களுக்கு நீங்கள் சக்தி எப்படி கொடுப்பீர்கள்? எல்லா ஆத்மாக்களும் சக்திகளில் முற்றிலும் காலியாகி விட்டார்கள். சக்திகளை பிச்சை கேட்கும் நிலைக்கு வந்து விட்டார்கள். இப்படி பிச்சைக்காரர்கள் ஆகி விட்ட ஆத்மாக்களுக்கு, ஹே! சமர்த் ஆத்மாக்களே! இந்த பிச்சைக்காரத்தனத்திலிருந்து விடுதலை கொடுங்கள். ஆத்மாக்கள், சக்திசாலி ஆத்மாக்களாகிய உங்களை அழைக்கின்றார்கள். ஹே முக்தி தாதாவின் (முக்தியளிக்கும் வள்ளலின்) குழந்தைகளாகிய, மாஸ்டர் முக்தி தாதாக்களே எங்களுக்கு

முக்தி கொடுங்கள் -இந்த சப்தம் உங்கள் காதுகளில் விழ வில்லையா? கேட்கத் தெரியவில்லையா? இது வரையிலும் நீங்கள் விடுதலையாவதிலேயே கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறீர்களா என்ன? விஷ்வத்தின் ஆத்மாக்களுக்கு, எல்லைக்கப்பாற்பட்ட சொரூபத்தில் மாஸ்டர் முக்தி தாதா ஆகி விட்டால், உங்களுடைய சிறுசிறு விஷயங்களிலிருந்து தானாகவே முக்தியாகி விடுவீர்கள். இப்போது கூக்குரலைக் கேட்கும் நேரம். ஆத்மாக்களின் கூக்குரலைக் கேளுங்கள். கூக்குரலைக் கேட்கத் தெரியுமா? தெரியாதா? குழப்பத்திலிருக்கின்ற ஆத்மாக்களுக்கு, சுகம், சாந்தியின் அஞ்சலி கொடுங்கள். இது தான் பிரம்மாபாபாவை பின்பற்றுவதாகும். (ஃபாலோ பாதர்).

இன்று விசேஷமாக பிரம்மாபாபாவை அதிகமாக நினைவு செய்தீர்கள் அல்லவா? பிரம்மாபாபாவும் கூட எல்லா குழந்தைகளையும் நினைவு மற்றும் சக்திசாலி சொரூபத்தில் நினைவு செய்தார். அநேக குழந்தைகள் பிரம்மாபாபாவுடன் ஆன்மீக சம்பாஷணை (ரூஹ் ரிஹான்) செய்தவாறே, இனிமையான புகாரும் கூறினார்கள். அதாவது (பிரம்மாபாபாவிடம்) நீங்கள் ஏன் இவ்வளவு சீக்கிரமாக சென்று விட்டீர்கள்? அடுத்த புகார், நீங்கள் ஏன் குழந்தைகளிடம் விடைபெற்றுக் கொண்டு செல்லவில்லை? இதற்கு பிரம்மாபாபா பதில் கூறினார் -நானும் கூட சிவபாபாவிடம், என்னை ஏன் திடீரென்று அழைத்துக் கொண்டீர்கள் என்று கேட்டேன். இதற்கு சிவபாபா கூறினார் -ஒருவேளை நான் உங்களிடம் குழந்தைகளிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு வாருங்கள் என்று கூறியிருந்தால், நீங்கள் குழந்தைகளை விட்டு வந்திருப்பீர்களா? அல்லது குழந்தைகள் உங்களுக்கு விடை கொடுத்திருப்பார்களா? நீங்கள் கடைசியில் "நஷ்டமோஹா ஸ்மிருதி லப்தா" சொரூபத்தில் இருந்தீர்கள் என்பதற்கான ஞாபகார்த்தம்தான் அர்ஜுனன். பிறகு பிரம்மாபாபா புன்முறுவல் செய்தவாறே கூறினார் -இது ஒரு விந்தையாகவே இருக்கின்றது. குழந்தைகளுக்கு நான் சென்று விடுவேன் (பிரம்மாபாபா) என்று தெரியவில்லை. நான் சென்று விடுவேன் என்பது எனக்கும் தெரியவில்லை. எதிரெதிரே இருந்தபோதும் இரு சாராருமே மௌனமாகவே இருந்தனர். ஏனெனில் காலப் பிரமாணப்படி (சன் சோஷ் ஃபாதர்) தந்தையைப் போல் தனயன் என்ற பார்ட் டிராமாவில் நிச்சயிக்கப்பட்டிருந்தது. இதற்குத்தான் ஆஹா

டிராமா ஆஹா என்று சொல்லப்படுகிறது. சேவையில் மாற்றம் நிச்சயிக்கப்பட்டிருந்தது பிரம்மாபாபா குழந்தைகளின் முதுகெலும்பாக ஆக வேண்டியதாக இருந்தது. அவ்யக்த ரூபத்தில் துரித (ஃபாஸ்ட்) சேவை செய்ய வேண்டிதாகவும் இருந்தது.

விசேஷமாக இன்று இரட்டை அயல்நாட்டவர்கள் மிகவும் இனிமையிலும் இனிமையான புகார்களைக் கூறினர். டபுள் ஃபாரினர்ஸ் புகார் கொடுத்தனர். டபுள் ஃபாரினர்ஸ் பிரம்மாபாபாவிடம் கூறினர், நீங்கள் இரண்டு மூன்று வருடங்கள் இருந்திருந்தீர்கள் என்றால் நாங்கள் உங்களை சந்தித்திருப்போம். இதற்கு பிரம்மாபாபா புன் சிரித்தவாறே கூறினார், சிரிப்பு வருவது எதனால் என்றால் நீங்கள் டிராமா ஏன் இப்படிச் செய்தது என்று டிராமாவிடம் கேட்டுப் பாருங்கள்; ஆனால் உள் நாட்டிலும், வெளி நாட்டிலும் "லாஸ்ட் ஸோ பாஸ்ட்" உதாரணம் ஆக வேண்டியதாகத்தான் இருந்தது. அதனால் லாஸ்ட் ஸோ பாஸ்ட்'டினுடைய பிரத்யக்ஷத்தை தத்ரூபமாகக் காட்டுங்கள். எப்படி ஒன்று "சமர்த் திவஸ்" (சக்தி நிறைந்த நாள்) கொண்டாடினீர்களோ, அதே போலவே இப்போது ஒவ்வொரு நாளும் சமர்த் திவஸ் ஆக இருக்கட்டும். எந்த ஒரு குழப்பமும் இருக்கக்கூடாது. நல்லது. இப்போது முக்தி கொடுப்பதற்கான மெஷினரியை துரிதப்படுத்துங்கள்.

நேர்முகம்: நல்லது. இந்தக் கல்பத்தில் இந்த தடவை முதன் முதலாக இங்கு வந்திருப்பவர்கள் கை உயர்த்துங்கள். புதிது, புதிதாக வந்து கொண்டிருக்கும் குழந்தைகளுக்கு பாப்தாதா விசேஷ அன்பு நினைவுகளை அளிக்கின்றார். ஏனென்றால், காலம் கடக்கும் முன் பாபாவை புரிந்து கொண்டு, ஆஸ்திக்கு அதிகாரியாகி விட்டார்கள். சதா தங்களுடைய இந்த பாக்கியத்தை நினைவில் வைக்க வேண்டும், நாங்கள் தந்தையை அறிந்து கொண்டோம். நல்லது. இரட்டை அயல்நாட்டவர்கள் கை உயர்த்துங்கள். ரொம்ப நல்லது. இரட்டை அயல்நாட்டவர்களுக்கு பாப்தாதா கூறுகின்றார், நீங்கள் பிரம்மாவின் சங்கல்பத்தின் மூலமாக பிறவி எடுத்தவர்கள். ஒன்று நேரடி வாய் மூலமான வம்சாவளியினர். இரண்டாவது, சங்கல்ப மூலம் வம்சாவளி. சங்கல்ப சக்தி பெரிய மகான் தன்மையுடையது. எவ்வாறு சங்கல்ப சக்தி வேகமாக உள்ளதோ, அதைப்போன்று உங்களுடைய படைப்பும் வேகமாக இருக்கிறது. இரட்டை அயல்நாட்டவர்கள் (ஃபாஸ்ட்)

வேகமான புருஷாரத்திகள் மேலும் (ஃபாஸ்ட்) சீக்கிரமாக பாக்கியத்தை அனுபவம் செய்பவர்கள். ஆதலால் முழு பிராமண பரிவாரத்தில் இரட்டை அயல்நாட்டவர்கள், டபுள் பிரியமானவர்கள். பாரதத்திலுள்ள சகோதர, சகோதரிகள் உங்களைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறார்கள். ஆஹா இரட்டை அயல்நாட்டவர்கள் ஆஹா! குஷியாக இருக்கிறதல்லவா! டபுள் பாரினர்ஸ்களுக்கு ரெம்பவும் குஷியாக இருக்கிறது. எவ்வளவு குஷி? நிறைய இருக்கிறதா? இது எவ்வளவு இருக்கும் என்று நிறுத்துப் பார்த்து தெரிந்து கொள்வதற்கான கருவி ஒன்றுமில்லை. டபுள் ஃபாரின் (வெளி நாடுகளிலும்) கேட்டுக் கொண்டிருக்கின்றனார், பார்த்துக் கொண்டுமிருக்கின்றனர். நல்லது. இந்த விஞ்ஞான சாதனம், உங்களுக்கு எல்லையற்ற சேவை செய்வதற்கு உதவியாக இருக்கும் மேலும் இதன் மூலம் சுலபமாக சேவை செய்ய முடியும். விஞ்ஞானத்தின் இந்த முன்னேற்றம் கூட உங்களுடைய ஸ்தாபனை காரியத்தோடு சம்பந்தப்பட்டிருக்கிறது

நல்லது. எல்லா பாண்டவர்களும் சக்திசாலிகள் தானே! பலவீனமானவர்கள் இல்லையல்லவா! எல்லோரும் சக்திசாலிகள் மேலும் சக்திகளும் பாபாவிற்கு சமமானவர்கள்தானே? சக்திகளினுடைய சக்தி மாயாஜீத் ஆக்கக் கூடியது. நல்லது.

இன்று விசேஷ அலங்காரம் செய்யக் கூடியவர்களும் வந்திருக்கிறார்கள். கல்கத்தாவிலிருந்து மலர் கொண்டு வந்திருக்கிறார்கள். எல்லா இடங்களிலும் மலர்களால் நன்றாக அலங்காரம் செய்திருக்கிறார்கள். இதுவும் சிநேகத்தின் அடையாளம். நல்லது. தங்களுடைய சிநேகத்தை இவ்வாறு காட்டிக் கொண்டார்கள். நல்லது. டீச்சர்கள் கை உயர்த்துங்கள். ஒவ்வொரு குருப்பிலும் டீச்சர்ஸ் நிறைய வருகிறார்கள். டீச்சர்களுக்கு நல்ல வாய்ப்பு (சான்ஸ்) கிடைத்துக் கொண்டேயிருக்கிறது. சேவை செய்ததற்கான பிரத்யக்ஷ பலன் கிடைத்து விடுகிறது. நல்லது. இப்போது உங்களுடைய தோற்றத்தின் மூலமாக, நீங்கள் வருங்காலத்தில் என்னவாக ஆகப்போகிறீர்கள் என்பதை சாட்சாத்காரம் செய்வியுங்கள், கேட்டீர்களா? என்ன செய்ய வேண்டும்? நல்லது.

மதுபன் வாசிகள் கை உயர்த்துங்கள்! ரொம்பவும் நல்லது. மதுபன் வாசிகளுக்கு நிறைய சான்ஸ் கிடைக்கிறது. ஆதலால் பாப்தாதா கூறுகின்றார் நீங்கள் ஆன்மீக சான்ஸ்லர்ஸ். அப்படித்தானே? சான்ஸ்லரா? சேவை செய்ய வேண்டியதாயிருக்கும் என்றாலும் எல்லோரையும் மதுபன் வாசிகள் திருப்திப்படுத்தி விடுகிறார்கள். ஆகவே தான் பாப்தாதா ஒரு போதும் மதுபன் வாசிகளை மறப்பதில்லை. மதுபன் வாசிகளை தனிப்பட்ட முறையில், முக்கியமாக நினைவு செய்கிறார். ஏன் நினைவு செய்கிறார், மதுபன் வாசிகளை? ஏனென்றால், மதுபன்வாசிகள் பாபாவுடனான அன்பில் மெஜாரிட்டி பாஸ். மெஜாரிட்டி. பாபாவிடம் அன்பு துண்டிக்கப்படாததாக உள்ளது. மதுபன் வாசிகள் குறைந்தவர்கள் அல்ல. மிகவும் நல்லவர்கள்.

இந்தூர் ஜோன் சேவாதாரிகள் வந்திருந்தனர்: இந்தூர் ஜோனிலிருந்து வந்திருப்பவர்கள் கை உயர்த்துங்கள். நிறைய பேர் வந்திருக்கிறீர்கள், மிகவும் நல்லது. சேவை செய்வது என்றால் அருகாமையில் வருவதற்கான பழம் சாப்பிடுவது. சேவைக்கான சான்ஸ் எடுப்பது என்பது புண்ணியம் சேமிப்பது. ஆசீர்வாதங்களை சேமிப்பது. ஆகவே, எல்லா சேவாதாரிகளும் உங்களுடைய புண்ணிய கணக்கை சேமித்தீர்களா? இந்த ஆசீர்வாதங்கள் மற்றும் புண்ணியம் எனும் “எக்ஸ்ட்ரா லிப்ட்" வேலை செய்கிறது. நல்லது.

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இருப்பவர்கள் தூரமாக இருந்தாலும், சமீபத்தில் இருக்கிறார்கள். எல்லா குழந்தைகளுக்கும் பாப்தாதா சிநேக தினமான இன்று, சிநேகத்திற்கு கைமாறாக நூறு மடங்கு சிநேகத்துடன் அன்பு நினைவுகளை அளிக்கின்றார். பாப்தாதா பார்க்கின்றார். வெளி நாடுகளில், ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு விதமான நேரமாக இருக்கும். இரவு, பகல் மாற்றமிருக்கும். இருந்தாலும் கூட, பிரகாசமாக ஒளி வீசிக் கொண்டேயிருக்கும் ஜோதி போல, களைப்பின்றி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள், மகிழ்ச்சியடைகிறார்கள். பாப்தாதா, குழந்தைகளின் மகிழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். சொல்லுங்கள், நீங்கள் குஷியில் ஆனந்த நடனம் செய்கிறீர்கள் தானே? எல்லோரும் தலையை அசைக்கிறார்கள். ஆம் பாபா. ஜனக் குழந்தையும் கூட (தாதி ஜானகி) மிகவும் இனிமையாக புன்முறுவல் செய்து கொண்டிருக்கின்றார்.

பொதுவாக, எல்லோர் மீதும் பாபாவுக்கு நினைவு இருக்கிறது ஆனால், எத்தனை பேரின் பெயர்களை எடுப்பது? அநேக குழந்தைகள் இருக்கின்றார்கள் அதலால் பாப்தாதா கூறுகின்றார் ஒவ்வொரு குழந்தையும் தங்கள், தங்கள் பெயருடன் அன்பு நினைவுகளை ஸ்வீகாரம் (அங்கீகரித்தல்) செய்து, கொண்டிருக்கிறார்கள். மேலும், செய்து கொண்டே இருக்க வேண்டும். நல்லது. இப்போது ஒரு வினாடியில், நிராகாரி ஸ்திதியில் நிலைத்திருங்கள். (டிரில் செய்வித்தார்).

"லிவிங் வேல்யூஸ்" (Living values -நிலையான நற்குணங்கள் பயிற்சி வகுப்பு நடந்து கொண்டிருக்கிறது. இது சேவைக்கான நல்ல சாதனம். இந்தப் பயிற்சியை செய்து கொண்டே, தங்களுடைய இனிமையான வாழ்க்கைக்கு தேவையான அப்பியாசத்தை அதிகப்படுத்திக் கொண்டேயிருக்க வேண்டும்.

**நல்லது. பாப்தாதா இன்று குல்ஜார் குழந்தைக்கு ஒரு விஷயம் சொல்லிக் கொண்டிருந்தார். விசேஷமாக நல் வாழ்த்துக்களை அளித்தார். பிரம்மா உடலில் சேவை செய்தது போலவே, இந்த ரதமும் 33-ஆண்டுகள் முடித்து விட்டது (1969-2002). இந்த "பார்ட்" டிராமாவில் உள்ளது. பாபாவின் உதவி மற்றும் குழந்தையின் தைரியம் இரண்டும் சேர்ந்து பார்ட் செய்யப்படுகிறது. நல்லது.**

சதா சிநேகத்தில் மூழ்கியிருக்கின்ற எல்லோருக்கும், சதா அன்பில் மூழ்கியிருக்கின்றவர்கள், சதா கராவன்ஹார் ஆத்ம சொரூபத்தில் நிலைத்திருப்பவர்கள், சதா மூன்று வார்த்தைகளில் அடங்கிய "சிவ மந்திரத்தை பிரத்யக்ஷ வாழ்க்கையில் கொண்டுவந்து கொண்டிருக்கின்றவர்கள், சதா பாபா சமானமாக, மாஸ்டர் முக்தி தாதாவாகி. விஷ்வத்திலுள்ள (உலகிலுள்ள) ஆத்மாக்களுக்கு, முக்தி அளிக்கக்கூடியவர்கள் ஆகிய இப்படிப்பட்ட, சர்வ சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே,

தாதிஜியுடன்: (இன்றைய தினம், குழந்தைகள்) பாபா குழந்தைகளை விசேஷமாக உலகின் முன்னே பிரத்யக்ஷம் செய்தார். பாபா செய்விப்பவர் ஆனார். குழந்தைகளை செய்பவர்கள் ஆக்கினார். நல்லது.

இந்த சிநேகத்தின் அலைகள் அனைவரையும் அடக்கிக் கொண்டு விடுகிறது. நல்லது. சரீரத்தை நடத்துவதற்கான விதி பற்றி தெரிந்து கொண்டும் விட்டீர்கள். நடத்தி, நடத்தி, பாபா சமானமாக அவ்யக்கம் ஆகி விடுவீர்கள். சகஜ புருஷார்த்தம், ஆசீர்வாதங்கள். முழு நாளும் எந்த ஒரு கோபமும் படக்கூடாது, ஆசீர்வாதம் கிடைக்கும். இது தான் பர்ஸ்ட் கிளாஸ் புருஷார்த்தம். சகஜமானதும் கூட (பர்ஸ்ட் கிளாஸ்) முதல் தரமானதும் கூட சரிதானே. சரீரம் எப்படி இருந்தாலும் சரி. ஆத்மா சக்திசாலி தானே? குழந்தைகளாகிய நீங்கள் 14-ஆண்டு காலமாக, தபஸ்யா செய்தீர்கள். அந்த தபஸ்யாவின் சக்தி, சேவை செய்வித்துக் கொண்டிருக்கிறது. இப்போது உங்களுக்கு நிறைய தோழிகள் ஆகி விட்டனர். நல்ல நல்ல சேவையின் தோழிகள். உங்களைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறார்கள். இதுவே போதுமானது சரிதான்.

**முக்கிய மூத்த சகோதரர்களுடன் நேர்முகம்:** டிராமாபடி சேவைக்காக எப்படிப்பட்ட பிளான் செய்கிறீர்களோ, அது நன்றாகவே நடந்து கொண்டிருக்கிறது. மேலும் ஒவ்வொருவரும், சதா எல்லோருடனும் சிநேகம் மற்றும் ஆசீர்வாதம் பெறுவதற்காக, குழந்தை மற்றும் எஜமானன் என்ற பாடத்தை பக்காவாகச் செய்து ஒருவரையொருவர் முன்னேற்றிக் கொண்டு, ஒருவரையொருவர் ஆலோசனைகளுக்கு மதிப்பளித்துக் கொண்டே முன்னேறிக் கொண்டேயிருந்தால், வெற்றி மேல் வெற்றிதான். வெற்றியடையத்தான் வேண்டும் ஆனால் இப்போது, யாரெல்லாம் நிமித்தமாக இருக்கின்றார்களோ அவர்களை விசேஷ சிநேக சம்பந்தத்தில் கொண்டு வரவேண்டும். இவர்கள் அனைவருடைய புருஷார்த்தத்தையும் தீவிரப்படுத்த வேண்டும். சிநேகம் சுயநலமற்ற அன்பு யாரிடம் நிஸ்வார்த் சிநேகம் உள்ளதோ, அவர்கள் மதிப்பு கொடுப்பார்கள், மதிப்பை பெறுவார்கள். தற்சமயம் சிநேக மாலையில் எல்லோரும் இணைந்திருக்க வேண்டும். இதுதான் விசேஷ ஆத்மாக்களின் காரியம். மேலும் இதன் மூலமாகவே சிநேகம் சம்ஸ்காரத்தை மாற்றம் செய்ய முடியும். ஞானம் ஒவ்வொருவரிடமும் உள்ளது ஆனால் சிநேகம் எப்படிப்பட்ட சம்ஸ்காரமுடையவர்களையும் சமீபத்தில் கொண்டு வந்து விடும். சிநேகத்தினுடைய இரண்டே சப்தம் சதா காலத்திற்கும் அவர்களுடைய வாழ்க்கையில் துணையாக இருக்க முடியும். நிஸ்வார்த் (சுயநலமற்ற) சிநேகம் சீக்கிரம் சீக்கிரமாக

மாலையை தயாராக்கி விடும். பிரம்மாபாபா என்ன செய்தார்? சிநேகத்தால் எல்லோரையும் தன்னுடையவராக்கிக் கொண்டார். ஆதலால் இப்போது இதற்கு அவசியமாக இருக்கிறது. இருக்கிறதல்லவா? ("சோனிபட்"க்காக மீட்டிங் நடந்து கொண்டிருக்கிறது). அங்கே அனுபவம் செய்விப்பதற்காக, சாதனங்களை எப்படி பயன்படுத்துவது? அவர்கள் பிளான் செய்து கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொருவருடைய சங்கல்பத்தையும் ஆலோசனையையும், மெஜாரிட்டியாக எதை ஏற்றுக் கொள்கிறார்களோ, அப்படி செய்யுங்கள். எப்போது அனுபவ சொரூபமாகிறார்களோ அப்போது தான் அனுபவம் செய்விக்க முடியும். நல்லது. .

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 03.02.2002 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இலக்ஷியம் மற்றும் இலக்ஷணம் இரண்டையும் சம நிலையில் கொண்டு வாருங்கள். எல்லா பொக்கிஷங்களும். நிரம்பப் பெற்றவராகுங்கள்!

இன்று எல்லா பொக்கிஷங்களின் எஜமான் (பாபா) பொக்கிஷங்களால் நிறைந்து இருக்கின்ற, தன்னுடைய குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு குழந்தையும், எல்லா பொக்கிஷங்களாலும் நிறைந்து இருக்கின்றனர். யாரொருவர் சம்பன்னமாக (நிரம்பி) இருக்கின்றாரோ அவருடைய அடையாளம், சதா பிராப்தி சொரூபமாக, திருப்தியுள்ள ஆத்மாவாக காணப்படுவார். சதா மகிழ்ச்சி (குஷி)யுடனிருப்பார். ஏனெனில் நிறைந்திருக்கின்றார். ஆதலால் ஒவ்வொருவரும், தன்னிடம் எவ்வளவு பொக்கிஷங்கள் சேமிப்பாகியிருக்கின்றன என்று, தன்னிடமே கேளுங்கள். இந்த அழிவற்ற பொக்கிஷம் இப்போதும் இருக்கின்றது. எதிர் காலத்தில் அநேக ஜன்மங்கள் கூடவே இருக்கும். இந்த பொக்கிஷம் தீர்ந்துபோய்விடக்கூடியது அல்ல. எல்லா வற்றிலும் முதன்மையான பொக்கிஷம் பொக்கிஷம். இந்த ஞான பொக்கிஷத்தின் மூலமாக, இந்த ஞானப் சமயத்திலும் கூட, நீங்கள் எல்லோரும் முக்தி, மற்றும் ஜீவன் முக்தியை அனுபவம் செய்து கொண்டிருக்கிறீர்கள். வாழ்ந்து கொண்டிருக்கும்போது, பழைய உலகில் இருந்தாலும், தமோகுணி வாயுமண்டலத்தில் இருந்தாலும், ஞானப் பொக்கிஷத்தின் ஆதாரத்தில் எல்லாவிதமான வாயுமண்டலம் மற்றும் அதிர்வலைகளிலிருந்து, விலகி பாதிப்பிற்குள்ளாகா'மல், தாமரை மலர் போன்று, துக்கத்திலிருந்தும், கவலைகளிலிருந்தும், அசாந்தியிலிருந்தும், விலகியவர்களாகவும், விடுதலையடைந்தவர்களாகவும் (முக்தி) இருக்கின்றீர்கள். வாழ்க்கையிலிருந்தாலும் தீமைகளால்

தீண்டப்படாமல் விடுதலை பெற்றவர்களாக இருக்கிறீர்கள். வீணான எண்ணங்கள் எனும் புயலால் பாதிக்கப்படாமல் இருக்கிறீர்கள். இவ்வாறு முக்தியடைந்தவர்களாக இருக்கின்றீர்கள் அல்லவா? எல்லோரும் கை அசைக்கிறார்கள். ஆகவே, முக்தியும், ஜீவன்முக்தியும், இந்த ஞானப் பொக்கிஷத்தின் பலன், பிராப்தி. வீணான எண்ணங்கள் வருவதற்கு முயற்சி செய்கின்றன. எதிர்மறையான (நெகடிவ்) எண்ணங்களும் வருகின்றன. ஆனாலும், வீணான மற்றும் எதிர்மறை எண்ணங்களின் வேலை, வருவது தான் ஆனால் ஞானி ஆத்மாக்களின் வேலை, இதிலிருந்து விடுபட்டு, விலகி, பாபாவின் அன்பிற்கு பாத்திரமாயிருக்க வேண்டும் என்பதாகும். இதற்கான, ஞானம் அதாவது அறிவு இருக்கிறது. ஆதலால் சோதித்துப் பாருங்கள். ஞானப் பொக்கிஷத்தை அடைந்திருக்கிறீர்களா? நிரம்பி இருக்கிறதா? முழுமையாக நிரம்பி இருக்கிறதா? அல்லது குறைவாக இருக்கிறதா? ஒருவேளை குறைவாக இருந்தால், அதை சேமித்து விடுங்கள். காலியாக இருக்கக்கூடாது.

இதுபோலவே, யோகம் என்ற பொக்கிஷம். இதன் மூலம் சர்வ சக்திகளும் பிராப்தியாகின்றன. ஆதலால் யோகப் பொக்கி ஷங்கள் மூலமாக சர்வ சக்திகளும் சேமிப்பாகியிருக்கின்றன வா, என்று உங்களைப் பார்க்க வேண்டும். எல்லாம். ஏதாவது ஒரு சக்தி குறைவாக இருந்தாலும், வேண்டும்போது ஏமாற்றி விடும். உங்கள் எல்லோருடைய அந்தஸ்து (டைட்டில்) எது? மாஸ்டர் சர்வ சக்திவான் அல்லவா? சக்திவான் அல்ல, சர்வசக்திவான். அப்படியானால் சர்வ சக்திகளின் பொக்கிஷம் யோக பலத்தின் மூலம் சேமிப்பாகியிருக்கிறதா? முழுமையாக நிரம்பி இருக்கிறதா? பிராப்தி சொரூபமாக இருக்கிறீர்களா? அல்லது குறைவாக இருக்கிறதா? ஏன்? இப்போது குறையை நிரப்பிக் கொள்ள முடியும். இப்போது நேரம் இருக்கிறது. பிறகு, முழுமையாக நிரப்பிக் கொள்வதற்கான நேரம் முடிந்து விட்டால், குறை, குறையாகவே இருந்து விடும். சோதியுங்கள். ஒவ்வொரு சக்தியையும் எதிரில் கொண்டு வாருங்கள். முழு நாளில் என்ன நடந்தது என்பதை சோதித்துப் பாருங்கள். ஒருவேளை சதவிகிதம் குறைாக இருந்தால் முழுபாஸ் (ஃபுல் பாஸ்) என்று சொல்ல முடியாது. ஏனென்றால், உங்கள் எல்லோருடைய இலக்ஷியம் என்ன? எந்த ஒரு குழந்தையிடமும் நீங்கள் ஃபுல் பாஸ் ஆக வேண்டுமா?

அல்லது அரை பாஸ் ஆக வேண்டுமா? என்று கேட்டால், எல்லோரும் என்ன சொல்கிறார்கள்? நாங்கள் சூரியவம்சி ஆவோம். சந்திரவம்சி ஆக மாட்டோம் என்று கூறுகின்றார்கள். சந்திரவம்சி ஆகுங்கள், பாப்தாதா நல்ல சிம்மாசனம் தருவார் என்று சொன்னால், சந்திரவம்சி ஆவீர்களா? ஃபாரினர்ஸ்? இந்தியர்கள் சூரியவம்சி ஆகட்டும், ஃபாரினர்ஸ் சந்திரவம்சிகளாகட்டும் அப்படியா? இல்லை. சந்திரவம்சியாக மாட்டோம். சூரியவம்சிகளாக வேண்டுமா? ஆகத்தான் வேண்டும். பாப்தாதா குழந்தைகளோடு சம்பாஷணை செய்வதற்காக இப்படிக் கூறினார். சூரியவம்சி ஆகத்தான் வேண்டும் என்று திடமாக நிச்சயம் செய்து விட்டீர்கள். பாபாவிடமும், உங்களிடமும் உறுதிமொழி எடுத்துக் கொண்டீர்கள். ஆதலால் இப்போது முதல், எந்த ஒரு சக்தியிலும் சதவிகிதம் குறையவே கூடாது. ஒருவேளை சூழ்நிலை ஒத்துவரவில்லை, பிரச்சினைகள் வந்து விட்டது என்று ஏதாவதொரு காரணத்தால் சதவிகிதம் குறைந்து போய் விட்டால், 14-கலை உடையவர்களாக ஆகி விடுவீர்கள். ஆதலால், பாப்தாதா இந்த சமயத்தில் நாலா பக்கங்களிலுமுள்ள எல்லா குழந்தைகளின் கணக்கு நோட்டை சோதித்துக் கொண்டிருக்கின்றார். பாப்தாதாவிடம் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக நோட் புத்தகம் இருக்கிறது. ஏனென்றால் காலத்தின் கணக்குப்படி, முன் கூட்டியே பாப்தாதா குழந்தைகளுக்குத் தெரிவிக்கின்றார். நேரம் வெகுவேகமாக நகர்ந்து கொண்டிருக்கிறது. எப்போது என்று கேட்காதீர்கள். இப்போதே. அப்போது ஆகி விடும். செய்து விடுவோம், ஆகத்தான் போகிறோம் என்றெல்லாம் யோசிக்காதீர்கள். ஆகி விடுவோம் என்பதல்ல. இப்போதே செய்யத்தான் வேண்டும். காலம் வெகு தீவிரமாக சென்று கொண்டிருக்கிறது. ஆதலால், பாபா சமானமாக வேண்டும், ஃபுல்பாஸ் ஆக வேண்டும், 16-கலை சம்பூரண சம்பன்னமாக வேண்டும் என்று எந்த இலக்ஷியம் வைத்திருக்கிறீர்களோ, அது நிறைவேற வேண்டும் என்றே பாப்தாதா விரும்புகின்றார். ஆதலால் இலக்ஷியம் மற்றும் இலக்ஷணம் இரண்டும் நடைமுறையில் சமமாக இருக்க வேண்டும். எப்போது, இலக்ஷியமும், இலக்ஷணமும் சமமாக ஆகி விடுகிறதோ, அப்போது பாபா சமானமாக சுலபமாகவே ஆக முடியும். ஆதலால் சோதியுங்கள். ஆகி விடும். ஆகத்தான் போகிறோம் என்பது அலக்ஷிய பாவனை. என்ன செய்ய வேண்டும்? எப்படி ஆக வேண்டும்? என்ற இலக்ஷியம் இருக்கிறதல்லவா? அதை இப்போதே செய்ய வேண்டும். ஆகவும்

வேண்டும். பிறகு என்ற வார்த்தையே வேண்டாம். இப்போதே. இந்த கூஷணத்திலிருந்தே.

ஞானப்பொக்கிஷம், யோகப் பொக்கிஷம், பிறகு தாரணை என்னும் பொக்கிஷம். தாரணை மூலம் குணங்களின் பொக்கிஷம் சேமிப்பாகும். குணங்களிலும் கூட, எப்படி சர்வ சக்திகள் என்று கூறுகின்றோமோ, அதுபோல சர்வ குணங்கள் இருக்கின்றன. குணம் மட்டுமல்ல, சர்வ குணம். அப்படியானால் சர்வ குணங்கள் இருக்கின்றனவா? யோசிக்கிறார்கள்! ஓரிரண்டு குணங்கள் குறைவாக இருந்தால் என்ன, பரவாயில்லை என்று நினைக்கிறார்கள். அப்படியல்ல. சர்வ குணங்களின் பொக்கிஷம் சேமிப்பில் இருக்க வேண்டும். இருக்கின்றதா? ஏதாவது ஒரு குணம் குறைவாக இருக்கிறதா? என்று சோதித்து, சேமித்து நிரப்பி சமன் செய்து விடுங்கள்.

நான்காவது, சேவை. சேவை மூலமான அனுபவம் எல்லோருக்கும் இருக்கின்றது. மனம், சொல், செயல் மூலமாக சேவை செய்யும் போது, அதன் பிராப்தியாக ஆன்மீக குஷி கிடைக்கிறது. ஆதலால் சேவை மூலம் குஷியின் அனுபவம் எவ்வளவு இருக்கின்றது என்பதை சோதித்துப் பாருங்கள். ஒருவேளை சேவை செய்தாலும், குஷி அனுபவம் இல்லை என்றால், அது யதார்த்த ரீதியான சேவை இல்லை. சேவையில் ஏதோ ஒரு குறை இருக்கிறது என்று பொருள். ஆகவே குஷி இருப்பதில்லை. சேவை என்பதன் பொருள், ஆத்மாவானது, தான் மகிழ்ச்சியில் திளைத்திருப்பதாகவும், மலர்ந்த, ஆன்மீக ரோஜா மலர், மகிழ்ச்சி எனும் ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருப்பதான அனுபவத்தில் இருக்கும். ஆதலால் சோதித்துப் பாருங்கள். நாள் முழுவதும் சேவை செய்தோம். சேவை செய்த அளவுக்கு எவ்வளவு குஷி இருக்க வேண்டுமோ, அவ்வளவு குஷியின் அனுபவம் இருந்ததா? அல்லது வேறு வித சிந்தனைகளில் நேரம் கடந்து விட்டதா என்று யோசித்துப் பாருங்கள். இதுவல்ல, இதுவல்ல. நீங்கள் சேவை செய்ததினால் உண்டான குஷியின் பிரபாவம் சேவை செய்த இடத்தில் இருக்க வேண்டும். இரண்டாவது சேவையில் உடன் இருந்தவர்களிடம் இருக்க வேண்டும். மூன்றாவது, எந்த ஆத்மாக்களுக்கு சேவை செய்தோமோ, அந்த ஆத்மாக்களின் வாயுமண்டலம் மகிழ்ச்சியில் இருக்க வேண்டும்.

இது தான் சேவை செய்ததன் காரணமாக அனுபவம் செய்கின்ற குஷி என்னும் பொக்கிஷம்.

இன்னும் என்ன இருக்கிறது? நான்கு பாடங்கள் வந்து விட்டன. மற்றபடி சம்மந்தம் மற்றும் தொடர்பு. இதுவும் அவசியம். ஏன்? அநேக குழந்தைகள் எனக்குத்தான் பாப்தாதாவுடன் சம்மந்தம் இருக்கிறதல்லவா என்று நினைக்கிறார்கள். பரிவாரத்தோடு சம்மந்தம் இருந்தால் என்ன, இல்லாமல் போனால் தான் என்ன? விதையாக இருக்கின்றவ ரோடு சம்மந்தம் இருக்கின்றதல்லவா? என நினைக்கிறார்கள் ஆனால் நீங்கள் உலகை ஆள வேண்டுமல்லவா? இராஜ்யத்தில் சம்மந்தத்தில் வரத்தான் வேண்டும். ஆதலால் சம்மந்தம், தொடர்பில் வர வேண்டும். சம்மந்தத்தில் யதார்த்தமான பொக்கிஷம் கிடைக்கிறது, அது தான் ஆசீர்வாதம். சம்மந்தம் மற்றும் தொடர்பில் வரவில்லை யேல், ஆசீர்வாதம் என்னும் பொக்கிஷம் சேமிப்பாகாது. தாய், தந்தையரின் (பாப்தாதா) ஆசிகள் இருக்கின்றன ஆனால் சம்மந்தம் மற்றும் தொடர்பில் ஏதோ குறை இருக்கிறது என்பதாகும். யதார்த்த ரீதியில், சம்மந்தம், தொடர்பு இருக்குமானால், ஆசீர்வாதங்கள் பெறுவதன் அனுபவம் ஆக வேண்டும். மேலும் ஆசீர்வாதங்களின் அனுபவம் என்னவாக இருக்கும்? அனுபவசாலிகள் தானே! சேவையின் மூலம் ஆசீர்வாதம் கிடைத்திருக்கிறது என்றால், சுயம் இலகுவாக (பாரமின்றி) இருக்கின்ற அனுபவம் இருக்கும். மேலும் யாருடைய சம்மந்தத்தில் வந்தோமோ (இருமல் வந்து கொண்டிருக்கிறது) இசைக்கருவி (தொண்டை) சரியாக இல்லை. என்றாலும் எப்படியாவது நடத்த வேண்டுமல்லவா!

ஆசிகள் கிடைத்திருக்கின்ற அனுபவம் எப்படி இருக்கு மென்றால், சுயம் சம்மந்தத்தில் வந்தாலும், காரியங்கள் செய்தாலும் "டபுள் லைட்" ஆக இருப்பார். ஹல்கா, பாரமாக அனுபவம் செய்ய மாட்டார்கள். யாருடைய சேவைக்காக, சம்மந்தம், தொடர்பில் வந்தாரோ அவர்களாலும் கூட டபுள் லைட் அனுபவம் செய்வார்கள். இந்த சம்மந்தம் சதா இலகுவாக, எளிதானதாக, இருக்கின்ற அனுபவம் செய்வாரே தவிர பாரமாக நினைக்க மாட்டார்கள். சம்மந்தத்தில் வரலாமா? வேண்டாமா? என்று நினைக்கக் கூடாது. சம்மந்தத்தில் ஆசிகள் கிடைப்பதன் காரணமாக, இரண்டு பக்கமும்

(ஒருவருக்கொருவர்) நியமப்படி நடந்து கொள்ள வேண்டும். இனிப்பை நோக்கி எறும்புகள் வருவதைப்போல, அதிக நெருக்கத்திலும் வந்து விடக்கூடாது. அப்படி நெருக்கமாக இல்லாமல், டபுள் லைட் ஆக இருப்பார்கள். ஆதலால் பாப்தாதா கூறுகின்றார்: உங்களுடைய பொக்கிஷத்தை சோதித்துப் பாருங்கள். கொஞ்சம் அவகாசம் தருகின்றேன். இப்போது நேரம் முடிந்து விட்டதற்கான போர்டு தொங்க விடப்படவில்லை. ஆதலால் சோதியுங்கள், முன்னேறிச் செல்லுங்கள்.

பாப்தாதாவுக்கு குழந்தைகளிடம் அன்பு இருக்கிறதல்லவா? ஆதலால் எந்த ஒரு குழந்தையும் பின் தங்கி விடக்கூடாது என்று பாப்தாதா நினைக்கின்றார். ஒவ்வொரு குழந்தையும், ஒருவர் மற்றவரைக்காட்டிலும், முந்திச் செல்ல வேண்டும் ஆனால் முன்னேறி சென்று கொண்டிருக்கும்போது, இடையில் அபிமானம் வந்து விடுகிறது. ஸ்வமான் மற்றும் தேக அபிமான். தேக அபிமானத்திற்கு காரணம் ஸ்வமானில் குறை இருப்பது தான். தேக அபிமானத்தை முற்றிலும் நீக்குவதற்கான எளிதான சாதனம் தேக அபிமானம் வருவதற்கு ஒரே ஒரு எழுத்து, ஒரே ஒரு சப்தம், அதை நீங்கள் அறிவீர்கள். தேக அபிமானத் தின் ஒரு சப்தம் எது? "நான்" ஒரு நாளில் எத்தனை முறை நான், நான் என்று கூறுகிறீர்கள்? ஒரு நாளில் எத்தனை முறை நான் என்ற வார்த்தையை உபயோகித்தீர்கள்? இதை கணக்கெடுத்திருக்கிறீர்களா? சரி. ஒரு நாள் கணக்கிட்டுப் பாருங்கள். நான் நான் என்ற சப்தம் அடிக்கடி வந்து கொண்டிருக்கிறது ஆனால் நான் யார்? முதல் பாடம் நான் யார்? தேக அபிமானத்தில் நான் என்று கூறுகிறீர்கள்? உண்மையில் நான் யாராக இருக்கிறேன்? ஆத்மாவா? தேகமா? ஆத்மா தேகத்தை எடுத்துக் கொண்டதா? அல்லது தேகம் ஆத்மாவை எடுத்துக் கொண்டதா? என்ன நடந்தது? ஆத்மாதான் தேகத்தை தரித்துக் கொண்டது. சரிதானே. ஆத்மா தேகத்தை தரித்துக் கொண்டது என்றால், நான் யார்? ஆத்மா தானே! இதற்கு சகஜமான சாதனம் எதுவென்றால், எப்போதெல்லாம் நான் என்ற வார்த்தையை உபயோகிக்கிறீர்களோ, அப்போதெல்லாம், நான் எப்படிப்பட்ட ஆத்மா என்று நினைவு செய்யுங்கள். ஆத்மா நிராகாரமாக இருக்கிறது. தேகம் ஸ்தூலமாக இருக்கிறது. நிராகார ஆத்மா ஸ்தூல தேகத்தை தரித்துக் கொண்டது. ஆதலால் எத்தனை முறை நான் நான் என்று கூறுகின்றீர்களோ, அத்தனை முறை நிராகார ஆத்மாவாகிய நான்

ஸ்தூல சரீரத்தில் பிரவேசம் செய்திருக்கிறேன் என்று நினைவு செய்யுங்கள். எப்போது நிராகார ஸ்திதி நினைவில் இருக்கிறதோ, அப்போது நிரகங்காரி ஸ்திதி தானாகவே ஆகி விடும். தேக அபிமானம் இல்லாமல் போய்விடும். அதே முதலாவது பாடம் நான் யார்? இதை நினைவில் வைத்து நான் எப்படிப்பட்ட ஆத்மா என்று, ஆத்மா நினைவு வந்தால் நிராகாரி ஸ்திதி பக்காவாகி விடும். எங்கே நிராகாரி ஸ்திதி இருக்கின்றதோ, அங்கே நிரகங்காரி, நிர்விகாரி ஆகியே விடும். ஆதலால் நாளை முதல் கவனியுங்கள். எப்போது நான் என்ற சப்தம் வருகிறதோ அப்போதே தானாகவே ஆகி விடும். நல்லது.

இன்றைக்கு இளைஞர்களின் குரூப் வந்திருக்கிறது. இளைஞர்கள் நிறைய வந்திருக்கிறார்கள். பாப்தாதா இளைஞர் குரூப்புக்கு ஒரு வரதானம் அளிக்கின்றார். சதா ஜீவித்திருக்க வேண்டும். ஒரு பொக்கிஷத்தைக் கூட வீணாக்கி விடக் கூடாது. வாழ்ந்திருக்க வேண்டும். வளம் பெறச் செய்ய வேண்டும். லௌகீக குருமார்கள், "ஆயுஷ்வான்பவ" என்று வாழ்த்துகின்றார்கள் ஆனால் பாப்தாதா கூறுகின்றார். சரீரத்திற்கு எத்தனை ஆயுளோ, அவ்வளவு தான் இருக்கும். ஆதலால் சரீரத்தின் ஆயுள் கணக்குப்படி பாப்தாதா ஆயுஷ்வான் பவ என்று வரதானம் கொடுப்பதில்லை. இந்த பிராமண வாழ்க்கையில் சதா ஆயுஷ்வான் பவ. ஏன்? பிராமணனிலிருந்து, தேவதையாவீர்கள். அப்படியானால், ஆயுஷ்வான் ஆக இருப்பீர்கள் அல்லவா? இளைஞர்களிடம் ஒரு விசேஷம் உள்ளது. இளைஞர்களாகிய உங்களுக்கு, உங்களுடைய விசேஷம் என்னவென்று தெரியுமா? என்ன விசேஷம் என்று தெரியுமா? என்ன விசேஷம் இருக்கிறது, உங்களிடம்? (என்ன நினைக்கிறீர்களோ, அதைச் செய்ய முடியும்) நல்லது. செய்ய முடியுமா? நல்ல விஷயம் தான். உலகாயத ரீதியில் பார்த்தால், இளைஞர்கள் பிடிவாத குணம் உடையவர்களாக இருக்கிறார்கள். எதை நினைக்கிறார்களோ, அதைச் செய்து காண்பிப்பார்கள் ஆனால் பிராமண இளைஞர்களாகிய நீங்கள், மற்றவர்களைப் போல பிடிவாத குணமுடையவர்கள் அல்ல. மாறாக, நீங்கள் எடுத்துக் கொண்ட உறுதிமொழியில் உறுதியாக இருப்பவர்கள். பின்வாங்க மாட்டீர்கள். இளைஞர்களே! அப்படித்தானே! கை உயர்த்துவது மிக எளிது. கை உயர்த்தினால், பாப்தாதாவுக்கு மகிழ்ச்சி தான். இது கூட தைரியத்தைக் காட்டுகிறது ஆனால் தினந்தோறும்

அமிருத வேளையில், பாபாவிடம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவேன், இந்த பிராமண வாழ்க்கையில் அடைந்த பிராப்தியிலிருந்து, சேவையிலிருந்து, ஒருபோதும், சங்கல்பத்திலும் கூட பின்வாங்க மாட்டேன் என்று உறுதி செய்ய வேண்டும். இந்த தைரியத்தை, பிரதிக்ஞையை தினந்தோறும் சொல்லுங்கள். மேலும் என்ன தைரியம் கொண்டிருந்தோமோ, என்ன சங்கல்பம் செய்தோமோ அது நடைமுறையில் இருக்கிறதா என்று அடிக்கடி சோதியுங்கள்.

இரண்டு அல்லது நான்கு லக்ஷம் இளைஞர்கள் இருந்தாலே போதும் என்று கவர்ன்மெண்ட் நினைக்கிறது. பாப்தாதா கூறுகின்றார்: இந்த பிராமண இளைஞர்கள் ஒவ்வொருவரும் ஒரு லக்ஷத்திற்கு சமமானவர்கள். பலசாலிகள். பாருங்கள். வீட்டுக்குச் சென்ற பிறகு, பாபா! மாயை வந்து விட்டது, சம்ஸ்காரம் வந்து விட்டது, பிரச்சினைகள் வந்து விட்டது என்று எழுதக்கூடாது. பிரச்சினைகளுக்கு சமாதான சொரூபம் ஆகுங்கள். பிரச்சினைகள் வரும் ஆனால் உங்களையே கேளுங்கள். "நான் யார்? சமாதான சொரூபமா? அல்லது பிரச்சினைகளால் தோற்றுப்போய் விடுபவனா? உங்கள் எல்லோருடைய டைட்டில் என்ன? “விஜயிரத்தன்” அல்லது தோல்வியைத் தழுவுகின்ற ரத்தினமா? “விஜயி ரத்தன் (வெற்றி ரத்தினம்) பிராமண ஜன்மம் எடுத்தவுடனேயே பாப்தாதா ஒவ்வொரு பிராமணனுடைய நெற்றியில் வெற்றித் திலகம் நிரந்தரமாக இருக்கும்படி செய்து விட்டார். ஆதலால் நீங்கள் அமர்பவ என்பதன் வரதானம் பெற்றவர்கள். நீங்கள் இப்போது ஒரு உறுதிமொழி எடுங்கள். உறுதிமொழி என்று எல்லோரும் செய்து விடுகிறீர்கள் ஆனால் நீங்கள் மனதார உங்களுக்குள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளுங்கள். "ஒருபோதும் சம்ஸ்காரத்திற்கு வசமாக மாட்டேன்" எது பாபாவின் சம்ஸ்காரமோ, அது தான் பிராமண ஆத்மாவான எனது சம்ஸ்காரம். எது துவாபர, கலியுகத்தின் சம்ஸ்காரமோ, அது என்னுடையதல்ல. ஏனென்றால், அது பாபாவின் சம்ஸ்காரமல்ல. இந்த தமோகுணி சம்ஸ்காரம், பிராமணர்களுடைய சம்ஸ்காரமாக இருக்க முடியுமா? இல்லையல்லவா? அப்படியானால் நீங்கள் யார்? பிராமணன் தானே?

பாப்தாதாவுக்கு இளைஞர் குரூப் பற்றி பெருமையாக இருக்கிறது. பாருங்கள். தாதிகளுக்கும் கூட ”இளைஞர் குரூப்" பற்றி பெருமையாக

கருதுகிறார்கள். இளைஞர்கள் மீது தாதிக்கு பிரியம் இருக்கிறதல்லவா? அதிக அன்பு இருக்கிறது. குமார் -சுகுமார். வெறும் குமார் அல்ல, சுகுமார். ஒவ்வொரு குமாரும் உலகிலுள்ள குமார்களை பரிவர்த்தனை செய்து காண்பிப்பவர்கள். நல்லது. குமார்களுக்கு ஒரு வேலை தரட்டுமா? தைரியம் இருக்கிறதா? செய்ய வேண்டியதிருக்கும். குமாரிகள் செய்வீர்களா? ஆதலால் வேலை தரப் போகிறேன், கவனமாகக் கேட்க வேண்டும். அடுத்த சீசன் வருமல்லவா? அந்த சீசனில் குமார்களுக்கு ஸ்பெஷலாக புரோகிராம் வைக்கலாம் ஆனால், ஆனாலும் இருக்கிறது. அதிக வேலை ஒன்றும் கொடுக்கப் போவதில்லை. ஒவ்வொரு குமாரும் பத்து பத்து குமார்களுக்கு சிறிய கைவளையம் அணிவித்து அழைத்து வர வேண்டும். கையில் கங்கணம் அணிந்து கொள்கிறார்கள் அல்லவா? பிரம்மாபாபாவுக்கு சதா கையில் பூவால் செய்த கங்கணம் அணிவிக்கிறார்கள். ஆதலால் ஒவ்வொரு குமாரும், பரிவர்த்தனையாகாத (கச்சா, கச்சா) இளைஞர்களை அழைத்து வரக்கூடாது. பக்காவாக ஆகியிருக்கும் குமார்களை அழைத்து வர வேண்டும். ஏனெனில், மதுபன் வரும் வரை பக்கா, பிறகு கச்சாவாக, மாறி விடக்கூடியவர்களாக இருக்கக்கூடாது. பாப்தாதா வாஹ் குமார் வாஹ்! என்று புகழும்படியாக, பக்கவாக இருக்கின்ற குமார்களை உடன் அழைத்து வர வேண்டும். இப்படி கொண்டு வர தயாராக இருக்கிறீர்களா? செய்வீர்களா, இப்படி? கொஞ்சம் யோசித்து சொல்லுங்கள். அப்படியே கையை உயர்த்தி விடாதீர்கள். செய்து காண்பிக்க வேண்டும். தயார் செய்ய வேண்டும். டபுள் ஃபாரினர்ஸ் செய்வார்கள். டபுள் ஃபாரினர்ஸ் செய்வீர்களா? டபுள் ஃபாரினர்ஸில் குமார் கை உயர்த்துங்கள். ஆகவே, நீங்களும் 10-பேர் கொண்டு வருவீர்கள். பிறகு யார் பர்ஸ்ட் கிளாஸ் குவாலிட்டி (முதல தரமான இளைஞர்கள்) கொண்டு வருகிறார்களோ, அவர்களுக்கு பரிசு தரப்படும். பரிசு சிறப்பானதாக இருக்கும். மலிவானதாக இருக்காது. குமார்களிடம் அன்பு இருக்கிறதல்லவா? ஒருவேளை அரசுக்கு ஆக்கபூர்வமாக செயல்படக் கூடிய குமார்கள் அதிகத்திலும், அதிகமாகத் தந்தால், அவர்கள் எவ்வளவு மகிழ்ச்சியடைவார்கள்! ஒருவேளை நீங்கள் 10-10 குமார்கள் அழைத்து வந்தால் இந்த ஹால் குமார்களால் நிரம்பி இருக்கும். பிறகு அரசினரை அழைப்போம். குமார்களைப் பாருங்கள் என்று கூறுவோம் ஆனால் அழைத்து வர வேண்டியதாயிருக்கும். தயார் செய்ய வேண்டியதாயிருக்கும். ஒருவேளை உங்களுடைய ஸ்திதியை,

இலக்ஷியத்தை, இலக்ஷணத்தை சமமாக வைத்திருப்பீர்களேயானால், வெற்றி அடைவீர்களா? அடைய மாட்டீர்களா? அடைய மாட்டோம் என்ற எண்ணமே வரமுடியாது. நிச்சயிக்கப்பட்டு விட்டது. நீங்கள் நிமித்த மாத்திரமாக இருங்கள் போதும். இந்த உறுதிமொழியை சதா ரிவைஸ் செய்து கொண்டேயிருங்கள். கமால் செய்து தானாக வேண்டும். நல்லது.

டபுள் விதேஷிகள் வந்திருக்கிறார்கள். பாப்தாதா கூறுகின்றார். டபுள் விதேஷிகள் பாப்தாதாவின் ஒரு டைட்டிலை நடைமுறையில் செய்து காட்டியிருக்கிறார்கள். அது என்ன? (விஷ்வ கல்யாணகாரி) முதலில் எப்போது ஸ்தாபனை ஆனதோ, அப்போது பாரதம் கல்யாணகாரி ஆனது ஆனால் எப்போது டபுள் ஃபாரினர்ஸ் பிராமண ஆத்மாக்கள் ஆனார்களோ, அப்போது பாபாவுக்கு விஷ்வ கல்யாணகாரி டைட்டில் நடைமுறையில் பிரத்யக்ஷம் ஆனது. ஆதலால் பாப்தாதாவுக்கு டபுள் ஃபாரினர்ஸ் பற்றியும் பெருமையாக இருக்கிறது. டபுள் ஃபாரினர்ஸிடம் ஒரு ஆர்வம் இருந்து கொண்டேயிருப்பதை பாப்தாதா பார்த்தார். அதாவது சேவை செய்யாத ஒரு மூலை கூட இருக்கக்கூடாது என்பது தான். (முரளி சொல்லிக் கொண்டிருக்கும்போதே, திடீரென பாப்தாதாவின் முன்னே இரண்டு குமார்கள் ஸ்டேஜ் மீது வந்து விட்டார்கள். அவர்கள் அகற்றப்பட்டனர்).

நல்லது. இப்போது விளையாட்டில், ஒரு விளையாட்டைப் பார்த்தீர்கள். இப்போது பாப்தாதா கூறுகின்றார், சாட்சியாக இருந்து விளையாட்டைப் பாருங்கள். அனுபவியுங்கள். இப்போது ஒரு வினாடியில், ஒரேயடியாக, தேக உணர்விலிருந்து விடுபட்டு, பவர்புல் ஆத்மீக ஸ்திதியில் நிலைத்திருக்க முடியுமா? ஃபுல் ஸ்டாப், நல்லது. இந்த அப்பியாசம் ஒவ்வொரு சமயமும் இடையிடையே செய்ய வேண்டும். காரியம் செய்ய வேண்டியதிருக்கும்போது, வர வேண்டும். முடிந்ததும் விலகி விட வேண்டும். சாகாரி ஸோ நிராகாரி ஸ்திதியில் நிலைத்து விட வேண்டும். இப்படியும் ஒரு அனுபவம் பார்த்தேன். எந்த ஒரு பிரச்சினை வந்தாலும் அப்படியே ஒரு வினாடியில் சாட்சியாயிருந்து, பிரச்சினையை, ஒரு சைடு சீனாக கருதி புயலை ஒரு பரிசு என புரிந்து கொண்டு, அதைக் கடக்க வேண்டும். அப்பியாசம் இருக்கிறதல்லவா? இன்னும் வரும் நாட்களில், இந்த அப்பியாசத்திற்கு அதிக அவசியம்

இருக்கும். ஃபுல்ஸ்டாப். கேள்விக்குறி அல்ல. இது ஏன் நடந்தது? எப்படி நடந்தது? நடந்து விட்டது. ஃபுல் ஸ்டாப். பிறகு தன்னுடைய முழு சக்திசாலி நிலையில் நிலைத்து விடுங்கள். பிரச்சினை கீழே இருந்து விடும். நீங்கள் உயர்ந்த ஸ்திதியில், பிரச்சினையை சைடு சீனாக பார்த்துக் கொண்டேயிருப்பீர்கள். நல்லது. யார் வெகு தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்களோ, பாரதத்திலாகட்டும், ஃபாரினில் கேட்டுக் கொண்டிருப்பவர்களாயினும் சரி, பார்த்துக் கொண்டிருப்பவர்களாயினும் சரி, அவர்கள் தூரமாக இருந்தாலும், மனதால் சமீபத்தில் இருக்கின்ற அனைத்து குழந்தைகளுக்கும், பாப்தாதா முதலில் அன்பு நினைவுகளை அளிக்கின்றார். ஏனென்றால் யாராருக்கோ, எந்தெந்த நேரமாக இருக்குமோ, அப்படி, இரவைப் பகலாக்கிக் கொண்டு, பகலை இரவாக்கிக் கொண்டு அமர்ந்திருக்கின்றார்கள். இது தான் குழந்தைகளுக்கும், தந்தைக்குமிடையேயான அன்பு. இடையே, விஞ்ஞானி குழந்தைகளுக்கும் நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். உங்களுக்காகவே, இந்த விஞ்ஞான சாதனங்கள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன. ஆதலால் அந்தக் குழந்தைகளுக்கும் கூட பாப்தாதா வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். உங்களுக்காகவே இந்த சாதனம் 100-ஆண்டுகளுக்குள் தயாராகியிருக்கின்றன. இது கமால் தானே! விஞ்ஞானிகளுக்கு, நன்றி சொல்லலாமல்லவா? நல்லது.

நாலா பக்கங்களிலும், சர்வ பொக்கிஷங்களால் சம்பன்னமாகியிருக்கின்ற ஆத்மாக்களுக்கு, சதா ஒவ்வொரு சமயத்திலும் பிராப்திகளால் நிறைந்திருக்கின்றவர்களும், புன்முறுவலோடு மகிழ்ச்சியாக இருந்து கொண்டிருக்கின்ற ஆத்மாக்களுக்கு சதா தந்தைக்கு கொடுத்த வாக்குறுதியை வாழ்க்கையில் நடைமுறையில் கொண்டுவந்து கொண்டிருக்கின்ற ஞானி ஆத்மாக்களுக்கு, யோகி ஆத்மாவாக இருக்கின்ற குழந்தைகளுக்கு, சதா இலஷியம் மற்றும் இலக்ஷணத்தில் சமமாக இருக்கின்ற, பாபா சமானமான ஆத்மாக்ளுக்கு சதா ஒவ்வொரு சமயத்திலும், சர்வ பொக்கிஷங்களின் ஸ்டாக் மற்றும் (ஸ்டாப்) முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய தீவிர புருஷாரத்தி, சிரேஷ்ட ஆத்மாக் களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள். திலாராமின் (தில் ஸே) மனப்பூர்வமான அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

ஈஸ்டர்ன், தமிழ்நாடு சேவாதாரிகள் வந்திருக்கின்றனர்: நல்லது. சேவாதாரியாக வந்திருப்பவர்களெல்லாம் கை உயர்த்துங்கள். வங்காளம், பீஹார், நேபாளம், அஸ்ஸாம், ஒரிஸ்ஸா, தமிழ்நாடு. தமிழ் நாட்டிலிருந்து (ரோஸி பெகன்) வந்திருக்கின்றார். பாருங்கள். புது வாழ்வு கிடைத்து விட்டது. வாழ்த்துக்கள் புது வாழ்வுக்கு ஒரு கை அசைத்துக் காட்டுங்கள். வந்திருக்கின்ற எல்லா பாண்டவர்களும், சக்திகளும், யார் சேவைக்கு நிமித்தமாகியிருக்கின்றார்களோ அவர்களுக்கு சேவைக்கான பிரத்யக்ஷபலன் குஷி கிடைத்து விட்டது. பாப்தாதா கூறுகின்றார்: இது குழந்தைகளினுடைய கெட்டிக்காரத்தனம். சகஜ புருஷாரத் மூலமாக ஆசிகள் வாங்குவதற்காக, புண்ணிய கணக்கை சேமிப்பதற்காக இந்த வாய்ப்பை நன்றாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். யார் எவ்வளவு களைப்பின்றி சேவை செய்கிறார்களோ, அந்த அதக் (களைப்படையாத) சேவாதாரிகளின் மனம், சொல், செயல் ஆகிய மூன்று விதமாகவும் சேமிப்பாகிறது. ஆதலால் சேமிப்பதற்கு, எல்லா சேவாதாரிகளுக்கும் வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! நல்லது. எல்லோரும் வந்து சேர்ந்து விடுகிறார்கள்.

தாதிஜி, தாதி ஜானகிஜியுடன்: (ஒரு டர்ன் மிஸ் ஆகி விட்டது) சேவை என்னமோ மிஸ் ஆகவில்லை. பாப்தாதா, உங்கள் இருவரின் பொறுப்பு எனும் கிரீடத்தில் சதா விலைமதிக்க முடியாத ரத்தினங்களை பதித்துக் கொண்டேயிருக்கின்றார். எவ்வளவுக்கெவ்வளவு பொறுப்புகள் ஸ்தூலத்தில் அதிகமாகிக் கொண்டேயிருக்கின்றதோ, அவ்வளவு நீங்கள் டபுள் லைட் ஆகி பார்ட் செய்கிறீர்கள். பாப்தாதாவுக்கு விசேஷ குஷியாக இருக்கிறது. சக்திகள் வெற்றிக் கொடியை பிரபலப்படுத்தி விட்டார்கள். பாபா குப்தமாக இருந்தார் ஆனால் குழந்தைகள் பிரத்யக்ஷ ரூபத்தில் கொடியை பறக்க விட்டார்கள். (தாதி ஜானகிஜி பாபாவிடம் ஒரு விருப்பம் இருக்கிறது என்று கூறினார். அதாவது சாந்திதாம் செல்வதற்கு முன் எல்லோரும் பாரதத்தில் ஒன்று சேர வேண்டும்?) ஆகி விடும். அவர்கள் எங்கே செல்வார்கள். நடந்து விடும். நல்லது.

டாக்டர் அப்துல் கலாம், டாக்டர் பிள்ளை, டாக்டர் செல்வ மூர்த்தி (பாரதத்தின் விஞ்ஞானிகள்): பாப்தாதா உங்கள் அனைவருடைய

பாக்கியத்தைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார். ஆத்மாக்களாகிய உங்கள் மூலமாகவும் விசேஷ சேவை நடக்க வேண்டியதிருக்கிறது. என்ன சேவை செய்வீர்கள்? (30-சதவிகிதம் மக்கள் வறுமையில் இருக்கிறார்கள். அவர்களுடைய வறுமையைப் போக்க வேண்டும் என்ற எண்ணம் வருகிறது). ஆகி விடும். உங்களுடைய அந்த எண்ணம் நிறைவேறு வதற்கான நேரம் இப்போது வரப்போகிறது. வறுமையே இருக்காது. பாரதம் எல்லாவற்றையும் விட செல்வம் மிக்கதாக இருந்தது. அப்படியே மீண்டும் ஆகப்போகிறது. ஆதலால் உங்கள் எண்ணம் நிறைவேறி விடும். நல்ல எண்ணம், இப்போது நீங்கள் ஒரு செய்தி சொல்பவர்கள் ஆகி, இந்த செய்தியைக் கூறுங்கள். எந்த ஒரு ஆத்மா, உங்கள் தொடர்பில் வந்தாலும், சைலன்ஸ் மற்றும் சயின்ஸ் (அமைதி மற்றும் அறிவியல்) இந்த இரண்டுக்கும் பேலன்ஸ். இதற்கு பரமாத்மாவின் பிளசிங் (ஆசீர்வாதம்) உண்டு. இப்போது இந்த செய்தி தரவேண்டும். பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது. குழந்தைகள் உன்னத நிலையடைய வேண்டும், யோக்கியமுள்ளவர்களாக வேண்டும் என்று நினைக்கிறீர்கள். அந்தக் காரியம் இங்கே நடந்து கொண்டிருக்கிறது. கல்வி இலாக்கா கொஞ்சம், கொஞ்சமாக முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நீங்களும் சகயோகியாகி விடுவீர்கள். மேலும் இந்த எல்லா குழந்தைகளும் சகயோகியாக ஆகி விட்டால், "ஆஹா பாரதம்" என்று நீங்கள் கூறும்படியான அந்த நாள் வந்து விடும். பாரதத்தின் ஆன்மீக ஞானம் எல்லோருக்கும், சுகம், சாந்தியின் வரதானத்தை அளிக்கும். (சயின்ஸ் மற்றும் சைலன்ஸ் இரண்டும் பேலன்ஸ், பாரதத்தை பொன் மயமாக்கி விடும்) ஃபாலோ பிரம்மாபாபா. உங்களிடம் ஒரு விசேஷம் உள்ளது. அந்த விசேஷத்தை காரியத்தில் கொண்டு வாருங்கள். உங்களுடைய இயற்கையான விசேஷம் என்னவென்றால், எந்தக் காரியத்தை எடுத்துக் கொண்டாலும், அதை முடித்து விடுகிறீர்கள். அரைகுறையாக விட்டு விடுவதில்லை. ஆதலால் இந்த விசேஷத்தின் காரணமாக உங்கள் எண்ணம் ஈடேறி விடும். உங்களுடன் வந்திருக்கும் இந்த இரண்டு பேரும் மிகவும் நல்லவர்கள். திரிமூர்த்தியாகி விட்டீர்கள். ஆதலால் எங்கே திரிமூர்த்திகள் இருக்கின்றார்களோ, அங்கே சிவபாபா இருப்பார். (இவரும் குமார்) பிரம்மச்சாரியோடு, பிரம்மாச்சாரியாகவும் இருக்கின்றார். (திரு செல்வ மூர்த்தியுடன்) நல்லது. இவர் ஆரோக்கியத்திற்காக ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கின்றார்.

ஆரோக்கியமிருந்தால், துக்கம் தூரமாக விலகி விடுகிறதல்லவா? எல்லோருடைய துக்கத்தையும் தூரமாக விலக்குவது எவ்வளவு நல்ல காரியம்! ஆதலால் தான் ஆரோக்கியம் அளிப்பவர்களை கடவுளுக்கு அடுத்தப்படியாகக் கருதுகிறார்கள். நல்லது. "ஹெல்த்"தோடு ஞானம் என்ற வெல்த்" ஆத்மாக்களுக்கு கிடைத்து விடும். நல்ல நிமித்த ஆத்மாக்கள். டாக்டர் பிள்ளைக்கு பதம் ஸ்ரீ என்ற டைட்டில் கிடைத்து விட்டது. டாக்டர் அப்துல்கலாம் அவர்களுக்கு பாரத ரத்னா விருது கிடைத்துள்ளது.

பாபாவோ, பதமா, பதமா பதம்பதி என்ற டைட்டில் கொடுக்கின்றார். இவருக்கு பாரத ரத்னா என்ற விருது கிடைத்திருக்கிறது. ஆதலால் பாரதத்தின் மீது அன்பு இருக்கிறது. நல்லது. இப்போது மைக் (முக்கிய பேச்சாளர்) ஆவீர்கள். ருஹானி மைக் ஆகி சேவை செய்வீர்கள்.

ஆஷா சகோதரியுடன்: நன்றாக நடந்து கொண்டிருக்கிறதல்லவா? எல்லோருடைய ஆசிகள் இருக்கின்றன. ஆசீர்வாதம் எப்படிப்பட்டது என்றால், ஒவ்வொரு காரியத்தையும் எளிதாக்கி விடுகின்றது. நல்லது.

ரோஸி சகோதரியுடன்: எவ்வளவு நல்ல பார்ட் உங்களுக்கு டிராமாவில் இருக்கிறது. இந்தக் கணக்கும் முடிந்து விட்டது. எந்த கணக்கு பாக்கி இருந்ததோ, அதை முடித்து விட்டீர்கள். குஷி, குஷியாக முடித்து விட்டீர்கள். இந்தக் கணக்கு இருப்பதே சேவைக்காகவே தான். யார், சேவாதாரியாக இருக்கின்றார்களோ, அவர்கள் எங்கே சென்றாலும் சேவை செய்யாமல் அவர்களால் இருக்க முடியாது. அந்த சேவைக்காக ஆசீர்வாதம் கிடைக்கிறது. நல்லது. (உடன் டாக்டரும் வந்திருக்கின்றார்) நல்லது. பிராமண ஆத்மாக்களுக்கு சேவை செய்வதால் ஆசீர்வாதம் கிடைக்கிறது. குஷி, குஷியாக சேவை செய்தீர்கள். ஆதலால் சேவைக்கான சேமிப்பு ஆகி விட்டது.

சென்னையைச் சார்ந்த டீச்சர்களுடன்: இவர்கள் சேவையைக் கவனித்துக் கொள்கிறார்கள். நல்லது. சேவைக்கான வாய்ப்பு கிடைப்பதென்பதும், பாக்கியத்தின் அடையாளமாகும். ஆதலால் எல்லோரும் பாக்கியவான்கள்.

**வெளிநாட்டின், மூத்த சகோதரியுடன்:** ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய நல்ல பார்ட்டை செய்து கொண்டிருக்கிறீர்கள். பாப்தாதாவுக்கு இதைப் பார்த்து மிகவும் குஷியாக இருக்கிறது. அப்படியிருக்கிறதல்லவா? ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய பார்ட் செய்து கொண்டே, தங்களையும் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் சேவையையும் முன்னேற்றுகிறார்கள். டிராமாபடி நிமித்தமாகியிருக்கிறீர்கள். இப்போது இனி மேல் செய்ய வேண்டிய சேவைக்கும் திட்டம் போடுவீர்கள் அல்லவா? என்ன செய்யப்போகிறீர்கள் ஏதாவது புதுமையாக செய்வீர்கள் அல்லவா? நல்லது. பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 24.02.2002 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பாபாவை பிரத்யக்ஷம் செய்வதற்காக, தன்னுடைய மற்றும் பிறருடைய விருத்தியை (உள்ளுணர்வு) ஆக்கபூர்வமானதாகச் செய்யுங்கள்!

இன்று விஷ்வ கல்யாணி பாப்தாதா, நாலா பக்கங்களிலுமுள்ள தன்னுடைய குழந்தைகளைப் பார்த்து, மகிழ்ச்சியடைகின்றார். ஒவ்வொரு குழந்தையின் மனதிலுள்ள ஆர்வத்தைப் பார்த்துக் கொண்டும், கேட்டுக் கொண்டுமிருக்கின்றார். எல்லோருடைய மனதிலும், சீக்கிரமாகவே பாபா சமானமாக வேண்டுமென்ற ஒரே லக்ஷியம் தான் இருக்கின்றது. லக்ஷியத்தைப் பார்த்து, தைரியத்தைப் பார்த்து, சிரேஷ்டமான சங்கல்பத்தைப் பார்த்து பாப்தாதாவுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. இத்துடன் இன்னொரு விஷயத்தையும் பார்க்கின்றார். அதாவது எல்லோருடைய லக்ஷியமும், மிக உயர்வாக இருக்கிறது ஆனால் நடைமுறையில் பார்க்கும்போது லக்ஷணம் நம்பர்வாராக (வரிசைக்கிரமம்) இருக்கின்றது. லக்ஷியமும், லக்ஷணமும் சமமாக இருப்பது தான் பாபா சமானமாக ஆவதாகும்.

சேவை என்னும் மேடையில் நிமித்தமாக இருக்கும் குழந்தைகளின் மனதில், பாபாவை எப்படி பிரத்யக்ஷம் செய்வது? எப்போது இது நடக்கும்? என்ற ஒரே சங்கல்பம் சதா இருந்து கொண்டேயிருக்கின்றது. இப்படிப்பட்ட சங்கல்பம் இருக்கிறதல்லவா? இதற்கு, குழந்தைகளைப் பார்த்து பாபா கேட்கின்றார். குழந்தைகளே! நீங்கள் எல்லோரும் சம்பன்ன, சம்பூரண சொரூபத்தில் எப்போது பிரத்யக்ஷம் ஆவீர்கள்? இதற்கான தேதி குறித்திருக்கிறீர்களா? என்று பாபா கேட்கின்றார். அந்த தேதி எது என்று குறிக்க வேண்டுமல்லவா?

எந்த ஒரு புரோகிராம் செய்ய வேண்டியிருந்தாலும், இதற்கான தேதி ஒரு வருடத்திற்கு முன்பாகவே குறிக்கப்படுகிறது என்று டபுள் ஃபாரினர்ஸ் கூறுகின்றார்கள். இப்படி கூறுகின்றீர்கள் அல்லவா? அப்படியானால் தன்னை பிரத்யக்ஷம் செய்வதற்காக தேதியை குறித்து விட்டீர்களா? என்று பாபா கேட்கின்றார். தேதி குறித்து விட்டீர்களா? அநேக முறை மீட்டிங் செய்திருக்கிறீர்கள். இன்னும் இன்றைக்கு இந்த மீட்டிங், நாளை அந்த மீட்டிங் என்று செய்து கொண்டேயிருக்கிறீர்கள். இப்போதும் கூட, மீட்டிங்கில் கலந்து கொள்வதற்காக அநேகர் வந்திருக்கிறீர்கள். மூன்று மீட்டிங் நடக்கப் போகிறது. இந்த மீட்டிங் நல்லது தான் ஆனால் எதை சிந்திக்கிறீர்களோ, அதே மாதிரியான பேச்சு, அதே மாதிரியான கர்மம் செய்வதற்கான மீட்டிங் எப்போது செய்யப்போகிறீர்கள்? இந்த மீட்டிங் தேதி எப்போது? சங்கல்பம், பேச்சு, கர்மம் மூன்றும், சிரேஷ்ட லக்ஷிய பிரமாணம் இருக்க வேண்டும். மேலும் பாப்தாதா குழந்தைகளைப் பார்க்கின்றார். அதாவது இந்த சர்வ விஷ்வ கல்யாணத்திற்கு நிமித்தமாக இருக்கின்ற குழந்தைகள், எல்லா ஆத்மாக்களுக்கும் கல்யாணகாரி என்ற ரூபத்தில் எப்போது மேடையில் பிரத்யக்ஷம் ஆவார்கள்? ஒவ்வொருவரும் குப்தமாக புருஷாரத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். அன்பாக இருக்கின்றார்கள். இதனையும் பாப்தாதா பார்க்கின்றார் ஆனால் இந்த விசேஷ சங்கல்பம் எனும் லகனில், மூழ்கியிருக்கின்றவர்களாக எப்போது ஆவார்கள்? லகன் இருக்கிறது ஆனால் நிரந்தரமாக இந்த சங்கல்பத்தை சம்பன்னமாகச் செய்வதில் மூழ்கியிருக்க வேண்டும். அதாவது நிரந்தரமாக இந்த சங்கல்பத்தை நிறைவேற்றுகின்ற, சொரூபம் நிதர்சனமாக (PRATICAL) இருக்க வேண்டும். இப்போது சங்கல்பத்திற்கும், பிரத்யக்ஷ கர்மத்திற்கும் வித்தியாசம் இருக்கின்றது. ஆகத்தான் போகிறது. செய்ய

வேண்டியவர்களும் குழந்தைகள் தான். பாபா முதுகெலும்பாக இருந்து கொண்டேயிருக்கின்றார்.

பாப்தாதா பார்த்துக் கொண்டே இருக்கின்றார். அதாவது எல்லாவற்றிலும் தீவிரகதியில் செய்யக்கூடிய சேவையாக இருப்பது, விருத்தி மூலமாக அதிர்வலைகளை (Vibrations) பரப்புவது விருத்தி (உள்ளுணர்வு) ராக்கெட்டையும் விட அதிக தீவிர கதியுடையது. விருத்தி மூலமாக வாயுமண்டலத்தை பரிவர்த்தனை செய்ய முடியும். எங்கே வேண்டுமனாலும், எத்தனை ஆத்மாக்களுக்கு வேண்டுமானாலும், விருத்தி மூலமாக, இருந்த இடத்திலிருந்தபடியே அங்கு சென்றடைய முடியும். விருத்தி மூலமாக திருஷ்டி மற்றும் சிருஷ்டியை பரிவர்த்தனை செய்ய முடியும் ஆனால் இவ்வாறு விருத்தி மூலமாக சேவை செய்வதற்கு, ஒரு விஷயம் தடையாக இருக்கிறது. விருத்தி மூலம் வைப்ரேஷன் பரவுகின்றன. உங்களுடைய ஜடசித்திரம் இன்று வரையிலும் கூட, கடைசி ஜன்மம் வரையிலும் வைப்ரேஷன் மூலம் சேவை செய்து கொண்டிருக்கிறதல்லவா? பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? கோவில் பார்த்திருக்கிறீர்களா? டபுள் ஃபாரினர்ஸ் பார்த்திருக்கிறீர்களா? கோவில் பார்த்திருக்கிறீர்களா? பார்க்கவில்லை என்றால் பார்த்து விடுங்கள். ஏனென்றால் உங்களுடைய கோவில் தானே! குமாரிகள் (ஃபாரினர்ஸ்) சொல்லுங்கள். உங்களுடைய கோவில்களா? அல்லது இந்தியர்களுடைய கோவில்களா? எல்லோருடைய கோவில். நல்லது. வாழ்த்துக்கள். கோவிலிலுள்ள மூர்த்திகள், பிரத்யக்ஷ ரூபத்தில் வைப்ரேஷன் மூலமாக சேவை செய்து கொண்டிருக்கின்றது. அதாவது ஆத்மாக்களாகிய கோவில் மூர்த்திகள் சேவை செய்து கொண்டிருக்கிறது. எவ்வளவு பக்தர்கள், வைப்ரேஷன் மூலமாக தங்களுடைய எல்லா இச்சைகளையும் பூர்த்தி செய்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் சைத்தன்ய மூர்த்திகள். இப்போது நீங்கள் உங்களுடைய சுபபாவனையின் விருத்தியை, சுப காம்னாவின் (சுப அபிலாஷை) விருத்தியை, வாயுமண்டலத்தில் பரப்ப வேண்டும் ஆனால்... ஆனால்... என்று சொல்வது நன்றாக இல்லை தான், என்றாலும், ஆனால் என்று சொல்ல வேண்டியதாக இருக்கிறது. பாண்டவர்களுக்கு, "ஆனால்" என்ற வார்த்தை பிடித்தமானதாக இருக்கின்றதா? நன்றாக இருப்பதில்லை ஆனால், ஆனால் என்பது இருக்கிறதா? அல்லது முடிந்து விட்டதா? இதற்காக எல்லாவற்றையும்

விட சகஜமான விதி ஒன்று இருக்கிறது. முதலில் ஒவ்வொருவரும் தங்களுக்குள் சோதித்துப் பார்க்க வேண்டும். ஒரு வினாடியில் சோதிக்க முடியும். இப்போதே செய்யுங்கள். ஒரு வினாடி தரட்டுமா? இப்படிச் சொல்லும் போதே, ஒரு வினாடி நேரம் ஆகி விட்டது. இப்போது உங்களுக்குள் சோதித்துப் பாருங்கள். என்னுடைய விருத்தியில் எந்த ஒரு ஆத்மாவைப் பற்றியாவது எதிர்மறையான (நெகட்டிவ்) வைப்ரேஷன் உள்ளதா? உலக வாயுமண்டலத்தை பரிவர்த்தனை செய்ய வேண்டும். ஒருக்கால், ஏதோ ஒரு ஆத்மாவைப் பற்றி (அநாவசிய) வைப்ரேஷன் இருந்தால், உண்மையான வைப்ரேஷன் கூட நெகட்டிவ் ஆகி விடுவதால், உலக பரிவர்த்தனை செய்ய முடியாது தடையாக இருக்கும், காலம் தாமதமாகி விடும். வாயுமண்டலம் சக்தியுடையதாக ஆகாது. சில குழந்தைகள் கூறுகிறார்கள். அவர் இப்படித்தானே இருக்கிறார், இருக்கிறார் அல்லவா? என்கின்றனர். இதனால் வைப்ரேஷன் இருக்குமல்லவா? பாபாவுக்கும் கூட ஞானம் சொல்லுகிறார்கள். பாபா, உங்களுக்குத் தெரியாது, அந்த ஆத்மா இப்படித்தான் ஆனால் பாபா கேட்கின்றார். அந்த ஆத்மா கெட்டவர் தான், தவறாக நடப்பவர் தான், அப்படி இருக்கக்கூடாது தான் ஆனால் அந்த கெட்ட வைப்ரேஷனை உங்களுடைய விருத்தியில் வைத்தால், இப்படிச் செய்வதில் பாபாவுக்கு சம்மதமாக இருக்குமா? இது பாபாவுக்கு சம்மதமில்லை என்று நினைப்பவர்கள், ஒரு கை அசைத்துக் காண்பியுங்கள். ஒரு கை உயர்த்துங்கள். இரண்டு கைகளால் தட்டி ஒலி எழுப்ப வேண்டாம். பின்னால் இருப்பவர்கள் கை உயர்த்துகிறார்களா? டி.வி.யில் காண்பியுங்கள். (தாதிக்கு) நீங்கள் பார்க்கிறீர்கள் அல்லவா? நல்லது. கை உயர்த்தியிருக் கிறீர்கள். ஞாபகமிருக்கட்டும். டபுள் ஃபாரினர்ஸ் கை உயர்த்தினார்களா? பாப்தாதாவின் டி.வி.யில் வந்து விட்டது. எதுவரையிலும் ஒவ்வொரு பிராமண ஆத்மாவும் தனது விருத்தி மூலமாக எந்த ஒரு ஆத்மாவுக்காகவும், எதிர்மறையான வைப்ரேஷன் வைத்திருந்தால், விஷ்வ கல்யாணத்திற்காக, தங்களுடைய விருத்தி மூலமாக வைப்ரேஷன் பரவச் செய்ய முடியாது. இதை பக்காவாக புரிந்து கொள்ளுங்கள். எவ்வளவு சேவை செய்தாலும் சரி, தினந்தோறும் எட்டு-எட்டு சொற் பொழிவு செய்தாலும் சரி, யோக அப்பியாச முகாம்கள், செய்விப் பவர்களானாலும் சரி, விதவிதமான கோர்ஸ் நடத்து பவர்களானாலும் சரி ஆனால் யாருக்காகவும், தங்களுடைய விருத்தியில் எந்த ஒரு எதிர்மறையான வைப்ரேஷன்

வைக்காதீர்கள். சரி, அவர் கெட்டவர்தான், நிறைய தவறுகள் செய்பவர்தான். நிறைய பேருக்கு துக்கம் கொடுப்பவர் தான் ஆனால் அவர் துக்கம் கொடுப்பதற்கு, காரணமாக இருப்பதற்குப் பதிலாக, அதனை மாற்றிக் கொள்வதன் மூலமாக, உதவி செய்பவர்களாக ஆக முடியாதா? துக்கம் கொடுப்பதற்கு காரணமாக இருந்து, (கோபம் உண்டாக்குவதற்கு) உதவி செய்பவர்களாகக் கூடாது. தவறு உண்டாகாமல் தன்னைத் திருத்திக் கொள்வதன் மூலம், நீங்கள் உதவியாளர்கள் ஆக வேண்டும். ஒருவேளை நீங்கள் நினைப்பதுபோல, இவர் திருந்தக்கூடிய ஆத்மா அல்ல என்றாலும் கூட, உங்களுடைய (ஜட்ஜ்மெண்ட்) தீர்மானம் அப்படி இருந்தாலும் கூட, நம்பர்வாராக இருக்கக்கூடிய ஆத்மாக்களில் அவரும் ஒருவர் தானே! ஆதலால் இவர் திருந்த மாட்டார் என்று நீங்கள் ஏன் நினைக்க வேண்டும்? நீங்கள் ஏன் (ஜட்ஜ்மெண்ட்) தீர்ப்பு வழங்குகிறீர்கள். பாபா ஜட்ஜ் (நீதிபதி) இருக்கிறாரல்லவா? நீங்கள் எல்லோரும் ஒருவருக்கொருவர் நீதிபதியாகி விட்டீர்கள். பாபா பார்க்கின்றார் அல்லவா? இவர் இப்படி... இவர் இப்படி... இவர் இப்படி என்று, பிரம்மாபாபாவை பிரத்யக்ஷமாகப் பார்க்கும்போது, அவர் யாரேனும் அடிக்கடி தவறு செய்து கொண்டேயிருக்கின்ற ஆத்மாவாக இருந்தாலும், பாப்தாதா விசேஷமாக சாகார ரூபத்தில், பிரம்மாபாபா, எல்லா குழந்தைகளுக்கும் அன்பு நினைவுகளைத் (யாத்பியார்) தந்தார். எல்லா குழந்தைகளையும் இனிமையிலும் இனிமையான (மீட்டே மீட்டே) என்று தானே சொன்னார்! அல்லது நான்கு பேர் கசப்பானவர்கள், மீதிப் பேரெல்லாம் இனிமையானவர்கள் என்று சொன்னாரா? எப்படிப்பட்ட ஆத்மாவாக இருந்தாலும் கூட, அவர்களிடமும் சதா ரஹம்தில் (இரக்கமுள்ளவர்) ஆகவே இருந்தார். மன்னிப்பதில் கடல் போல இருந்தார். நல்லது சரி, நீங்கள் உங்களுடைய விருத்தியில் எந்த ஆத்மாவைப் பற்றியாவது எதிர்மறையான பாவனை வைத்திருப்பதால் என்ன லாபம்? ஒருவேளை இதில் லாபம் இருக்கிறது என்று நீங்கள் நினைப்பீர்களேயானால், பலே! அப்படியே செய்யுங்கள். ஒருவேளை லாபம் இல்லை தான், பிரச்சினையாக இருக்கிறது என்றால், அந்த விஷயம் எதிரில் வரும். பாப்தாதாவும் பார்க்கின்றார். அந்த சமயம் அவர் முன் கண்ணாடியை காண்பிக்க வேண்டும். ஆதலால் எந்த விஷயத்தில் உங்களுக்கு லாபம் இல்லையோ, அதைப் பற்றி அறிந்தவர்களாக (நாலட்ஜ்புல்) இருப்பது வேறு விஷயம். ஏனெனில், இது சரி, இது தவறு என்ற ஞானம் உள்ளது.

இப்படி அறிந்தவர்களாக இருப்பதில் தவறு இல்லை ஆனால் இதை விருத்தியில் வைத்திருப்பது தவறு. ஏனென்றால், இதனால் தங்களுக்கும் (மூட் ஆஃப்) நிலை தடுமாறும், வீண் எண்ணம் உண்டாகும். நினைவில் இருக்கும் சக்தி குறையும், நஷ்டம் ஏற்படும். நீங்கள் இயற்கை வாயுமண்டலத்தையும் (பிரகிருதி) பாவனம் செய்யக் கூடியவர்கள். இவர்களோ ஆத்மாக்கள் தானே! விருத்தி, வைப்ரேஷன், வாயுமண்டலம் இம்மூன்றிற்குமிடையே சம்மந்தம் உள்ளது. விருத்தி மூலம் வைப்ரேஷன் உண்டாகிறது. வைப்ரேஷன் மூலம் வாயுமண்டலம் உருவாகிறது. என்றாலும், மூல ஆதாரமாக இருப்பது விருத்தி. ஒருவேளை, வெகு சீக்கிரமாகவே பாபாவை பிரத்யக்ஷம் செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருக்குமே யானால், உங்களுடைய விருத்தியை, உங்களுக்காகவும், மற்றவர் களுக்காகவும் ஆக்கபூர்வமான வகையில் தாரணை செய்வதற்கு தீவிரமான முயற்சியில் ஈடுபடவேண்டும். நாலட்ஜ்புல், பலே இருங்கள் ஆனால் உங்களுடைய மனதில், நெகட்டிவ் தாரணை செய்யாதீர்கள். நெகட்டிவ் என்றால் (கிச்சடா) குப்பை. இப்போதே, உங்கள் விருத்தியை சக்திசாலியாக்குங்கள். வைப்ரேஷன் சக்திசாலியாக இருக்கட்டும், வாயுமண்டலத்தை சக்திசாலியாக ஆக்குங்கள். ஏனெனில், பேச்சு மூலமான பரிவர்த்தனை, படிப்பு (சிக்ஷா) மூலமான பரிவர்த்தனை ஏற்படுகிறது என்றாலும், அது மிகவும் மெதுவாகத்தான் நடக்கிறது என்ற அனுபவம் எல்லோருக்கும் இருக்கிறது. நீங்கள் இதில் அதி வேகம் இருக்க வேண்டும் என்று நினைத்தால், நாலட்ஜ்புல் ஆகி, மன்னிக்கும் சொரூபமுடையவராகி, இரக் கமனம் உள்ளவராகி, சுப பாவனை, சுப காம்னா மூலமாக, வாயுமண்டலத்தை பரிவர்த்தனை செய்யுங்கள். பாருங்கள்! பிரத்யக்ஷமாக எல்லோரும் பார்க்கின்றீர்கள் அல்லவா? மதுபன் வருபவர்களுக்கு, எந்த விஷயத்தில் பிரபாவம் உண்டாகிறது? வாயுமண்டலம். இங்கேயும் எல்லோரும் நம்பர் வாராகத்தான் இருக்கின்றார்கள் என்றாலும், இது பிரம்மாபாபாவின் கர்மபூமி. பாப்தாதாவின் வரதான பூமி. ஆதலால் இது வாயுமண்டலத்தை பரிவர்த்தனை செய்து விடுகிறது. அனுபவம் இருக்கிறதல்லவா? ஆதலால் "வைப்ரேஷன் மூலமாக வாயுமண்டலம் தயார் செய்ய வேண்டும்" இது தான் என்று மனதில் அழுத்தமாக முத்திரை பதித்து விடவேண்டும். வாயுமண்டலம் மனதில் அச்சாகி விட வேண்டும். காதால் கேட்ட வார்த்தைகளை மறக்க முடியும்

ஆனால் மனதில் அச்சிடப்பட்டுவிட்ட வாயுமண்டலம், மறக்க முடியாததாகி விடும். இப்படி இருக்கிறதா? ஆகவே, பாப்தாதா கேட்டுக் கொண்டே இருக்கின்றார். பிரத்யக்ஷம் எப்போது ஆகும்? உங்களுக்குள் சம்பாஷணை (ரூஹ்ரிஹான்) நன்றாகச் செய்கிறீர்கள். நல்லது. இப்போது பாண்டவர்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? சொல்லுங்கள். வாயுமண்டலத்தை சக்திசாலியாக ஆக்க வேண்டும். சேவா கேந்திரமாக இருந்தாலும், வேறு எந்த இடமாக இருந்தாலும், குடும்ப வாழ்க்கையில் இருந்தாலும், வாயுமண்டலம் சக்திசாலியாக இருக்க வேண்டும். நாலா பக்கமுமுள்ள வாயுமண்டலம், சம்பூரண நிர்விக்னம், ரஹம்தில், சுப பாவனா, சுப காம்னாவாக ஆகி விட்டால், பிரத்யக்ஷதாவில் தாமதம் உண்டாகாது,

இப்போது பாப்தாதா எந்த தேதி கொடுத்திருக்கின்றாரோ, அது பாப்தாதாவுக்கு நினைவு இருக்கிறது. கணக்கு கேட்பாரல்லவா? ஒவ்வொருவரும், தங்கள் கணக்கை வைத்திருக் கிறீர்கள் அல்லவா? அந்த கணக்கில் பாப்தாதா, விருத்தியில், திருஷ்டியில், பேச்சில், ரஹம்தில், சுப பாவனா, சுப காம்னா உள்ள ஆத்மாவாக எத்தனை சதவிகிதம் இருந்தது என்று பார்ப்பார். இப்போதும் கூட 15-நாட்கள் இருக்கின்றன. அதிகம் இருக்கிறது. நல்லது. யார் இதுவரையிலும் செய்யாவிட்டாலும், கூட இந்த 15-நாட்களில் செய்து விட்டால், பாஸாகி விடலாம். கடந்து போனதற்கு முற்றுப்புள்ளி வைத்து விட வேண்டும். மேலும் இரக்கம் அளவிட முடியாத அளவுக்கு (சிந்து) ஆகி விட வேண்டும்.

பாப்தாதா டிரில் செய்வித்தார்: எல்லோரும் கேட்டீர்களா? நல்லது. மூன்று மீட்டிங்கில் கலந்து கொள்வதற்காக வந்திருக்கிறார்கள். "ஸ்பார்க்" மீட்டிங்கில் வந்திருப்பவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது. மிக நல்லது. இப்போது இதே விஷயத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்யுங்கள். வாயுமண்டலத்தை, எந்த விதத்தில் நடைமுறையில் (பிராக்டிக்கலாக) சிரேஷ்டத்திலும் சிரேஷ்டமாக செய்ய முடியும். ரிசர்ச் (ஆராய்ச்சி) செய்கிறீர்கள் அல்லவா? இப்படிப்பட்ட வாயுமண்டலம் தயார் செய்வதற்காக, என்னென்ன புத்தியில் வைத்திருக்க வேண்டும். என்னென்ன கர்மம் செய்ய வேண்டும்? சம்மந்தம், தொடர்பு எப்படி இருக்க வேண்டும்? சரி. நீங்கள் இப்படியாக உங்களை சுறுசுறுப்பாக

வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். நல்ல விஷயம் ஆனால் பாப்தாதா இந்த உண்மையான அனுபவமாகப் பார்க்க விரும்புகின்றார். சரி. இடையில் தடை ஏதாவது ஏற்பட்டது என்றால், என்ன தடை வந்தது? இதை பயிற்சி செய்து பாருங்கள். "பாயிண்ட்ஸ்" சேகரித்தால் மட்டும். போதாது. இதைச் செய்ய வேண்டும். இப்படிச் செய்ய வேண்டும் என்பதல்ல, அப்பியாசம் செய்து பாருங்கள். அனுபவம் செய்து, உதாரணமாகி காட்டுங்கள். இதை உதாரணம் மற்றவர்களுக்கும், உதவியாக இருக்கும் சரிதானே? இந்த (ரமேஷ் சகோதரர்) நிமித்தமாக இருக்கிறார் அல்லவா? நல்லது. பாப்தாதா கூறுகின்றார். இன்னும் கூட 15-நாட்கள் இருக்கின்றன. இன்னும் (கடைசி) முடிவாகி விடவில்லை. சமயம் அதிகமாக கழிந்து விட்டது என்றாலும் இன்னும் பாக்கி கொஞ்சம் இருக்கிறது. "ஸ்பார்க்" ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பவர்கள். பிராக்டிக்கலாக செய்து பாருங்கள். மற்றவர்களுக்கும் செய்து காண்பியுங்கள். சரிதானா? செய்ய முடியுமா? செய்து விட முடியுமா? நல்லது சரி. மிகவும் நல்லது. நல்லது.

அடுத்த மீட்டிங் டிரான்ஸ் போர்ட். டிரான்ஸ் போர்ட் சேவையில் உள்ளவர்கள் (போக்குவரத்து சேவை) எல்லோருக்கும் சுகம் கொடுப்பீர்கள். டிரான்ஸ்போர்ட் சேவை செய்பவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது. சகோதரிகள்! சகோதரிகள் இல்லா விட்டால், வேகம் இருக்காது. நல்லது. "டிரான்ஸ்போர்ட்" காரர்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? தங்களுக்குள் ஒரு புரோகிராம் செய்யுங்கள். அதாவது எப்படிப்பட்ட ஆத்மாவாக இருந்தாலும், குறைவான நேரத்தில், துக்கமான உலகை மறந்து கொஞ்ச நேரமாவது சாந்தியாத்திரை செய்பவர்களாக ஆக வேண்டும். சரி. பரந்தாமம் வரை கொண்டு சேர்ப்பது, கஷ்டம் ஆனால் துக்கமான உலகிலிருந்து, சாந்தி யாத்திரை செய்விக்க முடியும். இந்த பிளான் நிறைய செய்யுங்கள். நாலா பக்கங்களிலிருந்தும், யாத்திரை செய்பவர்களுக்கு, பாப்தாதாவின் செய்தி சென்றடையும்படி செய்து கொண்டிருக்கிறீர்கள். செய்து கொண்டுமிருப்பீர்கள். ஏனென்றால், எந்த ஒரு வர்க்கமும் தெரியாதவர்களாக பின்தங்கி விடக் கூடாது. இது நல்லது. (வாணிபம், மருத்துவம், மகளிர், அலுவலர், ஆட்சியர் என்று) இன்னும் இத்தனை விதமான வர்க்கம் உள்ளது என்று கண்டுபிடித்திருக்கிறீர்கள். இது நல்ல காரியம். பின்னால் யாரும் குறை சொல்ல மாட்டார்கள். இதனால் எந்த

ஒரு வார்க்கத்தைச் சார்ந்தவரும், விடுபட்டுப் போய்விட மாட்டார்கள். ஒவ்வொருவரும், தங்கள் தங்களுடைய வர்க்கம் முன்னேறிச் செல்ல வேண்டும் என்பதில் ஆர்வம் உடையவர்களாக இருக்கின்றார்கள் அல்லவா? இது மிகவும் நல்லது ஆனால் இப்போது எத்தனை வர்க்கம் உள்ளதோ, அவை எவ்வளவு நாட்களாக நடந்து கொண்டிருக்கிறது. ஒன்றரை அல்லது இரண்டு ஆண்டுகள் ஆகி விட்டன அல்லவா? அல்லது அதிகம் ஆகி விட்டதா? (10-12 ஆண்டுகள்) வர்க்க சேவை செய்ய ஆரம்பித்து 10-12 ஆண்டுகள் ஆகி விட்டன. நல்லது. அதிக காலம் ஆகி விட்டது. வர்க்க சேவையில் இருப்பவர்களுக்காக, பாப்தாதாவிடம் ஒரு சங்கல்பம் உள்ளது. பாப்தாதா 2-3 முறை கூறியிருக்கின்றார் ஆனால் நடைபெறவில்லை. ஒவ்வொரு வர்க்கத்தைச் சேர்ந்தவரும், ரொம்ப நாட்களாக சேவை செய்து கொண்டிருக்கிறீர்கள். யாராருக்கெல்லாம் சேவை செய்திருக்கிறீர்களோ, அவர்களில் சிலர் விசேஷ சேவை செய்பவர்களாக இருக்கலாம், சகயோகியாக இருக்கலாம், அரையோகியாக இருக்கலாம், அவ்வப்போது வருபவர்களாக இருக்கலாம், தொடர்ந்து (ரெகுலராக) வராமல் இருக்கலாம், இப்படிப்பட்டவர்கள், ஒவ்வொரு வர்க்கத்திலிருந்தும், குறைந்த பட்சம் 5-பேராவது இங்கு எதிரில் வர வேண்டும். மதுபனை எல்லோரும் பார்க்கட்டும். வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் 10-12 பேர் ஆனாலும் 5-பேராவது பக்காவான ஆத்மாவாக இருக்க வேண்டும். நல்ல சகயோகியாக, சேவையில் நிமித்தமாக இருக்கக் கூடியவர்கள் 5-5 பேராவது தேர்வு செய்ய முடியுமா? இல்லையா? தேர்வு செய்ய முடியுமானால், அழைத்து வாருங்கள். எப்போது அழைத்து வருவீர்கள்? அது தாதிகளுடைய பொறுப்பு ஆனால் அவர்கள் பாப்தாதாவை சந்திப்பதற்கு தகுதியுடையவர்களாக இருக்க வேண்டும். 5-பேராவது தேர்ந்தெடுக்க முடியும். அதிகம் சொல்லவில்லை. 5-பேர் போதும். இவர்களை தாதிகள் தேர்வு செய்வார்கள்.

மூன்றாவது மீட்டிங்: இன்ஜினியர்கள். மிகவும் நல்லது. இன்ஜினியர்களுடைய வேலையே பிளான் தயாரிப்பது. (திட்டம் இடுவது) நீங்கள் தீவிர புருஷாரத்ததிற்காக ஏதாவது பிளான் செய்தீர்களா? அல்லது சேவைக்கு மட்டமே பிளான் தயார் செய்தீர்களா? இன்ஜினியர்கள் ஒவ்வொரு மாதமும், தீவிர புருஷாரத்தத்திற்கு,

ஏதாவது புதுப்புது பிளான் தயார் செய்ய வேண்டும். தங்கள் விருப்பத்தை தெரிவிக்க வேண்டும். பிறகு தாதிமார்கள் முடிவு செய்வார்கள். தாதிகள் உங்களுக்குத் துணையாக இருப்பவர்கள் ஆனால் இன்ஜினியர்கள் மற்றும் விஞ்ஞானிகள் சேர்ந்து அப்படிப்பட்ட ஒரு பிளான் தயாரிக்க வேண்டும், இதன் மூலமாக சீக்கிரமாகவே புது உலகம் தயாராகி விட வேண்டும். அல்லது இப்போது செய்வது போலவே மீட்டிங் செய்து கொண்டிருக்கப் போகிறீர்களா? இதே போலவே பிளான் தயார் செய்து கொண்டிருக்கப் போகிறீர்களா? எதுவரையிலும் இப்படியே செய்து கொண்டிருக்கப் போகிறீர்கள்? ஏதாவது, தீவிரமாக வேகப்படுத்துவதற்கான பிளான் தயார் செய்யுங்கள். ஏனென்றால், உங்கள் வர்க்கத்தினுடைய லக்ஷியமே இது தான், அதாவது, சீக்கிரமாகவே நம்முடைய இராஜ்யத்தை கொண்டு வருவதற்கான பிளான் தயாரிப்பது. சேவையில் குறைந்த காலத்திலேயே, அதிக வெற்றி கிடைக்கும் வகையில், பிரத்யக்ஷமாக தெரிகின்ற வகையில் பிளான் தயார் செய்யுங்கள். செய்வீர்களா? அப்படிப்பட்ட பிளான் தயார் செய்வீர்கள் அல்லவா? கடைசி சந்திப்பில் எல்லா ரிப்போர்ட்டையும் கேட்போம். ஒவ்வொரு வர்க்கமும், வெற்றியை தீவிரப்படுத்து வதற்காக என்ன பிளான் தயார் செய்திருக்கிறார்கள் என்று பார்ப்போம். தயார் செய்தால் மட்டும் போதாது, 15-நாட்களுக்குள் அதை அப்பியாசம் செய்ய வேண்டும். பிராக்டிக்கலாக கொண்டு வர வேண்டும் சரிதானே! இப்போது (பிராக்டிக்கல்) நடைமுறையில் கொண்டு வர வேண்டுமல்லவா? எல்லோரும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்கிறார்கள். பாப்தாதா எல்லோருடைய சம்பாஷணைகளையும் கேட்டுக் கொண்டுதான் இருக்கின்றார். எல்லோருமே கூறுகின்றார்கள், பிரத்யக்ஷம் ஆகட்டும், பிரத்யக்கம் ஆகட்டும் என்று ஆனால் முதலில் நீங்கள் பிரத்யக்ஷம் ஆகவேண்டும். பாபாவும் கூட உங்கள் மூலமாகவே பிரத்யக்கூம் ஆவார் அல்லவா? நல்லது.

இப்போது குமாரிகளினுடைய சமர்ப்பண விழா. மிகவும் நன்றாக இருக்கிறது. குமாரிகள் எழுந்து நில்லுங்கள். பூச்செண்டு அசைத்து காண்பியுங்கள். அமருங்கள். எல்லோரும் பார்த்தீர்களா? எல்லோரையும் விட குமாரிகள் பற்றி பாப்தாதா ரெம்பவும் பெருமையாக நினைக்கின்றார். குமாரிகள், டபுள் ஃபாரினர்ஸ் குமாரிகள் 110-பேர் வந்திருக்கின்றனர். இது பாப்தாதாவுக்கு மிகவும்

பிடித்தமானதாக இருக்கிறது. பதம்-பதம்-பதம் மடங்கு குமாரிகளுக்கு வாழ்த்துக்கள். நல்லது. பாப்தாதாவுக்கு குமாரிகள் மீது விசேஷமான அன்பு இருக்கிறது. ஏன்? காரணம் என்ன? வெளிநாட்டில் வசிப்பவர்களாயிருந்தும், குமாரிகள், சுகுமாரிகள் ஆகியிருக்கின்றனர். காப்பாற்றப்பட்டு விட்டார்கள். எத்தனையோ விஷயங்களிலிருந்து தப்பி விட்டார்கள். ஆகவே குமாரிகள் தங்களை பாதுகாத்துக் கொண்டார்கள் என்பது, பாப்தாதாவுக்கு நன்றாக இருக்கிறது. குமாரிகள் மீது விசேஷமான அன்பு இருக்கிறது. இதற்கு பிரத்யக்ஷ அடையாளம், முதன் முதலில் மற்றெல்லாவற்றையும் விட சீக்கிரமாகவே, சென்டர், வரதக்ஷணையாக கிடைக்கிறது. இங்கே பாருங்கள், எவ்வளவு டீச்சர்கள்! இதில் சென்டரில் பொறுப்பேற்று, பராமரித்துக் கொண்டிருக்கும் குமாரிகள் எழுந்திருங்கள்! உங்களுக்கு வரம் வீடு, வரதட்க்ஷணை எல்லாமே கிடைத்து விட்டது. ஆகவே குமாரிகள் விசேஷமானவர்கள் தானே? பாப்தாதாவுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. ஒவ்வொரு குமாரியும் வகுப்பில் நான் யார்? என்று தங்களுடைய அறிமுகத்தைத் கொடுக்க வேண்டும். இதனால் முத்திரை பக்கவாக ஆகி விடும். ஆதலால் பாப்தாதாவுக்கு குமாரிகளின் குரூப் மிகவும் அன்பானதாக இருக்கின்றது. ஒவ்வொரு குமாரியும், எத்தனை குடும்பங்களுக்கு கல்யாணகாரியாக இருப்பார்கள்! இந்தியாவில், குமாரிகள் 21-குலத்திற்கு கல்யாணகாரியாக இருப்பார்கள் என்று சொல்லப்படுகிறது. பாப்தாதா கூறுகின்றார், குமாரி, பிரம்மாகுமாரியானால், அவர்கள் ஆத்மாக்களுக்கு 21-ஜன்மத்திற்கு மங்களம் செய்விப்பவர்களாக இருப்பார்கள். மிக நல்ல காரியம் செய்தீர்கள். இவர்களுடைய டீச்சர் யார்? குமாரிகளினுடைய டீச்சர் யார்? டபுள் ஃபாரினர்ஸ் யாரெல்லாம் இருக்கின்றார்களோ அவர்கள் எல்லோரும் இவர்களுக்கு சேவை செய்திருக்கிறார்கள். மிக நன்றாக சேவை செய்திருக்கிறீர்கள். பாப்தாதா ரிசல்ட் பார்த்தார். மிகவும் ஆர்வத்தோடும், உற்சாகத்தோடும் சேவை செய்திருக்கிறார்கள். இதற்கு நிமித்தமாக இருந்தவர்களும், சேவை செய்திருக்கிறார்கள். ஆதலால் பாஸாகி விட்டீர்கள். வாழ்த்துக்கள். நல்லது.

டபுள் ஃபாரினர்ஸில், விசேஷமாக நிமித்தமாயிருந்து சென்டர் பாலனை செய்து கொண்டிருக்கும் பாண்டவர்கள் எழுந்திருங்கள். பாண்டவர்களுக்கும் நிறைய வாழ்த்துக்கள். பாப்தாதாவுக்கு

பாண்டவர்கள் அன்பானவர்கள் அல்ல என்று அர்த்தம் அல்ல. பாண்டவர்கள், பாண்டவபதியுடன் இருப்பவர்கள். இதுபற்றிய ஞாபகார்த்தமும் இருக்கிறது. அதுவே சொல்லும். பாண்டவர்களுடைய ஞாபகார்த்தம் சதா பாண்டவபதி பாப்தாதாவுடன் இருந்தார்கள் என்பது. மேலும் பாப்தாதாவுக்கு மகிழ்ச்சியாயும் இருக்கிறது. அதாவது மிக நல்ல உதாரணமாகி, சேவாதாரியாகி, சேவை செய்து கொண்டிருக் கிறார்கள். தொடர்ந்து செய்து கொண்டே இருப்பார்கள். ஆதலால் திலாராம் பாபா, மனப்பூர்வமாக, நன்றியைத் தெரிவிக்கின்றார். நல்லது. டபுள் ஃபாரினர்ஸின் சிறப்பு என்னவென்றால், உத்தியோகம் செய்கிறார்கள், சென்டரையும் பாலனை செய்கிறார்கள். இவ்வாறு டபுள் காரியம் செய்கிறார்கள். இதில் சகோதரிகளும் உண்டு. சகோதரர்களும் உண்டு. எப்படி பெயர் டபுள் ஃபாரினர்ஸ் என்று இருக்கிறதோ, அதுபோலவே காரியமும் டபுள். ஆதலால் பாப்தாதா எல்லா ஃபாரினர்ஸ்களுக்கும் மிக மிக மிக மிக அதிக நினைவு அளிக்கின்றார். கேட்டீர்களா?

குஜராத் சேவாதாரிகளுடன்: பழமொழி ஒன்று உண்டு. யார் சமீபத்தில் இருக்கிறார்களோ, அவர்களுடைய நினைவு சதா இருக்கும். ஆகவே எல்லாவற்றையும் விட சமீபமாக இருக்கும் முக்கிய இடம் குஜராத், சரி. குஜராத் எல்லோரும் எழுந்திருங்கள். நிறைய சேவாதாரிகள் வந்திருக்கின்றார்கள். குஜராத்தின் விசேஷம் என்னவென்றால், எப்போது அழைப்பு வந்தாலும் உடனே வந்து சேர்ந்து விடுகிறார்கள். அப்படித்தானே? சேவைக்காக, எப்போது அழைத்தாலும் வந்து விடுவார்கள். சமீபத்தில் இருப்பதால், இந்த லாபம். சமீபத்தில் இருப்பதால் இன்னொரு லாபமும் உண்டு, எல்லா முரளியிலும் பெயர் வந்து விடுகிறது. நல்லது. குஜராத் சேவையில் நல்ல முறையில் சதா இருந்து கொண்டேயிருப்பவர்கள். எண்ணிக்கையும் அதிகம். குஜராத்தில் எண்ணிக்கை இன்னும் ஒரு லக்ஷம் ஆகவில்லை, இன்னும் கொஞ்சம் பாக்கி இருக்கிறது என்று பாப்தாதாவுக்குத் தெரியும். 9-லக்ஷம் வேண்டும். எது, எதெல்லாம் பெரிய ஜோனாக (மண்டலம்) இருக்கின்றதோ, அவர்கள் ஒவ்வொரு ஜோனும், ஒவ்வொரு லக்ஷம் சேர்த்து விட்டால், 9-லக்ஷம் ஆகி விடும். டபுள் ஃபாரினர்ஸ் எத்தனை பேர்? 50-ஆயிரம் இருக்குமா? எவ்வளவு? (20-ஆயிரம்) 50-ஆயிரம் ஆக வேண்டும். சரி. இந்தியாவில் உள்ளவர்களுக்கு ஒரு லக்ஷம் என்றால்

ஃபாரினர்ஸ் 50-ஆயிரம் சேர்க்க வேண்டுமல்லவா? வெளிநாட்டிலும் கூட, குஜராத்திகள் நிறைய பேர் இருக்கிறார்கள். என்றாலும் அவர்களும் ஃபாரினர்ஸ் தானே? வெளிநாட்டில் எங்கெல்லாம், குஜராத்திகள் அல்லது இந்தியர்கள் இருக்கின்றார்களோ அங்கெல்லாம் சென்டரும், பண்டகசாலையும் நிறைந்திருக்கும். இப்போது பாப்தாதா வெளிநாட்டிலிருந்து நல்ல செய்தி கேட்கின்றார். வெளிநாட்டில் உள்ளவர்களுக்கும், கிடைக்க வேண்டிய பாக்கியம் (ஆஸ்தி) கிடைத்துக் கொண்டேயிருக்கிறது. ஆதலால் தங்களுடைய வருங்கால பாக்கியத்தை அடைவதற்கு வாய்ப்பு நன்றாக கிடைத்துள்ளது. நல்லது. பாப்தாதா எல்லா சமாச்சாரங்களையும் கேட்டுக் கொண்டுதானிருக்கின்றார். நன்றாக இருக்கிறது. ஒவ்வொரு பாரதவாசியிடமும், டபுள் ஃபாரினர்ஸ் களிடமும் விசேஷங்கள் நிறைய இருக்கின்றன ஆனால் எதுவரை சொல்லிக் கொண்டேயிருப்பது. அதாவது ஒவ்வொரு ஸ்தானத்திலும், ஏதாவதொரு விசேஷம் இருக்கிறது. விசேஷம் இல்லை என்று சொல்லக்கூடிய, ஸதானம் ஒன்று கூட இல்லை. விசேஷ ஆத்மாக்கள். விசேஷமுள்ளவர்கள். இன்று ஃபாரினில் கேட்டுக் கொண்டும், பார்த்துக் கொண்டுமிருக்கிறார்களா? இல்லையா? (பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்) நல்லது. உங்களுடைய யக்ஞம் ஸ்தாபனையானதற்குப் பின்னர் தான், விஞ்ஞானம் விருத்தி யானது. ஆதலால் அந்த லாபத்தை நீங்கள் எடுப்பீர்கள் அல்லவா? ஆனால் விதிபூர்வமாக லாபம் எடுக்க வேண்டும். யாரெல்லாம் விஞ்ஞான சாதனம் மூலமாக பார்த்துக் கொண்டிருக்கிறீர்களோ, கேட்டுக் கொண்டிருக்கின்றீர்களோ, அந்த எல்லா குழந்தைகளையும், எல்லாவற்றிற்கும் முதலில், பாப்தாதா சதா நினைவு செய்கின்றார். எவ்வளவுக்கெவ்வளவு நினைவு பலம் சக்திசாலியாக இருக்கிறதோ அவ்வளவு அப்படியே, பாப்தாதா நம்முடன் பேசிக் கொண்டிருக்கின்றார் என்பதை உணர்ந்து அனுபவம் செய்வீர்களா? அல்லது அனுபவம் செய்து கொண்டிருக்கிறீர்களா? ஆனாலும், மதுபன், மதுபன் தான்.

நல்லது. இப்போதே உங்களுடைய விருத்தியை ஏகாக்கிரஹம் செய்ய முடியுமா? எந்த விதத்திலும், விருத்தி சஞ்சலத்தில் வந்து விடக்கூடாது. அச்சல் (உறுதியாக), ஏகாக்கிரஹம் (ஒருமித்தல்) சக்திசாலியாக இருக்கட்டும். (டிரில் செய்வித்தார்) நல்லது.

நாலா பக்கங்களிலுமுள்ள எல்லா சர்வீஸஸ்புள் குழந்தைகளுக்கு சதா தன்னுடைய சிரேஷ்ட வைப்ரேஷன் மூலமாக சேவை செய்யக்கூடிய, தீவிர கதியில் புருஷாரத்தம் செய்யக்கூடிய, குழந்தைகளுக்கு, சதா மன்னிப்பதில் மாஸ்டர் சாகர், சதா சுப பாவனா, சுப காம்னா மூலமாக, மிகவும் பலவீனமாயிருக்கின்ற ஆத்மாக்களையும் கூட சக்திசாலியாக்கக்கூடிய, அப்படிப்பட்ட மாஸ்டர் சர்வ சக்திவான் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் மிக அதிகமான அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

தாதிஜி மற்றும் தாதி ஜானகிஜியுடன்: எல்லோரையும் விட மகிழ்ச்சி யாருக்கு இருக்கும் சொல்லுங்கள்? பாபா மகிழ்ச்சியடைகின்றாரா? அல்லது உங்களுக்கும் மகிழ்ச்சியாக இருக்கின்றதா? (ஒருவருக்கொருவர் அதிகம்) நல்லது. பாப்தாதா நிமித்த ஆத்மாக்களாகிய உங்களுடைய சேவையைப் பார்க்கும்போது நீங்கள் சேவையில் அர்ப்பணமாகியிருக்கிறீர்கள். பாலனைக்கான விதி நன்றாக இருக்கிறது, பாப்தாதா உங்கள் இருவரையும் உலகின் முன்னே, சிநேகம், சகயோகம் மற்றும் ஒருவருக்கொருவர் பரிவுடன் நடந்து கொள்வதைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார். (குல்ஜார் தாதியும் இருக்கின்றார், திரிமூர்த்தி) இவர் நிமித்தமாகி விட்டார். உங்களைப் பார்க்கும்போது, நீங்கள் ஒருவர்க்கொருவர் சொல்வதை, மற்றவர் ஏற்றுக் கொள்கிறீர்கள். இவ்வாறு ஏற்றுக் கொள்வது தான் மரியாதைக்குரியவர்களாக ஆக்குகிறது. ஆமாம், ஆமாம் என்று சொல்லியே, பாபாவையும், உங்களுடையவராக ஆக்கி விடுகிறீர்கள். (பாபா சேர்த்துச் சேர்த்து நிரப்பி விட்டார்) 14-ஆண்டு பாலனையில் எல்லாம் சேர்த்து சேமித்து விட்டார். (இப்போதும் கூட விடுவதில்லை) உங்களுக்கு வேண்டாம் என்றாலும், பாபா விடுவதாக இல்லை. மிகவும் நல்லது. இந்த துணையும் உங்களுக்கு நன்றாகவே கிடைத்திருக்கிறது. எல்லோருக்கும் துணையாக இருப்பதால், முன்னேறிக் கொண்டேயிருக்கிறார்கள். ஒரு சிறுமியும் கூட துணை இல்லாவிட்டால், சிரமத்திற்கு உள்ளாகி விடுகிறார். எல்லோருக்கும் வேண்டுமல்லவா? பாண்டவர்களானாலும், சக்திகள் ஆனாலும், ஒவ்வொருவரும் சகயோகம் மற்றும் வெற்றியை அடைந்து கொண்டிருக்கிறார்கள். நமக்கு ஒன்றுமில்லை, பார்த்துக்

கொண்டிருந்தால்போதும் என்று நினைக்காதீர்கள். செய்பவர்கள், எல்லோருடைய சகயோகத்தால், பேகத், காரியம் நடந்து கொண்டிருக்கிறது. பிரம்மாபாபா, என்ன அஸ்திவாரம் போட்டார்? சகயோகம் (ஒத்துழைப்பு) என்ற அஸ்திவாரம் போட்டார். பாப்தாதாவால் தனியாகவே செய்ய முடியாதா என்ன? ஆனால் அஸ்திவாரம் எல்லோருடைய ஒத்துழைப்பு (சகயோகம்) என்பதாக இருந்தது. ஆதலால் சகயோகத்தின் மூலமாகவே உலகம் மாறிக் கொண்டிருக்கிறது. நல்லது. எல்லோருடைய சகயோகம் இருக்கிறது. ஒவ்வொரு ரத்தினமும் விசேஷமானவரே. நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

## 11.03.2002 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# விசேஷங்கள் பரமாத்மாவின் அன்பளிப்பு -இவைகளை உலக சேவையில் அர்ப்பணியுங்கள்! (சிவ ஜெயந்தி)

இன்று கிரேட்-கிரேட்-கிராண்ட் ஃபாதர் பிரம்மாபாபா மற்றும் சிவபாபா, உலகின் நாலா பக்கங்களிலுமுள்ள தன்னுடைய சிரேஷ்ட பாக்கியவான்களான பிராமண குலத்தின் திவ்ய அலௌகீக ஜன்மத்திற்கு, மிக, மிக கோடான கோடி நல் ஆசிகளைத் தெரிவிக்கின்றார். அத்துடன், மிகவும் சிநேகமுள்ள, உள்ளன்பு கொண்ட ஆன்மீக மலர்களின் ஜன்மத்திற்கு பாராட்டு தலையும் தெரிவிக்கின்றார். ஒவ்வொரு பிராமண ஆத்மாவினுடைய

விசேஷத்தையும் பார்த்துப் பார்த்து உள்ளம் பூரிப்படைகின்றார். மனதிற்குள்ளேயே மகிமைகளைப் பாடுகின்றார். வாஹ் பச்சே வாஹ்! இன்றைய தினம் அமிருதவேளை முதல் எல்லோருடைய உள்ளத்திலும், இதே குஷியினுடைய அலைகள் பரவிக் கொண்டிருப்பது தெரிகின்றது. தந்தையினுடைய மற்றும் தங்களுடைய அலௌகீக ஜன்மத்திற்கு வாஹ்! தந்தையும் கூட, அமிருத வேளையிலிருந்து, எல்லா குழந்தைகளின் புகழ் மாலைகளைப் பார்த்துப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார். இந்த பிறந்த நாள், முழு கல்பத்திலும், இந்த சங்கமயுகத்தில் தான் கொண்டாடுகிறார்கள். சத்யுகத்தில் கூட இப்படிப்பட்ட அலௌகிக ஜன்ம தினம் கொண்டாடுவதில்லை. தந்தைக்கும், குழந்தைக்கும் ஒன்றாகவே பிறந்த நாள் என்ற விசித்திரமான ஜன்ம தினம் அங்கேயும் கூட இருப்பதில்லை. தந்தையும், குழந்தையும் ஒரே நாளில் பிறந்தார்கள் என்று எங்கேயாவது, இதுவரையிலும் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? ஆனால், இன்றைய தினம் கொண்டாடுகிறீர்கள். அப்படியானால் வாஹ்! வாஹ்! என்ற பாட்டு பாடுகிறீர்கள் அல்லவா?

இன்று பாப்தாதா அமிருத வேளையில், ஒரு மாலை தயார் செய்து கொண்டிருந்தார். எந்த மாலை? நீங்களெல்லாம் கூட ஆவலோடு எதிர்பார்க்கிறீர்கள் அல்லவா! நம்ம பெயர் அதில் உள்ளதா? என் பெயர் அதில் இருக்குமா? என்று எண்ணுகிறீர்கள் அல்லவா? அந்த 108-மணி மாலை அல்ல ஆனால், ஆதியில் ஸ்தாபனை ஆரம்பித்த நாளிலிருந்து, விநாசத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற இந்த சமயம் வரையிலும், எந்தெந்த குழந்தைகள் அமர்பவ! என்ற வரதானத்திற்குரியவர்களாக இருக்கிறார்கள்? அவர்களுடைய மாலை தயார் செய்து கொண்டிருந்தேன். இதுவும் கூட, அந்த ஆத்மாக்களுக்கு டிராமாபடி, மிக உயர்ந்ததிலும், உயர்வான பகவானுடன், அவருடைய குணங்களைப் பார்க்கவும், கேட்கவும், சிரேஷ்டமான பார்ட் இருக்கிறது. என்றாலும், மிகவும் குறைவான எண்ணிக்கை தான்! உங்கள் எல்லோருக்கும் கூட பார்ட் உள்ளது ஏன்? பாப்தாதா பிராமண வம்சாவளி தயார் செய்கின்றார். ஆதலால் உலக கணக்குப்படி யாரெல்லாம் பிராமண ஆத்மாக்களாக இருக்கின்றார்களோ, அவர்கள், மிக மிக மிக பாக்கியவான்கள். ஏன்? கோடான கோடிப் பேரில், ஒரு சிலர் தான். அந்த சிலரிலும், ஒரு சிலர். ஒரு பக்கம் உலகிலுள்ள கோடி

ஆத்மாக்கள். மறுபக்கம், பிராமணர்களாகிய ஒவ்வொரு ஆத்மாவும், ஒருவர். ஆதலால் பிறந்த நாள் தினத்தன்று, பாப்தாதா, ஒவ்வொரு குழந்தைக்கும், ஒரு சிலருக்கு மட்டுமல்ல, எல்லா குழந்தைகளினுடைய பிறந்த ஜாதகம் பார்த்து, ஒவ்வொருவருடைய விசேஷங்களின் மாலைகளை கழுத்தில் அணிவித்துக் கொண்டிருந்தார். நீங்கள் எல்லோரும் புதிதாக வந்தவர்களாக இருக்கலாம், ஆதியிலேயே வந்து சேர்ந்தவர்களாக இருக்கலாம், மத்தியில் வந்தவர்களாக இருக்கலாம், என்றாலும் எல்லோரும் விசேஷமானவர்கள் தான். இன்னும் விசேஷமுடையவர்களாகவே நிச்சயமாக இருப்பீர்கள். கல்ப முழுவதும் விசேஷமானவர்களாகவே இருப்பீர்கள். கல்ப முழுவதிலும், உலகிலுள்ள எல்லா ஆத்மாக்களுக்கும், சிரேஷ்ட ஆத்மாக்களாகிய உங்கள் மீது, மகான்கள் என்ற பார்வை இருக்கும். அப்படியானால், நீங்கள் உங்களிடமுள்ள விசேஷத்தை அறிவீர்களா, அறிவீர்களா? ஒவ்வொருவரும், உங்களுடைய விசேஷத்தை அறிவீர்களா? ஆம் என்றால், ஒரு கை உயர்த்துங்கள். மிகவும் நல்லது. அந்த விசேஷத்தை என்ன செய்கிறீர்கள்? உங்கள் விசேஷத்தைப் பற்றி அறிந்துள்ளளீர்கள், சரி விசேஷம் உங்களிடம் உள்ளது என்பதை ஏற்றுக் கொண்டீர்கள், இதுவும் சரி தான் ஆனால் அந்த விசேஷங்களை என்ன செய்கிறீர்கள்? என்ன செய்கிறீர்கள்? (சேவையில் உபயோகிக்கிறோம்) வேறு விதத்தில் இதை உபயோகிக்கவில்லையல்லவா? விசேஷம் -பரமாத்மாவின் அன்பளிப்பு. பரமாத்மாவின் அன்பளிப்பை சதா விஷ்வ சேவையில் அர்ப்பணிக்க வேண்டும். விசேஷங்களை, ஒருவேளை எதிர்மறைவாக உபயோகிப்பீர்களேயானால், "அபிமானம்" ரூபம் ஆகி விடும். ஏனென்றால் ஞானத்தில் வந்த பிறகு, பிராமண வாழ்க்கையில் வந்த பிறகு, பாபாவிடமிருந்து அநேக விசேஷங்கள் பிராப்தியாகின்றன. ஏனெனில், பாபாவினுடையவராகி விடும்போது, விசேஷங்கள் எனும் பொக்கிஷங்களுக்கு அதிகாரியாகி விடுகிறீர்கள். ஒன்றிரண்டு விசேஷங்கள் அல்ல. நிறைய விசேஷங்கள். ஞாபகார்த்தங்களில், உங்களுடைய விசேஷங்களின் வர்ணனை உள்ளது. 16-கலை சம்பன்னம், 16-என்றால் பதினாறு அல்ல. சம்பூரணம் என்பது. சர்வ குண சம்பன்னம். சம்பூரண நிர்விகாரி என்பது பற்றிய விவரங்கள் உள்ளன. சம்பூரண நிர்விகாரி என்று வாயால் சொல்லி விடுகிறோம் ஆனால் சம்பூரணம் என்பதில் நிறைய விஷயங்கள் அடங்கியுள்ளன.

விசேஷங்கள் பாபாவிடமிருந்து, ஒவ்வொரு பிராமணருக்கும், ஆஸ்தியாக கிடைக்கிறது ஆனால் அந்த விசேஷங்களை தாரணை செய்ய வேண்டும். சேவையில் பயன்படுத்த வேண்டும். இது என்னுடைய விசேஷம் என்பது சரியல்ல. இது பரமாத்மாவின் அன்பளிப்பு. பரமாத்மாவின் அன்பளிப்பு என்று புரிந்து கொள்ளும்போது, பரமாத்மாவின் சக்திகள் நிரம்பி விடுகின்றன. என்னுடையது என்று நினைத்தால், அபிமானம், அவமானம் என்ற இரண்டையும் எதிர் கொள்ள வேண்டியதிருக்கும். அபிமானம் எந்த ஒரு விதத்தில் இருந்தாலும், ஞானம், யோகம், சேவை, புத்தி, குணம் ஆகிய ஏதாவதொரு விதத்தில் அபிமானம் இருந்தால், அதன் அடை யாளம், அவருக்கு அவமானம் மிகச் சீக்கிரமாகவே உணரும் படியான நிலை உண்டாகி விடும். ஆதலால் விசேஷ ஆத்மாக்கள் என்றால், பரமாத்மாவின் அன்பளிப்புக்கு அதிகாரி.

ஆதலால், இன்று நீங்கள் எல்லோரும், பாப்தாதாவினுடைய பிறந்த நாளை கொண்டாடுவதற்காக வந்திருக்கிறீர்கள் அல்லவா! மேலும் பாப்தாதா உங்கள் எல்லோருடைய பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக வந்திருக்கின்றார். உள் நாட்டில் தூரமாக இருப்பவர்களானாலும், வெளிநாட்டில் ஏதாவதொரு மூலையில் இருப்பவர்களானாலும், பிராமண ஆத்மாவாக, பிராமண குலத்தைச் சேர்ந்தவராக இருந்தால், அவர்கள் எல்லோருடைய பிறந்த நாளை பாப்தாதா கொண்டாடுகின்றார். நீங்களும் கூட கொண்டாடுகிறீர்கள். எல்லோருக்கும் சேர்த்துக் கொண்டாடுகிறீர்கள் அல்லவா? அல்லது இங்கு இருப்பவர்களுக்கு மட்டும் தானா? எல்லோரைப் பற்றிய நினைவும் இருக்கிறதல்லவா? எல்லோரும் பார்க்கிறார்கள், நமக்கும் சேர்த்து கொண்டாடுகிறார்களா, அல்லது இல்லையா? என்று. ஆதலால் எல்லோருக்குமாகவே கொண்டாடுகிறீர்கள். எல்லோருக்கும் ஆசிகள். வாழ்த்துக்கள், பாராட்டுகள். கொண்டாடுவது என்றால் ஆர்வம், உற்சாகமாக இருப்பது. ஆதலால் உள்ளத்தில் உற்சாகம் இருக்கிறதல்லவா? வாஹ்! ஆகா! என்னுடைய அலௌகீக ஜன்ம தினம்!

ஆதலால் இன்று அமிருத வேளையிலிருந்து பிறந்த நாள் பற்றிய ஆர்வம், உற்சாகம் எல்லோரிடமும், மிகவும் நன்றாக

இருக்கிறதல்லவா? பாப்தாதா, கார்டு (பர்த்-டே-கார்டு) பார்த்தார். நீங்கள் இந்தக் கண்களால் பார்க்கிறீர்கள் ஆனால் பாப்தாதா, சூட்சுமமாக, உங்களுக்கும் முன்பாகவே, பார்த்து விடுகின்றார் ஆனால் பாப்தாதா என்ன பார்த்தார் என்றால், தங்களுடைய மனதை உற்சாகமாக வைத்துக் கொள்வதற்காக, எவ்வளவு ஆர்வத்துடன் இருக்கிறார்கள்! இந்த காலத்தில் ஈ-மெயில், மலிவாக இருக்கிறது. ஆதலால் நிறைய பேர் ஈ-மெயில் தான் அனுப்புகிறார்கள். பாப்தாதாவிடம் எல்லாம் வந்து சேர்ந்து விடுகிறது. ஈ-மெயிலாக இருந்தாலும் சரி, கார்டாக இருந்தாலும் சரி, கடிதமாக இருந்தாலும், சங்கல்பமாக இருந்தாலும், வந்து சேர்ந்து விடுகிறது. அமிருதவேளையிலிருந்து, வதனத்தில் வந்து சேர்ந்திருக்கின்ற ஈ-மெயில், கடிதம், கார்டு, சங்கல்பம் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துப் பார்த்தால், மிகவும் ஆனந்தமாயிருக்கும். இதை ஒரு கண்காட்சியில் வைப்பது போல அலங்காரமாக வைத்தால் பார்ப்பதற்கு விசித்திரமாக இருக்கும். பிறந்த நாள் அன்று, வருங்காலத்தைப் பற்றிய சிந்தனை வரும். பிறந்த நாள் என்பது ஒவ்வொரு ஆண்டும் கூடிக் கொண்டேயிருக்கிறது. 65 லிருந்து 66- ஆகி விட்டது. எப்படி ஆண்டு அதிக மாகிக் கொண்டேயிருக்கிறதோ, அதுபோல, புருஷாரத்தத்தில் (முயற்சியில்) தங்களுடைய விலைமதிக்க முடியாத வாழ்க்கையில், மனதில், அதாவது சங்கல்பத்தில், புத்தியின் நிர்ணய சக்தியில், பேச்சில், ஒரு வினாடியில் வெற்றி மூர்த்தியாக ஆக்கக்கூடிய சக்தியில், சம்மந்தம், தொடர்பில், ஒவ்வொரு சமயத்திலும், சம்மந்தம், தொடர்பில் வரக்கூடியவர்களுக்கு, ஏதாவதொரு பிராப்தியை அனுபவம் செய்விக்கக் கூடிய வகையில், மேலும், வரும் ஆண்டுக்காக திடமான எண்ணம், அல்லது விரதம் எடுத்துக் கொண்டீர்களா? ஏனென்றால், விசேஷமாக சிவஜெயந்தி நாளில், பிராமண ஆத்மாக்களுக்கு இரண்டு லக்ஷியங்கள் உள்ளன. ஒன்று தனக்காக எடுத்துக் கொள்ளும் உறுதிமொழி (பிரதிக்ஞை). இரண்டாவது, பாபாவைப் பிரத்யக்ஷம் செய்யும் கொடி பறக்க விட வேண்டும் என்பது. இந்த இரண்டு லக்ஷியங்கள் விசேஷமாக இந்த தினத்தில் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கிறது. இப்போது இது வரையிலும் எத்தனை உறுதி மொழி எடுத்துக் கொண்டிருந்தீர்களோ, அந்த பிரதிக்ஞைகள் அடங்கிய சார்ட்டைப் பார்த்தார். ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொருவரும் விதிபூர்வமாக சங்கல்பத்தின் மூலமாகவும், வாய்மொழியாகவும், பிரதிக்ஞை செய்திருக்கிறார்கள்.

மிக நன்றாகச் செய்திருக்கிறார்கள் ஆனால், இன்றைக்குப் பிறகு, அதாவது இன்று பிறந்த நாள் கொண்டாடியதற்குப் பிறகு, ஒரு வார்த்தையை கோடிட்டு (அண்டர் லைன்) வைத்துக் கொள்ள வேண்டும். பொதுவான வார்த்தை தான். புதிது ஒன்றுமில்லை. அந்த வார்த்தை -"நிரந்தர உறுதி". சில சமயம் உறுதியுடன் இருப்பது, சில சமயம் உறுதி தளர்ந்து விடுவது, இப்படி இருக்கக் கூடாது. நிரந்தரமாகவே உறுதியுடன் இருந்தால், அதன் அடையாளம், ஒவ்வொரு சங்கல்பத்திலும், பேச்சிலும், கர்மத்தின் மூலம் தன்னிலும், (சுயம்) சேயையிலும், சம்மந்தத்திலும் நிரந்தரமாக 100_சதவிகிதம் வெற்றி தான். எது வரையிலும் இந்த எல்லா விஷயங்களிலும், பிராமணரிடத்தில், சதா வெற்றி குறைவாக இருந்தால், அது வரையிலும் பிரத்யக்ஷதா டிராமாபடி தாமதமாகி விடும். வெற்றி, பிரத்யக்ஷதாவுக்கு ஆதாரமாக இருக்கிறது. ஒவ்வொரு பேச்சும், வெற்றி பூர்வமாக இருக்கட்டும். ஒவ்வொரு சங்கல்பமும் வெற்றி பூர்வமானதாக இருக்கட்டும். ஆதலால் இந்த சமயத்தின் ஞாபகார்த்தத்தில் குரு என்று அழைக்கப்படுபவர்களிடம், நீங்கள் கூறுவது முற்றிலும் சத்தியமானது (சத் வச்சன் மகராஜ்) என்று கூறுகிறார்கள். அவர்கள் பொய் சொல்வதாக இருந்தாலும் கூட பக்தர்கள் "சத் வச்சன்" (முற்றிலும் சத்தியமான வார்த்தை) என்பார்கள். இது உங்களுடைய பேச்சின் ஞாபகார்த்தமே. மகராஜ், மகான் என்று நீங்கள் தான் ஆகின்றீர்கள் அல்லவா? ஆதலால் "சத் வச்சன் மகராஜ் என்றால், மகான் ஆத்மாக்கள். ஆதலால் நீங்கள் ஒருபோதும் இப்படிச் சொல்லாதீர்கள். அதாவது இப்படி சொல்ல வேண்டுமென்பது எனது எண்ணமில்லை, ஆனால் தவறுதலாக வந்து விட்டது. பேசி விட்டீர்கள், வாயிலிருந்து சொல் வெளி வந்து விட்டது என்றால் என்ன பொருள்? அந்த பாவனையில் சொல்லவில்லை என்றால், பாவனை சொல்லாக எப்படி வெளியில் வந்தது? பேச்சு எப்படி வந்தது? சில சமயம் இப்படி சொல்லுகிறார்கள். பேச்சில் வந்து விட்டது என்று ஏன் வந்தது? கன்ட்ரோலிங் பவர் இல்லையா? ஆதலால் தான் வெளியில் வந்ததா? அப்படியனால் நீங்கள் ராஜா இல்லையா? சில கர்மேந்திரியங்களுக்கு வசமாகி விட்டீர்கள், ஆகவே தான் வெளியில் வந்தது. எது வந்ததோ, அது வந்து விட்டது.

ஆதலால் இந்த ஆண்டில் ஆசிகளுடன், நிரந்தரமாக ஒவ்வொரு விஷயத்திலும் "உறுதியுடன் இருப்பது" என்பதை கோடிட்டு (அண்டர்லைன்) வைத்துக் கொள்ளுங்கள். இன்று பிறந்த நாள். ஆதலால், பாப்தாதா இன்று சொல்லப் போவதில்லை ஆனால் எல்லோருடைய சார்ட்டையும் பாப்தாதா பார்த்தார். என்றாலும் கடைசி தடவையில் சொல்கிறேன். இன்று கொண்டாட வேண்டிய நாள். சொல்லக் கூடாது. 15-நாட்களுக்குப் பிறகு சொல்கிறேன். (பாப்தாதா சொன்னால், 15-நாட்களுக்குப் பிறகு சரியாகி விடும்) சரி. முதலில் சொல்லுங்கள். 15-நாட்களில் திருந்தி விட்டால் பிறகு சொல்வது தான் சரி. ஒருவேளை 15-நாட்களில், பரிவர்த்தனையாகி விட்டால், பாப்தாதா என்ன செய்வார் என்று தெரியாது. அப்படியானால், சொல்லட்டுமா? பாண்டவர்கள் சொல்லுங்கள் சொல்லட்டுமா? 15-நாட்களில் பரிவர்த்தனை ஆகி விடுமா? சங்கல்பம் செய்வீர்களா? நல்லது. சொல்லலாம் என்று பாண்டவர்கள் கூறுகிறார்கள். செய்வோம் என்று சொல்வது சுலபம். செய்ய வேண்டும். (பாப்தாதா பின்னால் அமர்ந்திருப்பவர்களிடம், மாதாக்களிடம், டீச்சர்களிடம், ட்புள் ஃபாரினர்ஸ்களிடம், ஆகிய எல்லோரிடமும் கேட்டார். எல்லோரும் கை அசைத்தார்கள்) எல்லோரும் கை உயர்த்துவதை மிக நன்றாகவே செய்கிறார்கள்.

டபுள் ஃபாரினர்ஸ் -மூன்று குருப் இருக்கிறதல்லவா? (அந்தர்முகி, மஸ்தானா, சக்தி குரூப்). சரி. அந்தர்முகி குரூப் கை உயர்த்துங்கள். அந்தர்முகி குரூப்பில் கொஞ்சப் பேர் தான் இருக்கிறார்கள். அடுத்த குரூப் மஸ்தானா. சரி, மஸ்தானா குரூப் எழுந்து நில்லுங்கள். சதா "மஸ்த் (போதை) தில் இருப்பவர்கள் அல்லவா? மஸ்தானா என்பதன் பொருள் என்ன? சதா மஸ்த்தில் இருப்பவர்கள் தானே! மூன்றாவது சக்தி குரூப். சக்தி குரூப் சக்திசாலிகள் அல்லவா? பெயர் நன்றாகவே வைத்திருக்கிறார்கள். ஆரம்பத்தில் எப்போது பட்டி இருந்ததோ, அப்போது உங்களுடைய குரூப் பெயர் என்னவாக இருந்தது? (டிவைன் யூனிட்டி, மனோகர் பார்ட்டி, சுப்ரீம் பார்ட்டி) பெயர் அழகாக இருக்கிறதல்லவா? அதுபோல இந்த குரூப் பெயர்களும் நன்றாக இருக்கின்றன. பெயர் நினை விருந்தால் பெயரோடு, செயலும் நினைவில் இருக்கும். சரி. டபுள் ஃபாரினர்ஸ் குமார் எழுந்திருங்கள். நல்லது. இந்த “குமார்”களின் குரூப். நன்றாக இருக்கிறது.

பாப்தாதாவுக்கு டபுள் ஃபாரினர்ஸ் னுடைய ரெஃப்ரெஷ்மெண்ட்" (உற்சாகமாக இருப்பது) பற்றி, நல்ல சமாச்சாரம் வந்தது. பாப்தாதா மனப் பூர்வமாக வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார் ஆனால் எல்லா குரூப்களும், இன்றைக்கு எதை "அண்டர்லைன்" செய்தீர்களோ, அதை மீண்டும் நினைவுபடுத்துகின்றார்.

டபுள் ஃபாரின் டீச்சர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். டீச்சர் ஆவது மிக மிக சிரேஷ்ட பாக்கியத்தின் அடையாளமாகும். ஏனென்றால், பாப்தாதா டீச்சர்களை "பாப் சமான்" (குருபாயி) என்ற ரூபத்தில் பார்க்கின்றார். இவ்வளவு சமான் ரூபத்தில் பார்க்கின்றார். ஏனெனில் தந்தையின் ஆசனத்தில் அமர்கின்றார்கள். டீச்சர்களுக்கு இந்த உரிமை கிடைக்கிறது. எப்படி குருவினுடைய ஸ்தானம் இருக்கிறதல்லவா, அதுபோல. இது முரளியின் ஆசனம். முரளியை தாரணை செய்விப்பது, முரளி படிப்பது. முரளி வாசிப்பது மட்டுமல்ல, முரளியை தாரணை செய்விப்பது. இப்படி டீச்சர்களுக்கு, பாப்தாதா "பாப் சமான்" என்ற ஸ்தானத்தைக் கொடுத்திருக்கின்றார். ஃபாரினில் பார்த்தால், வெகு சீக்கிரமாகவே, ஆசனத்திற்கு அதிகாரியாகி விடுகிறார்கள். இதைப் பார்த்து, பாப்தாதாவுக்கு மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது. பொறுப்பு என்னும் கிரீடத்தை தாரணை செய்ய வேண்டும். தைரியம் இருக்க வேண்டும். இது ஒன்றும் குறைந்த விஷயமல்ல ஆனால் "குருபாயி" என்றால் பாபா சமான். மற்றபடி எல்லோரும் பாபா சமானமாக ஆகத்தான் வேண்டும். என்றாலும் டீச்சர்களுக்கு விசேஷமாக பொறுப்பு எனும் கிரீடம் இருக்கிறது. பாப்தாதாவுக்கும், டீச்சர்களுடைய குரூப் மிகவும் பிடித்தமான தாக இருக்கிறது ஆனால், இன்றைக்கு விசேஷமாக ஒரு வார்த்தை கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். "நிரந்தர அட்டென்சன்'" (எப்போதும் கவனமாகவே இருந்து கொண்டிருப்பது).

சரி. பாரதத்தின் டீச்சர்கள் எழுந்திருங்கள். பாரதத்திலுள்ள டீச்சர்களும் ஒன்றும் குறைந்தவர்கள் அல்ல. கேட்டீர்களா? டீச்சர்களை பாபா எந்த பார்வையில் பார்க்கின்றார்? இவர்கள் வகுப்பிற்கு, முரளி வாசிப்பதற்கு, மிகவும் பாக்கியவான். மிக மிக மிக அதிருஷ்டசாலிகள். ஏனென்றால், சாகார ரூபத்தில் நிமித்தமாக யார் இருக்கிறார்கள்? நல்லது. தாதிகள். தாதிகளில் ஒருவர் வெளிநாட்டில் இருக்கின்றார். ஒருவர் மதுபனில்

இருக்கின்றார் ஆனால் ஒவ்வொரு ஸ்தானத்திலும், சாகார ரூபத்தில் நிமித்தம் யார்? டீச்சர்கள். அல்லது நிமித்த பாண்டவர்களும் இருக்கிறார்களா? டீச்சர்கள் மட்டுமல்ல, பாண்டவர்களும் இருக்கிறார்கள். இவர்களை பெரிய சகோதரர்கள் என்று கூறுகின்றீர்கள். பாண்டவர்கள் அவசியம். சக்திகள் மற்றும் பாண்டவர்கள், இருவரும் சேர்ந்தே, ஆதியிலிருந்து, காரியம் செய்து கொண்டிருக்கிறார்கள். பாண்டவர்கள் கொஞ்சம் பேர் தான் இருந்தார்கள். விஷ்வ கிஷோர் இருந்தாரல்லவா? ஆனந்த கிஷோர், விஷ்வ கிஷோர் ஆரம்பத்தில் இருந்தவர்கள். இவ்வாறு பாண்டவர்களும் உடன் இருந்தார்கள் ஆனால் மெஜாரிட்டியாக, டீச்சர்கள் அதிகம் இருந்தனர். இவர்கள் தான் நிமித்தமாக ஆகி விடுகிறார்கள். நீங்கள் "பேக்-போன்" (உடம்புக்கு முதுகெலும்பு இருப்பது போல) டீச்சர்களுக்கும் "பேக்-போன்". ஒவ்வொருத்தருக்கும் ஒரு பார்ட் ஆனாலும், ஃபாரினில் ஒரு விசேஷம் என்னவென்றால், பாண்டவர்களும் டீச்சர் ஆகிறார்கள். பாரதத்தில் குறைவாக இருக்கிறார்கள் ஆனால் டீச்சர்களுக்கு, சதா பாப்தாதா என்ன கூறுகின்றார் என்றால், டீச்சர்ஸ் என்றால் தங்களுடைய தோற்றத்தின் மூலம் (ஃபீச்சர்ஸ்) பாபாவை சாட்சாத்காரம் செய்யக் கூடியவர்கள். தோற்றத்தின் மூலம், வருங்காலத்தை தெளிவாக உணர வைப்பவர்கள். ஆகவே எல்லோரும் டீச்சர்கள் தானே! உங்களைப் பார்த்து, பாப்தாதாவினுடைய பாலனை அனுபவம் ஆக வேண்டும். பரமாத்மாவின் குணம், பரமாத்மாவின் சக்திகள் உங்கள் முகத்தில் தெரிய வேண்டும். பேச்சின் மூலம் தெரியட்டும். இந்த டீச்சர் சொன்னார் என்பதல்ல. பாப்தாதா டீச்சர்களுக்கு தன்னுடைய தோற்றத்தின் மூலம் அனுபவம் செய்வித்தார். பாபாவுடன் ஒவ்வொருவரையும் தொடர்பு கொள்ளச் செய்ய வேண்டும். இவர் தான் என்று. இது டீச்சர்களினுடைய கடமை. ஒவ்வொருவருடைய உள்ளத்திலி ருந்து, ஒவ்வொரு சமயமும் "பாபா" என்று வரட்டும். இந்த குரூப்பும் நன்றாகவே செய்திருக்கிறீர்கள். ஏனென்றால், ஒவ்வொருவருக்கும் "ரெப்ரெஷ்மெண்ட்" கிடைப்பதன் மூலம் அனுபவம் நன்றாக ஆகும். குரூப்பில் ரிசல்ட் நன்றாக இருந்தது அல்லவா? நல்லது.

**சேவைக்கான சான்ஸ் யு.பி.க்கு கிடைத்துள்ளது (உத்தர் பிரதேஷ்):** நல்லது. கோல்டன் சான்ஸலர் எழுந்திருங்கள். பாண்டவர்களும் இருக்கிறார்கள், சக்திகளும் இருக்கிறார்கள். உங்கள் எல்லோருக்கும்

இந்த டைட்டில் கிடைத்திருக்கிறது. கோல்டன் சான்ஸ்லர். இனி யு.பி. கமால் செய்து காண்பிக்குமல்லவா? தூள் கிளப்புங்கள். பழைய ஆத்மாக்களும் கூட யு.பி.யில் நல்லவர்கள் தான். புதிதாகவும் நிறைய பேர் வந்திருக்கிறார்கள். உள்நாட்டில் உள்ளவர்களும், வெளிநாட்டில் உள்ளவர்களுடைய பார்வை யு.பி. பக்கமாக திரும்பும்படியாக நல்ல புரோகிராம் விசேஷமாக செய்யுங்கள். யு.பி. யில் அடையாளம் இருக்கிறது. அதை பிரம்மாபாபாவும் பார்த்தார். பிரம்மாபாபா விதை போட்டார். சாகாரத்தில் இருக்கும்போது, அந்த ஸ்தானத்தில் நிலம் வாங்கி ஏதாவது செய்ய வேண்டும் என்று முயற்சிகள் செய்தார் ஆனால் இதுவரையிலும் நடக்கவில்லை. கமால் செய்தால் ஆகி விடும். வாரணாசியில் மியூஸியம் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆக்ராவில் உள்ளவர்களும் செய்து கொண்டிருக்கிறார்கள். எத்தனை வாரிசுகள் தயாராவார்கள், எத்தனை சகயோகிகள் தயாராவார்கள், எத்தனை ரெகுலர் ஸ்டூடண்ட் தயாராவார்கள் என்று பார்க்கலாம். ரிசல்ட் பார்க்கலாம். மற்றபடி நன்றாக இருக்கிறது. நல்ல தைரியம் வைத்திருக்கிறார்கள். உதவி கிடைத்துக் கொண்டேயிருக்கும். ஆதலால் யு.பி. என்ன கமால் செய்யப் போகிறீர்கள்? கமால் செய்ய வேண்டுமா? இல்லையா? செய்ய வேண்டுமல்லவா? பார்க்கலாம், யு.பி.யைச் சேர்ந்தவர்கள் என்ன செய்வார்கள் என்று. இந்த விநாச காரிகள் விநாசம் செய்யட்டும். ஸ்தாபனை செய்பவர்கள் ஸ்தாபனை செய்யட்டும். ஆதலால் பிளான் செய்ய வேண்டும். பார்க்கலாம். சரிதானே! பிளான் தயார் செய்வீர்கள் அல்லவா?

மீடியாகாரர்களின் மீட்டிங் உள்ளது. மீடியாகாரர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? மீடியா என்பதன் பொருள், ஒவ்வொரு விஷயத்தையும் பிரத்யக்ஷம் செய்பவர்கள். ஆகவே, மீடியாகாரர்கள் என்ன பிரத்யக்ஷம் செய்வதற்காக பிளான் செய்திருக்கிறீர்கள்? இந்த ஆண்டு பிரத்யக்ஷதா ஆகி விடுமா? மீடியாகாரர்கள் சேனல் தயார் செய்யுங்கள். அல்லது வேறு என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள் ஆனால் இது தான், இது தான், இது தான் என்பது தெளிவாகி விடவேண்டும். இதுவரையிலும் இது கூட என்று சொல்கிறார்களே தவிர, இதுதான் என்பது வரவில்லை. இதுவும் நல்லது தான், நல்லது எல்லாவற்றிலும் நல்லது. இப்படி பத்திரிகைகளில் வர வேண்டும். சேனலில் வர வேண்டும். அப்போது தான் இது மீடியா என்று சொல்வார்.

என்றாலும், முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு செய்திருக்கிறார்களோ, அது விருத்தியாகிக் கொண்டுதானிருக்கிறது ஆனால் லக்ஷியம் அது தானே! முயற்சி நன்றாக இருக்கிறது. பெயர் வந்து விட்டது ஆனால் காரியம் இன்னும் முடியவில்லை. ஆகி விடும். நிச்சயமாக நல்லது.

சிந்தி குரூப் மிகவும் பெரிதாக வந்திருக்கிறது. மிக நன்றாகச் செய்திருக்கிறீர்கள். உங்களுடைய வீட்டுக்கு வந்திருக்கிறீர்கள் அல்லவா? உங்களுடைய வீட்டுக்கு வந்திருக்கிறீர்கள் என்று நினைக்கிறீர்களா? அல்லது பிரம்மா குமாரிகளிடம் வந்திருக்கிறோம் என்று நினைக்கிறீர்களா? உங்களுடைய வீடு. ஏனெனில் சிந்து விலிருந்து ஸ்தாபனை ஆயிற்று. ஆதலால் ஸ்தாபனைக்கு நிமித்தமான ஸ்தானத்தோடு உங்களுக்கு சம்மந்தம் இருக்கிறது. ஆகவே தான் வந்திருக்கிறீர்கள் என்றால் மிகவும் நல்லது. வந்திருக்கின்றீர்கள் வந்து கொண்டேயிருக்க வேண்டும். உங்களுடைய சம்மந்தத்தில், தொடர்பில் வருகிறர்வகளையும் எழுப்பிக் கொண்டேயிருக்க வேண்டும். சேவை நன்றாகச் செய்கிறார்கள் என்பதை பாப்தாதா பார்த்தார். இப்போது வரையிலும் கூட செய்கிறார்கள். ஒருவருக்கொருவர் அறிமுகம் கொடுத்துக் கொண்டேயிருக்கிறீர்கள் ஆனால் இன்னும் சேவையை அதிகரியுங்கள். இப்போது இவ்வளவு பேர் வந்திருக்கிறீர்கள் அல்லவா? அடுத்த முறை இன்னும் அதிகம் வர வேண்டும். சிந்திக்காரர்களைப் பார்த்து எல்லோருக்கும் குஷியாக இருக்கிறது. இவர்கள் சிந்திகாரர்கள், அங்கு தான் ஸ்தாபனை ஆரம்பமானது அல்லவா? இதனால் குஷியடைகிறார்கள். ஆகவே நல்லது செய்திருக்கிறீர்கள். விருத்தியாகிக் கொண்டிருக்கிறதல்லவா? நன்றாக விருத்தியாகிக் கொண்டிருக்கிறது. மிக நல்லது.

நல்லது. டபுள் ஃபாரினர்ஸ்களுக்கு வாழ்த்துக்கள் கிடைத்தது. (50-நாடுகளிலிருந்து 1000-வெளிநாட்டினர் வந்திருக்கிறார்கள்). டபுள் விதேஷிகள் விஷ்வ கல்யாணத்திற்காக எவ்வளவு தைரியம் வைத்திருக்கிறார்களோ, அதைப் பார்த்து விதேஷி குழந்தைகளுக்கு பாராட்டு தெரிவிக்கின்றார். ஒரு மூலை விடுவதில்லை. தைரியம் வைத்து சேவையில் முன்னேறிக் கொண்டேயிருக்கிறார்கள். பாப்தாதா

பார்த்தார். சேவை ரிசல்ட்டில், அதாவது கால் ஆ்ஃப் டைம், லிவிங் வேல்யூஸ், பீஸ் ஆ்ஃப் மைண்டு, இப்படி எப்படிப்பட்ட சேவை செய்கிறீர்களோ, அது நன்றாகவே செய்கிறீர்கள். நல்லது. ரிசல்ட் நன்றாக இருக்கிறது. இன்னும் முன்னேறிக் கொண்டுமிருக்கிறார்கள். பாரதத்திற்கு வரதானம் உள்ளது. கிராமம் கிராமமாகச் சென்று கொடி பறக்கச் செய்ய வேண்டும். பாரதத்தில் கஷ்டமில்லை ஆனால் டபுள் ஃபாரினர்ஸ், ஒவ்வொரு தேசத்திலும், எப்படிப்பட்ட பரி ஸ்திதியிலும் கூட, ஸ்தாபனை செய்வதற்கான வழிமுறை நன்றாக இருக்கிறது. பாரதம் பாபாவினுடையது. ஆதலால் அவர்களுக்கு வரதானம் இருந்து கொண்டேயிருக்கிறது.

துருக்கிகாரர்கள் (டர்கிஸ்) எழுந்திருங்கள். உங்களுக்கு பாபா மீது மிகுந்த அன்பு இருக்கிறது. ஆகவே தான் டர்க்கியில் வந்து சேர்ந்து விட்டீர்கள். நல்ல மஸ்த்துடன் இருப்பவர்கள். குப்த் மற்றும் மஸ்த். குப்தமாகவும் இருக்க வேண்டும். தங்களுடைய மஸ்தியிலும் இருக்க வேண்டும். நீங்கள் நல்ல பார்ட் செய்கிறீர்கள். நல்லது. டபுள் விதேஷி டீச்சர்கள் நல்ல முயற்சி செய்திருக்கிறார்கள். ஆர்.ஸி.ஓ. குரூப் எழுந்திருங்கள்.டபுள் ஃபாரினில் ஆர்.ஸி.ஓ. யார்? உங்கள் எல்லோருக்கும் தெரிய வேண்டுமல்லவா? நேரமும் கொடுத்திருக்கிறார். முயற்சியும் மிக நன்றாகச் செய்திருக்கிறார். வாழ்த்துக்கள். மிக நன்றாகச் செய்திருக்கிறார். பேக்-போன் இருக்கிறாரல்லவா? (தாதி ஜானகி) பாருங்கள். எல்லோருக்கும் அன்பு இருக்கிறதல்லவா? எல்லோரும் கை தட்டுகிறார்கள் பாருங்கள் என்.ஸி.ஓ.வும் இருக்கிறார்கள். நல்லது. யாரெல்லாம் இதில் இருக்கின்றார்களோ, அவர்கள் எல்லோருமே நல்லவர்கள். என்.ஸி.ஓ. மற்றும் ஆர்.ஸி.வோ. நேரம் கொடுத்திருக்கிறார்கள். நேரம் கொடுப்பதால், வெற்றி கிடைக்கிறது. நல்லது.

குஜராத்தின் நிலை என்ன? நல்ல தைரியத்துடன் இருக்கிறீர்களா? பயம் இல்லை தானே! சக்திகளுக்கு என்ன பயம்? இதெல்லாம் நடக்கத்தான் செய்யும் ஆனால் என்ன நடக்க வேண்டுமோ அது தாமதமாகிக் கொண்டிருக்கிறது. இது ரிகர்சல் தான். பயப்படுவதில்லையல்லவா? யாராவது பயப்படுகிறார்களா? இல்லை. பயப்படாமல் டிராமாவின் ஒவ்வொரு காட்சியையும் பார்த்துக் கொண்டேயிருங்கள். சாட்சி

நிலையிலிருந்து கீழே இறங்கி வந்து பார்க்காதீர்கள். சீட்டில் நல்ல விதமாக செட்டாகி அமர்ந்திருங்கள்.

மதுபன்வாசிகள் நன்றாக இருக்கிறீர்களா? நிறைய சேவை சீசன் நடந்து கொண்டிருக்கிறது. மதுபன் வாசிகள் எழுந்திருங்கள். யார் மகிழ்ச்சியோடிருக்கிறார்களோ அவர்கள் தான் மனதில் இருப்பார்கள். பாருங்கள். நன்றாக இருக்கிறது. சாந்திவன் வாசிகள் எழுந்திருக்கின்றனர். பாப்தாதா மதுபன் வாசி குழந்தைகளை எமர்ஜ் செய்து சதா யாத் பியார் கொடுக்கிறார்கள். சேவை செய்வது என்றால், பாபா சமானமாக சுகவாசிகளாக இருந்து சுகம் கொடுப்பதாகும். மதுபனுக்கு சேவை செய்வதற்கு மிக-மிக-மிக பரமாத்ம சான்ஸ் இருக்கிறது. மதுபன் வாசிகள் மீது பரமாத்மாவின் தயை இருக்கிறது. குருகிருபை இருக்கிறது. சதா, மேலே கேட்டுக் கொண்டிருப்பவர்களானாலும் சரி, இங்கே நேரில் இருப்பவர்களானாலும் சரி, எல்லா மதுபன்வாசி சேவாதாரி, பாபாவின் மனம் எனும் சிம்மாசனத்தின் மீது அமரக்கூடியவர்கள் சேவைக்கு ரிடர்னாக (கைமாறு) களைப்பின்றி தொடர்ந்து சேவையில் இருக்க வேண்டும் என்ற வரதானம் அளிக்கின்றார். சதா களைப்பின்றி இருக்கக்கூடிய தங்களுடைய நிலையைக் காண்பிப்பவர்கள். அப்படித்தானே? சுகமாக இருப்பவர்கள் தானே? எவ்வளவு ஆசிகள் கிடைக்கின்றன! யார் உண்மையான மனம் உடையவர்களாக இருக்கின்றார்களோ, அவர்களுக்கு ஆசிகள் தானாகவே கிடைக்கின்றன. மதுபன்வாசிகளுக்கு, ஆசிகள் சேமிப்பதற்கு சான்ஸ் மிக நன்றாக இருக்கிறது. எவ்வளவு முடியுமோ, அவ்வளவு செய்யுங்கள். ஸ்டாக் இருக்கிறதல்லவா? ஆசிகளின் சேமிப்பு ஆகிக் கொண்டிருக்கிறதா? (தாதியிடம்) நீங்கள் அமருங்கள். பாப்தாதாவுக்கு மதுபன் வாசிகளிடம் மிகுந்த அன்பு உள்ளது. ஸ்பெஷல் அன்பு இருக்கிறது. தனியாக கிடைப்பதில்லை ஆனால் மனதார சதா கிடைத்துக் கொண்டே இருக்கிறது. மிகவும் நல்லது. சகோதரிகளும் இருக்கிறார்கள். நல்லது. இப்போது என்ன செய்ய வேண்டும்?

குளோபல் ஆஸ்பிடல் டிரஸ்டியும் வந்திருக்கின்றார். குளோபல் ஹாஸ்பிடல், எல்லோரிலும் அதிகமான லாபம் எடுப்பவர்கள் பிராமணர்கள் தான் என்பதை பாப்தாதா பார்த்தார். பிராமணர்களுக்கு

சகஜ சாதனமாகி விட்டது. ஆதலால் ஹாஸ்பிடலில் இருப்பவர்களுக்கு முக்கியமாக நினைவு செய்கிறார். நல்லது. டிரஸ்டிகள் எழுந்திருங்கள். நல்லது. பாப்தாதா சிரிப்பு வரக்கூடிய ஒரு விஷயம் சொல்கிறார். பொதுவானது தான் ஆனால் சிரிப்பு வரக்கூடியது. எல்லோரையும் விட, ஹாஸ்பிடல் லாபம் மதுபன் வாசிகளுக்காக இருக்கிறது, ஏன்? யாராவது சரீரம் விட்டால் கூட, மதுபன் வாசிகளுக்கு நாஷ்தா நிறுத்தப்படுவதில்லை. மேலும் இங்கே ஒவ்வொரு சீசனிலும் இரண்டு அல்லது நான்கு பேர் சரீரம் விட்டு விடுகிறார்கள். லாபம்தானே! மதுபன் வாசிகளுக்கு உணவும் கூட நிறுத்தப்படுவதில்லை. மேலும் குழந்தைகளுக்கும் கூட லாபம் தான் ஆனால் சமூக சேவை என்ற கணக்குப்படி, அபு நிவாசிகளின் விருத்தி (உணர்வுகள்) மாற வேண்டும். இதற்கு ஹாஸ்பிடல் நிமித்தமாக வேண்டும். ஹாஸ்பிடல் சேவாதாரிகள் வந்திருக்கிறார்களா? எழுந்திருங்கள். உங்களுடைய அதிகமான சேவைக்கு வாழ்த்துக்கள். நன்றாக சேவை செய்கிறார்கள். மேலும் நாளுக்கு நாள் அனுபவியாகவும் ஆகிக் கொண்டிருக்கிறார்கள். எனினும் தைரியமாக இருக்கிறார்கள். நல்லது. இப்போது பம்பாயிலும் கூட, ஹாஸ்பிடல் திறக்கப்படும். நல்லது. குளோபல் ஹாஸ்பிடலுக்கு, நல்லதொரு வாரிசு கிடைத்து விட்டது. (புவனேஷ்வரிலும் ஒரு ஹாஸ்பிடல் திறக்கப்பட்டிருக்கிறது) எல்லோருக்கும் பிடித்தமானதாக இருக்கிறதா? கைகளையாவது அசையுங்கள். டீச்சர்களுக்கு, செக் செய்வது எளிதாக இருக்கும். நல்லது. உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இந்த பெயர் (குளோபல் ஹாஸ்பிடல்) நல்ல சேவை செய்கிறது. வெளிநாட்டில் ஜானகி பவுண்டேஷன் இருக்கிறது. நல்லது. இதுவும் கூட ஒரு சாதனம். மேலும் யாருடன் தொடர்பு வைத்திருக்கிறார்களோ, அவர்கள் நல்லவர்கள். டிரஸ்டிகளும், மிக நல்லவர்களாக இருக்கிறார்கள். நல்லது.

நாலா பக்கமும் ஜன்ம உற்சவம் கொண்டாடிக் கொண்டிருக்கின்ற, சிரேஷ்ட பிராமண ஆத்மாக்களுக்கு, சதா அலௌகிக ஜன்மத்தின், அலௌகீக திவ்ய காரியம் செய்து கொண்டிருக்கின்ற, சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா ஏக் பாப் தூஸ்ரா ந கோயி, இப்படி எக்நாமி (ஒரே ஒருவரு டைய பெயர்) மற்றும் சர்வ கஜானாக்களின் ஏகநாமி (சிக்கனம்) அவதார குழந்தைகளுக்கு சதா ஒவ்வொரு வரதானம் மற்றும் ஆஸ்தியை, வாழ்க்கையில் பிரத்யக்ஷம் செய்யக்கூடிய ஆர்வம்,

உற்சாகத்தில் இருக்கக்கூடிய குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அலௌகீக ஜன்மத்திற்கு ஆசிகளுடன் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

தாதிகளுடன்: தாதிஜி, பாப்தாதாவுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்தார். இன்று மணி மாலையில் நீங்கள் எல்லாம் வந்தீர்கள். மாலையை நினைவு கூர்ந்தேன். அல்லவா? ஆதி ஸ்தாபனையின் ரத்தினங்கள். அந்த மாலையின் மணிகளாக நீங்கள் இருந்தீர்கள். நல்லது. ஸ்தாபனையிலும் நிமித்தமாக இருந்தீர்கள். பாலனையிலும் நிமித்தமாக இருக்கிறீர்கள். இப்போது பாபாவுடன் செல்வ திலும் நிமித்தமாவீர்கள். வாசலை பாப்தாதா தனியாக திறப்பாரா? (இல்லை) உங்களுக்காக எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் வந்தால் கதவை திறந்து விடலாம் ஆனால் சேவை பூர்த்தியாக வேண்டுமல்லவா? ஏனென்றால் சாகாரத்தில் உங்களை நிமித்தமாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, சாகார காரியங்கள் பூர்த்தியாக வேண்டும் அல்லவா? தற்சமயம் யாரைப் பார்க்கிறார்கள்? எல்லோருடைய பார்வையும் எங்கே செல்கிறது? உங்கள் மீது தானே இருக்கிறது! யார், நிமித்தமாக இருக்கிறார்களோ, அவர்கள் மீது தான் எல்லோருடைய பார்வையும் உள்ளது. பார்வையில் எல்லோரும் இருக்கிறார்கள். பாபாவின் பார்வை ஒன்றும் சிறியதல்ல. பேகத் பார்வை. ஆதலால் எல்லோரும் பார்வையில் தான் இருக்கிறார்கள். எல்லோரும் கண்ணின் மணிகள். மிகவும் நல்லது. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பார்ட்டைச் செய்கிறார்கள். செய்யத்தான் வேண்டும். டிராமாவில் கட்டுப்பட்டிருக்கிறார்கள். மஜாவாக இருக்கிறதல்லவா? மிகவும் நல்லது.

பாப்தாதா தனது கைகளால் கொடி பறக்க விடும்போது, எல்லா குழந்தைகளுக்கும் சிவஜெயந்தி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்தார். எல்லாக் குழந்தைகளின் மனதிலும் பாபாவின் பிரத்யக்ஷதாவின் கொடி பறக்க விட்டார். இப்போது உங்கள் மனதில் பறந்து கொண்டிருக்கும் கொடி, உலகிலும் பறக்க விடப்படும். எல்லோருடைய வாயிலும் இது தான் வரும். ஆஹா சிவசக்தி பாண்டவ சேனா ஆஹா! பாப்தாதா எல்லோருடைய மலர்ந்த முகத்தைப் பார்த்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறார். குஷியின் அனுபவத்திலிருங்கள். மேலும் சதா

மலர்ந்த முகம் மற்றும் எல்லோருக்கும் தில்குஷ் மிட்டாய் ஊட்டிக் கொண்டே இருக்க வேண்டும். அமிருதவேளையில் இந்த மிட்டாய் எல்லோரும் நினைவில் இருந்து சாப்பிடுங்கள். இதனால் முழு நாளும் மனதில் மிட்டாயின் சக்தி இருக்கும். மகழ்ச்சி இருக்கும். நல்லது. எல்லோருக்கும் வாழ்த்துக்கள்! (எல்லோர் சார்பாகவும் பாபாவுக்கும் வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்!).

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

## 28.03.2002 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இந்த ஆண்டை பணிவு மற்றும் நிர்மலமான (மாசற்ற) ஆண்டாகவும் வீணானவைகளிலிருந்து விடுதலை அடையும் ஆண்டாகவும் கொண்டாடுங்கள்!

இன்று பாப்தாதா தனது நாலா புறங்களிலுமுள்ள குழந்தைகளின் நெற்றியில் ஒளிர்விட்டுக் கொண்டிருக்கும் மூன்று ரேகைகளைப் பார்த்தனர். ஒன்று 'பிரபுவின் பாலனை' (பாபாவின் வளர்ப்பு) இரண்டாவது சிரேஷ்ட படிப்பினுடையது மூன்றாவது சிரேஷ்ட வழியினுடையது, மூன்று ரேகைகளும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. இம்மூன்று ரேகைகளும் அனைவரின் பாக்கியத்தின் ரேகைகளாகும். நீங்கள் அனைவரும் கூட உங்களது மூன்று ரேகைகளைப் பார்க்கிறீர்கள் தானே! பிரபு பாலனை பிராமண ஆத்மாக்களாகிய உங்களைத் தவிர வேறு எவருக்கும் கிடைப்பதில்லை. அந்த பாலனையின் மூலம் எவ்வளவு சிரேஷ்ட பூஜிக்கத்தக்க நிலையை அடைகிறீர்கள். எனக்கு பரமாத்ம பாலனை கிடைக்கும் என சொப்பனத்தில் கூட நினைத்துப் பார்த்தீர்களா? அதன் மூலம் சிரேஷ்ட பூஜிக்கத்தக்கவர்களாகவும் ஆகிறீர்கள்! பரமாத்ம படிப்பு கிடைக்கும் என்று கனவில் கூட எண்ணிப் பார்த்ததுண்டா? ஆனால் இப்போது நேரடியாக ஸ்தூலமாய் அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்கள். சுயம் சத்குரு அமிர்தவேளை யிலிருந்து இரவு வரை ஒவ்வொரு செயலுக்கும் சிரேஷ்ட வழியைத் தந்து கர்மபந்தனத்திற்குப் பதிலாக கர்ம சம்பந்தத்தில் வருவதற்கான ஸ்ரீமத் தருவார் என்பதை கனவிலும் கண்டதில்லை ஆனால் இப்போது அனுபவத்தில் ஒவ்வொரு செயலும் ஸ்ரீமத்படி நடக்கிறது என்று கூறுகிறீர்கள். இப்படிப்பட்ட அனுபவம் இருக்கிறதா? இப்படிப்பட்ட ஒவ்வொரு குழந்தைகளின் சிரேஷ்ட

பாக்கியத்தைக் கண்டு பாப்தாதாவும் மகிழ்ச்சி அடைகின்றார். ஆஹா! என்னே என் பாக்கியவான் குழந்தைகள்! என்று பாபா கூற குழந்தைகளும் ஆஹா! வா பாபா வா! என்கின்றனர்.

இன்று அமிர்தவேளையிலிருந்து குழந்தைகளின் இரு சங்கல்பங்கள் பாபாவிடம் வந்தடைந்தன. ஒன்று அனேக குழந்தைகளுக்கு தனது கணக்கை (பாபா ஏற்கனவே தந்திருந்த வீட்டுக் கணக்கு) தர வேண்டும் என்கிற நினைவு இருந்தது. இரண்டாவது, பாபாவின் துணையின் கலர் ஹோலி நினைவிலிருந்து அனைவரும் ஹோலி கொண்டாட வந்துள்ளீர்கள் இல்லையா? பிராமணர்களுடைய மொழியில் கொண்டாடுவது என்றால் அங்ஙனம் ஆகுவது! ஹோலி கொண்டாடுவது என்றால் (Holi) புனிதமாவது. பிராமண குழந்தைகள் புனிதமாவது என்பது எவ்வளவு தூரம் அனைவற்றிலிருந்தும் நியாரா மற்றும் பியாரா (பற்றற்ற) நிலை என்பதைப் பார்த்தார். துவாபரயுக ஆதி காலத்தின் மகான் ஆத்மாக்கள் மற்றும் அவ்வப்போது வரக்கூடிய தர்மத் தந்தைகள் கூட தூய்மையும், புனிதமாயும் ஆகியுள்ளனர் ஆனால் உங்களின் தூய்மை சர்வசிரேஷ்டமானது, அப்பாற்பட்டது. முழு கல்பத்தில் மகாத்மாவாயினும் சரி, தர்மத்தலைவர்கள், தர்மதந்தைகளாயினும் சரி, உங்களைப் போன்று ஆத்மாவும் தூய்மை, சரீரமும் தூய்மை, இயற்கையும் சதோபிரதான தூய்மை, இந்த அளவு புனிதமானவர்கள் எவரும் இருக்க முடியாது. உங்களது பவித்ர சொரூபத்தை முன்னே கொண்டு வாருங்கள். உங்கள் அனைவருக்கும் முன்னால் நான் ஆவேனா, ஆக மாட்டேனா? தெரியவில்லையே? என்னவாக ஆவேன்! என்றெல்லாம் உங்களது எதிர்காலம் பற்றிய ரூபம் வந்ததா? ஏதோ ஒன்று ஆவீர்கள். என்றே வைத்துக் கொள்வோம் ஆனால் தூய்மையாக இருப்பீர்கள்தானே? சரீரமும் தூய்மை, ஆத்மாவும் தூய்மை மற்றும் இயற்கையும் பவித்திரமானது, சுகம் தரக்கூடியது.

இப்படி உங்களது எதிர்காலம், நிச்சயம் பற்றிய சித்திரத்தை எதிரில் கொண்டுவர முடிகிறதா? நல்லது. ஒரு வினாடியில் உங்களது எதிர்கால சித்திரத்தை எதிரில் கொண்டு வர முடிகிறதா? சரி, ஸ்ரீ கிருஷ்ணராக மாட்டீர்கள்; ஆனால் அவரது கூட்டாளியாகவாவது ஆவீர்கள் தானே! எவ்வளவு இனிமையாக இருக்கிறது. இவ்வாறு

ஓவியக் கலைஞராக ஆக முடிகிறதா? அல்லது இல்லையா? எதிரில் பாருங்கள் இப்போது சாதாரணமாக இருக்கிறேன். நாளை தூய்மையான சரீ ரதாரி. ஆகியே தீர வேண்டும். பாண்டவர்கள் என்ன நினைக்கிறீர்கள்? உறுதிதானே! இதில் சந்தேகம் ஏதும் இல்லையே? ஆகுவோமா? ஆக மாட்டோமா என்பதில்லையே? இராஜயோகிகளாக இருக்கும்போது ராஜ்ய அதிகாரி ஆகியே தீர வேண்டும். பாப்தாதா அநேக முறை பாபா உங்களுக்கு பரிசு கொண்டு வந்திருக்கிறார் என்று நினைவூட்டுகிறார். என்ன பரிசு அது? மிக அழகான உலகம், அந்த சதோபிரதான உலகின் பரிசைக் கொண்டு வந்திருக்கிறார். ஆக இதில் நிச்சயமிருக்கிறதா? நிச்சயத்தின் அடையாளம், ஆன்மீக போதை. எவ்வளவு உங்களது இராஜ்யத்தின் அருகாமையில் வருகிறீர்களோ, அவ்வளவு உங்கள் வீட்டின் அருகாமையிலும் வருகிறீர்கள். ஆக, அடிக்கடி, உங்களது இனிமையான வீடு, மற்றும் இனிமையான இராஜ்யத்தின் நினைவு மிகத் தெளிவாக வர வேண்டும். இது மிக அருகாமையில் வருவதன் அடையாளம் ஆகும். எனது வீடு, எனது இராஜ்யம் என்பது மிகத் தெளிவாக நினைவில் வரட்டும். 3வது கண்மூலம் தெளிவாகத் தெரியட்டும். இன்று இது, நாளை அது என்று அனுபவம் ஆகட்டும். எவ்வளவு தடவை உங்களது பாகத்தை பூர்த்தி செய்து உங்களது வீடு மற்றும் இராஜ்யத்தில் சென்றுள்ளீர்கள். நினைவு வருகிறது அல்லவா? இப்போது மீண்டும் செல்ல வேண்டும். இரட்டை வெளிநாட்டினர்களுக்கு தெளிவாக நினைவுக்கு வருகிறதா? அல்லது இழுத்துப் பிடித்து நினைக்க வேண்டி இருக்கிறதா? என்னவாகப் போகிறோமோ? எப்படி ஆகுமோ? என்று இழுபறியா? அல்லது தெளிவாக நினைவிருக்கிறதா? பின்னால் அமர்ந்திருப்பவர்களுக்கு நினைவுள்ளதா? காலரியில் அமர்ந்திருப்பவர்களுக்கு நினைவுள்ளதா? வெளியேயும் அமர்ந்திருக்கின்றனர், உலகத்தின் ஒவ்வொரு மூலையிலும் அமர்ந்திருக்கின்றனர் என்பதை பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார். ஆக ஹோலி கொண்டாடினீர்களா? நீங்களாக ஹோலியாக (Holy) இருக்கிறீர்கள். பிறகு ஹோலி என்ன கொண்டாடுவது? இது சங்கமயுகத்தின் இயல்புநிலை மற்றபடி ஹோலி என்ன கொண்டாடப் போகிறீர்கள்?

இன்று பாப்தாதா அனைவருடைய கணக்கையும் பார்க்க வேண்டும்தானே! மறந்து போகவில்லை. அனைவரும் உங்கள்

கணக்கை (சார்ட்) வைத்திருக்கிறீர்கள்? யார் மிகச் சரியாக விதிப் பிரகாரம் கணக்கு வைத்திருக்கிறீர்களா, ஏதோ, கடமைக்காக அல்ல. யதார்த்த ரூபத்தில் எப்படியானாலும் சரி ஆனால் மிகத் துல்லியமாக தன்னுடையதை முழுமையாக வைத்துள்ளார்களோ, உண்மையிலும் உண்மையான கணக்கு, கடமைக்காக அல்ல, அவர்கள் கையை உயர்த்துங்கள். கையை பெரிதாக உயர்த்துங்கள். எவர் கணக்கு வைத்துள்ளார்களோ, எழுதினவர்கள் அல்ல, வைத்திருப்பவர்கள். நல்லது பின்னால் அமர்ந்திருப்பர்களில் யார் வைத்திருக்கிறீர்கள், எழுந்து நில்லுங்கள். நல்லது. இரட்டை வெளிநாட்டினர்கள் யார் வைத்திருக்கிறீர்கள் அவர்கள் எழுந்திருங்கள். நல்லது. வாழ்த்துக்கள் அமருங்கள். யார் எழுதவில்லையோ, அவர்களை கை உயர்த்தச் சொல்லமாட்டேன் அது நன்றாக இருக்காது ஆனால் அவ்வாறு கணக்கு வைப்பதால் அவர்களது கணக்கு பாபாவிடம் மிகத் தெளிவாகி விடுகிறது ஆனால் பலர் (புத்தியில்) வைத்துள்ளனர். எப்படி இருப்பினும் பாபாவுடைய கட்டளைக்குக் கீழ்ப்படித்துள்ளனர். எனவே பாப்தாதா இரண்டுவிதமான அதிகபடியான மார்க் (மதிப்பெண்கள்) அவர்களுக்கு அதிகமாக்கியுள்ளார். ஏனெனில் ஸ்ரீமத்படி நடப்பது கூட பாடம்தான். ஆக ஸ்ரீமத்படி நடக்கும் பாடத்தில் பாஸ் ஆகியுள்ளனர். எனவே, முதல் நம்பரில் உள்ளவர்களுக்கு பாப்தாதா தன் தரப்பிலிருந்து 25-மதிப்பெண்கள் அதிகரித்துள்ளார். இரண்டாவது நம்பரில் உள்ளவர்களுக்கு (முழுமையாக எழுதாமல் சராசரியாக) 15-மதிப்பெண்கள் தந்துள்ளார். இந்த அதிகப்படியான மதிப்பெண்கள் பாப்தாதா தன் தரப்பில் இருந்து வழங்கியுள்ளார். ஆக இறுதித் தேர்வில் உங்களது இந்த மதிப்பெண்கள் கூடுதலாக சேர்ந்து போகும். "பாஸ்வித் ஆனர்" ஆவதில் உதவியாக இருக்கும் ஆனால் யார், யார் வைக்கவில்லையோ? ஏதோ ஒரு காரணத்திற்காக, அல்லது கவனக்குறைவு காரணமாக, அவர்களுக்கு பாபா கூறுகிறார். ஒரு மாதம் தங்களது கணக்கை இப்போதிருந்தே வையுங்கள். இப்போதிலிருந்தாவது சரியாக ஒரு மாதம் கணக்கு வைத்தால் நம்பர் ஒன்றில் வராவிட்டாலும் கூட அவர்களது மதிப்பெண் குறையாது இல்லையா? இறுதி காலத்தில் நாடகப்படி நீங்கள் உங்கள் கணக்கை உள்ளம் என்ற டி.வி.யில் பார்ப்பீர்கள். அதில் பாப்தாதா காண்பிப்பார். அதில் ஸ்ரீமத்கான மதிப்பெண் குறைக்கப்பட மாட்டாது. இருப்பினும், பாப்தாதாவிற்கு அன்பு உண்டு பல பிறவிகளுனுடைய கவனக்குறைவு

சம்ஸ்காரம் உறுதியாக உள்ளதல்லவா? எனவே இப்படி ஆகி விடுகிறது ஆனால் இப்போது அவ்வாறு கவனக்குறைவாக இருக்கக் கூடாது. இல்லையென்றால், பின்னால் கூறும்போது என்னவாகும்? அதை இப்போது சொல்ல மாட்டோம். ஏனெனில், பாப்தாதா, தற்சமயத்தில் அனைவரது ரிசல்ட்டையும் பார்த்தார், இரட்டை வெளிநாட்டவராயினும் சரி, பாரதவாசிகளாயினும் சரி, அனைவரது ரிசல்டிலும், புதுப்புது விதமான கவனக்குறைவு குழந்தைகளிடம் உள்ளது. மனதுக்குள்ளேயே, நினைத்துக் கொள்கின்றனர், எல்லாம் நடக்கிறதுதாங்க, அப்புறம் பார்த்துக் கிட்டால் போகுது -இதுதான் கவனக் குறைவு. புருஷார்த்தம் மற்றும் சுயமாற்றத்தில் கவனக்குறைவின் கூடவே சிறிது சதவிகிதம் சோம்பேறித்தனமும் உள்ளது. கடைசியில் ஆகி விடுவோம். செய்து விடுவோம், இவ்வாறு புதுப்புது விதமான கவனக் குறைவினை பாப்தாதா பார்த்தனர். எனவே, தனது உண்மையான உள்ளத்தோடு, கவனக் குறைவாக அல்ல, உங்கள் கணக்கை நிச்சயமாக வையுங்கள்.

இன்று இந்த சீசனில் கடைசி முறை. ஆக பாப்தாதா ரிசல்டை கூறிக் கொண்டு இருக்கின்றார். கூறலாமா? அல்லது வெறும் அன்பை மட்டும்தான் காண்பிக்க வேண்டுமா? இவ்வாறு (உண்மையை) கூறுவதும் கூட அன்பின் அடையாளம்தான். அனைத்து குழந்தைகளும் பிரம்மாபாபாவின் கூடவே வீடு திரும்ப வேண்டும் என்கின்ற அன்பு அனைத்து குழந்தைகளிடமும் இருக்கிறது. பின்னால் வரக்கூடாது. கூடவே துணையாக செல்ல வேண்டும். அப்படியானால், அவருக்குச் சமமாக ஆக வேண்டும்தானே! சமமான நிலையில்லாது துணையாக செல்ல முடியாது. மேலும் தனது இராஜ்யத்தில் முதல் பிறவி என்பது, முதலாவதாகத்தானே இருக்க முடியும். அதை விடுத்து, இரண்டாவது, மூன்றாவது பிறவியில் என்றுதானே பேசப்படும். கூடவே செல்ல வேண்டும். பிரம்மாபாபாவின் கூடவே முதல் பிறிவியிலேயே அதிகாரிகளாகிச் செல்ல வேண்டும். இதுவே நம்பர்-1 பாஸ் வித் ஆனர் நிலையாகும். ஆக பாஸ் வித் ஆனர் ஆக வேண்டுமா? அல்லது வெறும் பாஸ் ஆனால் மட்டும் போதுமா? என்னென்ன நடக்கிறதோ, எதை நாம் செய்கிறோமோ, அதை பாபா பார்க்கவில்லை, என்று ஒருபோதும் நினைக்க வேண்டாம். இந்த விஷயத்தில் ஒருபோதும் கவனக்குறைவாக இருக்கக் கூடாது. எந்த குழந்தையேனும், தனது

உள்ளத்து சார்ட்டை பாப்தாதாவிடம் கேட்டால் கூற முடியும் ஆனால், இப்போது கூறப் போவதில்லை. பாப்தாதா ஒவ்வொரு மகாரதி, குதிரைப்படை போன்ற அனைவரது சார்டையும் பார்த்துக் கொண்டிருந்தனர். பல தடவை பாப்தாதாவிற்கே இந்த இரக்கம் வருகிறது. இவர்கள் யார்? ஆனால் எப்படி இப்படி நடந்து கொள்கிறார்கள்? ஆனால், பிரம்மாபாபா அடிக்கடி கூறுவதில்லையா, அது என்ன என்பது நினைவுக்கு வருகிறதா? (கூடு ஜானே, கூடுக்கா கோத்ரி ஜானே) மூட்டையிலிருக்கும் வெல்லத்தைப் பற்றி மூட்டைக்குத் தெரியாதா என்ன? சிவபாபாவிற்குத் தெரியும், மேலும் பிரம்மாபாபாவிற்கும் தெரியும், ஏனெனில், பாப்தாதாவிற்கு இவர்கள் மீது மிகுந்த இரக்கம் பிறக்கிறது ஆனால் இப்படிப்பட்ட குழந்தைகள், (கவனக்குறைவாக, சோம்பேறித்தனமாக இருப்பவர்கள்) பாப்தாதாவினுடைய இரக்க உணர்வுள்ள சங்கல்பத்தைக் கூட கிரகிக்க முடியாது. எனவே பாப்தாதா கூறினார், பல்வேறு விதமான, ராயல் கவனக்குறைவினை பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தனர். மிகவும் இரக்கமாகயிருக்கிறது என்று இன்று பாப்தாதாவே கூறிவிட்டார் என்று நினைத்து அலட்சியமாக இருந்து விடாதீர்கள். சத்யயுகத்தில் யார் எப்படி இருந்தார்கள் என்று யாருக்குத் தெரியும்? தற்போது ஜாலியாக இருந்து விடுவோம். என்ன செய்ய வேண்டுமோ, அதை இப்போதே செய்வோம். யாரும் நம்மை தடுக்கப் போவதில்லை, பார்க்கப் போவதும் இல்லை ஆனால் இப்படி எண்ணுவது தவறு ஆனால் பாப்தாதா பெயரைக் கூறவில்லை. அவ்வாறு கூறி விட்டால், நாளையே சரியாகி விடுவர்.

இன்று ஹோலி (துரியா) கொண்டாடுகிறீர்கள் இல்லையா? ஹோலியில் ஒருவர் மற்றவருக்கு தங்களிடம் இருப்பதை வெளிப்படையாக கொடுத்து விடுகின்றனர். ஆகவே என்ன செய்ய வேண்டும் என்பது புரிந்ததா? பாண்டவர்களே, புரிந்ததா? இல்லை புரியவில்லையா? நேரம் வந்தால், எல்லாம் ஆகி விடும். அப்படியெல்லாம் நடக்காது. ஏனெனில் பாப்தாதாவிடம் ஒவ்வொருவருடைய ஒவ்வொரு நாளின் ரிப்போர்ட் என்பது வந்து கொண்டிருக்கிறது. பாப்தாதாவும் தங்களுக்குள் உரையாடிக் கொண்டிருக்கின்றனர் எனவே திரும்பவும் அனைத்து குழந்தைகளுக்கும் ஜாடைமாடையாக பாப்தாதா கூறிக்

கொண்டிருக்கிறார். மாயையும் கூட தனது அதிதீவிரமான பாகத்தை நடித்துக் கொண்டிருக்கிறது. இயற்கையும் கூட மிக தீவிரமான தனது பாகத்தை செய்து கொண்டிருக்கிறது. இம்மாதிரி சமயத்தில் பிராமணக் குழந்தைகளும் கூட தன் பக்கம் எண்ணம் சொல், செயலில் கவனத்தை மிகத் தீவிரமாகச் செலுத்த வேண்டும். சாதாரணமான புருஷார்த்தம் இல்லை. பாப்தாதா கூறுகிறார். இந்த 66-வருடத்தில் 6-லட்சம்தான் தயார் செய்துள்ளீர்கள். 9-லட்சம் கூட இன்னும் வரவில்லை. விஸ்வ கல்யாணகாரி ஆத்மாக்கள், உலகத்தின் அனைத்து ஆத்மாக்களுக்கும் எப்போது நன்மை புரிய போகிறீர்கள்? ஆக இன்னும் 66 வருடங்கள் வேண்டுமா? தேவையில்லையா? இரட்டை வெளிநாட்டினருக்கு தேவையா? அல்லது தேவையில்லையா? என்ன செய்யப் போகிறீர்கள்? சரி அதில் பாதி 33-வருடம் வேண்டுமா? வேண்டாமா? 33-ஆண்டுகள் கூட தேவையில்லையா? என்ன செய்யப் போகிறீர்கள்? இப்போது கூட சேவையில் மிகுந்த ஈடுபாடு உள்ளது. சேவைக்காக சதா எவரெடியாக இருக்கின்றனர். வாய்ப்பு கிடைத்தால் அன்போடு சேவை செய்ய காத்திருக்கின்றனர் என்பதையும் பாப்தாதா பார்க்கின்றனர் ஆனால் இப்போது அந்த சேவையில் கூடுதலாக ஒன்றையும் சேர்த்துக் கொள்ளுங்கள். வாணியின் கூடவே மனம் மற்றும் தனது ஆத்மாவின் விசேசமான ஏதேனும் பிராப்தியின் சொரூபத்தில் ஸ்திரமாக இருந்து சேவை செய்யுங்கள். நீங்கள் சொற்பொழிவாற்றுகிறீர்கள், ஆனால் அச்சமயத்தில் தனது ஆத்மீக ஸ்திதியில், விசேசமாக சாந்தியோ, அல்லது சக்தியோ அல்லது பரமாத்மா அன்போ ஏதேனும் விசேச அனுபவத்தின் ஸ்திதியில் ஸ்திரமாய் இருந்து மனதின் மூலம் ஆத்மீக ஸ்திதியின் பிரபாவத்தை வாயுமண்டலத்தில் பரப்புங்கள். சொல்லின் கூடவே செய்தியையும் கூறுங்கள். வாணியின் மூலம் செய்தியை கூறுங்கள். மனதின் ஆத்மீக ஸ்திதிமூலம் அனுபவம் செய்வியுங்கள். சொற்பொழிவு ஆற்றும் சமயம் உங்கள் நெற்றியிலிருந்து கண்களிலிருந்து, முகத்திலிருந்து அந்த அனுபவத்தின் தோற்றம் தென்படட்டும். இன்று பேச்சின் கூடவே பரமாத்ம அன்பின் அனுபவம் மிக அருமையாக ஏற்பட்டது, என்று தென்படட்டும். சொற்பொழிவு முடிந்தவுடன் பொதுவாக, மிக நன்றாக இருந்தது என்று சொல்வதுண்டு. அதுபோலவே, கேட்பவர்கள் உங்கள் ஆத்மீக சொரூபத்தின் அனுபவத்தையும் வர்ணனை செய்ய வேண்டும். மனித ஆத்மாக்களுக்கு இந்த அதிர்வுகள் சென்றடைய வேண்டும். ஒரு நல்ல

சூழ்நிலை வாயுமண்டலம் உருவாக வேண்டும். அறிவியலின் சாதனம் குளிர்ந்த சூழ்நிலையை உருவாக்க முடிகிறது. அப்படியானால், உங்களது அறிவியல் (யோகம்) அன்பு சொரூபம், சுக சொரூபம், சாந்தி சொரூபம், ஆகியவற்றின் வாயுமண்டலத்தை அனுபவம் செய்விக்க முடியாதா? இந்த ஆராய்ச்சியில் ஈடுபடுங்கள். நன்றாக இருந்தது, மிக நல்லது என்று சொன்னால் மட்டும் போதாது, நன்றாக மாறியாக வேண்டும். அப்பொழுது முடிவு காலத்தை முடிவுக்குக் கொண்டுவந்து உங்களது ராஜ்யத்தையும் கொண்டு வரமுடியும். உங்களுக்கு உங்களுடைய ராஜ்யம் நினைவுக்கு வரவில்லையா? சங்கமயுகம் சிரேஷ்டமானது. வைரத்திற்குச் சமமானது. அது சரிதான், ஆனால் இரக்கமுள்ள விஸ்வகல்யாணி குழந்தைகளுக்கு தனது துக்கமான, அசாந்தியான சகோதர, சகோதரிகள் மீது இரக்கம் வரவில்லையா? ஆர்வம் வரவில்லையா? துக்கம் நிறைந்த உலகத்தை சுகம் நிறைந்ததாக மாற்றுவதற்கான இந்த உற்சாகம் எழவில்லையா? பிறரது துக்கத்தைப் பார்த்தும் கூட அவர்கள் உங்களது சகோதரர்கள், சகோதரிகள், அப்படி துக்கமாக இருக்க. பார்ப்பது நன்றாக இருக்கிறதா? தன்னுடைய தயை (கருணை) நிறைந்த கிருபை நிறைந்த சுயசொரூபத்தை வெளிக் கொண்டு வாருங்கள். சேவையில் மட்டும் மூழ்கி விடாதீர்கள். இந்த புரோகிராம் செய்தோம், அந்த (நிகழ்ச்சி) புரோகிராம், செய்தோம். இப்படியாக வருடம் முடிந்து விட்டது என்று இருக்காதீர்கள். இப்போது இரக்கம் நிறைந்தவர் ஆகுங்கள். பார்வையின் மூலமாக அனுபவங்களை செய்விப்பதன் மூலமாக, ஆன்மீக நிலையின் பிரபாவம் மூலமாக, கருணை நிறைந்தவர் ஆகுங்கள். இரக்கம் உள்ளம் கொண்டவராகுங்கள். 66-ஆண்டுகள் முடிந்து விட்டன. 66-ஆண்டுகள் என்பது குறைந்த விஷயமா? அல்ல பிரம்மாபாபா அவ்யக்த நிலையடைந்து 33-வருங்கள் முடிந்து விட்டன. பிரம்மாபாபா அவ்வப்போது கேட்கிறார் குழந்தைகள் எப்போது வருவார்கள், கதவை எப்போது திறப்பது? எல்லோரும் சேர்ந்தே வீட்டின் கதவைத் திறப்பதா? அல்லது பின்னால் வருவார்களா? இவ்வாறு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். ஆகவே சேவையில் கூடுதலாகச் இதையும் (சுயஸ்திதி) சேருங்கள். இந்த விதியின் மூலமாக சிறிது காலத்திற்காவது சேவை செய்து வந்தீர்களாயின், உங்களிடம் தரமான ஆத்மாக்களின் மழை பொழிய ஆரம்பித்து விடும் என பாப்தாதா உத்திரவாதம் அளிக்கிறார். வாரிசு குழந்தைகளினுடைய மழை

தொடர்ந்து பொழியும். இவ்வளவு கஷ்டப்பட்டு முயற்சி செய்ய வேண்டிய அவசியம் இராது. இந்த காரியம் நடத்தாக வேண்டும் என்று கூறுவதற்கே அவசியம் இராது. இதில் உதவி அளியுங்கள் என்று பிறரை கேட்கக் கூட அவசியம் இராது. உதவியைதாமாகவே முன்வந்து செய்வார்கள் ஆனால் நீங்கள் செய்ய வேண்டியது, சாதாரண விதிமுறையிலான சேவையில் மாற்றம் கொண்டு வாருங்கள். அதில் மினுமினுப்பு, ஜொலிப்பு இருக்க வேண்டும். அனுபவம் செய்விக்கும் விதியை மட்டும் சிந்தியுங்கள். வெறும், சொற்பொழிவு மற்றும், கோர்ஸ் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் மட்டும் இருந்தால் போதாது. அவையெல்லாம் நிறைய செய்து முடித்தாகி விட்டது, பல்வேறு தொழில் துறையைச் சார்ந்தவர்களுக்கும் கூட விதவிதமான நிகழ்ச்சிகள் பல செய்தாகி விட்டது ஆனால், இப்போது, யார், யார் வருகிறார்களோ, அவர்களுக்கு மனதில் நல்ல பதிவு ஏற்பட வேண்டும். 9-லட்சத்தினுடைய பதிவு ஏற்பட வேண்டும். என்ன செய்ய வேண்டும் என்பது புரிந்ததா?

"சேவைக்கான திட்டத்தைக் கூறுங்கள்' என்று கேட்டீர்கள் இல்லையா? இப்போது ஏதேனும் ஜொலிப்பை செய்து காண்பியுங்கள். தற்போது நீங்கள் செய்து கொண்டிருப்பது காலதாமதமானது. லட்சுமி பற்றி கூறும்போது செல்வம் மினுமினுப்புடன் கொட்டுவது போல் காண்பிக்கிறார்கள். ஆக நீங்கள் இப்போது சிரேஷ்டமான பிராமணர்களாகி அனுபவத்தின் மினுமினுப்பை செய்யுங்கள் ஆனால் வீணான சிந்தனைகள் வீணாக சமயத்தைக் கழிப்பது வீணான பார்வை இருப்பவர்கள் இந்த அனுபவத்தை செய்விக்க முடியாது ஆனால், பாப்தாதா சிறிது பார்த்துள்ளார்கள். அதனையும் கூறட்டுமா? சரி, இன்று எல்லாவற்றையுமே கூறி விடுகிறோம்.

இன்று ஹோலி இல்லையா? ஹோலியின்போது தீயவைகளைப் பற்றி எடுத்துக் கொள்வதில்லை. டீச்சர்களே இன்று ஹோலிதானே, பாப்தாதா இன்னும் ஒரு விஷயத்தைப் பார்த்தார் ஆனால் அதை கூறுவது நன்றாகவே இல்லை. சிலசமயம், சில குழந்தைகள் நல்ல, நல்ல குழந்தைகள் கூட பிறரது விஷயங்களில் மிகுதியாக தலையிடுகின்றனர். பிறரது விஷயங்களைப் பார்ப்பது. பிறரை வர்ணிப்பது அவ்வாறு பார்க்கும் போதும் வீணானவைகளையே

பார்க்கின்றனர். விசேசத்தன்மைகளைப் பார்த்து வர்ணனை செய்வது குறைவாக உள்ளது. பிறருடைய விசேசத்தைப் பார்ப்பது வர்ணனை செய்வது, அவர்களின் விசேசத்தின் ஆதாரத்தில் அவர்களை உற்சாகம் ஆர்வத்தில் கொண்டு வருவது, இது குறைவாக உள்ளது, ஆனால் பாப்தாதா விட்டுவிடக் கூறுகின்ற வீணான விஷயங்களை விடுவதில்லை தாங்கள் விட்டு விடுவதற்கு முயற்சி செய்கின்றனர் ஆனால் பிறரது தீயவைகளைப் பார்க்கும் பழக்கமும் இருந்து விடுகிறது. அதில் சமயம் நிறைய வீணாகிறது. பாப்தாதா ஒரு விசேஷ ஸ்ரீமத் தருகிறார். அது பொதுவான சாதாரண விஷயம்தான் ஆனால் அதில் சமயம் நிறைய வீணாகிறது. பேச்சில், பணிவுடையவர்களாகுங்கள். பேச்சில் பணிவு குறையக் கூடாது. சாதாரண பேச்சு பேசும் போது கூட இதில் இப்படிப் பேசித்தானே (சற்று பணிவில்லாமல்) ஆக வேண்டுமென்று நினைக்கிறார்கள் ஆனால் பணிவு இல்லாது அதிகாரத்தோடு பணிவற்ற பேச்சைப் பேசும்போது அந்த காரியத்தின், சீட்டினுடைய (பொஷிசன்) 5-சதவிகிதம் அபிமானம் தெரிகிறது. பணிவுத்தன்மை என்பது பிராமண வாழ்க்கையின் விசேஷ அலங்காரம் ஆகும். பணிவு என்பது மனதில், சொல்லில், சம்மந்தம் தொடர்பில் இருக்க வேண்டும். இதில் ஒன்றில் மட்டும் பணிவு குறைவாக இருக்கிறது என்பது கூடாது ஆனால் அந்த ஒரு குறைவு பாஸ் வித் ஆனர் ஆக விடாது. பணிவுத்தன்மையே மகான் தன்மை. அநேக குழந்தைகள் விளையாட்டாகக் கூறுகின்றனர். நான்தான் பணிந்து போக வேண்டுமா? ஆனால் உண்மையில் பரமாத்வையே தன்மீது பணிய வைப்பதாகும் (அன்பு), பணிவு என்பது நிர்அகங்காரியாக தானாகவே ஆக்கி விடுகிறது. நிர்அகங்காரி ஆவதற்கான முயற்சி செய்வது அவசியம் இல்லாது போய் விடுகிறது. பணிவு என்பது ஒவ்வொருவருடைய மனதிலும் உங்களுக்காக அன்பு என்னும் இடத்தை உருவாக்குகிறது. பணிவானது ஒவ்வொருவருடைய மனதிலிருந்தும் உங்களுக்காக ஆசீர்வாதத்தை வழங்குகிறது. நிறைய ஆசீர்வாதம் கிடைக்கும். அந்த ஆசீர்வாதம் முயற்சியில் லிப்ட் என்பதில் இருந்து ராக்கெட்டாக மாறி விடும். பணிவு என்பது அப்படிப்பட்ட ஒன்று. ஒருவர் எப்படி இருந்தாலும் சரி மிகவும் பிஸியானவர்களாயினும் சரி, கடுரமான உள்ளமுடைவர்களானாலும் சரி, மிகுந்த கோபக்காரர்களாலும் சரி, பணிவு என்பது இப்படிப்பட்டவர்களிடம் இருந்தும் கூட ஒத்துழைப்பை பெற்றுத்

தருவதாகும். பணிவு என்பது பிறருடைய எப்படிப்பட்ட சம்ஸ்காரத்தோடும் இணைந்து செல்ல வைக்கக்கூடியதாகும், (Real Gold) உண்மையான தங்கமாக இருப்பதால், தன்னை மாற்றிக் கொள்ளக்தக்க (Mold) விசேசத்தை பெற்றிருப்பதாகும். ஆக பாப்தாதா பார்த்தார்; பேச்சு நடவடிக்கையில், தொடர்பு, சம்பந்தத்திலும், சேவையிலும் ஒருவர் மற்றவர்களிடையே பணிவு வெற்றியடையச் செய்வதாகும். எனவே இந்த வருடத்தில் விசேசமாக பாப்தாதா இந்த ஆண்டை பணிவு மற்றும் நிர்மலமான (மாசற்ற) ஆண்டாக பெயரிட்டுள்ளார். அவ்வாறு இந்த ஆண்டை கொண்டாடுகிறார்கள் அல்லவா? கொண்டாடுவது என்பது அவ்வாறு ஆகுவது ஆகும். வெறுமனே கூறினால் மட்டும் போதாது. ஆகியே தீர வேண்டும். பின்னால் அமர்ந்துள்ளவர்கள், ஆக வேண்டும்தானே? இன்னும் எங்களுக்கு ஞான முத்துக்களைத் தாருங்கள், தாருங்கள் என்று கேட்கிற அளவிற்கு நீங்கள் பேச வேண்டும். வேண்டாம் உங்கள் பேச்சு வேண்டாம் என்று கூறும் அளவிற்கு வைத்துக் கொள்ள கூடாது. ஞான முத்துக்களே வாயிலிருந்து வெளிவர வேண்டும். அபிமானத்தில் பேசுவதன் மூலம் பிறருக்கு துக்கம் ஏன் தர வேண்டும். இது துக்கத்தின் கணக்கில் தானே போய்ச் சேரும். அப்படி பேசி விட்டதனால் என்ன? அது உள்ளதுதானே என்று நினைக்கிறீர்கள் ஆனால் அதன் விளைவு துக்கத்தின் கணக்கில் அல்லவா போய்ச் சேருகிறது. புரிந்ததா? எனவே கணக்கு வைக்க வேண்டும். இப்போதுதான் கணக்கை கொடுத்து விட்டோமே இன்னுமா? என்று நினைக்க வேண்டாம். கணக்கு வைப்பதால், இலாபம்தான். அநேகர் நன்கு புருஷார்த்தம் செய்ததை பாப்தாதா பார்த்துள்ளார். கவனம் நன்கு வைத்துள்ளனர். ஆக எதை நினைவிற் கொள்ளப் போகிறீர்கள்? பணிவு, (நிர்மான்) அப்பொழுதுதான் புது உலகை நிர்மாணிக்கும் கடமை சீக்கிரம் நடைபெறும்.

பணிவாக இருங்கள் (நிர்மான்) புது உலகை நிர்மாணியுங்கள், பிறகு நீங்களே கூறுவீர்கள், பாபா இப்போது மிகவும் நன்றாக ஜொலிக்கிறது. முழு உலகத்தின் ஆத்மாக்கள், ஆஹா பிரபுவின் லீலையே லீலை என்று கூறி உங்கள் முன்னர் பணிவார்கள். ஆக இந்த ஆண்டு சேவைப் பற்றி கேட்டீர்கள் அல்லவா? இப்போது பார்ப்போம், எந்த சென்டர், எந்த (ஜோன்) மண்டலம், அந்த மண்டலத்தில் கூட எந்த சென்டர் இந்த விதிப்படி வாரிசுகளை உருவாக்குகிறார்கள் என்று பார்ப்போம்.

வாரிசுகளை உருவாக்கும் மினுமினுப்பை (ஜொலிப்பு) செய்யுங்கள். பிறருக்கு அனுபவத்தை செய்விப்பது மூலமாகத்தான் இருக்கும். அனைத்திலும் பெரிய அத்தாரிட்டி அனுபவ அதாரிட்டி ஆகும். அனுபவம் பெற்றவரை எவரும் மாற்றி விட முடியாது. நல்லது!

நல்லது. இரட்டை வெளிநாட்டினருக்கு ஒரே வினாடியில் எவ்வித வீணான விஷயத்தையோ, எந்த எதிர்மறை விஷயத்தையோ, கடந்து போன ஏதோ விஷயத்தையோ அவைகளுக்கு மனதில் முற்றுப்புள்ளி வைக்க முடிகிறதா? இரட்டை வெளிநாட்டினர்கள் கடந்து போனவற்றில் நல்லவைகளாக இருப்பின் அவைகளை மறக்கக் கூடாது. வீணானவைகளை மறக்க வேண்டும். ஏதேனும் விஷயத்தை மறக்க வேண்டுமெனில் அதை ஒரே வினாடியில் பிந்து(புள்ளி) வைத்து விட முடிகிறதா? இரட்டை வெளிநாட்டினர்கள் யார் இப்படி செய்ய முடியும் அவர்கள் கையை உயர்த்துங்கள். உங்களுக்கு வாழ்த்துக்கள் ஆனால் ஒரு வினாடியில் இல்லை. ஒரு மணிநேரம் ஆகத்தான் செய்யும் ஒரு வினாடி என்பது மிகக் குறைவானது. ஒரு மணி நேரத்திற்குப் பின் முற்றுப்புள்ளி வைக்க முடியும். அவர்கள் கை உயர்த்துங்கள். பார்த்தீர்களா? வெளிநாட்டினர் நன்றாக இருக்கிறார்கள். பாரதவாசிகளில் கூட ஒரு மணி அல்ல, அரை நாளில் பிந்து (முற்று புள்ளி) வைக்க முடியும் என்பவர்கள் கையை உயர்த்துங்கள். அதுவும் சரிதான். பாப்தாதாவிற்குத் தெரியும் பாப்தாதாவே பார்த்துக் கொண்டிருக்கிறார். சிலர் கை உயர்த்துவதில்லை. ஒரு மணிநேரமோ அல்லது அரை நாளோ ஆகட்டும். இந்நிலையில் அட்வான்ஸ் பார்ட்டியில் உங்களுக்கு அழைப்பு வந்தால், முடிவு என்னவாக இருக்கும்? கடைசிதருணத்தில் புத்தி எப்படி இருக்கிறதோ, அப்படி அல்லவா எதிர்காலம் அமையும். நீங்கள் எல்லாம் நன்கு விவரம் தெரிந்தவர்கள் தானே! எனவே உங்களுடைய பிஸியாக வைத்திருப்பீர்கள்தானே? உங்கள் மனசேவையின் சார்ட் வையுங்கள். அப்போது பிந்து வைக்க வேண்டிய அவசியமே ஏற்படாது. நீங்களே பிந்தி ரூபமாகவே இருப்பீர்கள். எனவே இப்போது தன்னுடைய மனதின் சார்ட்டை (அட்டவணை) நிர்ணயம் செய்துகொள்ளுங்கள். மனதை சதா பிஸியாக வையுங்கள். காலியாக விடாதீர்கள். பிறகு கஷ்டப்பட வேண்டியதிருக்கும், நீங்கள் மிகவும் மேலான பகவானின் குழந்தைகள். எனவே உங்களுடைய ஒவ்வோர் வினாடியின் அட்டவனை

நிலையானதாக இருக்க வேண்டும். அவ்வாறு பிந்து (புள்ளி) ஏன் வைக்க முடிவதில்லை. அதன் காரணம் யாது. ஏனெனில் சக்தி வாய்ந்த பிரேக் இல்லை. சக்திகளின் சேமிப்பு இருப்பில் (ஸ்டாக்) இல்லை எனவே ஒரு வினாடியில் முற்றுப்புள்ளி வைக்க முடிவதில்லை. எனவே வினாடியில் நிறுத்திவிட முடியவில்லை. அநேக குழந்தைகள் மிகுந்த முயற்சி செய்கின்றனர். இவ்வாறு இருக்கக் கூடாது... இருக்கக் கூடாது என்று மிகுந்த முயற்சி செய்வதை பாப்தாதா பார்க்கின்றனர். இந்நிலை கூடாது என்று கூறினாலும் அது நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. குழந்தைகளுடைய இந்த கடும் பாப்தாதாவிற்கு நன்றாக இருப்பதில்லை. முயற்சி காரணம் என்னவெனில் இராவணனை கொல்லவும் செய்கிறார்கள், ஆனால் மேலும் கூடவே எரிக்கவும் செய்கிறார்கள். பிறகு அந்த சாம்பலை நதியில் போட்டு விடுகிறார்கள். மனிதர்கள் இறந்தாலும், எலும்பும், சாம்பலையும் நதியில் போடுகின்றனர். அப்போதுதான் முடிவுக்கு வருகிறது ஆனால் நீங்கள் என்ன செய்கிறீர்கள். ஞானக் கருத்துக்கள் மூலம், அந்த குறிப்பிட்ட விஷயம் என்னும் எனை கொன்று விடுகிறீர்கள் ஆனால் முழுமையாக இராவணை யோக அக்னியில் ஸ்வாகா செய்வதில்லை ஆனால் பிறகு நீங்கள் செய்ய வேண்டியது, எஞ்சி இருக்கும் எலும்புகளை ஞானக்கடல் பாபாவின் முன்னால் அர்ப்பணம் செய்து விடுங்கள் மூன்று காரியம் செய்யுங்கள். ஒரு காரியம் மட்டும் செய்யாதீர்கள். நீங்கள் மனதை மிகவும் நினைக்கலாம் நான் முயற்சி செய்தேனே, முரளியும் படித்தேன் அதுவும் 10-முறை படித்தேன் பிறகும் கூட (பலவீனம்) வந்து விடுகிறதே! நீங்கள் யோக அக்னியில் அதை எரிக்கவில்லை. ஸ்வாகா செய்ய வில்லை. அக்னியில் போட்ட பிறகு பெயர் விலாசம் இருப்பதில்லை. பிறகு அதையும் கூட (எஞ்சியுள்ளவை) கடலாக இருக்கும் தந்தையிடம் போட்டு விடுங்கள். முடிந்தது அவ்வளவுதான்.

எனவே இந்த ஆண்டு பாப்தாதா ஒவ்வொரு குழந்தைகளையும், வீணானவைகளில் இருந்து முக்தியாகிப் பார்க்க விரும்புகிறார். முக்தி வருடமாகக் கொண்டாடுங்கள். என்னென்ன குறைகள் இருக்கிறதோ அவைகளுக்கு முக்தி கொடுத்து விடுங்கள். எதுவரை முக்தி தரவில்லையோ, முக்தி தாமத்திற்கு பாபாவுடன் செல்ல முடியாது. முக்தி தந்து விடுவீர்களா? முக்தி ஆண்டாக கொண்டாடுவீர்களா? கையை உயர்த்துங்கள். மற்றவர்களைப் பார்க்கிறீர்கள் அல்லவா?

கொண்டாடுவீர்கள்தானே? அவ்வாறு முக்தி ஆண்டு கொண்டாடினால் பாப்தாதா முத்து இரத்தினங்களால் இழைக்கப்பட்ட தாம்பாளத்தில் (தட்டு) நல்வாழ்த்துக்களை அளிக்கிறார். நல்லது.

உங்களுக்கும் நீங்கள் முக்தி தாருங்கள். உங்கள் சகோதர, சகோதரிகளுக்கு துக்கத்திலிருந்து முக்தி தாருங்கள். நமது தந்தை வந்து விட்டார் என்று, பாவம் இவர்கள் வாயில் இருந்து வரட்டுமே! நல்லது. தாதிகள் கேட்கிறார்கள். பாப்தாதாவினுடைய நிகழ்ச்சி என்னவாகும்! உங்களது கேள்வியும் இதுதானே! பாப்தாதா கூறுகிறார், இதுவரை எப்படி நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறதோ அதே விதிமுறையின் கீழ் நடைபெறத்தான் செய்யும். மற்றபடி அவசியம் நேரிடும் பட்சத்தில் தாதிகளின் உள்ளத்து ஆசைகளைப் பூர்த்திச் செய்வோம் ஆனால் அதுவும் அவசியம் ஏற்பட்டால்தான். பாபா வருவது சகஜமான விஷயமாக தாதி புரிந்துள்ளார், பாப்தாதா ஏன் வரக்கூடாது? ஆனால் பாபா வரும் ரதத்தையும் பார்க்க வேண்டும் அல்லவா? 33-வருடமாக இந்த பார்ட்டை ஏற்று இருப்பது கூட பாராட்டுக்குரியதுதான். இவ்வளவு பெரிய சக்தியை தாரணை செய்வது சிறிய காரியமன்று. தாதி என்ன செய்கிறார்? சொல்லட்டுமா? ஏதேனும் விஷயமிருந்தால், உடனே மேலே போய் செய்தியை கேட்டு வா என்று கூறுவார். அப்போது குழந்தை (குல்சார்) கூறுவார், இப்போது பகல்தானே, இரவில் போகலாமே என்று கூறினாலும், இல்லை இல்லை இப்போதே போய்வா என்பார். உடலை விட வேண்டி இருக்கிறதல்லவா? அது செய்தியை பெற்று வருவதற்காக இருந்தாலும் சரி (டிரான்ல்) பாபாவுடைய வருகைக்காகவும் இருந்தாலும் சரி, பாபா உடலில் வருவது என்பது பெரிய விஷயம், ஆனால், செய்தி கொண்டு வருவதில் கூட அசரீரி ஆக, ஒரு இனிமையான ரீதியில் உடலை விட்டுத்தான் போக வேண்டி உள்ளது. எனவே பிறகும் கூட பாப்தாதாவிற்கு தாதிகள் மீது மிகுந்த அன்பும், மரியாதையும் உள்ளது. அன்புக் கயிற்றில் பிணைப்பது ஒன்றாக வருகிறதா? நல்லது.

மீட்டிங்கில் கலந்து கொள்ள வந்து இருக்கும் சகோதர, சகோதரிகளிடம்

மீட்டிங்கிற்காக வந்துள்ளவர்கள் எழுந்திருங்கள். நல்லது மீட்டிங்கில் இந்த விதியின் பிரகாரம் சேவைக்கான திட்டம் தீட்டுங்கள். மேலும் முக்திக்கான, ஆண்டை கொண்டாடுவதில் எளிய விதியைக் கூறவும்.

பிறருக்கு வழி கூறுங்கள் இது நடைபெறுமா? சரி என்று மிக அழகாகத்தான் கூறுகிறீர்கள். ஒவ்வொருவரும் தங்களுக்கு முக்தி கொடுங்கள். பிறரைப் பார்க்கிறீர்கள். உங்கள் பொறுப்பை எடுத்துக் கொள்ள முடியும்தானே! இவ்வாறு ஒவ்வொருவரும் தம்பொறுப்பை எடுத்துக் கொண்டால் அனைத்தும் மாறி விடும். உங்களைப் பின்பற்றக் கூடியவர்கள், தாமாகவே பின்பற்றுவார்கள். நீங்கள் தான் முன்மாதிரி ஆக வேண்டும். நல்லது. ஆக இப்படிப்பட்ட திட்டம் தீட்ட வேண்டும். இந்த மாநாடு நடந்தது, இந்த சொற்பொழிவு நடைபெற்றது, இது மட்டும் கிடையாது, மனதினுடைய ஸ்திதியின் திட்டத்தைக் தீட்டுங்கள்.

நாலாபுறங்களிலுள்ள அனைத்து புனிதமான ஆத்மாக்களுக்கு, சதா பணிவாக இருந்து நிர்மாண காரியத்தை செய்யக் கூடிய பாப்தாதாவின் சமீப ஆத்மாக்களுக்கு, சதா தனது புருஷார்த்தினுடைய விதியை வேகமாகவும் தீவிரமாகவும் செய்யக்கூடிய சம்பன்னமாகும் சிநேக ஆத்மாக்களுக்கு, சதா தனது சேமிப்பு கணக்கை அதிகரிக்கக் கூடிய தீவிர புருஷார்த்தி, தீவிர புத்தியுள்ள குழந்தைகளுக்கு விசால புத்தியின் வாழ்த்துக்கள். மேலும் ஹோலி தினத்தின் அதாவது ஒரே வினாடியில் ஆகக்கூடிய, முற்றுப்புள்ளி வைக்கக் கூடிய குழந்தைகளுக்கு மிகவும் அன்பு நினைவுகளை வழங்குகிறார். உங்களது கணக்கும் கிடைத்தது, அன்பு நினைவுகளின் கடிதம் கிடைத்தது, வாழ்த்து மடல்களும் கிடைக்கப் பெற்றன, உள்ளத்தின் சங்கல்பங்களும் வந்தடைந்தன, உள்ளத்தின் ஆன்மீக உரையாடல்களும் சேர்ந்தன. இவை அனைத்திற்கும் பதிலாக பாப்தாதா பன்மடங்கு அன்பு நினைவுகளை தருகிறார் இதன் கூடவே நமஸ்காரம் செய்கிறார்.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

# 08.10.2002 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஆன்மீக அன்பின் மூர்த்திகளாகி அறிவுரையும், கூடவே ஒத்துழைப்பும் தாருங்கள் (விசேஷமாய் மதுபன் வாசிகளுடன் சந்திப்பு)!

இன்று அன்புக்கடல் பாப்தாதா தனது மாஸ்டர் ஞானக் கடல் குழந்தைகளுடன் சந்தித்து மகிழ வந்துள்ளார். இந்த பரமாத்ம அன்பு குழந்தைகளின் வளர்ப்புக்கான ஆதாரம். எப்படி பரமாத்ம அன்பு பிராமண வாழ்க்கையின் ஆதாரமாக உள்ளதோ அவ்வாறே பிராமண ஒற்றுமைக்கு ஆதாரம் ஆத்மீக அன்பு, அந்த ஆத்மீக அன்பை குழந்தைகளாகிய நீங்கள் மட்டுமே அனுபவம் செய்ய முடியும். இன்று உலகத்தின் பிற ஆத்மாக்கள் இந்த உண்மையான, சுயநலமற்ற ஆத்மீக-பரமாத்ம அன்பிற்காக ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். இவ்வித உண்மையான அன்பு பிராமண ஆத்மாக்களாகிய உங்களைத் தவிர வேறு எவருக்கும் கிடைப்பதில்லை. தாகமுள்ள ஆத்மாக்களின் தாகத்தைத் தீர்க்கக் கூடிய ஆத்மாக்களாகிய நீங்கள் தங்களை ஒவ்வொரு நேரத்திலும் பரமாத்ம அன்பு ஆன்மீக அன்பால் நிறைந்தவர்களாய் அனுபவம் செய்கிறீர்களா? அன்பின் வள்ளல்களாய் சதா தேவதைகளாய் விளங்குகிறீர்களா? போகப் போக ஆத்மீக அன்பு, விருத்தி (உள்ளுணர்வு) திருஷ்டி, பேச்சு, சம்பந்தம், தொடர்பு, செயலில் அனுபவம் செய்கிறீர்களா? எப்படிப்பட்ட ஆத்மாவாக இருந்தாலும் சரி. நீங்கள் பிராமணர்களின் இயற்கையான விருத்தி, பிராமண சுபாவிகளாக ஆகி விட்டீர்களா? ஆக வேண்டியுள்ளதா? ஆகி விட்டீர்களா? தந்தையைப் பின்பற்றுங்கள். தாயைப் பின்பற்றுங்கள். பிராமண பிறவியின் ஆரம்ப காலத்தை நினைவு செய்யுங்கள். விதவிதமான சுபாவம் உடையோர் பாபாவினுடையவர்கள் ஆனார்கள். அன்புக்கடலான தந்தை ஒரே அன்புக்கடலின் சொரூபத்தின் அனாதி

தன்மையின் மூலம் தன்னுடையவராக்கி விட்டார் இல்லையா? நீங்கள் அனைவரின் விதவிதமான தன்மைகளை பார்க்கிறீர்கள் என்றால் உங்களுடைய தன்மையை ஆக்கிக் கொள்ள முடிகிறதா? ஆக உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள். என்னுடைய இயற்கையான சுபாவ தன்மை என்ன? பிறர் எவரது பலஹீனமான சுபாவம் உண்மையில் பிராமண வாழ்க்கையின் இயற்கையான தன்மையாகிய மாஸ்டர் அன்புக் கடலாக இருக்க முடியுமா? அன்பு கல்லையும் நீராக கரைத்து விடும் என்று உலகினர் கூட சொல்லும் போது ஆத்மீக அன்பு, பரமாத்ம அன்பினை எடுத்து வழங்கக் கூடியவர்கள் விதவிதமான தன்மை சுபாவங்களை மாற்ற முடியாதா? முடியுமா? முடியாதா? பின்னால் இருப்பவர்கள் கூறுங்கள்? செய்ய முடியும் என்று நினைக்கிறவர்கள் கையைத் தூக்குங்கள் பார்க்கலாம்! நல்ல உயரமாக! (அனைவரும் கை உயர்த்துகின்றனர்) நல்லது. வாழ்த்துக்கள்! சரி, பிறகு (பாதக) சூழ்நிலைகள் வருகின்றன. அலை வரத்தான் செய்யும், இவை பிராமண வாழ்க்கையின் சாலை ஓரக் காட்சிகள். அக்காட்சிகள் அனைத்தும் ஒன்றுபோல் இருப்பதில்லை, சில அழகாக இருக்கும், சில அசிங்கமாக இருக்கும் ஆனால் கடந்து செல்வது பிரயாணியின் கடமை. மற்றபடி சாலை ஓரக் காட்சிகள் மாறும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆக பாப்தாதா என்ன விரும்புகின்றார். அறிந்து கொள்வதில் எல்லோருமே புத்திசாலிகள் ஆகி விட்டீர்கள் இல்லையா?

இன்று மதுபன்வாசிகளுக்கு விசேஷமான வாய்ப்பு கிடைத்துள்ளது, பொன்னான வாய்ப்பு இல்லையா? நல்லது, இந்த பொன்னான வாய்ப்பின் பலன் என்ன? மிகவும் உற்சாகம், ஆர்வத்துடன் வாய்ப்பினை எடுத்துள்ளீர்கள். கீழே இருப்பவர் கள் கூட மதுபன்வாசிகள் தான். (மதுபன்வாசிகளைத் தவிர பிற அனைவரும் பாண்டவ பவனில் முரளி கேட்டுக் கூட கொண்டிருக்கின்றனர்) ஆனால் இன்று குரூப் -குரூப்பாக சந்திக்கும் வாய்ப்பு அவ்வளவு தான்! அவ்வளவு பேரும் (மொத்த பிராமணர்களையும்) ஒன்றாக, மொத்தமாக என்றால் மிக தூரமாகி விடும் (இடமும் கிடையாது) எனவே சிறு சிறு பாகங்களாக (மதுபன் வாசிகளை) ஏற்பாடாகியுள்ளது. மற்றபடி அனைவருமே மதுபன் வாசிகள் தான்! சென்டர்களில் இருப்போரின் நிரந்தர விலாசம் கூட மதுபன் தானே! ஆக பிராமணர் என்றாலே நிரந்தர விலாசம் மதுபன்! வீடு மதுபன், பிற அனைத்தும் சேவை நிலையங்கள்! எனவே கீழே

அமர்ந்திருப்பவர்கள் இன்று மதுபன் வாசிகள் குழுவிலிருந்து நாம் நீக்கப்பட்டு விட்டோம் என எண்ண வேண்டாம். நீங்கள் அனைவரும் கூட மதுபன் வாசிகள் தான்! பாப்தாதா உங்களை எதிரில் காண விரும்புகிறார், சிறிய குரூப்பில் தான் அவ்வாறு பார்க்க முடியும். இப்போது கூட பாருங்கள், பின்னால் இருப்பவர்கள் தெளிவாகத் தென்படுவதில்லை! அருகில் முன்னால் இருப்பவர் கள் தெளிவாகத் தென்படுகின்றனர் ஆனால் பின்னால் அமர்ந்திருப்பவர்கள் உள்ளத்தால் தூரமில்லை. கீழே இருப்பவர்கள் கூட உள்ளத்தால் தூரமில்லை. தற்போது காலத்திற்கேற்றார் போல் அன்பு மற்றும் விதிகளை சரி சமமாக வைத்துக் கொள்ள வேண்டியுள்ளது ஆனால் அன்பு, சட்டம் இரண்டையும் கலந்து சட்டத்தை எடுக்கக் கூடாது, இதனையே பாப்தாதா விரும்புகின்றனர். சட்டத்தில் கூட அன்பு கலந்த உணர்வை ஏற்படுத்த வேண்டும். எப்படி சாகார சொரூபத்தில் பிரம்மாபாபாவைப் பார்த்தீர்கள்! சட்டத்தின் கூடவே அன்பையும் சேர்த்து தந்ததனால் ஒவ்வொருவருடைய வார்த்தையிலும் பாபா என் மீது தான் அதிகம் அன்பு கொண்டிருந்தார்! என்பது வெளிவருகிறதல்லவா! சட்டத்தைக் கட்டாயமாக எடுங்கள், ஆனால் கூடவே அன்பையும் தாருங்கள். வெறும் சட்டம் மட்டும் கூடாது. வெறும் சட்டத்தையே எடுப்பதால் ஆத்மாக்கள் பலஹீனமாக இருக்கும்போது மனம் உடைந்து போகின்றனர். எப்போது தான் சுயம் ஆத்மீக அன்பின் மூர்த்திகளாக ஆவீர்களோ அப்போது பிறருக்கும் ஆன்மீக அன்பை (ஆத்மீக அன்பு தவிர பிற அன்பு கூடாது) செலுத்த முடியும். ஆத்மீக அன்பு என்றால் ஒவ்வொரு பிரச்சனையையும் தீர்த்து வைப்பதில் உதவிகரமாய் இருத்தல் வேண்டும். வெறும் கல்வி புகட்டல் இல்லை; கல்வி மற்றும் உதவி இரண்டையும் தர வேண்டும் -இதுவே ஆத்மீக அன்பின் மூர்த்தி ஆவதாகும். ஆக, இன்று பாப்தாதா ஒவ்வொரு பிராமண ஆத்மாவிற்கும் உள்நாட்டு-வெளிநாட்டு அனைத்து குழந்தைகளுக்கும் விசேஷமாய் கோடிட்டு காண்பிப்பது -ஆத்மீக அன்பின் மூர்த்திகளாகுங்கள், ஆத்மாக்களின் ஆன்மீக அன்பின் தாகத்தைத் தீர்த்து வைக்கும் வள்ளல் -தேவதை ஆகுங்கள். சரிதானே! நல்லது! (பிறகு பாப்தாதா மதுபன் வாசிகளுடன் உரையாடி, அனைவரையும் பார்வையால் மேலுயர்த்தி அன்பான திருஷ்டியும் வழங்கினார்).

குளோபல் மருத்துவமனை, அபுவாசிகள் மற்றும் பார்ட்டிகளுடன் அனைவரும் தங்களை குஷி நிறைந்தவர்களாக உணர்கிறீர் களா? முழு உலகில் அனைவரிலும் மேலான அதிர்ஷ்டம் யாருடையது? அனைவரிலும் மேலான அதிர்ஷ்டம் என்னுடை யது என ஒவ்வொருவரும் நினைக்கிறீர்களா? குஷியின் அதிர்ஷ்டம் பெற்றவர்கள் என்றால் சதா குஷியோடிருக் கிறீர்களா? அவ்வப்போது தான் குஷி அப்படியில்லையே? பாபா பாக்கியத்தின் நட்சத்திரத்தை பிரகாசிக்கச் செய்து விட்ட பிறகு பிரகாசிக்கும் நட்சத்திரத்தைப் பார்த்து குஷியாய் இருக்கிறீர் களா? உள்ளத்தில் குஷியின் இன்னிசை ஒலிக்கிறதா? எப்பாடலை உள்ளம் பாடுகிறது? ஆஹா! என்னே என் சிரேஷ்ட பாக்கியம்! -இப்பாடலைப் பாடுகிறீர்களா? முழு கல்பத்திலும் உங்களது. பாக்கியத்தின் மகிமை பாடப்படுகிறது. அரை கல்பம் பாக்கியத்தின் பலனை அனுபவிக்கிறீர்கள். அரை கல்பம் உங்கள் பாக்கியத்தின் மகிமையை அனேக ஆத்மாக்கள் பாடிக் கொண்டிருக்கின்றனர். அனைத்திலும் விசேஷமான விஷயம் பாபாவிற்கு முழு உலகில் யாரைப் பிடித்தது? உங்களைத்தான் பிடித்தது, எவ்வளவு ஆத்மாக்களுக்கிடையே உங்களைத்தான் பிடித்தது! யாரை பகவானுக்கே பிடித்தது என்றால் அவர்களுக்கு அதை விட வேறு என்ன வேண்டும்? சதா பாபாவின் கூடவே உங்களது பாக்கியமும் நினைவிலிருக்கட்டும் பகவான் மற்றும் பாக்கியம். முழு கல்பத்தில் தினமும் அன்பு நினைவுகள் கிடைப்பதும், பிரபுவின் அன்பு கிடைப்பதும் வேறு யாருக்கு கிடைக்கிறது? அனைவரிலும் செல்லமானவர்கள் யார்? நீங்கள் தானே! சதா உங்களது பாக்கியத்தை நினைவு செய்வதன் மூலம் வியர்த்தமான விஷயங்கள் ஓடிப் போய் விடும். விரட்ட வேண்டிய தேவையில்லை. தானாகவே விலகி ஓடிப் போய் விடும்.

தற்போது காலத்திற்கு ஏற்றார்போல் சங்கமயுகத்தின் சமயத்தைப் புரிந்து கொண்டு ஒவ்வொரு வினாடியும் தனது பிராப்தியை சிரேஷ்டமாக்கிக் கொண்டிருங்கள். ஒரு வினாடி கூட வீணாகக் கூடாது. ஏனெனில் ஒவ்வொரு வினாடியும் மிகவும் மகத்துவம் வாய்ந்தது. வினாடி போவதில்லை, ஆனால் மிகுந்த நேரம் போகிறது. மேலும் இச்சமயம் மீண்டும் கிடைக்காது. காலத்தின் அறிமுகம் தெரியுமல்லவா? மிக நன்றாக! நினைவிலிருக்கிறதா? இன்று பாருங்கள், உங்களுக்கு விசேஷமாய் நேரம் (பாக்கியம் -பாபாவை

சந்திக்கும்) கிடைத்துள்ளதல்லலா? ஒட்டு மொத்தமாக வந்தீர்களானால் தென்படக்கூட மாட்டீர்கள். இப்போது யார், யார் என்று பார்க்கவாது முடிகிறது. அனைவரும் விசேஷ ஆத்மாக்கள். தங்களது விசேஷ தன்மையை உணர்ந்து காரியத்தில் ஈடுபடுத்துங்கள். நாடகப்பிரகாரம் ஒவ்வொரு பிராமண ஆத்மாவிற்கும் ஏதேனும் விசேஷம் நிச்சயமாகப் கிடைத்துள்ளது. ஒரு விசேஷம் கூட இல்லை என்று எவருமே இருக்க முடியாது. ஆக, உங்களது விசேஷத்தை சதா நினைவில் கொள்ளுங்கள். அதனை சேவையில் ஈடுபடுத்துங்கள். ஒவ்வொருவரின் விசேஷமும், பறக்கும் கலையின் வேகமாக ஆகி விடும். சேவையில் ஈடுபடுத்துங்கள், அபிமானத்தில் வந்து விடக் கூடாது. ஏனெனில், சங்கமயுகத்தில் விசேஷம் என்பது நாடகப்பிரகாரம் பரமாத்மாவின் கொடுப்பினை (வழங்கியது) பரமாத்மா வழங்கியதில் அபிமானம் வராது. எப்படி பிரசாதத்தை எவரும் என்னுடைய பிரசாதம் என்று கூற மாட்டார்கள், பிரபுவின் பிரசாதம் என்றே கூறுவார்கள். பிரசாதம் என்பதை தன் பொருட்டு உபயோகப்படுத்துவதில்லை. பிறருக்கும் அளிக்கப்படுகிறது. மகாதானிகள், பிறருக்கு வழங்குகிறீர்கள். வரதானிகளாகவும் இருக்கிறீர்கள். பாண்டவர்களும் மகாதானிகள், வரதானிகள், சக்திகளும் மகாதானிகள். ஒரு சில மணி நேரத்திற்கு மகாதானிகள் அல்ல! திறந்த பொக்கிஷம்! எனவே பாபாவை போலா பண்டாரி என்கின்றனர். திறந்த கஜானா அல்லவா? ஆத்மாக்களுக்கு வழங்கிக் கொண்டிருங்கள், பிச்சைக்காரர்களின் (கேட்போர்) வரிசை எவ்வளவு நீளமாக உள்ளது. அப்படியானால் உங்களிடம் எவ்வளவு நிறைந்த கஜானா உள்ளது. நிறைந்து வழிகிறதா? விநியோகிப்பதில் சிக்கனம் காட்டுவதில்லையே! பரந்த உள்ளத்தோடு வழங்குங்கள். வீணாக்குவதில் சிக்கனமாய் இருங்கள் ஆனால் வழங்குவதில் திறந்த மனதோடு வாரி வழங்குங்கள்.

அனைவரும் குஷியாய் இருக்கிறீர்களா? அவ்வப்போது கொஞ்சம் இருக்கிறது. சில சமயம் மனச் சோர்வு சில சமயம் குஷி அப்படியில்லையே! தந்தையைப் பின்பற்றுங்கள். பாப்தாதா மூட் ஆப் ஆகிறாரா? அப்படியென்றால் தந்தையைப் பின்பற்றுங்களேன்! பாப்தாதாவிடம் விசேஷமான, பிராமணர்களின் டி.வி. உள்ளது. அதில் அனைவரின் விதவிதமான மனோநிலை தெரிகிறது. எவ்வளவு ஆனந்தம், அதைப் பார்ப்பதில்! சதா மகாதானியாய் இருப்போரின் மூட்

மாறுவதில்லை: ஏனெனில் வள்ளல்களாயிற்றே! கொடுத்துக் கொண்டே இருங்கள். தேவதைகள் ஆவோர் என்றால் சதா கொடுத்துக் கொண்டிருப்பவர்கள். எடுப்பவர்கள் அல்ல, கொடுப்பவர்கள். எத்தனை முறை தேவதைகளாகியுள்ளீர்கள். அனேக முறை ஆகியுள்ளீர்கள். தேவதைகள் என்றால் கொடுக்கக் கூடிய சம்ஸ்காரம் உடையவர்கள். யார் எதை (உங்களுக்கு) கொடுத்தாலும் சரி, நீங்கள் சுகத்தின், சாந்தியின், அன்பின் அலைகளைக் கொடுத்த வண்ணமாய் இருங்கள். உலகத்தினரிடம் இருப்பதே துக்கம், அசாந்தி என்றால் அவர்கள் எதை வழங்க முடியும் ஆனால் உங்களிடம் இருப்பதோ சுகம், சாந்தி அனைவரும் நன்றாயிருக்கிறீர்கள் தானே? நல்லது. சந்தித்தீர்கள், நாங்கள் (காலம் கடந்து) பின்னால் வந்திருக்கிறோம் என்று நினைக்கவில்லையே! விசேஷமாய் வந்துள்ளீர்கள். அருகாமையில் மதுபனில் இருக்கிறீர்கள். மதுபனையே நன்கு வளைத்துக் கொண்டீர்கள், மருத்துவமனையிலுள்ளோர் கூட நன்கு சேவை செய்கின்றனர். சாந்திவனத்திலும் நிறைய பேர் உள்ளனர். பார்ட்டியில் வந்திருப்பவர்கள், செல்லமானவர்கள், மிகக் குறைவாக உள்ளனர். எனவே செல்லமானவர்கள். வெளிநாட்டினர் இல்லையென்றால் அழகே கிடையாது. எனவே ஒவ்வொரு குருப்பிலும் அழகைக் கூட்ட வந்து விடுகின்றனர். நல்லது. ஓம் சாந்தி.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 25.10.2002 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிராமண வாழ்க்கையின் ஆதாரம் தூய்மை என்னும் உயர் நாகரீகம் (ராயல்ட்டி)!

இன்று அன்புக்கடல், தன்னுடைய அன்பான குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். நாலா பக்கங்களிலுமுள்ள அன்பான குழந்தைகள் ஆன்மீக சூட்சுமக் கயிற்றில் பிணைக்கப்பட்டவர்களாக, தங்களுடைய இனிமையான வீட்டிற்கு வந்து சேர்ந்து விட்டனர். எப்படி, குழந்தைகள் அன்பால் ஈர்க்கப்பட்டு வந்து சேர்ந்திருக்கின்றார்களோ, அது போல, தந்தையும் கூட குழந்தைகளின் அன்புக் கயிற்றில் பிணைக்கப்பட்டவராக. குழந்தைகளுக்கு எதிரில் வந்து சேர்ந்து விட்டார். நாலா பக்கங்களிலும் தூரமாக இருக்கும் குழந்தைகளும் கூட அன்பில் ஒன்றி விட்டார்கள். எதிரில் இருக்கும் குழந்தைகளையும் பார்க்கின்றார். தூரமாக இருக்கும் குழந்தைகளையும் கூட பார்த்துப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார். இந்த ஆன்மீக அவிநாஷி அன்பு, பரமாத்ம அன்பு, ஆன்மீக அன்பு, முழு கல்பத்திலும், இப்போது தான் அனுபவம் செய்கின்றீர்கள்.

பாப்தாதா ஒவ்வொரு குழந்தையினுடைய தூய்மை என்னும் உயர் நாகரீகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். பிராமண வாழ்க்கையின் கௌரவமே, தூய்மை தான். ஆகவே ஒவ்வொரு குழந்தையின் தலை மீது ஆன்மீக உயர் நாகரிகத்தின் அடையாளமாகிய தூய்மை ஒளிக்கிரீடத்தின் பிரகாசத்தைப் பார்க்கின்றார். நீங்கள் எல்லோரும் கூட, உங்களுடைய தூய்மையின் கிரீடத்தை, ஆன்மீக உயர் நாகரீகத்தின் ஒளிக்கிரீடத்தைப் பார்க்கின்றீர்களா? பின்னால் இருப்பவர்களும் பார்க்கின்றார்களா? எவ்வளவு அழகிய கிரீடதாரிகளின் சபை இது! பாண்டவர்களே! அப்படி இருக்கிறதல்லவா? கிரீடம் பிரகாசிக்கிறதல்லவா? இப்படிப்பட்ட சபையை பார்க்கின்றீர்கள் அல்லவா? குமாரிகள், சீரிடதாரி குமாரிகள் தானே! குழந்தைகளின் ராயலான குடும்பம் எவ்வளவு சிரேஷ்டமானது என்பதை பாப்தாதா

பார்க்கின்றார். உங்களுடைய அனாதி (சுயமாகவும், தொன்று தொட்டும் விளங்கும்) நாகரீகத்தை நினைவுக்கு கொண்டு வாருங்கள். எப்போது ஆத்மாக்களாகிய நீங்கள், பரந்தாமத்தில் இருக்கின்றீர்களோ. அப்போது ஆத்ம ரூபத்தில் உங்களுடைய ஆன்மீக நாகரீகம் விசேஷமானது. எல்லா ஆத்மாக்களும் ஒளி ரூபத்தில் இருக்கின்றன ஆனால் உங்களுடைய மினுமினுப்பு எல்லா ஆத்மாக்களையும் விட சிரேஷ்டமானது. பரந்தாமம் நினைவுக்கு வருகிறதா? அனாதி (தொன்று தொட்டு) காலம் முதல் உங்களுடைய ஒளிக்கதிர் வீச்சு தனிப்பட்டதாக இருக்கிறது. ஆகாயத்தில் நட்சத்திரங்கள் ஒளி வீசிக் கொண்டிருப்பதைப் பார்த்திருக்கின்றீர்கள் அல்லவா? எல்லாமே ஒளி நட்சத்திரங்கள் தான் ஆனால் அவற்றில் சில நட்சத்திரங்களின் ஒளி விசேஷமானதாகவும், மகிழ்ச்சி அளிக்கக்கூடியதாகவும் இருக்கின்றது. இம்மாதிரியாக எல்லா ஆத்மாக்களுக்கும் நடுவே, ஆத்மாக்களாகிய உங்களுடைய ஒளியின் மினுமினுப்பு, ஆன்மீக கௌரவம் தூய்மையின் ஜொலிப்பு தனிப்பட்டதாக இருக்கின்றது நினைவுக்கு வருகிறதல்லவா? சரி. இப்போது ஆதி காலத்தை நினைவுக்குக் கொண்டு வாருங்கள். இந்த நினைவானது, ஆதி காலத்தில் தேவதை சொரூபத்தில், ஆன்மீக ராயல்ட்டியின். கம்பீரம் எவ்வளவு விசேஷமாக இருந்தது! முழு கல்பத்திலும் தேவதா சொரூபத்தின் ராயல்ட்டி வேறு யாருக்காவது இருந்திருக்கிறதா? (ருஹானி ராயல்ட்டி, பியூரிட்டி கி ராயல்ட்டி) ஆன்மீக நாகரீகம் மற்றும் தூய்மையின் கௌரவம் நினைவிருக்கிறதல்லவா? நினைவு இருக்கிறது தானே! பாண்டவர்களுக்கும் நினைவிருக்கிறது. நினைவு வந்து விட்டதா? பிறகு மத்திய, காலத்திற்கு வாருங்கள். (துவாபரயுகம்) மத்திய காலமான துவாபர யுகம் முதல், பூஜைக்குரிய உங்களுடைய சித்திரம் வரைந்திருக்கின்றார்கள் அல்லவா? அந்த சித்திரங்களில் காணப்படும் கௌரவம், பூஜிப்பதில் கடைப்பிடிக்கப்படும் ஈடுபாடு, துவாபர யுகம் முதல், இது வரையிலும், வேறு எந்த ஒரு சித்திரத்திற்காவது இருக்கின்றதா? அநேகருடைய சித்திரங்கள் வரையப்பட்டிருக்கின்றன ஆனால் விதி பூர்வமான பூஜை, வேறு எந்த ஆத்மாக்களுக்காவது உள்ளதா? தர்ம ஸ்தாபகர்களாக இருந்தாலும் சரி, தேசத்தலைவர்களாயிருந்தாலும் சரி, நடிக, நடிகைகளாக இருந்தாலும் சரி, சித்திரங்கள் எல்லோருக்கும் தயாரித்திருக்கிறார்கள் ஆனால் சித்திரங்களிலுள்ள ராயல்ட்டி (கௌரவம்), பூஜை செய்யும் முறைகளில்

அனுசரிக்கப்படும் ஈடுபாடு, வேறு யாருக்காவது இருப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? டபுள் ஃபாரினர்ஸ், உங்களுக்கும், நடக்கும் பூஜையைப் பார்த்திருக்.கிறீர்களா? நீங்கள் பார்த்திருக்கின்றீர்களா? அல்லது கேள்விப்பட்டதோடு சரியா? இப்படிப்பட்ட விதி பூர்வமான பூஜை சித்திரங்களின் ஜொலிப்பு, ஆன்மீகத்தன்மை, வேறு யாருக்கும் ஏற்படவில்லை. ஏற்படவும் முடியாது ஏன்? காரணம், பியூரிட்டி கி ராயல்ட்டி. பியூரிட்டி கி பர்சனாலிட்டி. நல்லது உங்களுடைய பூஜையைப் பார்த்து விட்டீர்களா? இது வரையிலும் பார்க்கவில்லையானால், பார்த்து வாருங்கள். பிறகு கடைசியான சங்கமயுகத்திற்கு வாருங்கள். சங்கமயுகத்திலும் கூட, முழு உலகத்தில் பார்த்தாலும் தூய்மையின் தனித்தன்மை பிராமண வாழ்க்கைக்கு ஆதாரமாக இருக்கிறது. தூய்மை இல்லையேல், பிரபுவினுடைய (பகவான்) அன்பின் அனுபவமும் இருக்காது. எல்லா பரமாத்ம பிராப்திகளினுடைய அனுபவமும் இருக்காது. பிராமண வாழ்க்கையின் கௌரவமே தூய்மை தான். மேலும் தூய்மை தான் ஆன்மீக உயர் நாகரீகம் (தனித்தன்மை) ஆகவே, ஆதி, அனாதி, ஆதிமத்யம், மற்றும் அந்திமம்(கடைசி) என்ற முழு கல்பத்திலும் இந்த ஆன்மீக ராயல்ட்டி இருந்து கொண்டு தானிருக்கிறது.

ஆதலால், உங்களை நீங்களே பாருங்கள். கண்ணாடி (ஞானக் கண்ணாடி) உங்கள் எல்லோரிடமும் இருக்கிறதல்லவா? கண்ணாடி இருக்கிறதா? பார்க்கத் தெரியுமா? சரி. பாருங்கள் தங்களிடம் பியூரிட்டியின் ராயல்ட்டி எவ்வளவு சதவிகிதம் உள்ளது என்று பார்க்க வேண்டும். தங்களுடைய முகத்தில் தூய்மையின் ஒளி பிரகாசிக்கிறதா? நடத்தையில் தூய்மையின் வெளிப்பாடு தெரிகிறதா? வெளிப்பாடு (ஃபலக்) என்றால் நஷா. நடத்தையில் அந்த நஷா அதாவது ஆன்மீக நஷா தெரிகிறதா? உங்களைப் பார்த்து விட்டீர்களா? பார்ப்பதற்கு எவ்வளவு நேரம் பிடிக்கிறது? ஒரு வினாடி தானே? ஆகவே ஒவ்வொருவரும் தங்களைப் பார்த்து விட்டீர்கள்.

குமாரிகளுடன் நேர்முகம்: விசேஷத் தன்மையும், ஆன்மீக நஷாவும் இருக்கிறதா? நல்லது. எல்லோரும் எழுந்து நில்லுங்கள். குமாரிகள் சிகப்பு பட்டை அணிந்து அமர்ந்திருக்கிறார்கள். அதில் ஏக் விரத்தா என்று எழுதப்பட்டிருக்கின்றது அழகாக இருக்கிறதல்லவா? ஏக் விரத்தா

என்பதன் அர்த்தம் தூய்மையின் உயர் நாகரீகத்தில் இருக்கிறேன். அப்படியானால் ஏக் விரத்தா என்ற பாடத்தை பக்காவாக செய்து விட்டீர்கள்! அங்கு போன பிறகு கச்சாவாக ஆகி விடக்கூடாது. சரி.

குமார் குரூப்: எழுந்திருங்கள். குமாரர்களின் குரூப்பும் நன்றாக இருக்கின்றது. குமாரர்கள் உள்ளத்தில் உறுதிமொழி என்னும் பட்டியை அணிந்து கொண்டு விட்டீர்களா? இவர்களோ (குமாரிகள்) வெளியிலும் அணிந்திருக்கிறார்கள். உறுதிமொழிப் பட்டியைக் கட்டிக் கொண்டு விட்டீர்களா? சதா அதாவது சதா என்றால் நிரந்தரமாக பியூரிட்டி பர்சனாலிட்டியில் இருக்கின்ற குமாரர்கள். அப்படித் தானே இருக்கின்றீர்கள்? ஆம் என்று சொல்லுங்கள். இல்லை என்று கூறுகின்றீர்களா? ஆம் என்று கூறுகின்றீர்களா? அல்லது அங்கு சென்ற பிறகு கொஞ்சம் டீலா ஆகி விட்டது என்று கடிதம் எழுதுவீர்களா? அப்படிச் செய்யக் கூடாது. எதுவரை பிராமண வாழ்க்கையில் இருக்க வேண்டுமோ, அது வரையிலும் சம்பூரண தூய்மையில் (பவித்திரத்தா) இருக்கத்தான் வேண்டும். இப்படி உறுதிமொழி இருக்கிறதல்லவா? உறுதிமொழி பக்காவாக இருக்கிறது என்றால் ஒரு கை அசைத்துக் காண்பியுங்கள். டி.வி.யில் உங்களுடைய போட்டோ எடுக்கப்படுகிறது. யார் டீலாவாக (தவறுபவர்கள்) ஆகி விடுகிறார்களோ, அவர்களுக்கு இந்த போட்டோ அனுப்பப்படும். ஆதலால் டீலா ஆகக்கூடாது. பக்காவாக இருக்க வேண்டும். பக்காவாக இருக்கிறார்கள். பாண்டவர்கள் பக்கா. பாண்டவர்கள் அப்படி பக்காவாகத் தான் இருக்கின்றீர்கள். மிக நல்லது.

பியூரிட்டி (தூய்மை)யின் விருத்தி (அஸ்திவாரம்) சுப பாவனை, சுப அவிலாஷை. யார், எப்படி இருந்தாலும் சரி, தூய்மையான விருத்தியில் அதாவது சுப பாவனையில் சுப அபிலாஷையில் இருக்க வேண்டும். மேலும் பவித்திர திருஷ்டி அதாவது சதா ஒவ்வொருவரையும் ஆத்மீக ரூபத்தில் பார்த்தல் மற்றும் பரிஷ்தா ரூபத்தில் பார்த்தல். விருத்தி, திருஷ்டி மூன்றாவது கிருத்தி (கர்மம்). கர்மத்திலும் கூட சதா ஒவ்வொரு ஆத்மாவுக்கும் சுகம் கொடுத்தல். சுகம் பெறுதல். இது தான் தூய்மையின் அடையாளம். விருத்தி, திருஷ்டி, கிருத்தி என்ற இந்த மூன்றிலும் தாரணை இருக்க வேண்டும். யார், எது வேண்டுமானாலும் செய்யட்டும். துக்கமே கொடுத்தாலும் சரி, நிந்தனை செய்தாலும் சரி,

நம்முடைய கடமை எது? துக்கம் கொடுப்பவரைப் பின்பற்றுவதா? பாப்தாதாவைப் பின்பற்றுவதா? ஃபாலோ ஃபாதர் தானே! பிரம்மாபாபா துக்கம் கொடுத்தாரா. சுகம் கொடுத்தாரா? சுகம் கொடுத்தாரல்லவா? ஆகவே மாஸ்டர் பிரம்மாவாகிய நீங்கள் அதாவது பிராமண ஆத்மாக்களாகிய நீங்கள் என்ன செய்ய வேண்டும்? துக்கம் கொடுப்பீர்களா? கொடுக்க மாட்டீர்களா? ரொம்பவும் துக்கம் கொடுத்தால், ரொம்பவும் திட்டினால், ரொம்பவும் நிந்தித்தால், கொஞ்சம் கஷ்டமாக உணருவீர்களா? அல்லது இல்லையா? குமாரிகள் கஷ்டமாக உணருவீர்களா? கொஞ்சமாக! ஆகவே ஃபாலோ ஃபாதர். என்னுடைய கடமை என்ன? என்று யோசியுங்கள். மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பார்த்து, உங்களுடைய கடமையை மறந்து விடாதீர்கள். மற்றவர்கள் குற்றம் சுமத்துகிறார்கள் என்றால், நீங்கள் சகன்ஷில் தேவி சகன்ஷீல் தேவதா ஆகி விடுங்கள். உங்களுடைய சகன் ஷீலத்தா (பொறுமை)வைப் பார்த்து, கட்டிப்பிடிப்பார்கள். பொறுமையைக் கடைப்பிடிப்பதில் அவ்வளவு சக்தி இருக்கிறது ஆனால் கொஞ்ச காலத்திற்கு பொறுமையைக் கடைப்பிடிக்கத்தான் வேண்டும். ஆகவே நீங்கள் சகன் ஷீலத்தா தேவி மற்றும் சகன் ஷீலத்தா தேவதா அப்படித்தானே! சரிதானா! சதா இதே நினைவில் இருங்கள். நான் சகன் ஷீலத்தா தேவதா, நான் சகன் ஷீலத்தா தேவியாக இருக்கிறேன். தேவதா என்றால் கொடுக்கக் கூடிய வள்ளல். யாராவது திட்டுகிறார்கள், மரியாதை கொடுப்பதில்லை என்றால் குப்பை தானே! நல்ல பொருளா? அப்படியானால் அதை ஏன் ஏற்றுக் கொள்கிறீர்கள். குப்பையை தங்களிடம் எடுத்து வைத்துக் கொள்வார்களா? குப்பையை உங்களிடம் கொடுத்தால் அதைப் பெற்றுக் கொள்வீர்களா? மாட்டீர்கள் அல்லவா? ஆகவே, மரியாதை கொடுப்பதில்லை, நிந்தனை செய்கிறார்கள். திட்டுகிறார்கள். உங்களுக்குத் தொந்தரவு கொடுக்கிறார்கள் என்றால் இது என்ன? இவை நல்ல பொருட்களா? இல்லை என்றால் ஏன் ஏற்றுக் கொள்கிறீர்கள். பிறகு ஏற்றுக் கொண்டிருக்கக் கூடாது என்று நினைக்கிறீர்கள். இனி மேல் ஏற்றுக் கொள்ளக்கூடாது. ஏற்பது என்றால் மனதில் தாரணை செய்வது கஷ்டமாக உணர்வது. ஆகவே உங்களுடைய அநாதி காலம், ஆதி காலம், மத்ய காலம், சங்கம காலம், அதாவது முழு கல்பத்திலுமிருந்த தூய்மையின் உயர் நாகரீகம், மற்றும் தனித்தன்மையை (பர்சனாலட்டி) நினைத்துப் பாருங்கள். யார், என்ன செய்தாலும், உங்களுடைய பர்சனாலிட்டியை அபகரிக்க முடியாது.

இப்படிப்பட்ட ஆன்மீக நஷா இருக்கிறதல்லவா? டபுள் ஃபாரினர்ஸ்களுக்கு, டபுள் நஷா உள்ளது. எல்லா விஷயத்திலும் டபுள் நஷா. பியூரிட்டியிலும் டபுள் நஷா. சகன் ஷீலத்தா தேவி, தேவதா ஆவதிலும் கூட டபுள் நஷா. இதில் அமரராக (நிரந்தரமாக) இருக்க வேண்டும். அமர்பவ என்ற வரதானத்தை ஒருபோதும் மறந்து விடக் கூடாது.

நல்லது. யார் பிரவிருத்தியில் (குடும்பம்) இருக்கிறார்களோ, அதாவது யுகல் மற்றும் தனியாக இருந்தாலும் குடும்ப வாழ்க்கையில் இருப்பவர்கள், எழுந்திருங்கள். எழுந்து நில்லுங்கள். யுகல் அதிகமாக இருக்கிறார்கள். குமார், குமாரிகள் குறைவாக வந்திருக்கிறார்கள். குமாரர்களை விட யுகல் (குடும்பத்தினர்) அதிகம் பேர் வந்திருக்கிறார்கள். யுகல் மூர்த்தியாக இருக்கின்ற பாப்தாதா, எதற்காக உங்கள் எல்லோரையும் குடும்ப வாழ்க்கையில் (பிரவிருத்தியில்) இருப்பதற்கான டைரக்ஷன் (வழிகாட்டுதல்) கொடுத்திருக்கின்றார்? என்ன காரணத்திற்காக, உங்களை யுகலாக இருக்கலாம் என்று அனுமதி அளித்திருக்கின்றார்? குடும்பத்தில் இருக்க வேண்டுமென்று ஏன் அனுமதியளித்திருக்கிறார் என்பதை அறிவீர்களா? ஏனென்றால் மகா மண்டலலேஷ்வர்கள் இருக்கின்றார்களே, அவர்களை உங்கள் பாதத்தில் தலை வணங்கச் செய்ய வேண்டும் என்பதற்காக. இவ்வளவு தைரியம் இருக்கிறதா? ஏனென்றால், குடும்பத்தில் சேர்ந்திருந்து, பவித்திரமாக இருப்பது கடினம் என்று நினைக்கிறார்கள் ஆனால் நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? கஷ்டமா? எளிதா? (ரெம்பவும் எளிது) பக்கா தானே? சில சமயம் எளிதாக, சில சமயம் சோம்பல் இப்படி இருக்கிறதா? ஆதலால் பாப்தாதா, டிராமாபடி உங்கள் அனைவரையும், உலகின் முன்பாக விஷ்வத்தின் முன்பாக, உதாரணமாக ஆக்கியிருக்கின்றார். சவால் விடுவதற்காக. பிரவிருத்தியில் (குடும்பத்தில்) இருந்த போதிலும், அதிலிருந்து விடுபட்டிருப்பவர்களாக, அபவித்திரத்திலிருந்து விடுபட்டு இருக்க முடிகிறது. ஆகவே சவால் விடுபவர்கள்தானே? எல்லோருமே சாவல் விடுபவர்கள் தான். கொஞ்சம் பயமாக இல்லை தானே? சவால் விடலாம், ஆனால் என்ன நடக்குமோ! உலகினருக்கு சவால் விடத்தான் வேண்டும். ஏனெனில் இது புது விஷயம். அதாவது குடும்பத்தில் கூடவே இருந்தாலும், சொப்பனத்திலும் கூட அபவித்திரத்தா (தூய்மை யற்ற) சங்கல்பம்

வரக்கூடாது. இது தான் சங்கமயுக பிராமண வாழ்க்கையின் விசேஷம். இம்மாதிரி விஷ்வத்தின் ஷோகேஸ் (கண்ணாடி அலமாரியில் இருக்கும் காட்சி பொருட்கள்) மாதிரியாக, உதாரணமாக இருக்கின்றீர்கள். உங்களைப் பார்த்து, நாமும் கூட அப்படி இருக்க முடியும் என்று மற்றவர்களுக்கும் தைரியம் வரும். சரி தானே! சக்திகள் நன்றாக இருக்கின்றீர்களா? பக்கா தானே! கச்சா பக்கா இல்லையல்லவா? பக்கா! உங்களைப் பார்த்து பாப்தாதாவுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. வாழ்த்துக்கள். பாருங்கள். எவ்வளவு பேர் இருக்கிறார்கள்! மிகவும் நல்லது.

அடுத்து டீச்சர்கள் இருக்கிறார்கள். டீச்சர்கள் இல்லையென்றால் கதி இல்லை. டீச்சர்கள் எழுந்திருங்கள். நல்லது. பாண்டவர்களிலும் நல்ல நல்ல பாண்டவர்கள் இருக்கிறார்கள். வாஹ்! டீச்சருடைய விசேஷம். ஒவ்வொரு டீச்சருடைய தோற்றத்திலும் பரிஷ்தா சொரூபம் தெரிய வேண்டும். இப்படிப்பட்ட டீச்சர்கள் தானே! பரிஷ்தாக்களாகிய உங்களைப் பார்த்து மற்றவர்களும் கூட பரிஷ்தா ஆக வேண்டும். எவ்வளவு டீச்சர்கள் வந்திருக்கின்றார்கள். பாருங்கள். ஃபாரினிலிருந்து நிறைய டீச்சர்கள் வந்திருக்கின்றனர். ஃபாரின் குரூப்பில் டீச்சர்கள் அதிகம் இருக்கிறார்கள் ஆனால் கொஞ்சப் பேர் தான் வந்திருக்கிறார்கள். இவர்களில் யார் வரவில்லையோ, அவர்களையும் பாப்தாதா, நினைவு செய்கின்றார். நல்லது தான். இப்போது டீச்சர்கள் ஒன்று சேர்ந்து, தங்களுடைய நடத்தை மற்றும் முகத் தோற்றத்தின் மூலம் பாபாவை எப்படி பிரத்யக்ஷம் செய்வது என்பதைப் பற்றி பிளான் தயார் செய்யுங்கள். உலகினர் பரமாத்மா சர்வ வியாபி என்று நினைக்கின்றனர் ஆனால் நீங்கள் அப்படி இல்லை என்று கூறுகின்றீர்கள் ஆனால் பாப்தாதா என்ன கூறுகின்றார் என்றால் இந்த நேரப்படி ஒவ்வொரு டீச்சரிலும் பாபா பிரத்யக்ஷமாகத் தெரிகிறார் என்றால், சர்வ வியாபியாகத் தெரிவாரல்லவா? யாரைப் பார்த்தாலும், அவரில் பாபா தெரியட்டும். ஆத்மா, பரமாத்மாவின் பிரத்யக்ஷத்தில் மறைவாக இருக்கட்டும் பரமாத்மா மட்டுமே தென்படட்டும். இப்படி ஆக முடியும் அல்லவா? ஆக முடியுமா? சரி, நல்லது இதற்கு எந்த தேதி குறிக்கலாம். தேதி நிச்சயிக்கப்பட வேண்டும். அல்லவா! எந்த தேதி குறிப்பிடலாம்? எவ்வளவு கால அவகாசம் வேண்டும்? (இப்போதிருந்தே, கணக்கில் வைத்துக் கொள்ளலாம்) ஆரம்பிக்கலாம்,

நல்ல தைரியம் இருக்கிறது. எவ்வளவு காலம் வேண்டும்? 2002-நடந்து கொண்டிருக்கிறது. இனி இது எது வரை? டீச்சர்களுக்குப் போதும். தந்தையினுள்ளே தான் அடங்கி இருப்பது தெரிய வேண்டும். அவ்வளவு தான். என் மூலமாக பாபா காட்சியளிக்கட்டும். பிளான் தயார் செய்வீர்கள் அல்லவா? டபுள் விதேஷிகள் மீட்டிங்'ல் (கூடிப் பேசுவதில்) கெட்டிக்காரர்கள். இப்போது இந்த மீட்டிங் நடக்க வேண்டும். மீட்டிங் நடத்தாமல் போகக் கூடாது. அதாவது எப்படி நம் ஒவ்வொருவரிலும் தந்தை காட்சியளிப்பார். இப்போது பிரம்மா குமாரிகளாகத் தெரிகிறார்கள். பிரம்மா குமாரிகள் நல்லவர்கள் சரி. இவர்களுடைய தந்தை எவ்வளவு நல்லவராக இருக்கின்றார் என்பது தெரிய வேண்டும். அப்போது தான் விஷ்வ பரிவர்த்தனை உண்டாகும் அல்லவா? ஆதலால் டபுள் விதேஷி இந்த பிளான்'ஐ (திட்டம்) நடைமுறைப்படுத்துவதை ஆரம்பிப்பார்கள் அல்லவா? செய்வீர்களா? பக்கா? நல்லது. உங்களுடைய தாதி இருக்கிறாரல்லவா, அவருடைய விருப்பம் பூர்த்தியாகி விடும். சரி தானா? நல்லது.

**அதர்குமார் மற்றும் மாதாக்கள், தனியாக (சிங்கிள்) இருப்பவர்கள்:** எழுந்திருங்கள். நல்லது நீங்களும் தனித்தனியானவர் அல்ல. உங்களுடைய யுகல் மிகவும் பவர்புல் ஏனென்றால் பாப்தாதா எல்லாக் குழந்தைகளுக்கும் என்ன கூறுகின்றார். நீங்கள் எல்லோரும் (ஆப்/அவுர்/பாப்) நீங்கள் மற்றும் தந்தை கம்பைண்டு சொரூபம்! கம்பைண்டாக (இணைந்து) இருக்கிறீர்கள் என்றால், தனியாக இருப்பவர் என்று சொல்ல முடியுமா? லௌகிக வாழ்க்கை வேறு விஷயம் ஆனால் பிராமண வாழ்க்கையில், தந்தையுடன் இணைந்து இருக்கின்றீர்கள். இதை யாராலும் பிரிக்க முடியாது. இப்படி கம்பைண்டாக இருக்கிறீர்கள் அல்லவா? அல்லது தனியாக இருக்கிறீர்களா? சதா, தந்தை ஒவ்வொரு காரியத்திலும் சகயோகியாக இருக்கின்றார். துணையாக இருக்கின்றார். இந்த நஷா இருக்கிறதல்லவா? ஒருபோதும் தன்னை, தனியாக இருக்கிறேன் என்று கருதுவதில்லையல்லவா? சிற்சில சமயம் அப்படி நினைக்கிறார்களா? இல்லை. முதலில் பாப்தாதா உங்கள் எல்லோருக்கும் துணையாக இருக்கின்றார். மேலும் அவிநாஷி துணையாக இருப்பவர் பாபா என்று சொன்னால் ஆஜர் ஐயா! (ஹுஜூர்) இதோ சதா ஆஜராக இருக்கிறேன் என்று கூறுகின்றார். ஆதலால் மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள் அல்லவா?

கவலை ஒன்றும் இல்லை தானே! கவலை இருக்கிறதா? இருக்கிறதா, இல்லையா? கவலை இல்லையல்லவா? மகழ்ச்சியோடு இருக்கிறீர்கள் அல்லவா? எப்போதுமே மகிழ்ச்சி. நாம் தந்தையோடு தந்தை நம்மோடு தந்தை உங்கள் ஒவ்வொருவருடைய சேவையிலும் உதவியாக இருப்பவர். ஆதலால் இதே ஆன்மீக நஷாவில் சதா இருக்க வேண்டும். நாம் கம்பைண்டாக இருக்கிறோம். கம்பைண்டு தானே! மிக நல்ல ஆன்மீக நஷாவில் இருப்பவர்கள். நஷா இருக்கிறதல்லவா? பாப்தாதா அதிகப் பிரியமானவர்களிலும், பிரியமானவர்.

சிறு குழந்தைகளுடன் நேர்முகம்: குழந்தைகள் பாப்தாதாவுக்கு ஸ்பெஷல் கார்டு அனுப்பியிருந்தார்கள். கார்டு அனுப்பினீர்கள் அல்லவா? நீங்கள் எல்லோரும் அனுப்பிய கார்டு கிடைத்தது. குழந்தைகளே, கேட்டீர்களா? நல்ல நல்ல கார்டுகள். (கர்ர்டு எல்லோருக்கும் காட்டப்பட்டது) மிக நன்றாக கார்டு எழுதியிருக்கிறார்கள். பார்த்தீர்களா. குழந்தைகளினுடைய விசேஷத்தை. குழந்தைகளுக்கு அன்பு அதிகமாக இருக்கிறது. ஆகவே தான் இங்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள். இது தான் குழந்தைகளுக்கு, பாபாவுடனான அன்பை அதிகரித்துக் கொண்டேயிருக்கும். நல்லது.

முதல் முறையாக, நிறைய பேர் வந்திருக்கிறார்கள். நன்றாக கை உயர்த்துங்கள். முதல் முறையாக வந்திருப்பவர்கள். முதலாவதாக முன்னேறிச் செல்ல வேண்டும். கடைசியில் வந்தாலும் வேகமாக முன்னேறிச் செல்பவர்களாக ஆக வேண்டும். அப்படித் தானே? வேகமாக முன்னேறுவீர்கள் அல்லவா? முதல் நம்பரில் வர வேண்டும். முழு பிராமண பரிவாரமும், முதன் முறையாக வந்திருக்கும் உங்கள் எல்லோருக்கும் மிக மிக மிக நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார்கள். நல்லது.

மற்றபடி வந்திருக்கும் பாரதவாசிகள் எல்லோரும் எழுந்திருங்கள். பாரதவாசிகள், பாரதம் மகானாக இருப்பது போல, பாரத வாசிகளும் மகானாக இருக்கிறார்கள். பாரதத்திடம் பாபாவுக்கு பிரியமுள்ளது. ஆகவே தான் பாரதத்தில் வந்திருக்கிறாரல்லவா? வெளிநாட்டில் வரவில்லை பாரதத்தில் தான் வந்திருக்கின்றார் ஆனால் வெளி நாட்டினரும் விழிப்படைவதற்கு நிமித்தமானவர்கள் ஆவார்கள்.

இவ்வாறாக பாரத் வாசிகள் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்வதில் கெட்டிக்காரர்கள். பாருங்கள். டபுள் விதேஷிகளுக்காக நிச்சயிக்கப்பட்ட சமயத்திலும் பாரதவாசிகள் வந்திருக்கின்றனர். ஆதலால் இனிமேல், பாரதவாசிகளுக்கு நிச்சயிக்கப்பட்ட சமயத்தில் விதேஷிகள் (வெளிநாட்டினர்) வருவதற்கு அனுமதி உண்டு சரிதானா? வரவேற்பு உண்டு. ஆதலால் டபுள் விதேஷிகளும் கெட்டிக்காரர்களே. போனதுமே, வர இருப்பவர்களை கணக்கிட ஆரம்பித்து விடுவார்கள். மதுபனிடம் அன்பு இருக்கிறதல்லவா? மதுபன் அல்லது பாரதம் இரண்டோடும் அன்பு இருக்கிறது ஏன்? ஏனெனில் உண்மையில் நீங்கள் எல்லோரும் பாரத் வாசிகளாகவே இருந்தீர்கள். சேவைக்காகவே, இப்போது அங்கு சென்றிருக்கின்றீர்கள். ஒருக்கால் பாரதவாசிகளாக இருக்கவில்லையென்றால், பாரத கலாச்சாரத்தில் அன்பு இருக்காது. இதிலிருந்து, நீங்கள் பாரதவாசிகள் தான் என்பது உறுதியாகிறது. சேவை நிமித்தம் விதேஷிகள். விஷ்வ சேவை தானே! ஆகவே விஷ்வ சேவையின் காரணமாக, தனித்தனியான இடங்களில் சென்றிருக்கிறீர்கள். மொழி எத்தனையோ விதமாக இருக்கிறது! பாரதத்திலிருந்து மொழி கற்றுக் கொண்டு தான் சேவைக்குச் செல்ல வேண்டுமல்லவா? ஆகவே தான் உங்களுக்கு சேவைக்காக ஜென்மம் கிடைத்துள்ளது. ஆதி சத்யுகத்திலும் கூட பாரதத்தில் நீங்கள் இருந்தீர்கள். இடையிலும் பாரதத்தைச் சேர்ந்தவர்களாகவே இருந்தீர்கள். இப்போது கொஞ்ச காலத்திற்காக, சேவைக்காக அங்கு சென்றிருக்கிறீர்கள். நாம் பாரதத்தைச் சேர்ந்தவர்கள் என்ற நஷா இருக்கிறதல்லவா? இந்த பாரதம் உங்களுடைய பீச். நாங்கள் பாரதத்தைச் சேர்ந்தவர்கள் என்ற குஷி இருக்கிறதல்லவா? நீங்கள் பாரதவாசிகளாக இருக்கிறீர்கள், இருப்பீர்கள். ஒவ்வொரு கல்பத்திலும் இருப்பீர்கள் நல்லது.

**(பீஸ் ஆஃப் மைண்டு பிட்ரீட்) மன அமைதிக்கான சந்திப்பு நிகழ்ச்சியில் பங்கு கொள்ள வந்திருக்கும். விருந்தினர்களோடு:** நல்லது. நீங்கள் அனைவரும் விருந்தினர்கள் அல்ல. விருந்தோம்புவர்கள் (ஹோஸ்ட்) குழந்தைகள் எல்லோருமே விரும்தோம்புவர்கள் தான். விருந்தினர் அல்ல. அடையாளத்திற்காக விருந்தினர் என்கிறார்களே தவிர, நீங்கள் விருந்தோம்புபவர்கள் நன்றாக இருக்கிறதா? மதுபன் நன்றாக இருக்கிறதா? இனி மற்றவர்களுக்கும் அழைப்பிதழ் அனுப்பி உங்களைச்

சேர்ந்தவர்களாகச் செய்ய வேண்டும். நாங்கள் பரமாத்மாவின் செய்தி அளிக்கக்கூடிய செய்தியாளர்கள் என்று எப்போதுமே நினைக்க வேண்டும். நல்லது. சதா தந்தையின் நினைவு மற்றும் சேவை செய்து கொண்டே இருக்க வேண்டும். நல்லது.

பாண்டவ பவனில், நிறைய பேர் அமர்ந்திருக்கிறார்கள். ஞான சரோவர். சாந்திவன் ஆகிய எல்லா இடங்களிலும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். சயின்ஸ் மூலமாக கிடைத்த பயனை உபயோகித்து பலனடைந்து கொண்டிருக்கிறார்கள். சயின்ஸ் உங்களுக்காகவேதான் தயாராக்கப்பட்டது. எப்போது ஸ்தாபனைக்கான பார்ட் ஆரம்பமானதோ, அதற்கு சிறிது காலம் முன்பு தான் இந்த விஞ்ஞானம் கண்டுபிடிக்கப்பட்டு தீவிர கதியில் சென்று கொண்டிருக்கிறது. இதனை ஜனங்கள் லாபத்திற்காகவோ, நஷ்டத்திற்காகவோ பயன்படுத்தட்டும் ஆனால் நீங்கள் லாபகரமாக இதனைப் பயன்படுத்துகிறீர்கள். ஆதலால் பாப்தாதா விஞ்ஞான சாதனங்களைக் கொடுத்தவர்களுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றார். கீழேயும் கூட சுகமாக கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். வெளி நாட்டில் கூட ஒரு சிலர் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மோகினிபகன் (நியுயார்க்) மற்றும் சந்துரு பகன் கூட கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நல்லது தானே. வியாதியால் பாதிக்கப்பட்டிருந்தாலும், சேவை இருந்தாலும், தங்களுடைய சக்தி மூலம் எல்லாவற்றையும் கடந்து வெற்றியடைந்து கொண்டிருக்கிறார்கள். இந்த வியாதியும் கூட ஒரு பேப்பர் (சோதனைத்தாள்). எப்படி மற்ற பரீக்ஷையில் பாஸாகிறார்களோ, அதுபோல இந்த பேப்பரிலும் பாஸாகி விடுகிறார்கள். மேலும் எளிதாகவும் பாஸாகி விடுகிறார்கள்.

மதுபன் வாசிகள் யாரெல்லாம் இருக்கின்றார்களோ அவர்களெல்லாம், அதாவது சாந்திவன், ஹாஸ்பிட்டல், அபுநிவாசிகள், ஞானசரோவர் நிவாசிகள். சங்கம் நிவாசிகள் அனைவரும் மதுபன் நிவாசிகள் என்று சொல்லப்படுகிறார்கள். நல்லது. இதுவும் கூட நல்ல வருமானம் தான். ஏனெனில் மற்றவர்களுக்கு வாய்ப்பு கொடுத்ததன் மூலம் இவர்கள் தங்களுடைய புண்ணியக்கணக்கில் சேமித்திருக்கிறார்கள். சுகமாக அமர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். யாரெல்லாம் கீழே கேட்டுக் கொண்டிருக்கிறார்களோ, அவர்களுக்கு பாப்தாதா முதலில் யாத்-பியார்

(அன்பு நினைவுகள்) அளிக்கின்றார். அடுத்து, யாரெல்லாம் வெளி நாட்டில் கேட்டுக் கொண்டிருக்கிறார்களோ, தூரத்தில் இருந்தவாறு பாரதத்திலானாலும் சரி, வெளிநாட்டினாலும் சரி, அவர்கள் எல்லோரையும் நினைவு செய்கின்றார். மற்றபடி எல்லா குழந்தைகளுக்கும், யாரெல்லாம் கார்டு அனுப்பியிருக்கிறார்களோ, கடிதம் எழுதி அனுப்பியிருக்கிறார்களோ, அவர்கள் எல்லோருடைய கடிதம், கார்டு, மனதிலுள்ள சமாச்சாரம், சேவை சமாச்சாரம், தைரியத்தைப் பற்றிய சமாச்சாரம், எல்லாமே பாப்தாதாவிடம் வந்து சேர்ந்து விட்டது. இதற்கு கைமாறாக பாப்தாதா ஒவ்வொரு குழந்தைக்கும், பெயர் சகிதமாக, உள்ளன்புடன் கூடிய யாத் பியார் அளிக்கின்றார். மிக அன்புடன் கடிதம் எழுதுகிறார்கள். இதற்காக எவ்வளவு செலவு செய்கிறார்கள்! கார்டு எவ்வளவு அழகழகாக அனுப்புகிறார்கள் ஆனால் பாப்தாதா செலவைப் பார்ப்பதில்லை. அவர்களுடைய அன்பைப் பார்க்கின்றார். அன்புக்கு முன் வேறு பெரிய பொருள் எதுவுமில்லை. நல்லது.

ஹாஸ்பிடல் டிரஸ்டிகளும் வந்திருக்கின்றனர்: நல்லது. இந்த ஹாஸ்பிடலும் உலகில் விளம்பரம் ஆவதற்கான ஒரு நல்ல சாதனம். ஏனெனில் இதில் இரண்டு மடங்கு லாபம் கிடைத்து விடுகிறது. ஒன்று சரீரத்திற்கும், இன்னொன்று ஆத்மாவுக்கும் லாபம் கிடைக்கிறது. டபுள் லாபம். ஆதலால் பாப்தாதா ஹாஸ்பிடல் டிரஸ்டிகள், சேவாதாரிகள் எல்லோருக்கும் இந்த விசேஷ சேவைக்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். இந்த ஹாஸ்பிடல் பெயளரளவுக்குத்தான் ஆனால் ஆத்மாக்கள் பாபாவுடன் சந்திப்பதற்கான சாதனம். ஹாஸ்பிடல் பெயரைச் சொல்லி எளிதாக வந்து விடுகிறார்கள். எல்லாம் நன்றாக நடந்து கொண்டிருக்கிறதல்லவா? எங்கெல்லாம் ஹாஸ்பிடல் இருக்கிறதோ, அவை நன்றாகவே நடந்து கொண்டிருக்கிறது. பாம்பேயில் நன்றாக நடக்கிறது. குளோபல் ஹர்ஸ்பிடல் பெயர் பிரசித்தமாகி விட்டது. மிக நல்லது. வாழ்த்துக்கள்.

வெளி நாட்டின் பழைய சகோதர சகோதரிகளுடன் சந்திப்பு: நல்லது. ஆதிரத்தினங்கள் அல்லவா? வெளிநாட்டு சேவையின் ஆதி ரத்தினங்கள், மிக நல்ல சேவாதாரிகள். இவர்களைப் பார்த்து பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது. களைப்படையாதவர்கள். மேலும்

முன்னேறிக் கொண்டிருப்பவர்கள். 25-ஆண்டுகள் ஆனவர்கள் நிறைய பேர் அமர்ந்திருக்கிறார்கள். கையை நீளமாக உயர்த்துங்கள். நல்லது. அமர் பவ வரதானிகள். ஜன்மம் ஆரம்ப முதலே அமர் பவ வரதானம் கிடைத்திருக்கிறது. அமர் (நிரந்தரமாக தொடர்ந்து) இருந்து கொண்டிருக்கிறார்கள். அமரராக இருப்பார்கள். நல்லது. எல்லோரும் சந்தித்து விட்டார்களா? இன்னும் பாக்கி யாராவது இருக்கிறார்களா? சிந்தி குரூப் பாக்கி இருக்கிறார்கள். சிந்திகள் இப்போது பிராமண குரூப் ஆகி விட்டார்கள். நீங்கள் உங்களை சிந்தி என்று நினைக்கிறீர்களா? அல்லது பிராமணன் என்று நினைக்கிறீர்களா? என்ன நினைக்கிறீர்கள்? எங்கிருந்து பிரம்மாபாபா வந்தாரோ அந்த இடத்தைச் சேர்ந்தவர்கள் என்ற நஷாவும் கூட இருக்கிறது. நல்லது தான் ஆனால் இப்போது பிராமண பரிவாரத்தின் விசேஷ சேவாதாரி ஆத்மாக்கள் ஆகி விட்டீர்கள். சேவாதாரிகள் தானே! இந்த குரூப்பைச் சேர்ந்தவர்கள் எல்லோருக்கும் சேவை செய்ய வேண்டுமென்ற ஆர்வம் உள்ளது என்பதை பாப்தாதா அறிவார். மெது மெதுவாக சிந்தி குரூப்பை அதிகமாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது. அதிகமாகிக் கொண்டேயிருக்கும். ஆதலால் உங்கள் எல்லோருக்கும் டபுள் வாழ்த்துக்கள். ஒன்று சிந்திகளாகயிருப்பதற்கு. இன்னொன்று பிராமண வாழ்க்கைக்கு. நல்லது. எல்லோரும் பக்காவாக இருக்கிறார்கள். பாப்தாதா பார்த்து மகிழ்ச்சியடைகின்றார். நல்லது.

பாருங்கள். டபுள் விதேசிகள் எவ்வளவு சேவாதாரிகள். உங்களால், மற்ற எல்லோருக்கும் யாத்-பியார் கிடைக்கிறது. பாப்தாதாவுக்கும் கூட டபுள் விதேஷிகளிடம் நிறைய என்று சொல்ல மாட்டேன் ஸ்பெஷல் யாத்பியார். ஏன் இந்த அன்பு? ஏனென்றால் டபுள் விதேஷி ஆத்மாக்கள், யாரெல்லாம் சேவையில் நிமித்தமாகியிருக்கின்றார்களோ, அவர்கள் உலகில் மூலை முடுக்குகளிலெல்லாம் பாபாவினுடைய செய்தி அனுப்புவதில் நிமித்தமாக இருக்கிறார்கள். இல்லையென்றால் விதேஷி ஆத்மாக்கள் தாகத்தோடேயே இருந்து விடுவார்கள். இப்போது பாபா மீது குறை சொல்ல மாட்டார்கள் அல்லவா? பாரதத்தில் வந்தார், வெளிநாட்டில் ஏன் செய்தி சொல்லி அனுப்பவில்லை என்பார்கள். ஆதலால் சேவாதாரிகள், பாபா மீது குறை சொல்லாமலிருப்பதற்கு நிமித்தமாகி விட்டார்கள். மேலும் ஜானகி தாதிக்கு ஆர்வம் அதிகமாக

இருக்கிறது. எந்த ஒரு தேசமும் விடுபட்டு போய் விடக்கூடாது என்று. நல்லது. பாபா மீது குறை சொல்ல முடியாதவாறு பார்த்துக் கொள்கிறீர்கள் தானே! ஆனால் கூட இருப்பவர்களை களைப்படையச் செய்கிறீர்கள். களைப்படையச் செய்கிறீர்கள் தானே! ஜெயந்தி களைப்படைவதில்லை ஆனால் இந்த களைப்பிலும் கூட, மகிழ்ச்சி அடங்கியிருக்கிறது. முதலில், இதென்ன அடிக்கடி இதே தானா என்று இருக்கிறது. பிறகு சொற்பொழிவாற்றி ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டு வரும்போது, முகம் மகிழ்ச்சியாக மாறி விடுகிறது. நல்லது. இரண்டு தாதிகளிடமும் ஆர்வம் உற்சாகம் அதிகப்படுத்தும் விசேஷமிருக்கிறது. இவர்கள் சாந்தியாக உட்கார்ந்திருக்க முடிவதில்லை. சேவை இன்னும் இருக்கிறதல்லவா? உலகப்படத்தை கையில் வைத்துக் கொண்டு. எங்கெல்லாம் சேவை நடந்திருக்கிறது என்று டிக் செய்து கொண்டே வந்தால் இன்னும் எங்கெல்லாம் சேவை செய்ய வேண்டியதாக இருக்கிறது என்பது தெரிந்து விடும். ஆதலால் பாப்தாதாவுக்கு குஷியாகவும் இருக்கிறது. மேலும் அதிகமாக களைப்படையச் செய்ய வேண்டாம் என்றும் கூறுகின்றார். நீங்கள் எல்லோரும் சேவையில் குஷியாக இருக்கின்றீர்கள் அல்லவா? இனி இந்த குமாரிகளும் டீச்சர் ஆகி விடுவார்கள் அல்லவா? இங்கே டீச்சர்களாக இருக்கிறவர்களும் இருக்கிறார்கள் ஆனால் இன்னும் யாரெல்லாம் ஆகவில்லையோ, அவர்கள் எல்லாம் ஏதாவதொரு சென்டரை சமாளிப்பீர்கள் அல்லவா? கை கொடுப்பீர்கள் அல்லவா? டபுள் விதேஷி குழந்தைகளுக்கு இரண்டு வேலை செய்வதற்கான அப்பியாசம் இருக்கவே செய்கிறது. வேலையிலும் இருக்கிறார்கள். சென்டரும் சமாளிக்கிறார்கள். ஆகவே தான் பாப்தாதா (டபுள் முபாரக்) இரண்டு மடங்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். நல்லது.

நாலா பக்கங்களிலுமுள்ள, அதி சிநேகி, அதி சமீபம், சதா ஆதி கால முதல் இன்று வரையிலும் ராயல்டியின் அதிகாரி சதா தங்களுடைய முகம் மற்றும் நடத்தை மூல மாக தூய்மையின் (ஜொலிப்பை) பிரகாசத்தைக் காட்டக் கூடிய சதா தன்னை, சேவை மற்றும் நினைவில் தீவிர புருஷாரத்தம் மூலமாக, நம்பர் ஒன் ஆகக்கூடிய சதா பாபா சமானமாக சர்வ சக்தி, சர்வ குணம் சம்பன்ன சொரூபத்தில் இருக்கக்கூடிய இப்படிப்பட்ட எல்லா பக்கங்களிலுமுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும், பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺
✺✺✺✺✺✺✺✺

# 14.11.2002 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிராமண வாழ்க்கையின் அஸ்திவாரம் மற்றும் வெற்றிக்கு ஆதாரம் -நிச்சய புத்தி!

இன்று எல்லாம் வல்ல தந்தை, நாலா பக்கங்களிலுமுள்ள தன்னுடைய சாமர்த்தியசாலி குழந்தைகளைப் பார்க்கின்றார். ஒவ்வொரு குழந்தையும், திறமைசாலியாகி, பாபா சமானமா வதற்கான சிரேஷ்ட புருஷார்த்தத்தில் (முயற்சியில்) ஈடுபட்டிருக்கின்றனர். குழந்தைகளினுடைய இந்த ஆர்வத்தைப் பார்த்து, பாப்தாதா மகிழ்ச்சியடைந்து கொண்டேயிருக்கின்றார். குழந்தைகளினுடைய இந்த திடமான எண்ணம் பாப்தாதாவுக்கும் கூட பிரியமானதாக இருக்கின்றது. பாப்தாதா குழந்தைகளுக்குக் கூறுவது இது தான். தந்தையை விடவும் குழந்தைகள் முன்னே செல்ல முடியும். ஏனென்றால், ஞாபகார்த்தத்தில் கூட தந்தைக்கு ஒருவிதத்தில் தான் பூஜை. குழந்தைகளுக்கு இரண்டு விதத்தில் பூஜை (சாலிகிராமம் + ஜடசித்திரம்), குழந்தைகள் பாப்தாதாவின் தலைக்கிரீடம். பாப்தாதா குழந்தைகளினுடைய சுய கௌரவத்தைப் பார்த்து, சதா இப்படித்தான் கூறுகின்றார். ஆஹா! சிரேஷ்ட ஸ்வமான்தாரி, ஸ்வ இராஜ்யதாரி குழந்தைகளே, ஆஹா! ஒவ்வொரு குழந்தையினுடைய விசேஷத்தன்மையானது, ஒவ்வொருவருடைய நெற்றிப் பிரகாசத்தின் மூலமாக பாபாவுக்குத் தெரிகிறது. நீங்களும் கூட உங்களுடைய விசேஷத்தை அறிந்து, புரிந்து விஷ்வ சேவையில் பயன்படுத்திக் கொண்டேயிருங்கள். சோதனையும் செய்யுங்கள். நான் பிரபுவுக்கு பிரியமுள்ள, பரிவாரத்திற்குப் பிரியமுள்ள குழந்தையாக எவ்வளவு தூரம் ஆகியிருக்கின்றேன்? ஏனென்றால் சங்கமயுகத்தில் பாபா பிராமண பரிவாரத்தைப் படைக்கின்றார். ஆகவே பிரபுவுக்கும், பரிவாரத்திற்கும் பிரியமுள்ளவராக இருப்பது அவசியமாகிறது.

இன்று, பாப்தாதா எல்லா குழந்தைகளினுடைய பிராமண வாழ்க்கையின் அஸ்திவாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

நிச்சயபுத்தி தான் அஸ்திவாரம் ஆதலால் எங்கே நிச்சயம். இருக்கிறதோ. அப்போது ஒவ்வொரு சங்கல்பத்திலும், காரியத்திலும் வெற்றி நிச்சியிக்கப்பட்டிருக்கிறது. வெற்றி பிறப்புரிமை, அதிகார ரூபத்தில் (ஜன்மசித்த அதிகாரம்) இயற்கையாகவும், எளிதாகவும் கிடைக்கிறது. ஜன்ம சித்த அதிகாரத்தை அடைவதற்காக சிரமப்பட்டு முயற்சி செய்ய வேண்டிய அவசியம் இல்லை. வெற்றி என்பது பிராமண வாழ்க்கையில், கழுத்து மாலையாக இருக்கிறது. பிராமண என்ற வாழ்க்கை என்பதே வெற்றி சொரூபமானது. வெற்றி அடைவோமா அல்லது அடைய மாட்டோமா என்ற கேள்வியே இல்லை. நிச்சயபுத்தி பாபாவுடன் இணைந்த ஒன்று. எங்கே பாபா கம்பைண்டாக (இணைந்து) இருக்கின்றாரோ, அங்கே வெற்றி சதா இருந்து கொண்டே இருக்கும். ஆகவே, வெற்றி சொரூபமாக எவ்வளவு ஆகியிருக்கிறோம் என்பதை சோதித்துப் பாருங்கள். ஒருக்கால் வெற்றி சதவிகிதத்தில் இருந்தால், இதற்குக் காரணம் நிச்சயத்தில் சதவிகிதம் உள்ளது என்று பொருள். பாபாவிடம் நிச்சயம் உள்ளது, இது ரெம்பவும் நல்லது தான் ஆனால் பாபா மீது நிச்சயம், தன் மீது நிச்சயம், டிராமாவில் நிச்சயம், இத்தோடு பரிவாரத்தின் மீதும் நிச்சயம். இந்த நான்கின் மீதுள்ள நிச்சயத்தின் ஆதாரத்தில் வெற்றியானது எளிதாகவும், இயல்பாகவும் அடைய முடியும். பாபா மீது எல்லா குழந்தைகளுக்கும் நிச்சயம் இருக்கிறது. ஆகவே தான் இங்கு வந்திருக்கிறார்கள். பாபாவுக்கும் கூட, எல்லோர் மீதும் நிச்சயமுள்ளது. ஆகவே தான், தன்னுடையவர்களாக ஆக்கிக் கொண்டார். பிராமண வாழ்க்கையில் சம்பன்னமாகவும், சம்பூரணமாகவும் ஆனால் ஆவதற்காக, தன்மீது நிச்சயம் இருக்க வேண்டியது அவசியம். பாப்தாதாவிடமிருந்து அடையப் பெற்ற, சிரேஷ்ட ஆத்மாவினுடைய ஸ்வமான் (சுய கௌரவம்) சதா நினைவில் இருக்க வேண்டும். ஆத்மா அதாவது நான் பரமாத்மாவிடமிருந்து அடையப் பெற்ற ஸ்வமான்தாரி சிரேஷ்ட ஆத்மா. சாதாரண ஆத்மா அல்ல, பரமாத்ம ஸ்வமான்தாரி ஆத்மா. ஆகவே ஸ்வமான் ஒவ்வொரு சங்கல்பத்திலும், ஒவ்வொரு காரியத்திலும் வெற்றியை அவசியம் அடையச் செய்கிறது. சாதாரண கர்மம் செய்யக்கூடிய ஆத்மா அல்ல, ஸ்வமான்தாரி ஆத்மா. ஆதலால் ஒவ்வொரு கர்மத்திலும் ஸ்வமான் உங்களுக்கு வெற்றியை எளிதாகவே அடையச் செய்யும். ஆகவே தான், நிச்சய புத்தியுள்ளவன் என்றால், இதன் அடையாளம் -வெற்றி மேல் வெற்றி தான். இதே போல

பாபா மீது உறுதியான (பக்கா) நிச்சயபுத்தி இருக்கிறது என்றால், இதன் விசேஷத்தன்மை நிரந்தரமாக நான் பாபாவினுடையவன், பாபா என்னுயைடவர் என்பதாக இருக்கும். இந்த நிரந்தரம் தான் வெற்றிக்கு ஆதாரம். என்னுடைய பாபா, பாபா என்றால் மட்டும் போதாது, என்னுடைய பாபா. என்னுடையவர் என்றால் அவர் மீது அதிகாரம் இருக்கும். ஆதலால் மேரா பாபா. நிச்சயபுத்தி ஆத்மா சதா அதிகாரியாக இருப்பார். இதேபோல் டிராமா மீதும் முழுமையான நிச்சயம் இருக்க வேண்டும். வெற்றி மற்றும் பிரச்சினை என்ற இரண்டு விதமான விஷயங்கள் டிராமாவில் வருகிறது ஆனால் பிரச்சினையான நேரத்தில் நிச்சயபுத்தியுடையவர்களின் அடையாளம் சமாதான சொரூபம். பிரச்சினையை ஒரு வினாடியில், சமாதான சொரூபம் மூலமாக பரிவர்த்தனை செய்ய வேண்டும். பிரச்சினையினுடைய வேலை வருவது. நிச்சயபுத்தி ஆத்மாவினுடைய வேலை, சமாதான சொரூபத்திலிருந்து, பிரச்சினையை மாற்றி விடுவது ஆகும். ஏனெனில், பிராமண ஆத்மாக்களாகிய நீங்கள் ஒவ்வொருவரும், ஜன்மம் எடுத்தவுடனேயே, மாயைக்கு சவால் விட்டீர்கள். செய்தீர்களல்லவா? அல்லது மாயாஜீத் ஆக வேண்டும் என்பதை மறந்து விட்டீர்களா? பிரச்சினை சொரூபம் என்றால் மாயா சொரூபம். எப்போது சவால் விட்டீர்களோ, அப்போது மாயை எதிர்க்கும் அல்லவா? அது அநேக விதமான பிரச்சினைகளின் ரூபத்தில், உங்களுடைய சவாலை முடித்து வைப்பதற்காக வருகிறது. நீங்கள் நிச்சயபுத்தி வெற்றி சொரூபம் மூலமாக கடந்து செல்ல வேண்டும். ஏன்? ஒன்றும் புதிதல்ல (நத்திங் நியூ) எத்தனை தடவை வெற்றி அடைந்திருக்கிறீர்கள்? இந்த ஒரு முறை தான் சங்கமத்தில் வெற்றி அடைந்து கொண்டிருக்கிறீர்களா? அல்லது அநேசு முறை அடைந்த வெற்றியை, திரும்பவும் செய்து கொண்டிருக்கிறீர்கள். பிரச்சினை உங்களுக்கு ஒன்றும் புதிய விஷயமல்ல, நத்திங் நியூ ஆதலால் அநேக முறை வெற்றி அடைந்திருக்கிறீர்கள். இப்போது ஆகிக் கொண்டிருக்கிறீர்கள். மீண்டும் ஆகிக் கொண்டேயிருப்பிர்கள். இது தான் டிராமா மீதுள்ள நிச்சய புத்தியின் வெற்றி. அடுத்து பிராமண பரிவாரத்தின் மீது நிச்சயம். ஏன்? பிராமண பரிவாரம் என்பதன் பொருள், கூட்டாளிகளின் கூட்டம். சிறிய பரிவாரம் அல்ல. பிரம்மாபாபாவினுடைய பரிவாரம் மற்ற எல்லா பரிவாரத்தையும் விட சிரேஷ்டமானது, பெரியது. ஆதலால் பரிவாரத்தினருக்கிடையே பரிவாரத்தின் மீதுள்ள அன்பைப் பகிர்ந்து

கொள்வதில் வெற்றி. மாறாக. பாபா என்னுடையவர், நான் பாபாவினுடையவன் என்பதில் எல்லாமே அடங்கி விட்டது என்பதல்ல. எனக்கு பாபாவுடன் தான் சம்மந்தம். பரிவாரத்தின் மீது எனக்கென்ன சம்மந்தம்? ஆனால் இதுவும் கூட நிச்சயத்தின் விசேஷமாகும். இந்த நான்கு விஷயங்களிலும் நிச்சயமும், வெற்றியும் அவசியம். பரிவாரம் கூட எல்லோருக்கும், அநேக விஷயங்களில் பலம் கொடுக்கிறது. பரிவாரத்தில் இருக்கும்போது, எல்லோரும் அவரவருடைய தாரணை சொரூபத்தில் நம்பர்வாராக இருக்கிறார்கள் என்பது நினைவில் இருக்க வேண்டும். பல விதம் (வெரைட்டி), இதன் ஞாபகார்த்தம் தான் 108-மணி மாலை. யோசித்துப் பாருங்கள் எங்கே முதல் நம்பர், எங்கே 108வது நம்பர். இப்படி ஏன் ஆனது? எல்லோரும் ஒரு நம்பரில் ஏன் வரவில்லை? 16-ஆயிரம் ஏன் ஆனது? காரணம்? பல விதமான சம்ஸ்காரத்தைப் புரிந்து, ஞானியாகி நடப்பது, நிர்வகிப்பது தான், வெற்றி நிறைந்த நிலை. நடக்கத்தான் வேண்டும். பரிவாரத்தை விட்டு, விட்டு எங்கே போக முடியும்? எங்களுடைய பரிவாரம் இவ்வளவு பெரியது என்ற நஷாவும் இருக்கிறதல்லவா? ஆதலால் பெரிய பரிவாரத்தில், பெரிய மனதோடு, ஒவ்வொருவருடைய சம்ஸ்காரத்தையும் புரிந்து கொண்டு நடப்பது, பணிவுடன் இருப்பது, சுபபாவனை மற்றும் சுப அபிலாஷையோடு கூடிய விருத்தியில் நடப்பது, இது தான் பரிவாரத்தில் நிச்சய புத்தியின் வெற்றிக்கு அடையாளம். எல்லோரும் வெற்றியாளர்கள் தானே! வெற்றியாளர்களா? ஆகவே, டபுள் ஃபாரினர்ஸ் வெற்றியாளர்களா? கையை, நன்றாக அசைக்கிறார்கள். ரெம்பவும் நல்லது. பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது. நல்லது. டீச்சர்ஸ் வெற்றியாளர்களாக இருக்கின்றீர்களா? அல்லது கொஞ்சம் வெற்றியடைந்து கொண்டிருக்கிறீர்களா? என்ன செய்வது? என்பது அல்ல. எப்படி என்பதற்குப் பதிலாக, இப்படிச் செய்ய வேண்டும். 21-ஜன்மம் தொடர்பு பரிவாரத்தினருடன் இருக்கிறது. ஆதலால் யார், பரிவாரத்தில் பாஸாகிறார்களோ, (வெற்றி அடைவது) அவர்கள் எல்லாவற்றிலும் பாஸ். ஆதலால் நான்கிலும் உள்ள நிச்சயத்தை சோதியுங்கள். ஏனெனில், பிரபு பசந்த் (பாபாவுக்குப் பிரியமுள்ளவர்)தோடு, பரிவாரத்திற்குப் பிரியமுள்ளவராகவும் இருப்பது மிகவும் அவசியம். நம்பர், இந்த நான்கின் நிச்சயத்தின் சதவிகிதத்தின் அடிப்படையில் கிடைக்கிறது. நான் பாபாவினுடையவன், பாபா என்னுடையவர் என்பதோடு முடிந்து விடாது. மேரா பாபா என்று மிக நன்றாக

கூறுகின்றீர்கள். சதா இதே நிச்சயத்தில் உறுதியாகவும் இருக்கின்றீர்கள், இதற்கு நல் வாழ்த்துக்கள் ஆனால் இன்னும் மூன்று இருக்கிறது. டீச்சர்ஸ், நாலும் அவசியமா? அல்லது மூன்று அவசியம் ஒன்று அவசிய மில்லை, அப்படியா? நாலும் அவசியம் என்று நினைப்பவர்கள் ஒரு கை உயர்த்துங்கள். எல்லோருக்கும் நான்கும் அவசியமாக இருக்கிறது. யார், மூன்று மட்டும் போதும் என்று நினைக்கிறார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள்? யாருமில்லை. ஒன்றும் கஷ்டமில்லையா? ரெம்பவும் நல்லது. ஒருவேளை மனதார கை, உயர்த்தியிருந்தால், எல்லோரும் பாஸ். நல்லது.

பாருங்கள். எங்கெங்கிருந்தோ இருந்து மதுபனில் விதவிதமான கிளைகள் ஒன்று சேர்ந்து ஒரு விருக்ஷம் ஆகி விடுகிறது. மதுபனில் இருக்கும்போது நான் டில்லியைச் சார்ந்தவன், கர்நடகத்தைச் சேர்ந்தவன், குஜராத்தைச் சார்ந்தவன் என்று நினைக்கிறீர்களா? எல்லோரும் மதுபன் வாசிகள். ஆகவே ஒரு மரம் ஆகி விட்டதல்லவா? எல்லோரும் இந்த சமயத்தில் என்ன நினைக்கிறீர்கள்? மதுபன் வாசியா அல்லது அவரவர் தேசத்தைச் சார்ந்தவர்களா? மதுபன் நிவாசிகளா? எல்லோரும் மதுபன் நிவாசிகள். மிகவும் நல்லது. ஒரு விதத்தில் பிராமணருடைய பெர்மனென்ட் (நிரந்தரமான) அட்ரஸ் மதுபன் தானே. உங்களுடைய பர்மனென்ட் அட்ரெஸ் எது? பாம்பேயே? டில்லியா? பஞ்சாபா? மதுபன் பர்மனென்ட் அட்ரஸ். இது, சேவைக்காக, சேவா கேந்திரத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறீர்கள். அது சேவை செய்யும் இடம். உங்களுக்கு வீடு மதுபன். கடைசியில், உங்களுக்கு அடைக்கலம் எங்கே கிடைக்கும்? மதுபனில் தான் கிடைக்கும். ஆகவே தான் பெரிய பெரிய ஸ்தானம் தயாராகிக் கொண்டிருக்கிறதல்லவா?

எல்லோருடைய லக்ஷியம் பாபா சமானம் ஆக வேண்டும் என்பதாக இருக்கிறது. ஆதலால் முழு நாளும் இந்த டிரில் செய்யுங்கள். மனதின் டிரில். சரீரத்திற்கு டிரில், சரீர ஆரோக்கியத்திற்காக செய்கிறீர்கள். செய்து கொண்டேயிருங்கள். ஏனெனில் தற்காலத்தில், மருந்தை விட பயிற்சி தான் அவசியமாக இருக்கிறது. அதை செய்யுங்கள். நன்றாகவே செய்யுங்கள். உரிய நேரத்தில் சேவை செய்ய வேண்டிய நேரத்தில் பயிற்சி செய்து கொண்டிருக்கக்கூடாது? மற்ற நேரத்தில் பயிற்சி செய்தால் நல்லது ஆனால் கூடவே மனப்பயிற்சியும் அடிக்கடி

செய்யுங்கள். பாப்சமான் ஆக வேண்டுமென்றால், ஒன்று நிராகார், இன்னொன்று அவ்யக்த பரிஷ்தா. ஆதலால் நேரம் கிடைக்கும் போதெல்லாம், ஒரு வினாடியில் பாபா சமானமாக நிராகாரி ஸ்திதியில் நிலைத்து விடுங்கள். பாபா சமானம் ஆக வேண்டுமானால், நிராகார் ஸ்திதி. பாபா சமானமானதாகும். காரியம் செய்து கொண்டே, பரிஷ்தாவாகி கர்மம் செய்யுங்கள். பரிஷ்தா என்றால் டபுள் லைட்... காரியத்தின் சுமை இருக்கக் கூடாது. காரியம் பற்றிய சுமை இருந்தால், அது அவ்யக்த பரிஷ்தா ஆக விடாது. ஆதலால் இடையிடையே, நிராகாரி மற்றும் பரிஷ்தா சொரூபத்தைப் பற்றிய மனப்பயிற்சி செய்தால் களைப்பு உண்டாகாது. எப்படி பிரம்மாபாபாவை சாகாரத்தில் டபுள் லைட் சொரூபத்தில் பார்த்தீர்களோ அப்படி, சேவையின் சுமையும் இருக்கவில்லை. அவ்யக்த பரிஷ்தா ரூபம். இப்படியிருந்தால் சகஜமாகவே பாப்சமான் ஆகி விடுவீர்கள். ஆத்மா நிராகாரமாக இருக்கிறது. மேலும் ஆத்மா நிராகார ஸ்திதியில் நிலைத்திருந்தால், நிராகார் பாபாவின் நினைவு, சகஜமாகவே சமானமாக ஆகி விடும்.

இப்போதே, ஒரு வினாடியில், நிராகாரி ஸ்திதியில் நிலைக்க முடியுமா? முடியுமா? (பாப்தாதா டிரில் செய்வித்தார்) இந்த அப்பியாசம் மற்றும் அட்டென்ஷன் (கவனம்) இங்குமங்கும் சென்று கொண்டிருக்கும்போதும், கர்மம், செய்து கொண்டிருக்கும் போதும், இடையிடையே செய்து கொண்டேயிருக்க வேண்டும். இந்தப் பயிற்சி, மனசா சேவை செய்வதில் உதவியாயிருக்கும். மேலும் சக்திசாலி யோக ஸ்திதியிலும் மிகவும் உதவியாயிருக்கும். நல்லது.

இப்போது டபுள் ஃபாரினர்ஸ் எழுந்திருங்கள். பாருங்கள், டபுள் ஃபாரினர்ஸ்களுக்கு, இந்த சீசனில் காரணமிருக்கிறதோ, இல்லையோ, எல்லா குரூப்பிலும் வாய்ப்பு கிடைத்துள்ளது. குரூப்பிலும் வரலாம். சுதந்திரம் உள்ளது. ஆகவே, இது பாக்கியம் தானே? டபுள் பாக்கியம். ஆகவே இந்த குரூப்பிலும், சிலர் முதல் முறையாகவும், சிலர் முன்பு வந்தவர்களும் வந்திருப்பதை பாப்தாதா பார்க்கின்றார். பாப்தாதாவினுடைய திருஷ்டி எல்லா ஃபாரினர்ஸ்கள் மீதும் உள்ளது. எவ்வளவு அன்பு உங்களுக்கு பாபாவிடம் இருக்கிறதோ, பாபாவினுடைய அன்பு உங்களிடம் ஆயிரம் மடங்கு உள்ளது. சரி தானே? ஆயிரம் மடங்கு உள்ளதா? உங்களுக்கும் அன்பு இருக்கிறது.

உளப்பூர்வமான அன்பு இருக்கிறது, அகவே தான் வந்து சேர்ந்திருக்கிறீர்கள். டபுள் ஃபாரினர்ஸ், இந்த பிராமண பரிவாரத்தின் அலங்காரம். விசேஷ அலங்காரம். ஒவ்வாரு தேசத்தையும் பாப்தாதா பார்க்கின்றார். நினைவில் அமர்ந்திருக்கிறார்கள். கேட்டுக் கொண்டுமிருக்கிறார்கள். ஆகவே நினைவில் அமர்ந்திருக்கிறார்கள். மிகவும் நல்லது.

டீச்சர்ஸ்: டீச்சர்களினுடைய எண்ணிக்கையும் பெரியது. பாப்தாதா டீச்சர்களுக்கு ஒரு டைட்டில் கொடுக்கின்றார். (பட்டம்) என்ன பட்டம் கொடுக்கின்றார்? டபுள் ஃபாரினர்ஸ்களோ ஏற்கனவே நண்பர்கள். இவர்களுக்கு நண்பர்கள் (ஃபிரண்ட்ஸ்) என்ற சம்மந்தம் பிரியமானதாக இருக்கிறது. டீச்சர்களுக்கு பாப்தாதா, யார் யோக்கியமான டீச்சர்களாக இருக்கின்றார்களோ, எல்லோருக்கும் அல்ல. யார் யோக்கியமானவர்களோ, அவர்களை பாப்தாதா, இவர்கள் குருபாயி என்கின்றார். எப்படி பெரிய குழந்தைகள் தந்தைக்கு சமமானவர்களாக ஆகி விடுகிறார்களோ, அதுபோல டீச்சர்களும் கூட குருபாயிகள் ஏனென்றால், சதா தந்தையினுடைய சேவையில் நிமித்தமாகியிருக்கிறார்கள். பாப்சமான் சேவாதாரிகள். பாருங்கள். டீச்சர்களுக்கு தந்தையின் சிம்மாசனம் கிடைக்கிறது, முரளி சொல்வதற்காக. குருவினுடைய ஆசனம் கிடைக்கிறதல்லவா? ஆதலால் டிச்சர்ஸ் என்றால் நிரந்தர சேவாதாரி. மனசா மூலமாகவோ, பேச்சு மூலமாகவோ, செயல் மூலமாகவோ,சதா, சேவாதாரி. அப்படித்தானே? ஓய்வை விரும்புபவர்களாக இல்லை தானே? சேவாதாரி. சேவை, சேவை மேலும் சேவை. சரி தானே, நல்லது.

சேவையில், டில்லி, ஆக்ராவின் பொறுப்பு: ஆக்ரா, கூடவே இருக்கிறது. டில்லியினுடைய சேனை மிகப் பெரியது. நல்லது. டில்லியில் ஸ்தாபனைக்கான அஸ்திவாரம் போடப்பட்டுள்ளது. இது மிக நல்ல காரியம். இப்போது பாபாவை பிரத்யக்ஷம் செய்வதற்கான அஸ்திவாரம் எங்கே இருக்கும்? டில்லியா? மகாராஷ்டிராவா? கர்நாடகமா? லண்டனா? எங்கே? டில்லியில் ஆகுமா? நிரந்தரமாக சேவை, தபஸ்யா செய்யுங்கள். சேவை மற்றும் தபஸ்யா இந்த இரண்டின் பேலன்ஸ் (சரிசமம்) மூலம் பிரத்யக்ஷம் ஆகும். எப்படி சேவை பற்றிய டயலாக் செய்தீர்கள் அல்லவா? இது போல டில்லியில்

தபஸ்யா பற்றி வர்ணனை செய்யும் டயலாக் தயார் செய்யுங்கள். அப்போது டில்லி, டில்லி தான் என்பார்கள். மனம் பாபாவிடம் இருக்கிறது ஆனால் பாபாவின் மனதிற்குப் பிரியமான காரியம் செய்து காட்ட வேண்டும். பாண்டவர்களே! செய்ய வேண்டுமல்லவா? செய்வீர்கள். அவசியம் செய்வீர்கள். எப்படிப்பட்ட தபஸ்யா செய்ய வேண்டு மென்றால், எல்லோரும் பறவைகளாகி, பாபா, பாபா என்று கூறியவாறே விசேஷ ஸ்தாபனமாகிய டில்லி வந்து சேர்ந்து விட வேண்டும். விட்டில் பூச்சிகள் பாபா, பாபா என்று. உச்சரித்துக் கொண்டே வரட்டும். அப்போது சொல்லலாம் பிரத்யக்ஷத்தா. ஆகவே, இது செய்ய வேண்டும். வருகிற ஆண்டில் இந்த டயலாக் செய்ய வேண்டும். இதனுடைய ரிசல்ட் அதாவது எத்தனை விட்டில் பூச்சிகள் பாபா, பாபா என்று கூறியவாறே சரணடைந்தார்கள் என்பது பற்றி கூற வேண்டும் சரி தானே? மிகவும் நல்லது! மாதாக்கள் நிறைய பேர் வந்திருக்கிறார்கள்.

**குமார், குமாரிகள்:** குமார் மற்றும் குமாரிகளால், பாதி ஹால் நிரம்பியுள்ளது. குமார், குமாரிகளுக்கு சபாஷ் குமார், குமாரிகள் ஜுவாலை ரூபமாகி, ஆத்மாக்களை பாவனம் ஆக்குபவர்கள். குமார், குமாரிகளுக்கு இரக்கம் வர வேண்டும். இக்காலத்து குமார் மற்றும் குமாரிகள் எவ்வளவு குழப்பத்தில் இருக்கிறார்கள்! குழப்பத்திலிருக்கும், தங்களைச் சார்ந்த கூட்டாளிகளை நல்ல வழியில் கொண்டு வாருங்கள். நல்லது. குமார், குமாரிகள் யாரெல்லாம் வந்திருக்கிறார்களோ, அவர்களில் யார், இந்த ஆண்டு முழுவதிலும் ஆத்மாக்களை தன்னைப்போல ஆக்கியிருக்கிறார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். யார், சேவையில் தன்னைப்போல ஆக்கியிருக்கிறார்களோ, அவர்கள் உயரமாக உயர்த்துங்கள். குமாரிகள், தன்னைப்போல ஆக்கியிருக்கிறார்களா? நல்ல பிளான் செய்திருக்கிறார்கள். ஹாஸ்டலில் இருப்பவர்கள் கை உயர்த்துகிறார்கள். இப்போது சேவையில் பயனடைந்தவர்களை அழைத்து வரவில்லை. ஆகவே, குமார், குமாரிகள் சேவை மூலமாக பயனடைந்தவர்களை அழைத்து வரவேண்டும். சரியா?

**அதர் குமார்:** அதர் குமார்களும் கூட குறைந்தவர்கள் அல்ல. அதர் குமார் சேவையில் என்ன புதுமை செய்து காட்டப்போகிறீர்கள்? அதர் குமார்கள் உலகிற்கு சவால் விட்டு காண்பிக்க வேண்டும். அதாவது

முழு கல்பத்திலும், எந்தக் காரியமெல்லாம் நடந்ததோ, அதை விட விந்தையான காரியம் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. அதர் குமார்கள் பிரவிருத்தியில் (குடும்பம்) இருவரும் கூடவே இருந்தாலும், சொப்பனம் வரையிலும் கூட தூய்மையாக இருக்க முடியும் என்று சவால் விட வேண்டும். உலகினர், எது முடியாது என்று நினைக்கிறார்களோ, அதை முடியும் என்று காட்டக்கூடிய சவால் விட வேண்டும். முடியாது என்று நினைக்கிறார்கள் ஆனால் நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? கூடவே இருந்தாலும், தூய்மையாக இருக்க முடியும் என்று. இப்படி சவால் விடுகிறீர்கள் அல்லவா? பலவீனமானவர்கள் இல்லை தானே? சொப்பனத்திலும் கூட, தான் சவால் சங்கல்பம் மாத்திரம் கூட இல்லை எனும்போது விடமுடியும். பெரிய, பெரிய மகா மண்டலேஷ்வர்கள் உங்களுடைய சரணங்களில் தலை குனியக்கூடிய நேரமும் வரும் ஆனால் அந்த அளவுக்கு சம்பன்னம் ஆக வேண்டும். அதர்குமாரர்களின் எண்ணிக்கையும் கூட குறைவில்லை. நிறைய இருக்கிறது. நன்றாக இருக்கிறது. பிராமண பரிவாரத்திற்கு அழகூட்டுகிறது. நல்லது.

மாதாக்கள்: நல்லது. இன்னும் பாக்கி யார் இருக்கிறார்கள்? போலா நாத்தினுடைய, இனிமையிலும், இனிமையான மாதாக்கள். நல்லது. பாருங்கள் தாதி, மாதாக்களின் கூட்டம் எவ்வளவு இருக்கிறது! மிக நல்ல கூட்டம். டி.வி.யில் எல்லோருக்கும் காட்டுங்கள். விஞ்ஞான சாதனத்தின் பலனை அடைந்து கொண்டிருக்கிறீர்கள். சக்தி சேனை நன்றாக இருக்கிறது. சக்திகளுக்கு வெற்றி! வெற்றி!! வெற்றி!! பாருங்கள். பாப்தாதா அபலைகளை, சக்திகளாக்கி விட்டார். இப்போது, உங்களை அபலைகள் என்று நினைக்கவில்லை தானே!... சக்திகள் சக்திகள் என்றாலே வெற்றி தான். சக்திகளை, வெற்றியின் அடையாளமாக சாஸ்திரத்தில் எழுதியிருக்கிறார்கள். சஸ்திரதாரி சக்திகள் என்றால், சர்வ சக்திகளும் அடங்கிய சக்திகள். ஆகவே, சதா உங்களை சர்வ சக்தி சொரூபம் என அனுபவம் செய்கிறீர்களா? உங்களுடைய ஞாபகார்த்தம் சர்வ சக்திகளைக் குறிப்பதாகும். அப்படித்தானே? சக்திகளும், சம்பன்னமாக இருக்கிறீர்களா? ரெம்பவும் நல்லது. எல்லா வெற்றியாளர்கள் மேலும் சதா வெற்றியாளர்களாகவே இருப்பார்கள். நல்லது. இப்போது நான், பாபாவை சந்திக்கவில்லை

என்று யாரும் சொல்ல மாட்டார்கள். எல்லோரையும் சந்தித்து விட்டேன் அல்லவா? எல்லோருடனும் சந்திப்பு நடந்து விட்டது.

**இந்தூர் ஹாஸ்டல் குமாரிகளுடன்:** குமாரிகள் என்றால் ஆத்மாக்களை 21-பிறவிக்கு நன்மை செய்விப்பவர்கள். ஆகவே, எத்தனை ஆத்மாக்களை, 21-பிறவிக்கு நன்மையடையும்படி செய்திருக்கிறீர்கள்? சேவை செய்கிறீர்களா? அல்லது சேவாதாரி ஆகிக் கொண்டிருக்கிறீர்களா? தயாராகிக் கொண்டிருக்கிறீர்கள் நல்லது. பாருங்கள். எப்போது எது நடக்கிறதோ, அப்போது உங்களுக்கு அழைப்பு அனுப்பப்படுகிறது. அல்லவா? விசேஷ ஆத்மாக்கள் ஆகி விட்டீர்கள். ஆதலால் விசேஷ அழைப்பிதழ் அனுப்பி வரவேற்கப்படுகிறீர்கள். மிகவும் நல்லது. நீங்கள் சுயமாகவும் சக்தி ரூபமாகிக் கொண்டிருக்கிறீர்கள். மேலும் மற்றவர்களை ஆக்குவதிலும் கூட, அவ்வாறே திறமைசாலிகளாகி அழகூட்டுவீர்கள். நல்லது. வாழ்த்துக்கள்.

**அரசியல் விங்**'கைச் சார்ந்தவர்கள் வந்திருக்கிறார்கள். மிகவும் நல்லது. உங்களுடைய வீடு வந்து சேர்ந்து விட்டீர்கள். நீங்கள் விருந்தாளிகளா? அல்லது விருந்தோம்புபவர்களா? பாபாவினுடைய வீடு என்றால் குழந்தைகளினுடைய வீடு. ஆதலால் விருந்தோம்புவர்கள். நல்லது.

நாலா பக்கங்களிலுமுள்ள வெற்றி ரத்தினங்களுக்கு சதா நிச்சய புத்தி, சகஜமாக வெற்றி மூர்த்திகளான குழந்தைகளுக்கு சதா மேரா பாபா என்ற அதிகாரத்தின் மூலம் சேவையில் வெற்றி அடையக்கூடிய வெற்றி மூர்த்திகளான குழந்தைகளுக்கு, சதா சமாதான சொரூபம், பிரச்சினைகளை பரிவர்த்தனை செய்யக்கூடிய பரிவர்த்தக் (மாற்றக்கூடிய) ஆத்மாக்களுக்கு, இப்படிப்பட்ட சிரேஷ்ட குழந்தைகளுக்கு, சதா பாபாவை பிரத்யக்ஷம் செய்வதற்கான பிளானை, நடைமுறையில் கொண்டு வரக் கூடிய குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் வாழ்த்துக்கள். லக்ஷோப லக்ஷம் (அக்ஷௌணி) முறை வாழ்த்துக்கள் மற்றும் நமஸ்தே!

**ரத்தன் மோகினி தாதி:** எல்லோருக்கும் உங்களிடம் பிரியம் உள்ளது. பாபாவுக்கும் உங்களிடம் பிரியம் உள்ளது. சகயோகி ஆவதன் மூலம்

சூட்சும பிராப்திகள் நிறைய கிடைக்கிறது. அப்படித்தானே? ஆதி ரத்தினம். ஆதி ரத்தினம் இன்று வரையிலும் கூட நிமித்தமாக இருக்கிறீர்கள். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 30.11.2002 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# திருப்பி கொடுத்தல் என்ற சப்தத்தின் ஸ்மிருதி (நினைவு) மூலம் பாபாவிற்கு சமமாக ஆகுங்கள் மேலும் திரும்பி பயணம் செல்லும் நினைவு சொரூபம் ஆகுங்கள்!

இன்று பாப்தாதா தம்முடைய மன ஆசனதாரி, புருவ மத்திய ஆசனதாரி, விஷ்வ இராஜ்யத்தின் சிம்மாசனதாரி, சுயராஜ்ய அதிகாரி குழந்தைகளைப் பார்த்து புன்முறுவல் செய்கிறார். பரமாத்மாவினுடைய மன ஆசனம் முழு கல்பத்திலும், இப்பொழுது தான் காணாமல் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளாகிய உங்களுக்கு பிராப்தியாகிறது. புருவமத்தி ஆசனம் எல்லா ஆத்மாக்களுக்கும் உள்ளது ஆனால் பரமாத்மாவின் மன ஆசனம் பிராமண ஆத்மாக்களைத் தவிர வேறு எவருக்கும் கிடைப்பதில்லை. இந்த மன ஆசனம் தான் விஷ்வ ராஜ்ய சிம்மாசனத்தை தருகிறது. நிகழ் காலத்தில் சுயராஜ்ய அதிகாரியாக ஆகி விட்டீர்களா! ஒவ்வொரு பிராமண ஆத்மாக்களுக்கும் சுயராஜ்யம் கழுத்து மாலையாக உள்ளது. சுயராஜ்யம் உங்களது பிறப்பு உரிமை யாகும். அப்படிப்பட்ட சுயராஜ்ய அதிகாரியாக தங்களை உணர்கின்றீர்களா? மனதில் இந்த ஒரு திட எண்ணம் உள்ளது. அதாவது எங்களது இந்த பிறப்பு உரிமையை எவரும் பறிக்க முடியாது, கூட கூடவே இந்த ஆன்மீக போதையும் உள்ளது, அதாவது நாங்கள் பரமாத்மாவின் மன ஆசனதாரியும் ஆவோம். மனித வாழ்க்கையில், உடலில் இதயம் தான் முக்கிய மானதாக கருதப்படுகிறது. இதயம் நின்று விட்டால் வாழ்க்கையே முடிந்து விடும். ஆகவே ஆன்மீக வாழ்க்கையிலும் கூட மன ஆசனத்திற்கு மிக உயர்ந்த மகத்துவம் உள்ளது. எவர் மன ஆசன அதிகாரியோ அவரைத் தான் உலகத்தில் விசேஷ ஆத்மாவாக கருதுகிறார்கள். அந்த

ஆத்மாக்களைத்தான் பக்தர்கள் மாலையின் மணி ரூபத்தில் சிமரன் (நினைவு) செய்கிறார்கள். அந்த ஆத்மாக்களைத்தான் கோடியில் சிலர், அந்த சிலரில் சிலராக புகழப்படுகிறது. ஆக அவர்கள் யார் நீங்கள் தானா? பாண்டவர்களா? தாய்மார்களும் தானே (அனைவரும் கை அசைக்கிறார்கள்) ஆகவே பாபா கூறுகிறார். ஏ! செல்லக் குழந்தைகளே! அவ்வப்போது மன ஆசனத்தை விடுத்து தேகம் என்கிற மண்ணில் மனதை ஏன் ஈடுபடுத்துகிறீர்கள்? தேகம் என்பது மண்ணிற்கு சமம். ஆகவே செல்லக் குழந்தைகள் ஒருபோதும் மண்ணில் காலை வைக்க மாட்டார்கள், எப்பொழுதும் ஆசனத்திலும், மடியிலும் அல்லது அதீந்திரிய சுகத்தின் ஊஞ்சலிலும் ஆடுவார்கள். உங்களுக்காக பாப்தாதா வெவ்வேறு விதமான ஊஞ்சல்களை வழங்கியுள்ளார். சில நேரம் சுகத்தின் ஊஞ்சலில் ஆடுங்கள், சில நேரம் மகிழ்ச்சியின் ஊஞ்சலில் ஆடுங்கள், சில நேரம் ஆனந்தத்தின் ஊஞ்சலில் ஆடுங்கள்.

ஆக, இன்று பாப்தாதா அப்படிப்பட்ட சிரேஷ்ட குழந்தைகள் போதையினுடைய ஊஞ்சலில் எப்படி ஆடுகிறார்கள் என்பதை பார்த்து கொண்டிருந்தார். ஆடிக் கொண்டிருக்கிறீர்களா? ஆடுகிறீர்களா? மண்ணில் வருவதில்லைதானே! அவ்வப்பொழுது மண்ணில் காலை வைப்பதற்கு மனம் வருகிறதா? ஏன் என்றால் 63-ஜென்மமாக மண்ணில் தான் கால்கள் இருந்தன. மண்ணுடன் தான் விளையாடினீர்கள். ஆக இப்பொழுது மண்ணில் விளையாடுவது இல்லைத்தானே? அவ்வப்போது மண்ணில் கால்கள் போகிறதா? இல்லையா? அவ்வப்போது போகிறது. தேக அபிமானம் என்பது கூட மண்ணில் கால் வைப்பதற்கு சமம். தேக அபிமானம் என்பது மிகவும் ஆழமான புதை மண்ணில் காலை வைப்பதற்கு சமமாகும் ஆனால் தேக பானம் (உடல் உணர்வு) என்றால் பாடி கான்சியஸ், இது கூட மண்ணாகும். எவ்வளவு நேரம் சங்கமயுக காலத்தில் அதிகத்திலும் அதிகமாக மன ஆசனத்தில் இருப்பீர்களோ, அவ்வளவு நேரம் அரைக் கல்பமாக சூரிய வம்ச இராஜ்யத்தில், சூரிய வம்சத்தினுடைய குடும்பத்தில் மேலும் சந்திர வம்சத்திலும் கூட இருப்பீர்கள். ஒருவேளை இப்பொழுது சங்கமயுகத்தில் அவ்வப்போது மன ஆசனத்தில் இருந்தால், சூரிய வம்சத்தினுடைய உயர்ந்த குடும்பத்தில் கூட அவ்வப்போது கொஞ்ச நேரம் தான் இருப்பீர்கள். ஆசன அதிகாரியாக திரும்ப திரும்ப (turn by turn) இருப்பீர்கள் ஆனால் உயர்ந்த குடும்பத்தில் (ராயல்) இராஜ குடும்ப

ஆத்மாக்களின் தொடர்பில் எப்போதும் இருப்பீர்கள். ஆகவே, சங்கமயுகத்தின் ஆரம்ப காலத்திலிருந்து இப்பொழுது வரை பத்து வருடமானாலும் சரி, 50-வருடங்கள் ஆனாலும் சரி, 66-வருடங்கள் ஆனாலும் சரி, எப்பொழுதிலிருந்து நீங்கள் பிராமணர் ஆனீர்களோ அது முதல் இது வரை எவ்வளவு நேரம் மன சிம்மாசனதாரி, சுயராஜ்ய ஆசனதாரி ஆகியிருக்கிறீர்கள் என்பதை சோதனை செய்து பாருங்கள். அதிக காலமாக இருந்தீர்களா? நிரந்தரமாக இருந்தீர்களா? அல்லது அவ்வப்பொழுது இருந்தீர்களா? எவர் பரமாத்மாவின் மன ஆசன அதிகாரியாக இருக்கிறாரோ அவருடைய அடையாளம் வெளிப்படையான நடத்தையிலும், முகத்திலும் கவலையில்லாத மகாராஜாவாக இருப்பார்கள். தங்களது ஸ்தூலமான சுமை தலையில் இருக்கும் ஆனால் சூட்சுமமான சுமை மனதில் இருக்கும். மனதில் சுமை என்பது எதுவும் கிடையாது ஆனால் கவலைத்தான் சுமையாக உணரப்படுகிறது. கவலையற்று இருப்பது டபுள் லைட் (எடையற்ற மேலும் பிரகாசம்) ஆகும். ஒருவேளை எந்த விதத்திலாவது சேவையானாலும் சரி. சம்மந்தம் தொடர்பிலும் சரி, ஸ்தூல சேவையானாலும் சரி, ஆன்மீக சேவையானாலும் சரி சுமை கிடையாது, என்ன ஆகும், எப்படி ஆகும், வெற்றி கிடைக்குமா அல்லது கிடைக்காதா? யோசித்தில், திட்டமிடுதல் என்பது வேறு விஷயம். சுமை என்பது தனிப்பட்டது. சுமை உடையவர்களின் அடையாளம் சதா முகத்தில் அதிகமாகவோ, குறைவாகவோ களைப்பினுடைய அடையாளம் இருக்கும். களைப்படைவது என்பது தனிப்பட்ட விஷயம். களைப்பினுடைய சிறிய அடையாளம் கூட சுமையினுடைய அடையாளமாகும். மேலும் கவலையற்ற இராஜா என்பது அலட்சியமாக இருப்பது என்ற பொருள் அல்ல இருப்பதோ அலட்சியமாக ஆனால் கூறுவதோ நான் கவலையற்று இருக்கிறேன் என்று. சோம்பேறித்தனம் மிகவும் ஏமாற்றத்தை தரக்கூடியது. தீவிர புருஷார்த்திகளும், சோம்பேறித்தனத்தில் இருப்பவர்களும் கூறுவது அதே வார்த்தைகள் தான் (கவலையற்று இருக்கிறேன்). தீவிர முயற்சியாளர்கள் உறுதியான நம்பிக்கை இருப்பதால் ஒவ்வொரு செயலும் துணிவினாலும், பாபாவினுடைய உதவியினாலும் வெற்றி என்பது நிச்சயக்கப்பட்டுள்ளது என்று தான் சிந்திப்பார்கள். மேலும் சோம்பேறித்தனம் உடையவர்கள் கூட ஆகி விடும். ஆகி விடும், ஆகி விட்டது என்றும், யாதேனும் காரியம் மீதம் உள்ளதா, ஆகி விடும் என்ற

வார்த்தைகளைத் தான் பேசுவர் ஆனால் சொல் ஒன்று தான், பொருள் வேறு வேறு ஆகும்.

நிகழ்காலத்தில் மாயா இரண்டு ரூபங்களில் சோதனை தாள்களைக் கொண்டு வருவதை தெரிந்திருக்கிறீர்களா? தெரிந்திருப்பீர்கள். ஒன்று: வீணான எண்ணங்கள் -தீய எண்ணங்கள் அல்ல. மற்றொன்றையும் கூற வேண்டுமா? இரண்டாவது: நான் என்ன செய்தேனோ, என்ன சொன்னேனோ, எதை நினைத்தேனோ, அது தான் சரியானது நான் குறைந்தவன் அல்ல, நான் தான் சரியானவன் என்பது. பாப்தாதா சமயப்படி இப்போது விரும்புவது: ஒரு வார்த்தையை எப்பொழுதும் நினைவில் வையுங்கள், அதாவது பாபாவிடமிருந்து பெற்றுள்ள அனைத்து பிராப்திகளை, சிநேகத்தை, ஒத்துழைப்பை திருப்பித் தரவேண்டும். திருப்பித் தருவது என்றால் பாபாவுக்கு சமமாக ஆவது ஆகும். இரண்டாவது, இப்பொழுது நம்முடைய திரும்ப செல்ல வேண்டிய பயணம் உள்ளது. இந்த ஒரு திரும்ப (ரிட்டன்) என்ற வார்த்தையை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். இதற்கான மிக எளிய சாதனம் ஒவ்வொரு எண்ணத்தையும், சொல்லையும், செயலையும் பிரம்மாபாபாவை ஒப்பிட்டுப் பாருங்கள் பாபாவின் எண்ணம் எப்படி இருந்தது? பாபாவின் சொல் எப்படி இருந்தது? பாபாவின் செயல் எப்படி இருந்தது? இதைத்தான் தந்தையை பின்பற்றுதல் என்று சொல்லப்படுகிறது. பின்பற்றுவது எளிதாக உள்ளது தானே. புதியதாக சிந்திப்பதற்கு, புதியதாக செய்வதற்கு அவசியம் இல்லை. எதை எல்லாம் தந்தை செய்தாரோ, அதில் எல்லாம் தந்தையை பின்பற்றுங்கள். எளிது தானே!

டீச்சர்ஸ்: கையை உயர்த்துங்கள். பின்பற்றுதல் எளிதா? கடினமா? எளிது தானே! தந்தையை பின்பற்றுங்கள் போதும். முதலில் சோதனை செய்து பாருங்கள். இப்படி எல்லாம் பழமொழி கூறப்படுகிறது அல்லவா! அதாவது சிந்தித்த பின் செயல்படுங்கள், அளந்து பேசுங்கள். ஆக, இந்த வருடத்தில் இப்பொழுது இந்த வருடத்தினுடைய கடைசி மாதத்தில், அனைத்து டீச்சர்களும் பழையன களைதலும், புதியன ஏற்றலும் செய்யுங்கள். புதிய வருடம் வருதற்கு முன்னால் என்ன செய்ய வேண்டும். அதற்கான ஏற்பாடு செய்யுங்கள். பாபாவின் அடி மேல் அடி வைப்பதைத தவிர வேறு எந்த அடியையும் எடுத்து வைக்க மாட்டேன்

என்று சங்கல்பம் வையுங்கள். அடி மேல் அடி வைத்தால் போதும். அடி மேல் அடி வைப்பது என்பது எளிதுதானே! புதிய வருடத்திற்காக இப்பொழுதிருந்தே எண்ணத்தின் திட்டம் தீட்டுங்கள், எப்படி பிரம்மாபாபா சதா நிமித்தமாகவும், பணிவாகவும் இருந்தாரோ அப்படியே நிமித்த பாவனை மற்றும் பணிவுடன் இருக்க வேண்டும். வெறும் நிமித்த பாவனை மட்டுமல்லாமல் நிமித்த பாவனையுடன் கூடவே பணிவுத் தன்மை ஆகிய இரண்டும் கூட அவசியமாக வேண்டும். ஏனென்றால் ஆசிரியர்கள் நிமித்தமானவர்கள் தானே! நிமித்தமானவர்கள் தானே! அப்படியானால் எண்ணம் மற்றும் சொல்லில், மற்றவர்களின் சம்மந்தத்தில், கர்மத்தில், ஒவ்வொரு வார்த்தையிலும் பணிவுத் தன்மை வேண்டும். யாரிடம் பணிவுத் தன்மையுள்ளதோ அவர்கள் நிமித்த பாவனையில் இருப்பார்கள். யாரிடம் பணிவுத் தன்மையில்லையோ அவரிடம் கொஞ்சம் அதிக சூட்சும, மகான் ரூபத்தில் அபிமானம் இல்லை என்றாலும், ஆவேசம் இருக்கும். இந்த ஆவேசம் கூட அபிமானத்தின் அம்சம் ஆகும். மேலும் வார்த்தையில் சதா களங்கமற்ற மற்றும் இனிமையான வார்த்தையாக இருக்க வேண்டும். எப்பொழுது சம்மந்தம் மற்றும் தொடர்பில் ஆன்மீக ரூபத்தின் நினைவு இருக்குமோ, அப்பொழுது சதா நிராகாரி, நிர்அகங்காரியாக இருப்பார்கள். பிரம்மாபாபாவின் கடைசி மூன்று வார்த்தைகள் நினைவு இருக்கிறதா? அதாவது நிராகாரி, நிர்அகங்காரி, அவரே நிர்விகாரி ஆவார், நல்லது. தந்தையை பின்பற்றுவதில் உறுதியாக இருக்கிறீர்களா! வரும் வருடத்தில் முக்கிய லட்சிய சொரூபத்தின் நினைவு இந்த மூன்று வார்த்தைகள் தான். அதுவே நிராகாரி, நிர்அகங்காரி, நிர்விகாரி விகாரத்தின் அம்சம் கூட இருக்க கூடாது. பெரிய பெரிய உருவில் வருவது கூட சரியாகி விட்டது ஆனால் அம்சம் கூட இருக்க கூடாது ஏனென்றால் அம்சம் தாஞ் ஏமாற்றத்தை அளிக்கிறது. தந்தையை பின்பற்றுவது என்பதல் பொருள் இந்த மூன்று வார்த்தைகளையும் நினைவில் வைப்பதாகும். சரிதானே?

நல்லது. இரட்டை அயல் நாட்டினர் எழுந்திருங்கள். நல்ல குரூப் வந்துள்ளீர்கள். பாப்தாதாவிற்கு இரட்டை அயல் நாட்டினரிடம் ஒரு விஷயத்தில் குஷி உள்ளது. எது என்று தெரியுமா? தெரியுமா? பாருங்கள் எவ்வளவு தூரத்திலிருந்து, தூர தேசத்திலிருந்து வருகிறீர்கள், ஆக இந்த முறை வர வேண்டும் என்று கட்டளை

கிடைத்தவுடன் வந்து சேர்ந்து விட்டீர்கள் தானே! எப்படியோ முயற்சி செய்து பெரிய குரூப்வாக வந்து விட்டீர்கள். தாதியின் கட்டளையை சரியானபடி ஏற்றுக் கொண்டீர்கள் தானே! அதற்காக வாழ்த்துக்கள். பாப்தாதா ஒவ்வொருவரையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். திருஷ்டி கொடுத்துக் கொண்டிருக்கிறார். மேடையில் (ஸ்டேஜில்) தான் திருஷ்டி கிடைக்கும் என்று இல்லை. தூரத்திலிருந்தாலும் கூட மிக நன்றாக தெரிகிறீர்கள். இரட்டை வெளிநாட்டினர்கள் ஆமாம், சரி என்ற பாடத்தை நன்றாக படித்துள்ளீர்கள். பாப்தாதாவிற்கு இரட்டை அயல்நாட்டினரிடம் அன்பு இருக்கிறது தான், என்றாலும் பெருமையும் உள்ளது. ஏன் என்றால் உலகத்தின் மூலை முடுக்குகளிலும் பாபாவின் செய்தி சென்றடைவ|தற்கு இரட்டை அயல் நாட்டவர்கள் தான் நிமித்தமாகி இருக்கிறீர்கள். அயல் நாட்டில் இப்பொழுது சில விசேஷமான இடங்கள் பாக்கியுள்ளது. கிராமங்கள் உள்ளனவா? அல்லது விசேஷமான இடங்கள் உள்ளனவா? மூலை முடுக்குள், சின்ன சின்ன கிராமங்கள் அல்லது விசேஷமான இடங்கள் உள்ளனவா? எந்த இடம் பாக்கி உள்ளது? இருந்தாலும் பாருங்கள்! இந்த குரூப் கூட வந்துள்ளது பாருங்கள். எத்தனை தேசத்தின் குரூப் வந்துள்ளது! கணக்கெடுத்தீர்களா? எடுக்கவில்லையா? எடுக்கவில்லை ஆனால் கூட பாப்தாதா புரிந்துள்ளார், உலகத்தில் வெவ்வேறு தேசங்களில் ஆத்மாக்களாகிய நீங்கள் நிமித்தமாக இருக்கிறீர்கள். பாப்தாதா எப்போதும் கூறிக் கொண்டிருக்கின்றார், இரட்டை வெளிநாட்டினர் தான் பாபாவின் விஷ்வ கல்யாணகாரி என்ற பட்டத்தை (டைட்டில்) வெளிப்படுத்தியுள்ளார்கள். நல்லது. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் இடங்களில் தங்களது முயற்சியில் மற்றும் சேவையில் முன்னேறிக் கொண்டேயிருக்கிறீர்கள் மேலும் முன்னேறிக் கொண்டேயிருப்பீர்கள். வெற்றி நட்சத்திரமாகவே இருக்கிறீர்கள். மிகவும் நல்லது.

**குமாரர்களிடம் பாபா உரையாற்றியது:** மதுவன குமாரர்களும் இருக்கிறார்கள். பாருங்கள். குமாரர்களின் எண்ணிக்கையை பாருங்கள் எவ்வளவு உள்ளது. பாதி வகுப்பு குமாரர்களாக இருக்கிறார்கள். குமார் இப்போது சதாதரண குமார் கிடையாது. இப்பொழுது குமாரர்களின் டைட்டில், என்ன குமார்? பிரம்மா குமாரர்களாக இருக்கிறீர்கள் தான் ஆனால் பிரம்மா குமாரர்களின் விசேஷத்தன்மை என்ன? குமாரர்களின் விசேஷத்தன்மை எங்கு அசாந்தி உள்ளதோ அங்கு சாந்தியை

பரப்பக்கூடிய சாந்தி தூதுவன் ஆவார்கள். மனதிலும் அசாந்தி இல்லை. வெளிப்படையான அசாந்தியும் இல்லை. குமாரர்களின் வேலையே கடின உழைப்பு மற்றும் கடினமான செயல் புரிதல் தானே. இன்றைய காலத்தில் கடினத்திலும் கடினமான வேலை அசாந்தியை நீக்கி சாந்தி தூதனாகி சாந்தியை பரப்புவதாகும். அம்மாதிரி குமார்கள் தானே! அப்படித்தானே! அசாந்தியின் பெயர் அடையாளம் கூட இருக்கக் கூடாது. உலகத்திலும், உங்களுடைய சம்மந்தம் தொடர்பிலும் கூட அம்மாதிரியான சாந்தி தூதுவன் தானே! சாந்தி தூதுவன் என்பவர் எங்கு தீ பற்றியுள்ளதோ அங்கு தீயை அணைப்பவர்கள் தானே நீங்கள். அப்படி என்றால் சாந்தி தூதுவனின் காரியம் அசாந்தியை சாந்தியாக மாற்றுவது. ஆகவே சாந்தி தூதுவன் தானே! உறுதிதானே! உறுதியாக? உறுதியாக? மிக நன்றாக இருக்கிறது. பாப்தாதா இவ்வளவு குமாரர்களை கண்டு மகிழ்ச்சியடைகிறார். ஏற்கனவே பாப்தாதா திட்டம் கொடுத்திருந்தார். அதாவது டில்லியில் அதிகத்திலும் அதிகமான குமாரர்கள் இருக்கிறார்கள். எந்த அரசாங்கமானது குமாரர்கள் என்றாலே சண்டையிடுபவர்கள் என்று புரிந்து குமாரர்களைப் பார்த்து பயப்படுகிறதோ, அந்த பயப்படக்கூடிய அரசாங்கமானது, ஒவ்வொரு பிரம்மா குமாரையும் சாந்தி தூதுவன் என்ற பட்டத்தைக் கொடுத்து வரவேற்க வேண்டும். அப்பொழுது தான் அதை குமாரர்கள் செய்த அதிசயம் எனலாம். முழு உலகத்திலும் பிரம்மா குமாரர்கள் என்றால் சாந்தி தூதுவர்கள் என தெரிய வேண்டும். இது முடியுமல்லவா? டில்லியில் இதை செய்ய வேண்டுமல்லவா? செய்ய வேண்டுமல்லவா? தாதிகள் செய்வார்களா? எவ்வளவு குமாரர்கள் இருக்கிறார்கள்! இந்த ஒரு குரூப்பில் இவ்வளவு இருக்கிறார்கள் என்றால் எல்லா குரூப்பிலும் எத்தனை இருப்பார்கள்? முழு உலகிலும் எத்தனை பேர் இருப்பார்கள் (ஏறக்குறைய 1-லட்சம் பேர்) ஆகவே குமாரர்களே! அதிசயம் செய்யுங்கள். அரசாங்கம் குமார்கள் மீது வைத்துள்ள தலைகீழான அபிப்பிராயத்தை நேராக மாற்றுங்கள் ஆனால் மனதில் கூட அசாந்தி இருக்கக் கூடாது. தன்னுடன் இருப்பவர்களிடமும் அசாந்தி இருக்கக் கூடாது. இருக்கும் இடத்திலும் அசாந்தி இருக்கக் கூடாது. தன்னுடைய ஊரிலும் அசாந்தி இருக்க கூடாது. இது போதும், குமாரர்களுடைய முகத்தில் எழுத்துப்பலகை (போர்ட்) போட வேண்டிய அவசியம் இல்லை ஆனால் நெற்றியில் தானாகவே இவர்கள் சாந்தி தூதுவர்கள் என்ற எழுதப்பட்டுள்ள அனுபவம் ஏற்பட வேண்டும். சரிதானே!

குமாரிகள்: எழுந்திருங்கள். குமாரிகள் கூட அதிகமாக உள்ளனர். யார் சென்டர்வாசி குமாரிகளோ அவர்கள் அல்ல; யார் சென்டரில் வசிக்கவில்லையோ அவர்கள் எழுந்திருங்கள் ஆக, இந்த அனைத்து குமாரிகளின் லட்சியம் என்ன? வேலை செய்ய வேண்டுமா? அல்லது உலக சேவை செய்ய வேண்டுமா? தலையில் கிரீடம் அணிய வேண்டுமா? அல்லது கூடையை தூக்கி வேண்டுமா? என்ன வைக்க வேண்டும்? பாருங்கள். அனைத்து குமாரிகளும் கருணை உள்ளம் படைத்தவர்களாக வேண்டும். உலகத்தில் உள்ள ஆத்மாக்களுக்கும் நன்மை ஏற்படட்டும். குமாரிகள், 21-பிறவிகளுக்கு உத்தாரம் (காப்பாற்றுதல்) செய்யச் கூடியவர்கள் என்ற ஒரு கருத்து நிலவுகிறது. ஆகவே, அரை கல்பம் என்பது 21-குலத்திற்கு சமமாகி விடும். அப்படிப்பட்ட குமாரிகள் தானே? அப்படிப்பட்ட 21-குலத்திற்கு மங்களம் செய்யக் கூடிய குமாரிகள் கை உயர்த்துங்கள். ஒரு குடும்பம் அல்ல, 21-குடும்பங்களுக்கு! செய்வீர்கள் தானே! பாருங்கள், உங்களுடைய பெயர் குறிப்பாகி விடும். பின்னர் பார்க்கப்படும், கருணை உள்ளம் உடையவர்களா? அல்லது ஏதேனும் கணக்கு வழக்கு மீதம் இருக்கிறதா? இப்போது சமயம் எச்சரிக்கிறது. ஆகையால் சமயம் வருவதற்கு முன்னர் தயாராகி விடுங்கள். நேரத்தை பார்த்துக் கொண்டிருந்தால் நேரம் போய்விடும். ஆகையால் லட்சியம் வையுங்கள், நாம் அனைவரும் உலகத்திற்கு நன்மை செய்யக்கூடிய கருணை உள்ளம் கொண்ட பாபாவின் குழந்தைகள், கருணை உள்ளம் உடையவர்கள். சரிதானே? கருணை உள்ளம் உடையவர்கள் தானே! மேலும் கருணை உள்ளம் உடையவர் ஆகுங்கள். இன்னும் கொஞ்சம் தீவிர வேகத்தில் ஆகுங்கள். குமாரிகளுக்கு பாபாவிடம் மிக அதிகமான மேலும் சகஜமான ஆசனம் கிடைக்கிறது. புதிய வருடத்தில் என்ன அதிசயம் செய்து காட்டப் போகிறீர்கள் என பார்க்கலாம். நல்லது.

தாய்மார்கள்: எழுந்திருங்கள். பாதி வகுப்பு தாய்மார்கள். கையை ஆட்டுங்கள் காட்சி நன்றாக உள்ளது. இரட்டை அயல் நாட்டவர்களில் கூட தாய்மார்கள் உள்ளனர். தாய்மார்கள் என்ன அதிசயம் செய்யப் போகிறீர்கள்? தாய்மார்கள், உங்களுக்காக பாடல்கள் ஏற்றப்பட்டுள்ளது அல்லவா! அந்த பாடல் நினைவிருக்கிறதா? அந்த பாடல் என்ன சொல்கிறது? (சக்திகள் வந்தனர்) என்ற பாட்டை கேட்டிருக்கிறீர்கள்

தானே! கேட்கவில்லை என்றால் நாளை கேட்டு விடுங்கள். ஆக சக்திகளின் கூட்டம் உலகத்தின் நாலா பக்கத்திலிருந்தும் வந்து விட்டது. மேலும் சக்திகளாகிய நீங்கள், சக்தி தாய்மார்கள், தாய்மார்களின் வேலை என்ன? குழந்தைகளை எழுப்புவது, காப்பாற்றுவது, மேலும் அதிகாரியாக்குவது ஆகும். அப்படி என்றால் தாய்மார்கள் இப்போது உங்களுடைய பாரதத்தில் அல்லது உலகத்தில் பாபாவின் குழந்தைகள், உங்களுடைய சகோதரிகள் தூங்கி கொண்டிருக்கிறார்கள். அவர்களை எழுப்புங்கள். பாடல்கள் அதிகமாக பாடுகிறீர்கள். எழுந்திருங்கள், எழுந்திருங்கள் என்று. ஆகவே இப்போது தூங்கி கொண்டிருக்கும் ஆத்மாக்களை மிகவும் விரைவாக விழிப்படைய செய்யுங்கள். சிறிதளவாவது அவர்கள் அஞ்சலியின் (பாபாவுடன் உள்ளத்தை இணைப்பது) ஆஸ்தியை பெற்றுக் கொள்ளட்டும். ஏனென்றால் இன்னும் அதிக தாமதம் (டூ லேட்) போர்டு போடப்படவில்லை. தாமதமாகி விட்டது, ஆனால் அதிக தாமதம் ஆகவில்லை. அதாவது அதிக தாமதமாவதற்கு முன்பே தூங்கி கொண்டிருக்கக்கூடிய தங்களுடைய தோழிகளையும் விழிப்படையச் செய்யுங்கள். விழிப்படையச் செய்வீர்கள் தானே! தங்கள் தங்கள் ஊர்களிலும் எங்கெங்கெல்லாம் சேவை செய்வீர்களோ, அங்கு விழிப்படையச் செய்யுங்கள். அந்த மாதிரி சேவை செய்யுங்கள், விட்டில் பூச்சி ஆகி தன்னைத்ததான் அர்பணிக்கும் நிலைக்கு வர வேண்டும். சரி தானே! தாய்மார்களே! இப்போது அடுத்த வருடத்தின் முடிவில் (ரிசல்ட்) ஒவ்வொரு மாதரும் ஒவ்வொரு மாதத்தில் ஒவ்வொருவரை தயார் செய்யுங்கள், முடியுமல்லவா? ஒரு நாளில் அல்ல, ஒரு மாதத்தில். நல்லது. ஒருவேளை ஒரு மாதத்தில் முடியவில்லை என்றால் இரண்டு மாதத்திலாவது செய்யுங்கள். இந்த வருடத்தில் இத்தனை மாதர்கள் இருந்தார்கள். அடுத்த வருடத்தில் இத்தனை மாதர்கள் அதிகமாகி விட்டார்கள் என்ற முடிவு வரும் தானே! ஆகவே பாப்தாதா புது வருடத்தில் இவ்வளவு மாதர்கள் வந்தார்கள் அவர்கள் எத்தனை எண்ணிக்கையை அதிகரித்துள்ளார்கள் என்பதை பார்ப்பார். எத்தனை மாதர்கள் வந்துள்ளார்கள் என்ற முடிவு வரும்? தனியாக லிஸ்ட் எடுப்பதில்லைதானே? (4000-பேர் தாய்மார்கள் வந்துள்ளனர்) நல்லது. 4000-தாய்மார்கள் வந்துள்ளார்கள் என்றால் எவ்வளவு விருத்தியாகும் என்பதை பார்க்கலாம். தைரியம் இருக்கிறதா? என்னால் முடியும் என்று யார் புரிந்துள்ளார்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். ஏனோ

கையை தூக்க வேண்டும் என்று தூக்காதீர்கள். டிவியில் உங்கள் படம் பிடிக்கப்படுகிறது. தாய்மார்களிடம் விசேஷமான அன்பு உள்ளது. ஆகவே தான் தாய்மார்களின் காரணத்தினால் பாபாவிற்கு கோபால் என்ற பெயர் வந்துள்ளதை பாருங்கள். ஆகவே தாய்மார்களுக்காக கோபால் என்ற பெயர் உள்ளது. மிகவும் நல்லது. தாய்மார்கள் கூட அநேகம் உள்ளனர்.

அதர்குமார் (திருமணமான சகோதரர்கள்): அதர்குமார்கள் கூட குறைந்தவர்கள் அல்ல. பாருங்கள். அதர்குமாரர்கள் கூட பாப்தாதாவின் பெயரை காப்பாற்றியுள்ளார்கள். உங்களுக்குத் தெரியுமா! பல காலமாக அதர்குமார்கள் பரிவாரத்தை விட்டு விடுவார்கள் என்ற எதிர்மறையான எண்ண அதிர்வலைகள் இருந்தது, வீணான எண்ணங்கள் இருந்தது, அதை முறியடித்து விட்டார்கள். ஆகவே உங்களுக்கு வாழ்த்துக்கள். ஏனென்றால் பாபாவின் சேவையில், நடைமுறை வாழ்க்கை மூலம் பாபாவிற்கு மதிப்பு பெற்று தந்துள்ளீர்கள். மிக நல்லது, அதர்குமார் மற்றும் தாய்மார்களுக்கு பாப்தாதா சதா மகாத்மாக்களை வென்றவர்கள் என்று கூறுகிறார். உங்களுடைய காலடியில் வருவார்கள். எந்த ஒரு செயலை மகாத்மாக்களால் செய்ய முடியவில்லையோ அதை நீங்கள் செய்து காட்டி விட்டீர்கள். குடும்பத்தில் வாழ்ந்தாலும் ஒவ்வொருவரும் தாமரை ஒத்த வாழ்க்கை வாழ்கிறீர்கள். இல்லறத்தில் இருந்தும் துறவரத்தில் வாழ்பவர்கள். ஆகவே சதா முன்னேறுங்கள். மற்றவர்களையும் முன்னேறச் செய்யுங்கள். அதர்குமார்களின் எண்ணிக்கையும் அதிகாரிக்க வேண்டும். தைரியம் இருக்கிறதா? பாபா, தைரியம் எங்களது, உதவி உங்களது என்று சொல்லுங்கள். மிக நல்லது. அதிசயமாக உள்ளது. எப்போதும் கூடவே வாழ்ந்தாலும் (குடும்பத்தில்) பற்றற்றும் அன்பானவர்களாகவும் இருக்கிறீர்கள். ஆகவே பாப்தாதா அதர்குமார்கள் மற்றும் தாய்மார்களை மனதார ஆசீர்வதிக்கிறார். சதா முன்னேறிக் கொண்டே இருங்கள் நல்லது.

சேவையில் வங்காளம், பீகார், ஒரிசா, அசாம், நேபாளம் மற்றும் தமிழ்நாடு (ஈஸ்டர்ன் ஜோன்) இவர்களின் முறை: ஆசிரியர்கள் எழுந்திருங்கள். பாருங்கள்! ஒட்டு மொத்தமாக ஈஸ்டர்ன் ஜோன் நிமித்தம் என்று கூறுகிறார்கள், இதற்கு நிமித்தமானவர் தங்களுக்கு

பரதாதி (நிர்மல் சாந்தா ஆனால் தாதி). பரதாதி உங்களுக்கு கிடைத்திருக்கிறார்கள். ஆகவே எவ்வளவு மாநிலங்கள் இதில் வந்துள்ளது பாருங்கள். பரதாதி என்றால் பெயரி தாதி என்றல்லவா பொருள். இதில் எல்லா மாநிலங்களும் நல்ல நல்ல மாநிலங்களாக உள்ளன. மிக நல்லது. உங்களுடைய சேனை நன்றாக உள்ளது. பாருங்கள் பரதாதியை பார்த்தீர்களா! நல்லது. ஆரம்பத்திலிருந்து எவ்வளவு நல்ல பாகத்தை (பார்ட்) நடிக்கிறார்கள், லௌக்கீக தந்தையையும் பின்பற்றுகிறார், அலௌக்கிக தந்தையையும் பின்பற்றுகிறார், பரலோக தந்தையையும் பின்பற்றுகிறார். மிகவும் நல்லது. பாருங்கள் இந்த படை எவ்வளவு நன்றாக இருக்கிறது. மனதார நல்ல சேவை செய்தீர்கள். முடிவும் (ரிசல்ட்) மிக நன்றாக உள்ளது. மேலும் மனதார சகயோகியாகவும் இருக்கிறீர்கள். மேலும் அதிகத்திலும் அதிகமாக அதிகரித்துக் கொண்டே செல்லுங்கள். அதிகரித்துக் கொண்டிருக்கிறீர்கள் மேலும் சதா அதிகரித்துக் கொண்டேயிருப்பீர்கள். நல்லது. பழமையிலும் பழமையான ஆசிரியர்கள் அதிகம் உள்ளனர். சேவையின் ஆரம்ப கால டீச்சர்கள் பலர் உள்ளனர். ஸ்தாபனையின் ஆதி கால டீச்சர்கள் குறைவாகவே உள்ளனர் ஆனால் சேவையின் ஆதி ரத்தினங்கள் உள்ளனர். மிகவும் நல்லவர்கள். மிக நல்லது. ஒவ்வொருவரின் மகிமையை என்ன கூறுவது! ஒவ்வொரு ரத்தினமும் மகானாகவும், விசேஷ ஆத்மாவாகவும் உள்ளன நல்லது. தைரியத்துடன் வந்துள்ளீர்கள் மிகவும் நல்லது, நல்லது. எல்லோரிடமும் விசேஷ சந்திப்பு ஏற்பட்டுள்ளது தானே. எவராவது மீதம் உள்ளீர்களா? சிறு குழந்தைகள் மீதம் உள்ளனர்.

குழந்தைகள்: குழந்தைகள் ஒவ்வொரு இடத்திற்கும் அலங்காரமாக இருக்கின்றனர். ஆக குழந்தைகள் எப்படி இருப்பார்கள்! குழந்தைகள் முதலில் இருப்பார்கள். குழந்தைகளிடம் பாப்தாதாவிற்கு அளவு கடந்த அன்பு உள்ளது பாருங்கள்! உங்களது உரிமைகளை எடுத்துக் கொண்டீர்கள் தானே! நல்லது. இந்த விஷ்வ வித்தியாலயத்தின் ஸ்தாபனை கூட குழந்தைகள் மூலம் தான் ஏற்பட்டது. முதலில் குழந்தைகள் தானே, பின்னர் பெரியவர்கள் ஆகிறார்கள்! மிகவும் நல்லது. குழந்தைகள் என்றாலே பாப்தாதாவின் தலையின் கிரீடம். நல்லது. ஆக சதா இரட்டை படிப்பில் நம்பர் ஒன் எடுத்துக் கொண்டே

இருக்க வேண்டும். உலகிய படைப்பில் கூட நம்பர் இரண்டு, மூன்று இல்லை. நம்பர் ஒன். (முதல் தரத்தில்) மேலும் அலௌகீக் படிப்பில் கூட முதல் நம்பரில் வர வேண்டும். அம்மாதிரியான குழந்தைகள் ஆக வேண்டும். நல்லது.

**மீடியாவின் 108-ரத்தினம் வந்திருக்கிறார்கள்:** நல்லது பாபாவிடம் இருந்து ஆஸ்தியை பெற்றே தீர வேண்டும் என்று அனைவரின் புத்தியிலும் வர வேண்டும். அம்மாதிரியான ஒரு அதிசயம் செய்து காண்பிக்க வேண்டும். செய்தியாளர்கள் யாரும் வஞ்சிக்கப்படக்கூடாது. செய்தியாளர்களின் வேலையே நாலா பக்கமும் சப்தத்தை (செய்தியை) பரப்ப வேண்டும். ஆக பாபாவிடமிருந்து ஆஸ்தியை எடுங்கள் என்ற சப்தத்தை பரப்புங்கள். யாரும் ஒருபோதும் வஞ்சிக்கப்படக்கூடாது. இப்போது வெளி நாட்டிலும் கூட செய்தியாளர்களின் நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கிறதல்லவா? நல்லது. விதவிதமான ரூபத்தில் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தீர்கள், நல்ல ஆர்வமாக உள்ளனர். நல்லது செய்கிறீர்கள் மேலும் செய்து கொண்டே இருப்பீர்கள். வெற்றி என்பது இருக்கிறது. அனைத்து வர்க்கத்தினரும் என்னென்ன சேவை செய்கிறார்களோ அந்த சமாச்சாரம் பாப்தாதாவிற்கு வந்து கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு துறையின் சேவையின் ஸ்தானம் மேலும் சேவையின் உருவ அமைப்பு இருக்கிறது ஆனால் இதைப் பார்த்தால் துறைகள் தனிதனியாக இருப்பதினால், ஒவ்வொரு துறையும் ஒருவரை ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு செய்கின்றனர். நல்லது. பொறாமைப் படாதீர்கள் போட்டியிடுங்கள். ஒவ்வொரு துறையின் சேவையின் பின்னர் முக்கியமானவர்கள், மேலும் மிக மிக முக்கியமானவர்கள் நெருக்கத்தில் நிறைய பேர் வந்துள்ளனர். இன்னும் மைக் கொண்டு வரவில்லை ஆனால் சம்மந்தம் மற்றும் தொடர்பில் கொண்டு வந்துள்ளீர்கள். நல்லது.

பாப்தாதாவின் பயிற்சி நினைவு உள்ளதா? அவ்வப்போது நிராகாரி, அவ்வப்போது பரிஸ்தா இது நினைவு உள்ளதா. இது தான் நடக்கும்போது பாபா மற்றும் தாதாவின் அன்பிற்கு திருப்பிக் கொடுப்பது. ஆகவே அவ்வப்போது இந்த ஆன்மீக பயிற்சி செய்யுங்கள். வினாடியில் நிராகாரி, வினாடியில் பரிஸ்தா. (பாப்தாதா டிரில் செய்ய

வைத்தார்) நடக்கும்போதும், நிற்கும் போதும், முழு நாளும் இந்த பயிற்சி பாபாவின் சகஜ நினைவை அளிக்கும்.

நாலா புறங்களிலுமுள்ள குழந்தைகளின் நினைவு அனைத்து இடங்களிலிருந்தும் பாப்தாதாவிற்கு வந்தடைந்துள்ளது. ஒவ்வொரு குழந்தைகளும் புரிந்துள்ளார்கள். என்னுடைய நினைவை கொடுங்கள். சிலர் கடிதம் மூலமாக அனுப்பியுள்ளனர். சிலர் கார்டு மூலம், சிலர் வாயின் மூலமாகவும் ஆனால் பாப்தாதா நாலா புறங்களிலும் உள்ள குழந்தைகளை ஒவ்வொருவரையும் கண்ணில் வைத்துக் கொண்டு நினைவினுடைய மதிப்பை பல மடங்கு அன்பு நினைவுகளை அளிக்கின்றார். பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார். அனைவரின் மனதிலும் இந்த சமயத்தில் ஒலிப்பது (அதிகமானவரின் மனதில்) மதுபன் மற்றும் மதுபனின் பாப்தாதா தான் இருக்கிறது.

நாலா புறங்களிலும் உள்ள மூன்று ஆசனதாரி, சுயராஜ்ய அதிகாரி குழந்தைகளுக்கு சதா பாப்தாதாவிற்கு ரிட்டேனாக தந்தைக்கு சமமாக ஆக கூடிய குழந்தைகளுக்கு சதா திரும்ப செல்லும் பயணத்தின் நினைவு சொரூப குழந்தைகளுக்கு, சதா எண்ணம், சொல், மற்றும் செயலில் தந்தையை பின் பற்றும் ஒவ்வொரு குழந்தைகளுக்கும் பாப்தாதாவின் மிக மிக மிக அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே உரித்தாகுக.

தாதிமார்களிடம்: அனைவரும் நல்ல சகயோகம் கொடுத்து கொண்டிருக்கிறார்கள், மேலும் கொடுத்துக் கொண்டேயிருப்பார்கள். ஸ்தாபனையில் துணைவர்களாகவும் இருக்கிறார்கள். அதிகப்படியாக அனைவரும் ஆதி ரத்தினமாக இருக்கிறார்கள். இப்போது முன்னாடி யார் அமர்ந்திருக்கிறார்களோ அனைவரும் சார்ட் எழுதுகிறீர்களா? பாப்தாதா கேள்விபட்டார் ஆனால் மத்தியத்திருந்து சிரேஷ்டமானவர்கள் ஆக வேண்டும்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 15.12.2002 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சமய பிரமாணம் லட்சியம் மற்றும் லட்சணத்தின் சமநிலையின் மூலம் பாபா சமமாக ஆகுக!

இன்று பாப்தாதா நாலா புறங்களிலுமுள்ள அனைத்து சுவமான்தாரி குழந்தைகளைப் பார்த்து புன்சிரிக்கின்றார். இந்த சங்கமத்தில் குழந்தைகளாகிய உங்களுக்குக் கிடைக்கும் சுவமானை விட பெரிய சுவமான் முழு கல்பத்தில் எந்த ஆத்மாவிற்கும் கிடைப்பதில்லை. எவ்வளவு பெரிய சுவமான்? இதனை அறிவீர்களா? சுவமானின் போதை எவ்வளவு பெரிது? இந்த நினைவு இருக்கிறதா? சுவமானின் மாலை மிகவும் பெரிது. ஒவ்வொரு மணியாக எண்ணிக் கொண்டே போங்கள். சுவமான் போதையின் அன்பு லயிப்பில் மூழ்குங்கள். இந்த சுவமான், அதாவது பட்டம் (டைட்டில்) சுயம் பாப்தாதா மூலம் கிடைத்துள்ளது பரமாத்மா மூலம் கிட்டியுள்ளது. எனவே இந்த சுவமானின் ஆன்மீக போதையை எந்த சக்தியும் அசைக்க முடியாது. ஏனெனில் சர்வ சக்திவான் மூலம் கிடைத்துள்ளது.

ஆக பாப்தாதா இன்று அமிர்தவேளை முழு உலகின் அனைத்து குழந்தைகளின் பக்கம் சுற்றி வந்து, ஒவ்வொரு குழந்தையின் ஸ்மிருத்தியில் (நினைவு) எவ்வளவு சுவமானின் மாலை உள்ளது என்பதைப் பார்த்தார். மாலையை தாரணை செய்வது அதாவது நினைவின் மூலம் அதே ஸ்திதியில் ஸ்திரமாய் இருப்பது. எனவே இந்த ஸ்மிருத்தியின் ஸ்திதி எதுவரை உள்ளது என்பதை உங்களுக்குள் சோதனை செய்யுங்கள். சுவமானின் நிச்சயம் மற்றும் அதன் ஆன்மீக போதை இரண்டின் சமநிலை எதுவரை உள்ளது என்பதை பாப்தாதா பார்க்கின்றனர். நிச்சயம் என்பது ஞானம் நிறைந்து விளங்குவது. ஆன்மீக போதை சக்தி வாய்ந்த நிலை. ஞானம் நிறைந்து இருப்பதிலும் இரு நிலைகளைப் பார்த்தார். ஒன்று ஞானம் நிறைந்திருப்பது, அடுத்தது

ஞான சொரூபமாய் விளங்குவது இதில் நான் யார்? என உங்களை நீங்களே கேளுங்கள். குழந்தைகளின் லட்சியம் மிக உயர்ந்தது என பாப்தாதா அறிவார். லட்சியம் உயர்ந்தது தானே! என்ன, உயர்ந்தது தானே! பாபா சமமாய் ஆக வேண்டும் என அனைவரும் கூறுகின்றனர். ஆக, லட்சியத்தைப் பார்த்து பாப்தாதா மிகவும் குஷி அடைகின்றனர் ஆனால்... கூறட்டுமா? ஆனால் என்ன? டீச்சர்களே, சொல்லட்டுமா? இரட்டை வெளிநாட்டினரே, ஆனால் என்ன... கூறினால் கேட்பீர்களா? புரிந்திருப்பீர்கள், பாப்தாதா லட்சியம் லட்சணம் இரண்டும் ஒன்றாக இருக்க வேண்டும் என விரும்புகின்றார். இப்போது உங்களிடமே கேளுங்கள், லட்சியம், லட்சணம் அதாவது நடைமுறை ஸ்திதி சமமாக உள்ளதா? ஏனெனில் லட்சியம் லட்சணம் இரண்டும் சமமாய் இருக்க வேண்டும். இதுவே பாபா சமமாக ஆகுவதாகும். சமயத்திற்குத் தகுந்தாற்போல் இந்த சம நிலையை அருகில் கொண்டு வாருங்கள்.

தற்போது பாப்தாதா குழந்தைகளின் ஒரு விஷயத்தைக் காண விரும்புவதில்லை. அனேக குழந்தைகள் விதவிதமான முறையில் பாபா சமமாக ஆவதற்கான முயற்சியை செய்து வருகின்றனர். பாபாவின் அன்பிற்கு முன்னால் கஷ்டப்பட்டு முயற்சி செய்வதற்கு அவசியமே இல்லை. எங்கு அன்பு இருக்கிறதோ, அங்கு கஷ்டப்பட்ட முயற்சி இல்லை. தலைகீழ் போதை தேக அபிமான இயல்பாய் ஆகி, இயற்கையாகவே ஆகி விட்டது. தேக அபிமானத்தில் வருவதற்கு முயற்சி செய்ய வேண்டியுள்ளதா? அல்லது 63-பிறவிகளாய் முயற்சி செய்தீர்களா? இயல்பாகி, இயற்கையாகவும் ஆகி விட்டது. இப்போது கூட அவர்கள் கூறுகின்றனர் தேஹீ நிலை அடைவதற்குப் பதிலாய் தேகத்தில் வந்து விடுகிறோம் என்று. ஆக, எப்படி தேக அபிமானம் (உணர்வு) இயல்பாயும், இயற்கையாகவும் ஆகி விட்டதோ அதே போன்று தேகி அபிமானி ஸ்திதி கூட இயல்பாகவும், இயற்கையாகவும் ஆக வேண்டும். இயல்பை (சுபாவம்) மாற்றுவது கஷ்டமாயிருக்கிறது. இப்போது கூட சில சமயம் கூறுகிறீர்கள் இல்லையா? எனது எண்ணம் (பாவனை), இல்லை ஆனால் இயற்கையாகி விட்டது. ஆக அப்படிப்பட்ட இயல்பை இயற்கையான தன்மையாக்கி விட்டீர்கள், பாபா சமமான இயல்பை, தன்மையை இயற்கையானதாக மாற்றிக் கொள்ள முடியாதா? தலை கீழான இயற்கைக்கு வசமாகி விடுகிறீர்கள். உண்மையான தன்மைக்கு (பாப்சமான்) வருவதில் மட்டும் ஏன் மிகுந்த

முயற்சி தேவைப்படுகிறது? ஆக பாப்தாதா இப்போது அனைத்து குழந்தைகளின் தேகி அபிமானியாவதற்காக இயல்பான, இயற்கைத் தன்மையைக் காண விரும்புகின்றனர். பிரம்மாபாபாவைப் பார்த்தீர்களா? போகும்போதும், வரும்போதும் காரியங்களைச் செய்து கொண்டே தேகி அபிமான ஸ்திதி இயல்பான இயற்கையாக அமைந்திருந்தது.

பாப்தாதா செய்திகளைக் கேட்டறிந்தது பரிஸ்தா நிலை. கர்மாதீத் நிலை, பாபா சமமான நிலை ஆகியவற்றை இயற்கையாக அடைவது எப்படி என்று ஆன்மீக உரையாடல் செய்கின்றனர். அவ்வாறு இயற்கையாகி விட நீங்களும் ஆன்மீக கருத்துப் பறிமாற்றங்கள் செய்கிறீர்களா? தாதிக்கும் பரிஸ்தா ஆக வேண்டும், கர்மாதீத் நிலை அடைய வேண்டும், பாபாவை வெளிப்படுத்த வேண்டும் என்று அடிக்கடி நினைவில் வருகிறது. பரிஸ்தா ஆக வேண்டும் அதாவது நிராகாரி கர்மாதீத் அவஸ்தா ஆவதற்கு விசேஷ சாதனம் -நிரகங்காரி ஆக முடியும். எனவே பாபா பிரம்மாவின் மூலம் கடைசி மந்திரமாக நிராகாரியுடன் நிரகங்காரியையும் கூறினார். தேக அகங்காரம் -தேக அபிமானம் தனது தேகம் மற்றும் பிறரது தேக உணர்வில் சிக்கிக் கொள்வது. இதற்கு தேக அகங்காரம் மற்றும் தேகபான் (உணர்வு) என்று மட்டும் கூறப்படுவதில்லை. தேக அகங்காரமும் உள்ளது, தேக உணர்வும் உள்ளது. தனது தேகம் அல்லது பிறரது தேக உணர்வில் இருப்பது லகாவ்-ல் இருப்பது. இவ்விஷயத்தில் பெரும்பாலானோர் பாஸ். புருஷார்த்தத்தின் லகனில் (லயிப்பு) இருப்போர் உண்மையான புருஷார்த்தியாக இருப்போர் இந்த மேலோட்டமான விஷயங்களிலிருந்து (தேகபான், தேகஅகங்கார்) விலகி இருக்கின்றனர் ஆனால் தேக உணர்விற்கு சூட்சுமாக அனேக ரூபங்கள் உண்டு. இதன் லிஸ்ட் உங்களுக்குள் அமர்ந்து எடுங்கள். பாப்தாதா இன்று கூறப் போவதில்லை. இந்த அளவிற்கு ஜாடைமாடையாகக் கூறியதே அதிகம்! ஏனெனில் எல்லோருமே புரிந்து கொள்ளக்கூடியவர்கள் தான். நீங்கள் அனைவரும் அறிவீர்கள் தானே! அனைவரிடமும் கேட்டால், மிக புத்திசாலித்தனமாய் விடையளிப்பீர்கள்! ஆனால் பாப்தாதா ஒரு சிறிய சகஜ புருஷார்த்தத்தைக் கூறுகின்றார். சதா மனம், சொல், செயல், சம்பந்தம் தொடர்பில் இறுதி மந்திரமாகிய மூன்று வார்த்தைகளை -நிராகாரி, நிர்விகாரி, நிரகங்காரி -நினைவில் வையுங்கள்.

எண்ணங்களை எண்ணினால் சோதனை செய்யுங்கள். மகா மந்திரம் நிறைந்துள்ளதா? அவ்வாறே சொல், செயல் அனைத்திலும் இந்த மூன்று வார்த்தைகளை மட்டும் நினைவில் வையுங்கள் மற்றும் சமமாய் ஆகுவதையும் செய்யுங்கள். இது எளிது தானே! முழு முரளியையும் நினைவில் வையுங்கள் எனக் கூறவில்லை. வெறும் மூன்று வார்த்தைகள் மட்டும்! இந்த மகா மந்திரம் சங்கல்பத்தைக் கூட சிரேஷ்டமாக்குகிறது, சொல்லில் பணிவைக் கொண்டு வரும்! செயலில் சேவை மனப்பான்மையைக் கொண்டு வரும். சம்பந்தம் தொடர்பில் சதா சுப்பாவனை மற்றும் சிரேஷ்ட ஆசைகளின் விருத்தியாக ஆக்கி விடும்.

பாப்தாதா சேவைச் செய்திகளையும் கேட்கிறார், சேவையில் விதவிதமான பாடமுறைகளைக் கற்பிக்கிறீர்கள், ஆனால் இப்போது ஒரு பாடமுறை விட்டுப் போய்விட்டது. அது ஒவ்வொரு ஆத்மாவிலும் தேவையான சக்தியை நிரப்பும் பாட முறையை எடுங்கள், சக்தியை நிரப்பும் பாடமுறை, சொல் மூலம் விளக்கும் பாடமுறை அல்ல. சொல்லின் கூடவே சக்தியை நிரப்பும் பாடமும் தேவை, அதன் மூலம் வெறும் நன்றாயிறது, நன்றாயிருக்கிறது என்று சொல்வது மட்டும் போதாது, நன்றாக ஆகி விடவும் வேண்டும். இன்று எனக்கு சக்தி கிடைத்தது என்று அவர்கள் வர்ணிக்க வேண்டும். அந்த சக்தி அவர்களுக்கு அனுபவம் ஆவது பெரிய விஷயம். கோர்ஸ் (பாடமுறை) எடுங்கள், முதலில் தனக்கு எடுத்த பிறகு அவர்களுக்குக் கூறுங்கள். ஆக பாப்தாதா என்ன விரும்புகிறார் என்பதைப் புரிந்து கொண்டீர்களா? லட்சியம் லட்சணம் இரண்டையும் சமமாக்குங்கள். அப்போது பாபாவிற்குச் சமமாக எளிதில் ஆகி விடுவீர்கள்.

பாப்தாதா குழந்தைகளை தனக்குச் சமமான நிலையை விட உயர் நிலையில் பார்க்கின்றார். சதா பாப்தாதா சிரத்தின் (தலையின்) கிரீடமாகப் பார்க்கிறார். கிரீடம் என்பது தலையை விட உயர்ந்தது தானே! டீச்சர்கள் தலைக்கிரீடமாவார்கள்!

டீச்சர்கள்: எழுந்திரியுங்கள். எவ்வளவு டீச்சர்கள்! ஒரு குரூப்பில் இவ்வளவு டீச்சர்கள் என்றால், அனைத்து குரூப்பிலும் சேர்ந்து எவ்வளவு டீச்சர்கள்! டீச்சர்கள் பாப்தாதாவின் ஒரு சங்கல்பத்தைப் பூர்த்தி செய்ய சங்கல்பம் எடுத்துள்ளார், ஆனால் எதிரில்

கொண்டுவரவில்லை. என்னது அது தெரியுமா? ஒன்று, பாப்தாதா கூறினார் தற்போது வாரிசுகளின் மாலையை உருவாக்குங்கள். வாரிசுகளின் மாலை -பொதுவாக உள்ள மாலை அல்ல, அடுத்து, தொடர்பு சம்பந்தத்தில் உள்ளவர்களை மைக் ஆக்குங்கள். நீங்கள் சொற்பொழிவாற்றாதீர்கள். அவர்கள் உங்களின் சார்பில் செய்தியாளர்கள் ஆகட்டும். உங்களது மீடியாவாக அவர்கள் ஆகட்டும். மீடியா என்ன செய்யும்? செய்தியைப் பரப்பும் இல்லையா? நேராகவா அல்லது தலை கீழாகவா? ஆக அம்மாதிரி மைக் மீடியாவைப் போன்று பிரத்யக்ஷதாவின் செய்தியைப் பரப்புமளவு தயார் செய்யுங்கள். பகவான் வந்து விட்டார். பகவான் வந்து விட்டார் என நீங்கள் கூறுகிறீர்கள். அதை சாதாரணமாக எடுத்துக் கொள்கின்றனர் ஆனால் உங்கள் சார்பில் பிறர், முக்கியமனவர்கள், அதிகாரத்தில் உள்ளவர்கள் முதலில் உங்களை சக்திகளின் ரூபத்தில் வெளிப்படுத்தட்டும். எப்போது சக்திகள் வெளிப்படுகின்றனரோ அப்போது பாபாவும் வெளிப்படுவார். மீடியாக்களைத் தயார் செய்யுங்கள் பார்க்கலாம்! தயார் செய்துள்ளீர்களா? மாலையை விடுங்கள், வளையலாவது தயார் செய்துள்ளீர்களா? அவ்வாறு தயார் செய்துள்ளவர்கள் கை உயர்த்துங்கள் பார்க்கலாம். எம்மாதிரி தயார் செய்துள்ளீர்கள் என பாப்தாதா பார்ப்பார். தைரியம் கொண்டுள்ளீர்கள் சரி. ஆக டீச்சர்கள் என்ன செய்ய வேண்டும் என தெரிந்து கொண்டீர்களா? சிவராத்திரியில் வாரிசு தரத்தை உருவாக்குங்கள். மைக் தயார் செய்யுயங்கள். அப்போது அடுத்த வருடம் சிவராத்திரியில் அனைவரது வாயிலிருந்தும் சிவத்தந்தை வந்துள்ளார் என்கிற செய்தி வெளி வரட்டும். அம்மாதிரி சிவராத்திரியை கொண்டாடுங்கள். நிகழ்ச்சிகள் எல்லாம் மிக நன்றாக வடிவமைத்துள்ளீர்கள். நிகழ்ச்சி நிரலை அனைவருக்கும் அனுப்புகிறீர்கள் இல்லையா! நிகழ்ச்சி நன்கு ஏற்பாடு செய்கிறீர்கள் ஆனால் ஒவ்வொரு நிகழ்ச்சியிலிருந்தும் இந்த முயற்சி செய்யுங்கள். சொற்பொழிவு செய்து விட்டு சென்றுவிட்டனர் அப்படி இல்லை. இது 66-வருடம் முடிந்து விட்டது. சேவையின் 50-வருடமும் கொண்டாடியாயிற்று. இப்போது சிவராத்திரியின் வைர விழா கொண்டாடுங்கள். இந்த இருவிதமான ஆத்மாக்களைத் தயாரி செய்யுங்கள். பிறகு பாருங்கள் முரசு கொட்டுகிறதா இல்லையா என்று! முரசொலி நீங்களா எழுப்புவீர்கள்! நீங்கள் சாக்ஷாத் தேவிகளாக அமர்ந்திருப்பீர்கள். முரசொலி எழுப்புவோரைத் தயார் செய்யுங்கள்.

சிவசக்திகள் வந்தனர் என்கிற பாடலை உண்மையாகப் பாடட்டும். சிவராத்திரியில் என்ன செய்வீர்கள். அப்படியே மேடையில் பேசி விட்டு போய் விடக்கூடாது. பிறகு எழுதுவீர்கள், பாபா, 500-பேர் வந்தனர், அது சரி வந்தனர்தான், ஆனால் அதில் எத்தனை பேர் வாரிசு ஆனார்கள், மைக் எவ்வளவு பேர் ஆனார்கள், இப்படிப்பட்ட சேவைச் செய்தியைக் கூற வேண்டும். இதுவரை நிலத்தைத் தயார் செய்தீர்கள் செய்தியைக் கூறினீர்கள், அதனை பாபா நல்லது என்கிறார். அச்சேவைகளெல்லாம் வீணாகப் போய்விடல்லை. சேமிக்கப்பட்டுள்ளது. பிரஜைகள் ஆகி உள்ளனர். ராயல் குடும்பத்தினரும் ஆகியுள்ளனர் ஆனால் ராஜா ராணிகளும் வேண்டும் தானே! ராஜா ராணிகள் என்றால் சிம்மாசனத்தில் வீற்றிருப்பவர்கள் அல்ல. ராஜா ராணிகளுடன் அங்கு (சத்தியயுகம்) தர்பாரில் ராஜாக்களுக்கு சமமாக அமர்பவர்கள். அப்படிப்பட்டவர்களைத் தயார் செய்யுங்கள். ராஜ தார்பார் நன்கு சோபிக்கட்டும் ஆக, சிவராத்திரியின் போது இதனை செய்ய வேண்டும் எனக் கேட்டீர்களா? பாண்டவர்கள் கேட்கிறீர்களா? கை தூக்குங்கள் கவனம் கொடுத்தீர்களா? நல்லது! பெரிய பெரிய மகாரதிகள் அமர்ந்துள்ளீர்கள். நல்லது பாப்தாதா மிக மகிழ்ச்சி அடைகின்றார். இதுவும் உள்ளத்து அன்பாகும். ஏனெனில் உங்கள் அனைவரின் சங்கல்பமும் பிரத்யக்ஷம் எப்போது ஏற்படும்? எப்போது ஏற்படும்? அதனை பாப்தாதா கேட்டுக் கொண்டிருக்கிறார். மதுபன் வாசிகள் என்ன கேட்டீர்கள்! மதுபன் வாசிகள் கை தூக்குங்கள். மதுபன், சாந்திவனம், ஞானசரோவரில் இருப்போர், அனைவருமே மதுபன் வாசிகள் தான் நல்லது!

மதுபனிலிருந்து பேரிகை ஒலி ஒலிக்குமா? எங்கிருந்து ஒலிக்கும்? தில்லியிருந்தா? மதுபனிலிருந்து மட்டும் அல்ல. நாலா புறத்திலிருந்தும் என்று சொல்லுங்கள். ஒரு பக்கத்தில் மட்டும் ஒலிக்காது. மதுபனிலிருந்தும் ஒலிக்கும். நாலா புறங்களிலிருந்தும் ஒலிக்கும், அப்போது தான் கும்பகர்ணர்கள் விழிப்பார்கள், கேட்டீர்களா? மதுபன் வாசிகளே. மிகவும் நல்லது. எப்படி சேவையில் களைப்பில்லாது ஈடுபடுகிறீர்கள். அதுபோன்று மன சேவையும் செய்யுங்கள். வெறும் கர்மனா சேவை மட்டுமல்ல, மனம், சொல், செயல் மூன்றிலும் செய்கிறீர்கள். மேலும் அதிகமாகச் செய்ய வேண்டும். நல்லது. மதுபன் வாசிகள் மறக்கவில்லை. மதுபன்காரர்கள்

நினைக்கின்றனர், பாப்தாதா வருவது மதுபனில் ஆனால் மதுபனின் பெயரை எடுப்பதில்லை. மதுபனின் நினைவு சதா உள்ளது தான்! மதுபன் இல்லையெனில் இவர்கபெளெல்லாம் எங்கே வருவார்கள். சேவாதாரிகளாக நீங்கள் சேவை செய்யவில்லையெனில், இவர்கள் உறங்குவது எங்கே? உண்பது எங்கே? ஆக மதுபன் வாசிகளை பாப்தாதா உள்ளன்போடு நினைவு செய்கிறார். மேலும் உளப்பூர்வமாக ஆசீர்வாதமும் வழங்குகிறார். அமருங்கள், களைத்துப் போவீர்கள், டீச்சர்கள் களைத்துப் போய்விட்டனர். நிற்பதால் களைத்துப் போய்விட்டனர் என்று பாப்தாதா பார்க்கவில்லை. டிரில் செய்தனர், உட்கார்ந்து உட்கார்ந்து கால்கள் களைத்துப் போகின்றன, கொஞ்சமாவது நிற்கட்டுமே! டீச்சர்களிடம் பாபாவிற்கு அன்பு உண்டல்லவா! மதுபன்னுடன் கூட அன்பு, இனிமையான தாய்மார்களுடனும் அன்பு, கூடவே மகாவீரர்களான பாண்டவர்களுடனும் அன்பு! பாண்டவர்கள் இல்லாது கதியே இல்லை, எனவே 4-கைகளின் (சதுர்புஜ்) உருவத்திற்கு மகிமை அதிகம். பாண்டவர் மற்றும் சக்திகள் இரண்டின் இணைந்த ரூபம் விஷ்ணுவின் சதுர்புஜ்.

தாய்மார்களின் வரிசையை எழுப்பினால் பாதி சபை தாய்மார்களின் உடையதாகிறது. தாய்மார்கள் எழுந்திரியுங்கள்! தாய்மார்களின் எண்ணிக்கை அதிகம்! இப்போது தாய்மார்கள் அந்த துணியால் செய்த கொடியை உயர்த்தாதீர்கள். துணியின் கொடியை உயர்த்திக் கொண்டு பகவான் வந்து விட்டார் எழுங்கள், எழுங்கள் என்று கூறுகிறீர்கள் இல்லையா? ஆனால் இப்போது உண்மையான போரொலியை எழுப்புங்கள். அதாவது, அனைவரின் உள்ளத்திலிருந்தும் ஒலியை எழுப்பச் செய்யுங்கள். உண்மையான சிவராத்திரி கொண்டாடுங்கள். தாய்மார்கள் கேட்டீர்களா? உள்ளத்தில் பாபாவின் பிரத்யக்ஷதாவின் கொடியை ஏற்றுங்கள். கொடியை ஏற்ற வருகிறதல்லவா? ரொம்ப புத்திசாலிகள்! தாய்மார்கள் ஒன்றும் குறைந்தவர்கள் அல்ல, இப்போதே எழுப்புங்கள். உங்களது குழந்தைகள் கர்ணர்கள் தூங்கிக் கொண்டிருக்கின்றனர். தற்போது நேரம் வாயிலிருந்து வந்து விட்டது இப்போது அவர்களை எழுப்ப வேண்டும். தந்தை வந்து விட்டார், என்பதை அவர்களது வெளி வரச் செய்யுங்கள். இவ்வாறு சிவராத்திரியை தாய்மார்கள் கொண்டாட வேண்டும். அற்புதங்கள் செய்து காண்பிக்க வேண்டும். தாய்மார்கள் நன்றாக கை

அசைக்கிறீர்கள். பாப்தாதாவிற்கும் குஷி தான். என்ன செய்தி வருகிறது என. இச்சிவராத்தியில் பார்ப்போம். விழா எடுத்தோம் என்பது மட்டுமில்லை. விழா நடத்துங்கள் ஆனால் இவ்வாறு வாயிலிருந்து வெளிப்படுத்தச் செய்ய வேண்டும். நல்லது. தாய் மார்களின் எண்ணிக்கை அதிகம் உள்ளது. தாய்மார்கள் மூலமே பிராமண குடும்பத்தின் அழகு சோபிக்கிறது (சேருகிறது) தாய்மார்களின் விசேடம் எப்படிப்பட்ட கிராமத்து தாய்மார்களாக இருந்தாலும் சரி, எந்த சேவை நிலையத்தில் தாய்மார்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதோ, அங்கு உண்டியும், (பண்டாரா) சமையல் சமான்களும் நிறைந்து வழியும். பாண்டவர் ஒருவராய் இருந்து, தாய்மார்கள் 25-பேராய் இருக்கலாம், ஆனால் பரந்த உள்ளம்! நல்லது.

இப்போது இரட்டை வெளிநாட்டவர்கள் எழுந்திருங்கள்! இரட்டை வெளிநாட்டினர் வெளி நாடுகளிலிருந்து மீடியா தயார் செய்வர்! செய்வீர்கள் தானே! ஆம் செய்வோம் என்பவர்கள் கை உயர்த்துங்கள்! 30-நாடுகளிலிருந்து வந்திறீர்கள் என பாப்தாதா கேள்விப்பட்டார். குறைந்தது 30-நாடுகளிலாவது சென்று சர்வ சக்திவாய்ந்த (ஆல் மைட்டி) மீடியா தயார் செயவீர்கள் தானே! சகோதரிகள் என்ன செய்வீர்கள்? சக்திகள் என்ன செய்யப் போகிறீர்கள்? நல்லது, பாபாவின் மீது எவ்வளவு அன்பு பாருங்கள், எவ்வவு சமுத்திரத்தை கடந்து வந்தள்ளனர், பாப்தாதாவிற்கு இரட்டை வெளிநாட்டினர் மீது மிகுந்த பெருமை உண்டு. அன்பு என்பது அனைவர் மீதும் உண்டு ஆனால் அன்பின் கூடவே பெருமையும் கூட, எப்படி பாபாவின் செய்தியை மூலைமுடுக்குகளில் எல்லாம் பரப்புவதற்கு நிமித்தமாய் உள்ளனர். இல்லையெனில் இந்தியச் சகோதரிகள் முதலில் மொழி கற்க வேண்டும். பிறகு தான் செய்தியைத் தர முடியும் ஆனால் நீங்களோ தனக்குப்போக தானம் (சேரிட்டி பிகின்ஸ் அட் கோம்) என்பதை முதலில் செய்து காட்டியுள்ளீர்கள், இப்போது 30-நாடுகளிலிருந்து மட்டும் வந்துள்ளனர், ஆனால் பல நாடுகளில் இருக்கின்றனர் இல்லையா? ஆக மிக நன்றாக செய்தி அளிப்போராக ஆகியுள்ளீர்கள். ஒவ்வொரு குழந்தையின் விசேஷத்தைப் பார்த்து பாப்தாதா மிகுந்த குஷி அடைகின்றனர். ஒரு விஷயத்தில் இரட்டை வெளிநாட்டினரிடம் விசேடம் உண்டு. பாரதத்தின் விசேடத்தின் லிஸ்ட், அது தனிப்பட்டது ஆனால் இப்போது இரட்டை வெளிநாட்டினரின் விசேடத்தின் விஷயம்

பற்றியது! இரட்டை வெளிநாட்டினர் தம் அனுபவத்தின் வாயிலாகக் கூறுகின்றனர், நாங்கள் பிரம்மாவின் குழந்தைகள், வெளிநாட்டினர் தான் இருப்பினும் அனுபவத்தின் வாயிலாகக் கூறுகின்றனர். வெறும் விவேகத்தால் அல்ல, உளப்பூர்வமாகக் கூறுகின்றனர். நாங்கள் பிரம்மா குமாரர்கள், பிரம்மா குமாரிகள் என்று உள்ளத்தால், அனுபவத்தால் கூறுகின்றனர் இல்லையா! வெறும் சொல்வதற்காகக் கூறவில்லை. கேட்பதன் மூலம் கூறவில்லை. அனுபவத்தால் கூறுகின்றனர். பிரம்மா குமார், பிரம்மா குமாரி ஆவதில் ஆன்மீக ஆனந்தம் உள்ளதல்லவா? போதை இருக்கிறதல்லவா? கையசைத்து கூறுங்கள், எவ்வளவு நஷாவோ அவ்வளவு வேகமாய் கை அசையுங்கள். பாப்தாதா கூட பிரம்மா குமார் மற்றும் பிரம்மா குமாரி நஷா பற்றி சரி பார்க்கின்றார். இப்போது வெளிநாடுகளில் அவ்வளவு சிவராத்திரி கொண்டாடுவதில்லை, 18-ஜனவரி கொண்டாடுகின்றனர், சிவராத்திரி இங்கு கொண்டாடுகின்றனர். 18-ஜனவரியில் சேவையில் தூள் கிளப்புகின்றனர். இதுவும் நல்லது தான்! ஆனால் வாரிசு, மைக் யார் முதலில் உருவாக்குகிறார்கள் என்பதை பாப்தாதா பார்ப்பார். அவர்களுக்கு வெள்ளி பிரம்மாபாபாவைத் தருவோம். பரிசு தருவோம். அது பாரதவாசியாய் இருந்தாலும் சரி வெளிநாட்டவராய் இருந்தாலும் சரி! யார் உருவாக்குகிறார்களோ அவர்களுக்கு பரிசு கிடைக்கும். எவ்வளவு கிளையினர் (சென்டர்கள்) உருவாக்கினாலும் பாப்தாதாவிடம் பொக்கிஷம் நிறைந்துள்ளது. (அனைவருக்கும் கிடைக்கும்) சரி தானே!

பாண்டவர்கள் என்ன செய்வீர்கள்? பாண்டவர்களின் வெற்றி மிகவும் புகழப்பட்டுள்ளது. பாப்தாதா எழச் சொல்லிவில்லை, களைத்துப் போவார்கள் ஆனால் பாண்டவர்களின் நெற்றியில் சதா வெற்றியையே காண்கின்றனர். மேலும் வெற்றியில் ஆத்மா பிரகாசிக்கிறது. பாண்டவர்கள் எப்போதும் அவர்களது மகிமைக்குத் தகுந்தவாறே, நாடகப் பிரகாரம் நினைவுச்சின்னத்தில் கூட வெற்றியின் வரதானம் கிடைத்துள்ளது. மகிமையே வெற்றிப்பாண்டவர்கள்! எனவே பாண்டவர்கள் ஒருபோதும் எவ்விஷயத்திலும் தோல்வி அடையவே கூடாது. பாப்தாதாவின் கழுத்து மணியாக வேண்டும். தோல்வி அடையக் கூடாது. அம்மாதிரி விஷயங்கள் வரும்போது கூறுங்கள் நாங்கள் பாபாவின் கழுத்து மணிகள், தோல்வியைத் தழுவ மாட்டோம், அம்மாதிரி பக்காவாக உள்ளீர்களா? அல்லது கொஞ்சம் கொஞ்சம்

தோல்வியையும் அடைகிறீர்களா? சரி கடந்தது கடந்ததாகவே இருக்கட்டும். இப்போது தோல்வி அடையாதீர்கள். வெற்றி கழுத்து மணி, தோல்வி அடைவோர் கோடிக்கணக்கான ஆத்மாக்கள் இருக்கலாம் ஆனால் நீங்கள் அல்ல ஆனால் நீங்களோ பல கோடியிலும், அதிலும் ஒருவர். மதுபன் வாசி பாண்டவர்களுக்கு போதை உள்ளதல்லவா? வெற்றியின் போதை, வேறு போதை அல்ல, பாண்டவபவன் பாண்டவர்கள் இல்லையெனில் (பெரும்பாலோர் பாண்டவர்கள் தான் உள்ளனர்) உங்கள் அனைவருக்கும் மதுபனில் ஆனந்தமே, மன மகிழ்வே இராது. உங்களை மகிழ்ச்சியாகத் தங்க வைக்கிறார்கள், உண்பிக்கிறார்கள், எழவைக்கிறார்கள், அது அவர்களின் பலி, சேவை! இன்று பாப்தாதாவிற்கு அமிர்தவேளையிலிருந்தே மதுபன் வாசிகளின் நினைவு வருகிறது. இங்கிருந்தாலும் சரி, மேலே இருந்தாலும் சரி, அவர்களின் அமிர்தவேளையிலிருந்தே நினைவு வந்து கொண்டிருக்கிறது. நல்லது.

இப்போது உ.பி.யின் சேவாதாரிகள் எழுந்திரியுங்கள். இவர்கள் சதா சேவாதாரி. (மதுபன்வாசி) நீங்களோ ஒரு நேரத்திற்கு சேவாதாரிகள், ஒவ்வொருவரும் தங்களின் பகுதி பணி காலத்தில் அழிவில்லாத புண்ணிய கணக்கைச் சேர்த்து விட்டனர். சிறிது கால சேவை அனேக பிறவிகளின் புண்ணிய ரேகை, பாக்கியத்தை ஏற்படுத்தி விட்டது. மிகவும் புத்திசாலிகள் ஆகி விட்டீர்கள்! ஒரே பிறவியில் அனேக பிறவிகளுக்காக சேமித்து விட்டீர்கள். பாப்தாதா சேவாதாரிகளைப் பார்த்து விசேட குஷி அடைகின்றார் ஏன்? ஏனெனில் பழையவர்களுக்கு ஞாபகமிருக்கும், பிரம்மாபாபா கையெழுத்திடும்போது என்ன செய்தார்? உலக சேவாதாரி நிராகார பாபா கூட ஏன் வந்துள்ளார்? சேவாதாரி ஆகி வந்துள்ளார் இல்லையா? எனவே பாப்தாதாவிற்கு சேவாதாரிகளின் நினைவு நிறைய வருகிறது. அன்புக்குரியராயும் உள்ளனர். இதுவும் நல்லது, பெரும்பாலானோருக்கு யக்ஞத்தின் சேவையின் புண்ணியம் புரோகிராம்படி கிடைக்கிறது. இதுவும் நல்லது.! டீச்சர்கள் சரி தானே! உபி.யின் சேவாதாரி டீச்சர்கள் சரியா? மிக்க நல்லது, பாப்தாதா (குருபாயி -தோளுக்கு மேல் தோழன்) தனக்குச் சமமாக பாவிக்கிறார்! நல்லது,

குழந்தைகள்: முதலில் எழுந்திருங்கள், குழந்தைகள் மகாத்மாக்கள் இல்லையா? குழந்தைகளுக்குக் கூட எவ்வளவு அன்பு பாருங்கள், அவர்களே போட்டிக்கு நிற்கக் கூடியவர்கள். பாரதத்தின் ஜனாதிபதி கூட குழந்தைகளின் பேச்சைக் கேட்கிறார். பாப்தாதா கூட குழந்தைகள் மீது அன்பு செலுத்துகிறார். குழந்தைகளே சரிதானா! சரியென்றால் கை அசையுங்கள். மிகவும் நல்லது. சதா பாபா, பாபா என்றிருக்க வேண்டும். நினைவிலிருக்க வேண்டும்.

குமாரிகள்: எழுங்கள். குமாரிகளும் நிறைய இருக்கின்றனர் ஆனால் எம்மாதிரி குமாரிகள்? 21-பிறவிகளுக்கு கடைத்தேற்றிச் செல்வார்களா? அல்லது பந்தனத்திலுள்ள குமாரிகளா? ஆத்மாக்களின் 21-பிறவிகளை சிரேஷ்டமாக்குபவர்களே நல்ல குமாரிகள்! இதுவே குமாரிகளின் மகிமை. வேலை, உற்றார் சுற்றத்தின் பந்தனம் இருந்தாலும் குமாரிகள் சக்திகள். தனது யோக சக்தியின் மூலம் தன்னை பந்தனமற்றவர்களாக கொள்ள முடியும். வேலை செய்யாதீர்கள். (வேலை பந்தனமுள்ளவர்கள்) என்று பாப்தாதா கூறவில்லை ஆனால் இரு வேலை, சேவை செய்யுங்கள், வெளிநாடுகளில் இந்தச் சிறப்புப உண்டு. (டபுள் சேவா) வேலைக்கும் போகிறார்கள், சென்டரையும் கவனித்துக் கொள்கிறார்கள். எனவே பாப்தாதா இப்படிப்பட்ட குழந்தைகளுக்கு இரட்டை வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றனர். சூழ்நிலை அம்மாதிரி என்றால், பாப்தாதா தடுப்பதில்லை, ஆனாலும் சமநிலை (பேலன்ஸ்) வேண்டும் அப்படிப்பட்ட குமாரிகள் தானே! கிளைகள் திறக்கலாமா? சென்டர்களைக் கவனித்துக் கொள்வீர்களா? அவ்வளவு குமாரிகள் கிடைப்பார்களா? புது சென்டர்கள் திறக்கட்டுமா? ஆம் என்போர் கை தூக்குங்கள். பார்ப்போம்! சென்டர் திறக்க ஆர்டர் தரட்டுமா? சென்டர்களுக்குச் செல்லத் தயாரா? சிலர் கை உயர்த்துகின்றனர். உங்கள் உருவம் டி.வி.யில் வந்து விட்டது. பார்த்துக் கொள்ளுங்கள். நல்லது தைரியசாலிகள். தைரியத்தால் பாபாவிடமிருந்து உதவி கிடைக்கிறது. நல்லது! வாழ்த்துக்கள். சென்டரில் வருவதற்கு வாழ்த்துக்கள் குமார்கள் பாண்டவரில், வந்து விட்டனர். குமாரிகள் செண்டர்களை பராமரிக்க வேண்டும். குமார்கள் வாரிசு ஆக முடியும். குமார்கள் மைக் ஆக முடியும். குமார்கள் அரசினரை விழிப்படையச் செய்ய முடியும் குமார்கள் அற்புதம் செய்து காண்பிப்பர். அந்நாளும் வந்து தீர வேண்டும். எனவே குமார்களை எழுப்புங்கள், அருகாமையில்

கொண்டு வாருங்கள். நாங்களும் குமார், நீங்களும் குமார். வாருங்கள் கதை சொல்கிறோம் என்று அவர்களுக்குச் சொல்லுங்கள். நல்லது.

பாப்தாதா ஆன்மீக டிரில் செய்வித்தார். அதை நாள் முழுவதிலும் எத்தனை முறை செய்வித்தீர்கள், மேலும் எவ்வளவு நேரம் செய்கிறீர்கள். நிராகாரி மற்றும் பரிஸ்தா நிலை! பாபா மற்றும் தாதா! நிராகாரி நிலை, அடுத்து உடனே பரிஸ்தா சொரூபம்! இரண்டிலும் தேக உணர்வு கிடையாது. தேக உணர்விலிருந்து அப்பாற்பட்டு விளங்க வேண்டுமெனில், இந்த ஆன்மீகப் பயிற்சியை கர்மங்களைச் செய்து கொண்டிருக்கும் போதே தங்கள் வேலையைச் செய்து கொண்டே ஒரு வினாடியில் பயிற்சி செய்ய முடியும். இது இயற்கையான அப்பியாசமாசி விட வேண்டும். இப்போ இப்போ நிராகாரி, உடனேயே பரிஸ்தா நல்லது. (பாப்தாதா டிரில் செய்வித்தார்)

இவ்வாறு நிரந்தர் பவ! நாலா புறங்களிமுள்ள பாப்தாதாவின் சமமாக நினைவில் மூழ்கி இருக்கக்கூடிய பாபா லட்சியத்தை லட்சியத்திற்குச் சமமாக ஆக்கக் கூடிய மூலை முடுக்குகளிலெல்லாம் அறிவியிலின் கருவிகளின் மூலமாக இரவிலும், பகலிலுமாக அமர்ந்திருக்கக் கூடிய, (கேட்டுக் கொண்டு) அக்குழந்தைகளுக்கும் கூட பாப்தாதா அன்பு நினைவுகள், வாழ்த்துக்கள், மற்றும் உள்ளத்து ஆசீர்வாதங்களையும் வழங்குகிறன்றனர். அனைவரின் உள்ளத்திலும் தற்போது திலாராம் பாபா வினுடைய நினவை நிறைந்துள்ளது என்பதை பாப்தாதா அறிவார். ஒவ்வொரு மூலையிலும் இருக்கக்கூடிய குழந்தைகளுக்கு தனித்தனியாக பெயர்வாரியாக அன்பு நினைவுகளைக் கூறுகின்றார். பெயர்களின் மாலையை ஜபித்துக் கொண்டிருந்தால் முழு இரவுமே முடிந்து போகும். பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் நினை வினை வழங்குகின்றார். புருஷார்த்தத்தில் எந்த நம்பரில் இருந்தாலும் சரி, ஆனால் பாப்தாதா சதா ஒவ்வொரு குழந்தையின் சிரேஷ்ட சுவமான் நிலைக்கு அன்பு நினைவுகளைக் கூறுகிறார். மேலும் நமஸ்காரமும் செய்கிறார். அன்பு நினைவுகளைக் கூறும்போது பாப்தாதாவின் முன்னே நாலாபுறமுள்ள ஒவ்வொரு குழந்தையின் நினைவு வருகிறது. ஏதேனும் ஒரு குழந்தை கூட எவ்வித மூலையிலோ, கிராமத்திலோ, நகரத்திலோ வெளி நாட்டிலோ எங்கிருந்தாலும் சரி பாப்தாதா அனைவருக்குமே அவர்களது சுவமானை

நினைவுப்படுத்தி அன்பு நினைவுகளைக் கூறுகிறார். அனவைருமே அன்பு நினைவுகளுக்கு உரிமையாளர்கள் தான்! ஏனெனில் பாபா என்று கூறிவிட்டாலே அன்பு நினைவுகளுக்கு அதிகாரி தான்! எதிரிலேயே அமர்ந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் பாப்தாதா சுவமானின் மாலையில் உள்ளோராகப் பார்க்கின்றார். அனைவருக்கும் பாபா சமமாக சுவமான் சொரூபத்தில் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்!

தாதிஜியுடன்: சரியாகி விட்டீர்களா? இப்போது எந்த வியாதியும் இல்லை. ஓடி விட்டது. சும்மா காண்பிக்க வருகிறது அனைவரும் பார்க்கட்டும், நம்மிடம் கூட வருகிறது, ஆனாலும் பரவாயில்லை. அனைத்து தாதிகளும் நன்கு பாகத்தை நடிக்கின்றனர் அனைவரது பாகத்தையும் பார்த்து பாப்தாதா குஷி அடைகின்றார்.

**நிர்மல் சாந்தா தாதியுடன்:** ஆதி ரத்தினமல்லவா? ஆதி ரத்தினம் தானே! அனாதி ரூபத்திலும் நிராகாரி பாபாவின் அருகில் இருக்கிறார்! கூடவே இருக்கிறாய்? ஆதி ரூபத்திலும் ராஜ்ய தர்பாரிலும் கூடவே இருக்கிறாய்! சதா ராயல் குடும்பத்தின் ராயலாக இருக்கிறாய்! சங்கமயுகத்திலும் ஆதி ரத்தினம் ஆவதற்கான பாக்கியம் கிடைத்துள்ளது. ஆக மிகப் பெரிய பாக்கியம்! நீங்கள் இங்கே இருப்பதோ அனைவருக்கும் வரதானமாகும். பேசினாலும், பேசாவிட்டாலும் சரி ஏதேனும் செய்தாலும் சரி, செய்யாவிட்டாலும் சரி, ஆனால் நீங்கள் இங்கே இருப்பதே அனைவருக்கும் வரதானமாகும்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 31.12.2002 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இந்த புத்தாண்டில், எல்லா பொக்கிஷங்களையும் பயன்படுத்தி வெற்றி மூர்த்தி ஆவதற்கான விசேஷத்தைக் காட்டுங்கள்!

இன்று நவயுகத்தை படைப்பவர், புதுவாழ்வு அளிக்கும் வள்ளல் ஆகிய பாப்தாதா புத்தாண்டை கொண்டாடுவதற்காக வந்திருக்கின்றார். நீங்கள் எல்லோரும் புத்தாண்டை கொண்டாட வந்தீர்களா? அல்லது புது யுகத்தைக் கொண்டாட வந்தீர்களா? புத்தாண்டை எல்லோரும் கொண்டாடுகிறார்கள் ஆனால் நீங்கள் எல்லோரும் புது வாழ்வு, புது யுகம், புது ஆண்டு ஆகிய மூன்றையும் கொண்டாடுகிறீர்கள் பாப்தாதாவும்கூட (திரிமூர்த்தி) மும்மடங்கு நல்வாழ்த்துக்களை அளிக்கின்றார். புத்தாண்டில் ஒருவருக்கொருவர் நல்வாழ்த்துக்களை அளிப்பதோடு, கூடவே ஏதாவதொரு அன்பளிப்பையும் அளிக்கின்றார்கள். அன்பளிப்பு அளிக்கிறீர்கள் அல்லவா? ஆனால் பாப்தாதா உங்கள் எல்லோருக்கும் எப்படிப்பட்ட அன்பளிப்பு அளித்திருக்கின்றார். (கோல்டன் ஃவேல்டு) பொன்னுலகை, அன்பளிப்பாக கொடுத்திருக்கின்றார். எல்லோருக்கும் பொன்னுலகம் என்ற அன்பளிப்பு கிடைத்திருக்கிறதல்லவா? எந்த பொன்னுலகில், நவயுகத்தில் எல்லா பிராப்திகளும் இருக்கின்றனவோ அப்படிப் பட்ட பொன்னுலகம் நினைவிருக்கிறதா, உங்களுடைய இராஜ்யம்? எந்த ஒரு அப்பிராப்தி (தேவை ஆனால் கிடைக்கவில்லை) என்ற பேச்சுக்கே இடமில்லை. இப்படிப்பட்ட அன்பளிப்பு, பாப்தாதாவைத் தவிர வேறு யாராலும் கொடுக்க முடியாது. முழு உலசிலும், ஒருவேளை யாராவது மிகப் பெரிய அன்பளிப்பு அளித்தாலும் கூட, என்ன அளிப்பார்கள்? மிகப்பெரிய கிரீடம் அல்லது சிம்மாசனம் அவ்வளவு தானே? எப்போது ஸ்தாபனை ஆனதோ (ஸ்தாபனை செய்தவர்கள் எதிரிலேயே

அமர்ந்திருக்கிறார்கள்) அந்த சமயத்தில், ஆதியில் பிரம்மாபாபா குழந்தைகளிடம் ஒரு கேள்வி கேட்பதுண்டு. அதாவது ஒருக்கால், உங்களுக்கு இந்தக் காலத்து ராணி, கிரீடம் மற்றும் சிம்மாசனம் தருவார்களேயானால் நீங்கள் போவீர்களா? நினைவிருக்கிறதல்லவா? இதற்கு குழந்தைகள் என்ன பதில் கொடுத்தார்கள்? எப்போது எங்களுக்கு பாபா கிடைத்து விட்டாரோ, அப்போது இந்த கிரீடம், சிம்மாசனம் எல்லாம் என்ன, ஒன்றுமே இல்லை என்றார்கள். ஆதலால் இந்த பொன்னுலகமாகிய அன்பளிப்புக்கு முன், வேறு எந்த ஒரு அன்பளிப்பும் பெரிதாக இருக்க முடியாது. அநேக குழந்தைகள் கேட்கிறார்கள். அங்கே (பொன்னுலகத்தில் என்னென்ன பிராப்தி கிடைக்கும். (பிராப்தி -கிடைத்தற்கரிய பேறு) இதற்கு பாப்தாதா கூறுகின்றார். பிராப்திகளின் லிஸ்ட் (பட்டியல்) மிக நீளமானது ஆனால் சாராம்சமாகக் கூறுவதானால், என்ன சொல்லலாம்? வாழ்க்கைக்குத் தேவையான அத்தனையும், ஒன்று கூட பாக்கியில்லாமல், எந்த ஒரு பொருளாவது இல்லை என்ற பேச்சுக்கே இடமில்லாதவகையில், வேண்டியதெல்லாமே கிடைக்கும். இப்படிப்பட்ட கோல்டன் கிஃப்ட்க்கு அதிகாரி ஆத்மாக்களாக இருக்கின்றீர்கள். அதிகாரிகள் தானே? டபுள் விதேஷிகள் (வெளிநாட்டுக் குழந்தைகள்) அதிகாரிகளா? (கை அசைக்கிறார்கள்). எல்லோரும் ராஜா ஆவீர்களா? ராஜா ஆவீர்கள், நல்லது. அத்தனை சிம்மாசனம் தயார் செய்ய வேண்டியதாயிருக்கும்! பாப்தாதா கூறுகின்றார். அந்த சிம்மாசனம் என்னமோ சிம்மாசனம் தான். மற்ற எல்லாமே கிடைக்கும், என்றாலும் இந்த சங்கமயுகத்தின் சுய இராஜ்யம், அதை விட ஒன்றும் குறைந்ததல்ல. இப்போதும் கூட ராஜா தானே! பிரஜைகளா? அல்லது ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவர்களா? என்னவாக இருக்கிறீர்கள்? ஒரே ஒரு தந்தை தான், அவர் அவ்வளவு பெருமையோடு கூறுகின்றார். எனது ஒவ்வொரு குழந்தையும் ராஜா குழந்தை என்று. ராஜா தானே! இராஜ யோகியா? அல்லது பிரஜா யோகியா? இந்த சமயத்தில் எல்லோரும் தில் தக்த் நஷீன் (மனம் என்னும் சிம்மாசனத்தின் அதிகாரி) சுய இராஜ்ய அதிகாரி. ராஜா குழந்தைகள் இவ்வளவு ருஹானி நஷா இருக்கிறதல்லவா? ஏனென்றால், இந்த சமயத்தில் சுய இராஜ்யத்தின் ஆதாரத்திலே தான், வருங்கால இராஜ்யம் பிராப்தி ஆகிறது. இந்த சங்கமயுகம் மிக மிக மிக அரிதானது, சிரேஷ்டமானது. சங்கமயுகத்தைப் பற்றி பாப்தாதாவும், மற்ற எல்லா குழந்தைகளும் அறிவார்கள். குஷி குஷியாக

சங்கமயுகத்திற்கு என்ன பெயர் தருகிறார்கள்? உல்லாசமான யுகம். ஏன்? இந்த சங்கமத்தைப்போல ஒரு உல்லாசம் கல்பத்தில் வேறு எப்போதுமில்லை? காரணம்? பரமாத்மாவை சந்திக்கக்கூடிய மகிழ்ச்சி முழு கல்பத்தில் வேறு எப்போதுமில்லை. இப்போது தான் கிடைக்கிறது. சங்கமயுகத்தின் ஒவ்வொரு நாளும் எப்படி? உல்லாசமே, உல்லாசம். உல்லாசம் தானே? உல்லாசம் இருக்கிறதா, குழப்பத்தில் இல்லை தானே! ஒவ்வொரு நாளும் உற்சவம் தான். ஏனென்றால் உற்சாகமிருக்கிறது. ஆர்வம் இருக்கிறது, அதாவது தங்களுடைய எல்லா சகோதர, சகோதரிகளையும் பரமாத்மா பிதாவினுடையவர்களாக ஆக்க வேண்டும் என்ற உற்சாகம் இருக்கிறது. சேவையில் ஆர்வம், உற்சாகம் இருக்கிறதல்லவா? இது செய்யலாம், இது செய்யலாம். இது செய்யலாம் என்று பிளான் (திட்டம்) செய்கிறீர்கள் அல்லவா? ஏனென்றால், சிரேஷ்டமான பிராப்தி கிடைப்பதால், அதைப் பற்றி இன்னொருவருக்குச் சொல்லாமல் இருக்க முடிவதில்லை. இந்த சங்கமயுகத்தினுடைய பிராப்தி பொன்னுலகிலும் (சத்யுகம்) இருக்கும். இப்போது செய்கின்ற புருஷாரத்தத்தின் பலன் தான் வருங்கால கோல்டன் உலகம். அப்படியானால் சங்கமயுகம் நன்றாக இருக்கிறதா? அல்லது சத்யுகம் நன்றாக இருக்கிறதா? எது பிடித்தமானதாக இருக்கிறது? சங்கமம் தான் நன்றாக இருக்கிறதல்லவா? சில சமயங்களில் மாயை மட்டும் வருகிறது. கொஞ்சம், கொஞ்சம் சிற்சில சமயம் குழப்பம் அடைந்து விடுகிறார்கள். அநேக குழந்தைகள், சகஜ யோகத்தை, கஷ்டமான யோகம் ஆக்கி விடுகிறார்கள். கஷ்டமில்லை என்றாலும் அப்படி ஆக்கி விடுகிறார்கள் உண்மையில் மிகவும் சுலபமானது. கஷ்டமாக இருக்கிறதா? யாருக்கு கஷ்டமாக இருக்கிறதோ, அவர்கள் கை உயர்த்துங்கள். எப்போதும் அப்படியில்லை, ஆனால் சில சமயம் கஷ்டமாக இருக்கிறதா? சுலபமாக இருக்கிறதா? யார் கஷ்டமானயோகி அவர்கள் கை உயர்த்துங்கள். கஷ்டப்படுபவர்கள் கை உயர்த்துங்கள். மாதாக்கள் கஷ்டப்படும் யோகிகளா? அல்லது சுலபமான யோகிகளா? யாராவது கஷ்டப்படும் யோகிகள் இருக்கிறார்களா? கை உயர்த்த மாட்டார்கள். சபை நடுவே எப்படி உயர்த்துவார்கள்!

எல்லா குழந்தைகளும் பெருமையுடன் மேரா பாபா என்று கூறுகிறார்கள். மேரா பாபா (என்னுடைய பாபா) என்று சொல்கிறீர்களா?

மேரா பாபாவா? தாதிகளின் பாபாவா? மேரா பாபா தானே! இந்த சிந்தி ஜனங்கள் எல்லோரும் அமர்ந்திருக்கிறார்கள். மேரா பாபாவா? தாதி ஜானகியினுடைய பாபாவா? தாதி பிரகாஷ்மணியினுடையவரா? யாருடையவர்? மேராவா? மேராவா? முழு நாளும் என்ன நினைவு இருக்கிறது? மேரா. அப்படித்தானே? மேரா என்று சொல்வது மிகவும் சுலபமான யுக்தி என்று பாபா கூறுகின்றார். முழு நாளில், எத்தனை முறை மேரா (என்னுடையது) என்ற வார்த்தையை உபயோகிக்கிறீர்கள்? ஒருவேளை கணக்குப் போட்டு பார்த்தீர்களானால், நிறைய தடவைகள் மேரா (எனது) என்ற வார்த்தையை உபயோகிப்பது தெரிய வரும். மேரா எப்போது மேரா பாபா என்ற வார்த்தையை உபயோகிக்கிறீர்களோ, அப்போது மேரா என்பது யார்? மேரா பாபா. கஷ்டமாக இருக்கிறதா? சில சமயம் மறந்து விடுகிறீர்களா? பாப்தாதா புதிதாக எந்த ஒரு வார்த்தையையும் கூறவில்லை. நீங்கள் எப்போதும் உங்கள் விவகாரங்களில் உபயோகித்துக் கொண்டிருக்கும் வார்த்தை தான். ஆதலால் நான் (மை) என்பது யார்? மேரா (எனது) என்பது யார்? அநேக குழந்தைகள் கஷ்டப்பட்டு எதற்காக முயற்சி செய்கிறார்கள்? பிந்துவைப் (புள்ளியை) பற்றி மட்டுமே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். பிந்து பிந்து, பிந்து, ஆனால் இந்த பிந்து அகப்படாமல் இருக்கிறது. பிந்து என்பது சரி தான் ஆனால் எப்படிப்பட்ட பிந்து? நான் யார்? என்ற சுவமானத்தை (பட்டம்) நினைவில் கொண்டு வந்தால், இனிமையான புருஷாரத்தம் ஆகி விடும். ஜோதி பிந்து என்று மட்டுமே கூறுகின்றீர்களாதலால், கஷ்டமாகி விடுகிறது. சகஜ புருஷாரத்தம். உல்லாசமான (மகிழ்ச்சி நிறைந்த) புருஷாரத்தம் செய்யுங்கள்.

இந்த புத்தாண்டில் புருஷாரத்தம் சிரேஷ்டமாக இருக்க வேண்டும் ஆனால் சிரேஷ்டம் என்பதன் கூடவே முதலில் சகஜம் (சுலபம்) என்பதும் இருக்க வேண்டும். சிரேஷ்டமாகவும் இருக்க வேண்டும். சகஜமாகவும் இருக்க வேண்டும். இரண்டும் கூடவே இருக்க முடியுமா? டபுள் விதேஷிகள் (வெளிநாட்டினர்) கூறுங்கள். முடியுமா? சரி, பாப்தாதா பார்ப்பார். பாப்தாதா சோதித்துக் கொண்டே தான் இருக்கிறாரல்லவா? ஆகவே கஷ்டமானயோகி யார், யார் ஆகிறார்கள்? சகஜயோகி என்றால், அலக்ஷிய பாவனையுடன் இருப்பதல்ல. சிரேஷ்டமாகவும், சகஜமாகவும் இருக்க வேண்டும். அப்படியானால்

பாண்டவர்கள் சகஜ யோகிகளா? சகஜயோகிகள் யாரோ, அவர்கள் கை உயர்த்துங்கள். பாருங்கள், டி.வி.யில் வந்து கொண்டிருக்கிறது. நல் வாழ்த்துக்கள். ஆகவே, இந்த ஆண்டு, யாருக்கும் எந்த ஒரு கஷ்டமும் வராது ஏனென்றால் சகஜயோகிகள். அலஷியமாக இருந்து விடக்கூடாது.

இந்த சமயத்தின் கணக்குப்படி, இந்த புத்தாண்டில், எல்லோரும் ஒரு விசேஷ இலக்ஷியம் வைக்க வேண்டும். என்னென்ன கஜானாக்கள் (பொக்கிஷங்கள்) கிடைத்திருக்கின்றதோ, சமயம், சங்கல்பம், குணம், ஞானம், சக்திகள் ஆகியவற்றை பயனுள்ள வகையில், பயன்படுத்திக் கொண்டேயிருக்க வேண்டும். எல்லாவற்றிலும் பெரிய கஜானா, சங்கல்பம். சிரேஷ்ட சங்கல்பம், சுத்த சங்கல்பம் இந்த எல்லா கஜானாக்களையும் தினந்தோறும் பயன்படுத்த வேண்டும். நன்றாக எல்லோருக்கும் கொடுங்கள். வள்ளலுடைய குழந்தைகளாகிய நீங்கள் மாஸ்டர் வள்ளல் ஆகுங்கள் நன்றாக தானம் செய்யுங்கள். ஏன் பயன்படுத்துதல் என்பது வெற்றியடைவது என்பதாகும். ஆதலால் இந்த ஆண்டின் இந்த விசேஷத்தை நிரந்தரமாக வைத்திருங்கள். பயன்படுத்தினால், வெற்றி நிச்சயமாகி விட்டது என்று பொருள். எல்லோரும் என்ன கூறுகின்றீர்கள்? வெற்றி எனது ஜன்ம சித்த அதிகாரம் என்று. அதிகாரம் இருக்கிறதா? அப்படியானால், பயன்படுத்துங்கள், வெற்றியடையுங்கள். எந்த ஒரு காரியம் செய்தாலும், ஏதாவதொரு கஜானாவை பயன்படுத்திக் கொண்டேயிருங்கள். (ஞானம், குணம், சக்தி) வெற்றியை அனுபவம் செய்து கொண்டேயிருங்கள். யோசித்துப் பாருங்கள். வெற்றியடையக்கூடிய அதிகாரம், பிராமண ஆத்மாக்களாகிய உங்களைத் தவிர, வேறு யாருக்காவது இந்த அதிகாரம் இருக்க முடியுமா? ஏன்? ஏனென்றால் பாபா உங்களுக்கு சபலத்தா பவ (வெற்றி அடைவீராக) என்ற வரதானத்தைக் கொடுத்திருக்கின்றார். பாப்தாதா சதா சொல்லிக் கொண்டேயிருக்கின்றார். ஒவ்வொரு பிராமண ஆத்மாவும் வெற்றி நட்சத்திரம் என்று வெற்றி சொரூபம். வெற்றி நட்சத்திரமா? அல்லது கஷ்டப்பட்டு முயற்சி செய்யும் நட்சத்திரமா? பாப்தாதா எல்லா குழந்தைகளையும் வெற்றி நட்சத்திரம் என்ற சொரூபத்திலேயே பார்க்கின்றார். நினைவிருக்கிறதா? பிரம்மாபாபா ஆதியில் எவ்வளவு குறைந்த சமயத்தில் எல்லாவற்றையும்

பயனுள்ளதாக ஆக்கி விட்டார் என்று. கடைசி நேரம் வரையிலும் கூட தன்னுடைய நேரத்தை பயனுள்ளதாக ஆக்கினார். கர்மாதீத் நிலை அடைந்த பிறகும் கூட எவ்வளவு கடிதங்கள் எழுதினார்? நேரத்தை பயனுள்ளதாக ஆக்கினார் அல்லவா? கடைசி நாளில்கூட, வாயில் மகாவாக்கியம் உச்சரித்தார். கடைசி நாள் வரையிலும் எல்லாம் பயனுள்ள தாக்கினார். ஆதலால் தான் வெற்றி அவருக்கு கிடைத்தது. ஆகவே ஃபாலோ ஃபாதர் (தந்தையை பின்பற்றி நடப்பது) உண்மையில் சங்கமயுகத்தின் ஒவ்வொரு சங்கல்பத்தையும் ஒவ்வொரு செகண்டிலும் பயன்படுத்துவதே, வெற்றி மூரத் ஆவதாகும். எல்லோரும், எங்களுக்கு பிரம்மாபாபாவிடம் மிகவும் அன்பு இருக்கிறது என்று உறுதியாகக் கூறுகின்றீர்கள். அப்படியானால் அன்பின் அடையாளம் என்ன? எது பிரம்மாபாபாவுக்குப் பிரியமானதாக இருந்ததோ, அது தான் குழந்தைகளுக்கும் பிரியமானதாக இருக்க வேண்டும். சமயம், சங்கல்பம், மற்றும் எல்லா கஜானாக்களையும் பயன்படுத்த வேண்டும். வீணாக்கி விடக் கூடாது. அன்பின் அடையாளம் ஃபாலோ ஃபாதர், பிரம்மாபாபா என்ன விசேஷம் செய்து காட்டினார்? எதை நினைத்தாரோ, அதை ஒரு வினாடியில் செய்தார். நினைத்ததோடு நின்று விடவில்லை, பிளான் போட்டதோடு நின்று விடவில்லை. தத்ரூபமாக செய்து காட்டினார். ஆகவே, நீங்களும் அப்படித்தானே? பின்பற்றுபவர்கள் தானே? நல்லது.

இன்று புத்தாண்டு கொண்டாடுவதற்காக நிறைய பேர் வந்திருக்கிறார்கள். நல்லது. ஒருவேளை ஹால் சிறிதாக இருந்தாலும், மனம் பெரிதாக இருக்கிறது. பாருங்கள். மனம் விசாலமானதாக இருப்பதன் காரணமாக, சேர்ந்து ஒன்று கூடி அமர்ந்து விட்டார்கள். (இன்றைய சபாவில் 18-19 ஆயிரம் சகோதர, சகோதரிகள் அமர்ந்திருக்கிறார்கள்.) எல்லோரும் வெளியில் அமர்ந்திருந்தாலும் கூட, கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். வெளியில் அமர்ந்திருப்பவர்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். மறைவாக உள்ளனர். வெளிநாட்டில், எல்லோரையும் விட ஆஸ்திரேலியாவில் 12-மணிக்கு அமருகிறார்கள் என்று பாப்தாதா கேள்விப்படுகிறார். 12-மணிக்கு அமருகிறார்கள். பிறகு 4-மணிக்கு அமிருதவேளை செய்த பிறகு எழுந்திருக்கிறார்கள். ஆதலால் இன்றைக்கு பாப்தாதா ஆஸ்திரேலியாவை நினைவு செய்தார். கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இங்கே

ஆஸ்திரேலியாவிலிருந்து வந்திருப்பவர்கள் இருந்தால் கை உயர்த்துங்கள். ஆதலால் மும்மடங்கு நல்வாழ்த்துக்கள். முதலில் ஆஸ்திரேலியாவுக்கு, பிறகு மற்ற எல்லோருக்கும்.

இந்த ஆண்டின் இலக்ஷியத்தைப் பற்றி சொல்லியாகி விட்டது. பயன்படுத்துங்கள், வெற்றி நிச்சயம். இதை எல்லோரும் உறுதி செய்து கொண்டு விட்டார்கள். பயனுள்ளதாக ஆக்க வேண்டும். வீணாக்குவதல்ல. சங்கமயுகம் சமர்த் யுகம் (சக்திசாலியான) வெற்றி யுகம். வீண் செய்வதல்ல. 63-பிறவிகள் வீணாகி விட்டது. இப்போது இந்த மிகச் சிறிய யுகம், வெற்றியடைவதற்கான யுகமாகும். இதில் நேரத்தை பயனுள்ளதாக்கிக் கொள்வீர்களானால், வருங்காலத்தில், அரைக்கல்பம் முழு நேரமும் இராஜ்ய அதிகாரி ஆவீர்கள். ஒருக்கால், எப்போதாவது மட்டுமே பயன்படுத்தினால், இராஜ்ய அதிகாரமும் எப்போதாவது தான் கிடைக்கும். நேரத்தை பயனுள்ளதாக, பயன்படுத்துவதால் கிடைக்கும் பலன் இது. சுவாசத்தை பயனுள்ளதாக்கினால், 21-ஜன்மம் ஆரோக்கியமாக இருப்பீர்கள். இருக்கும்போதே திடீரென இதயத் துடிப்பு நின்று விடாது, சிலருக்கு இதயத் துடிப்பு நின்று விடுகிறது. சிலருக்கு நாடித் துடிப்பு நின்று விடுகிறது. இப்படி ஆகாது.

ஞான கஜானாவையும் பயனுள்ளதாக்கினால், ஞானம் என்பதன் பொருள் அறிவு. அங்கே அவ்வளவு அறிவாளியாக இருப்பீர்கள். இதன் காரணமாக எந்த ஒரு மந்திரியின் உதவி தேவைப்படாது. இந்தக் காலத்தில் பிரதிக்ஞை எடுத்துக் கொண்ட உடனேயே, மந்திரி சபை அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறார்கள். அங்கே, துணைவர்கள் இருப்பார்கள். மந்திரிகள் இருக்க மாட்டார்கள். ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆனால் ஒவ்வொரு தர்பாரிலும் கிரீடம் அணிந்து அமர்ந்திருப்பார்கள். ராஜ குடும்பத்தைச் சார்ந்தவர்கள், மரியாதையில் குறைந்தவர்கள் அல்ல. சிம்மாசனத்தில் அமராமல் இருக்கலாம், ஆனால் கௌரவம் ஒரே மாதிரியாகவே இருக்கும். ஆதலால் சிம்மாசனத்தில் அமரக்கூடிய அதிகாரிகள் மிக கொஞ்சம் பேர் தான் இருப்பார்கள் என்று நினைக்கக் கூடாது. நீங்களும் கூட ராஜ தர்பாரில் இராஜ்ய அதிகாரி என்ற ரூபத்திலேயே இருப்பீர்கள். உங்களுடைய தலை மீதும் கிரீடம் இருக்கும். உங்களுக்கு முழு அதிகாரமும்

இருக்கும். அப்படியானால் நீங்கள் என்ன ஆவீர்கள்? நம்பர் ஒன்னா? அல்லது நம்பர் வாரா? என்ன ஆவீர்கள்? நம்பர்வார் ஆவீர்களா? நம்பர் ஒன் ஆவீர்களா? என்ன ஆவீர்கள்? நம்பர் ஒன்? அல்லது நம்பர் வார்? அப்படியானால் என்ன செய்ய வேண்டியதிருக்கும் என்று தெரியுமா? தைரியமிருக்கிறது. இது மிகவும் நல்லது ஆனால் முதல் நம்பரில் வருவதற்கு முதலில் வெற்றியடைய வேண்டியதிருக்கும். செய்து கொண்டிருக்கிறீர்கள் அல்லவா? செய்வோம் என்று சொல்லாதீர்கள். செய்து கொண்டிருக்கிறோம். மற்றவர்களும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பிரம்மாவுக்கு துணைவர்களாயிருந்த சிந்திகள் நிறையப் பேர்கள் வந்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். கை உயர்த்துங்கள். இந்தி அல்ல சிந்தி! குழந்தைகள் எழுந்திருங்கள். குடும்பம், குடும்பமாக வந்திருக்கிறார்கள் நல்லது. ஏதாவது அற்புதம் செய்து காட்டுவீர்கள் இல்லையா? என்ன செய்வீர்கள்? (மெஸ்ஸேஜ் கொடுப்போம்) அது தான் செய்து கொண்டிருக்கிறீர்களல்லவா? நல்லது. 38-பேர் வந்திருக்கிறீர்கள் என்ன விசேஷம் செய்து காட்டப்போகிறீர்கள்? சரி. நிறைய சொல்லப்போவதில்லை. சிறு விஷயம் சொல்லப்போகிறேன். செய்வதற்குத் தயாரா? குழந்தைகளும் அற்புதம் செய்து காட்டுவீர்கள் அல்லவா? (38-லக்ஷம் தயார் செய்வோம்) நூறு மடங்கு நல் வாழ்த்துக்கள். நீங்கள் மிகப் பெரிய விஷயம் சொல்லி விட்டீர்கள். பாப்தாதா சிறு விஷயம் தான் கூறுகின்றார். ஒவ்வொரு வரும், ஒவ்வொருவரைக் கொண்டு வாருங்கள். கொண்டு வருவீர்களா? ஒருவர், இன்னொருவரைக் கொண்டு வாருங்கள். குழந்தைகள், குழந்தைகளை அழைத்து வாருங்கள். மாதாக்கள் மாதாக்களை அழைத்து வரட்டும். அல்லது சகோதரியை அழைத்து வரட்டும் ஆனால் ஒவ்வொருவரும், இன்னொருவரைக் கொண்டு வர வேண்டும். இந்த குரூப்பைப் பார்த்துக் கொள்ளுங்கள் இவர்களுக்கு நீங்கள் வழிகாட்டுங்கள். அடுத்த ஆண்டு, அழைத்து வர வேண்டும். டபுள் குரூப் அழைத்து வர வேண்டும். பாப்தாதா என்ன விரும்புகின்றார் என்றால், எங்கிருந்து ஆரம்பமானதோ, அங்கு தான் பிரத்யக்ஷமும் ஆக வேண்டும். இரக்கம் வருகிறதல்லவா? பிரம்மாபாபாவின் தேசத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதால், தேச வாசிகளிடம் அன்பு இருக்கும்.

உங்களிடம் கஜானா நிறைய இருக்கிறது. குணங்களின் கஜானா எவ்வளவு பெரியது! சக்திகளின் சுஜானா எவ்வளவு பெரியது? ஆகவே,

குணதானம், சக்திகளின் தானம் செய்யக்கூடிய மாஸ்டர் வள்ளல் ஆகுங்கள். யார் வந்தாலும், சம்மந்தத்தில் வர விரும்பினாலும் சரி, தொடர்பில் இருக்க விரும்பினாலும் சரி, அவர்களுக்கு ஏதாவதொரு குணம் அல்லது சக்தியை அன்பளிப்பாகக் கொடுங்கள். ஒருவர் கூட வெறுங்கையோடு சென்று விடக் கூடாது. வேறொன்றுமில்லாவிட்டாலும், பாபாவினுடைய செய்தியை இனிமையான சொற்கள் மூலமாகக் கூட அன்பளிப்பாக அளிக்கலாம். உலகினர் ஏதாவது உற்சவ காலங்களில், ஒருவர் இன்னொருவருக்கு இனிப்பு வழங்குகிறார்கள் ஆனால் பாப்தாதா கூறுகின்றார். இனிப்பு வழக்க வேண்டியது தான் ஆனால் தனது இனிமையான முகத்தையும் காட்ட வேண்டும். இனிப்பு மட்டுமல்ல, முகமும் கூட இனிமையாக இருக்க வேண்டும். இவ்வளவு மதுரமான தன்மை சேமிப்பில் இருக்க வேண்டும். இந்த சேமிப்பை மற்றவர்களுக்குக் கொடுப்பதன் மூலம் மன நிறைவுடன் இருங்கள். இந்த கஜானாவை எவ்வளவு பிறருக்கு வழங்கினாலும், அதிகமாகுமே தவிர, குறையாது. ஆதலால் இந்த ஆண்டு, குறித்து வைத்துக் கொள்ளுங்கள், எந்த ஒரு ஆத்மா வந்தாலும் அவருக்கு ஏதாவது கொடுக்க வேண்டும். ஒருவேளை கேட்கக் கூடியவரக இல்லை என்றால், இனிய சக்திசாலியான திருஷ்டி கொடுக்க வேண்டும் ஆனால் கண்டிப்பாக கொடுக்க வேண்டும். வெறுங்கையோடு திரும்பக் கூடாது. இது சுலபம் தானே? அல்லது கஷ்டமா? யூத் குரூப் என்ன சொல்கிறீர்கள்? சகஜமா? கையை மிக நன்றாக அசைக்கிறார்கள். யூத் குரூப்பும் நிறையப் பேர் வந்திருக்கிறார்கள்.

டபுள் விதேஷி யூத் ரிட்ரீட் குரூப்: எல்லோரையும் விட சிரேஷ்ட சக்தி (யூத்) இளைய வர்க்கத்தினருக்கு பரிவர்த்தனை சக்தி ஆகும். நினைத்தார்கள், செய்து முடித்தார்கள். இளைஞர்கள் நிறைய உறுதி மொழி கொடுத்திருக்கிறார்கள் அல்லவா? பாப்தாதாவுக்கு செய்தி கிடைத்தது. எல்லா இளைஞர்களும் யாராக ஆகியிருக்கிறார்கள்? (எல்லா இளைஞர்களும் கை அசைக்கிறார்கள்) எல்லோரும் திலகதாரி ஆகி வந்திருக்கிறார்கள். யாரெல்லாம் விசேஷமாக பயிற்சி செய்ததன் மூலம் திலக மணிந்து வந்திருக்கிறார்களோ, அந்த திலகதாரிகள் எழுந்து நில்லுங்கள். நல்ல அடையாளம் போட்டிருக்கிறார்கள். ஆத்மா பளிச்சிடுகிறதல்லவா? இந்தப் பயிற்சி மூலமாக, எங்கள் இதயம்

கோல்டன் இதயமாகி விட்டது என்று கருதுபவர்கள் கை உயர்த்துங்கள். கோல்டன் ஹார்ட் ஆகி விட்டது. இவர்களோ, மற்றெல்லோ ரையும் விட முன்னேறிச் சென்று விட்டார்கள். கோல்டன் ஸ்டார் அல்ல. கோல்டன் ஹார்ட். ஆகவே, இவர்கள் வெற்றி மூரத் ஆகி விட்டார்கள். இப்போது கோல்டன் ஹார்ட் பிளானில் (திட்டம்) கொஞ்சம் கீழே இறங்கி விட மாட்டார்கள் தானே? தங்களுடைய நாட்டுக்குச் சென்றவுடன் கொஞ்சம் கோல்டன் சில்வர் ஆகி விடுவீர்களா? ஆக மாட்டீர்கள் அல்லவா! நல்லது. பாரதத்தின் ஆத்மாக்களை விழிப்படையச் செய்யும் அளவுக்கு தயாராகி விடுங்கள். தைரியமிருக்கிறதா? பாரதத்தை விழிப்புணர்வடையச் செய்வீர்களா? பாரத வாசிகள் நிறைய குதர்க்கமான கேள்வி எல்லாம் கேட்பார்கள்? பதில் கொடுப்பீர்களா? உங்கள் எல்லோருடைய போட்டோவும் டி.வி.யில் வருகிறது. பாரதத்தை எழுப்புவதற்கு, உங்களுக்கு அழைப்பு வரும். ஆதலால் எவர் ரெடியாக இருக்க வேண்டும். ஒருவேளை டிக்கெட் கிடைக்கா விட்டலும், கிடைத்து விடும். வெளிநாட்டினரிடம் என்ன விசேஷமிருக்கிறது என்பது பாப்தாதாவுக்குத் தெரியும். ஒரு முறை இங்கு வந்து சென்றதுமே, அடுத்த முறை வருவதற்கு அவசியமான எல்லா ஏற்பாடுகளையும் ஆண்டு முழுவதும் செய்து கொண்டேயிருப்பார்கள். நல்லது. எத்தனை தேசத்திலிருந்து யூத் வந்திருக்கிறார்கள்? (21-தேசம்) இந்த கோல்டன் ஹார்ட் அற்புதம் (கமால்) செய்து காட்டுவார்கள் என்று பாப்தாதாவுக்குத் தெரியும். நல்ல கவனம் வைத்திருக்கிறார்கள். சுய புருஷாரத்தத்தில் இந்த முறை அதிக கவனம் செலுத்தியிருக்கிறார்கள். பாப்தாதா இதற்காக, மிகவும் குஷி அடைகின்றார். நல்லது. குரூப், குரூப்பாக செய்வதால், கவனம் இருக்கிறது. எல்லோரும் ஒரே கூட்டமாக சேர்ந்திருப்பதற்குப் பதிலாக குரூப் நன்றாயிருக்கிறது ஆனால் பாஸிட்டிவ்வாக இருக்க வேண்டும். நல்லது. பாப்தாதா குரூப், குரூப்பாக எழுந்து நிற்கும்படி செய்கின்றார்.

**அந்தர் முகி குரூப்:** நல்ல புருஷாரத்தம் செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு குரூப்பும் தாங்கள் மற்றவரை விட முந்திச் செல்ல வேண்டும் என்று ஒவ்வொரு குரூப்பைச் சார்ந்தவர்களும் விரும்புகிறார்கள். பொறாமைப்படுவதில்லை. போட்டி போடுகிறார்கள். நல்லது. அந்தர்முகி, சதா சுகி.

**சக்தி குரூப்:** பாப்தாதா சக்தி குரூப்பைப் பார்த்துக் கேட்கின்றார். பிரத்யக்ஷத்தா கொடி எப்போது பறக்க விடலாம்? கூறுங்கள். சக்திகள்

என்றால், கொடி பறக்க விடுபவர்கள் தானே! நல்லது. இப்போது உங்களுக்குள் பேசி தேதி குறிப்பிட வேண்டும். எப்படி மற்ற தேதி குறிப்பிடுகிறீர்களோ, அதுபோல, எந்த தேதியில் பிரத்யக்ஷத்தா கொடி பறக்க விடலாம் என்பதற்கும், ஒரு தேதி தேர்ந்தெடுத்து நிச்சயப்படுத்துங்கள். பறக்க விடுவீர்கள் அல்லவா?

மகாவீர் குரூப்: மகாவீர் குரூப் என்ன செய்ய போகிறார்கள்? இந்த ஆண்டோடு, சதா காலத்திற்கும் மாயைக்கு விடை கொடுக்க வேண்டும். முடியுமா? மாயைக்கு விடை கொடுபீர்களா? அல்லது, வரட்டும், பரவாயில்லை என்கிறீர்களா? மகாவீர் என்பதன் பொருள் எப்படி பிரம்மாபாபா சொன்னதைச் செய்தாரோ, நினைத்ததை உடனே, தானம், புண்ணியமும் சமானமாகச் செய்தாரோ அப்படி இப்படித்தான் மகாவீர் குரூப்பினுடைய இலக்ஷியம் இருக்கிறதல்லவா? செய்வீர்களா? நல்லது. தைரியம் இருக்கிறது. வெளிநாட்டின் சிறு குழந்தைகளின் குரூப்: எல்லோரும் தங்களுடைய அடையாளம் வைத்து விட்டார்கள். இளைஞர்கள் திலகம் வைத்தார்கள், இவர்கள் பேனர் தயார் செய்தார்கள், கொடி கையில் உள்ளது. ஏஞ்சலிலிருந்து, தேவதா ஆகி விட்டார்கள். எவ்வளவு நன்றாக இருக்கிறது! ஆகவே, தேவதை என்றால், திவ்ய குணம் உடையவர்கள். ஆதலால் திவ்ய குணத்தை ஒரு போதும் விட்டு விடக்கூடாது. நல்லது. குழந்தைகளின் ஆர்வம் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. இந்திய குழந்தைகளும் எழுந்திருங்கள். பாரதத்திலிருந்து 1000-குழந்தைகள் வந்திருக்கின்றனர். நன்றாயிருக்கிறது. பாரதம் மற்றும் வெளி நாட்டிலுள்ள எல்லா நாடுகளையும் சேர்த்து தில்லியை முற்றுகை இடுங்கள். டெல்லியை தங்களுடைய இராஜதானி ஆக்க வேண்டுமல்லவா? ஆகவே, முதலில் இராஜதானி தயார் செய்வீர்கள், அப்போது தானே, இராஜ்யம் செய்ய முடியும்! இப்படி டெல்லியின் நாலா பக்கமும் முற்றுகையிட்டால் முழு பாரதத்தில் உள்ள வி.ஐ.பி.க்கள் விழிப்படைவார்கள். பாரதத்தின் குழந்தைகளும் செய்வார்கள் அல்லவா! நல்லவர்களாக இருக்கிறார்கள். பாரதமும் ஒன்றும் குறைந்ததல்ல. நல்ல, நல்ல குழந்தைகள் வந்திருக்கிறார்கள். நல்லது.

இப்போது இந்த ஆண்டு என்ன புதுமை செய்து காட்டப் போகிறீர்கள்? இப்போது பாப்தாதா என்ன சேவை கொடுத்திருக்கின்றாரோ, அதை இன்னும் செய்யவில்லை. மைக் மற்றும் வாரிஸ் குரூப் கொண்டு

வரவில்லையே? பாப்தாதா இதைத்தான் கூறுகின்றார். வெயிட் ஆண்டு ஸீ (பொறுத்திருந்து பாருங்கள்) பிரத்யக்ஷத்தா கொடியை பறக்க விடுவதில் மைக்காக (மக்களிடையே பிரசித்தமாக இருப்பவர்கள்) உள்ளவர்கள் கெட்டிக்காரர்களாக இருப்பார்கள். வெவ்வேறு நாடுகளில் இப்படிப்பட்டவர்கள் உள்ளனர் ஆனால் இப்போது மறைவாக இருக்கிறார்கள். திரைக்குப் பின்னால் இருக்கிறார்கள். அவர்களை இப்போது வெளியில் கொண்டு வர வேண்டுமல்லவா? மிக நல்லது.

**மாதாக்கள் குரூப்:** மிகப் பெரிதாக இருக்கிறது. எழுந்திருக்கச் சொன்னால் முழு ஹாலில் இருப்பவர்கள் மறைக்கப்பட்டு விடுவார்கள். மாதாக்களைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகின்றார். ஏன் மகிழ்ச்சியடைகின்றார்? ஏனென்றால் சங்கமத்தில் மாதாக்களுக்கு பாப்தாதா மூலமாக வாய்ப்பு கிடைக்கிறது. துவாபர கலியுகத்தில் கிடைக்கவில்லை. இப்போது கிடைத்துக் கொண்டிருக்கிறது. மாகாத்மாக்களை விடவும் இப்போது நாளுக்கு நாள் அதிகமாக வாய்ப்பு கிடைத்துக் கொண்டிருக்கிறது. அரசு காரியங்களில் கூட, இப்போது மாதாக்களுக்கு சேவை செய்வதற்கான வாய்ப்பு கிடைத்துக் கொண்டிருக்கிறது. பாப்தாதா சதா கூறுகின்றார். இந்த மாதாக்கள் எந்த சென்டரில் இருக்கின்றார்களோ, அந்த சென்டர் சதா செழிப்பாக இருக்கும். இவர்களுக்கு வருமானம் இல்லாமலிருக்கலாம், ஆனால் மனம் விசாலமாக இருக்கிறது. பாவனை அதிகமாக இருக்கிறது. ஆதலால் பாபாவுக்கும் கூட, இந்த பாவனையும் உண்மையான உள்ளமும் பிடித்தமானதாக இருக்கிறது. ஒவ்வொரு குரூப்பிலும் பார்க்கும்போது, மாதாக்கள் அதிகமாகவே இருக்கின்றார்கள். ஆகவே மாதாக்கள் தங்களைச் சேர்ந்தவர்களை மேலும் எழுப்ப வேண்டும். நீங்கள் அழைத்துக் கொண்டு வந்தால், ஹால் தானாகவே இன்னும் பெரிதாகி விடும். இப்போது ஹால் நிறைந்து விட்டது. இன்னும் எங்கே அமர்வது என்று யோசிக்காதீர்கள். கொண்டு வந்தால் எல்லாம் சரியாகி விடும். ஆகி விடுமல்லவா? என்ன செய்வது என்று தாதிக்கு கவலையில்லை. குறைந்தபட்சம் 9-லக்ஷம் பேர் அமர வேண்டும். இத்தனை பிரஜைகள் தயார் செய்வீர்களா, இல்லையா? எப்போது செய்வீர்கள்? இந்த தேதியை நிர்ணயிக்க வேண்டும். முதலில் 9-லக்ஷம் பேர் கொண்டு வருவார்கள். பாண்டவர்கள் கொண்டு வருவார்கள். பாப்தாதா ஹால் தயார் செய்து விடுவார் ஆனால் 9-லக்ஷம் கொண்டு

வர வேண்டும். ஒவ்வொரு வருடத்திற்கு ஒரு லக்ஷம் இப்படி இல்லை. அப்படி வருவதாக இருந்தால் வரட்டும். தடை எதுவுமே இல்லை ஆனால் கடைசியில் மேடையில் 9-லக்ஷம் கொண்டு வருவீர்களா, இல்லையா? இல்லாவிடில் யார் மீது ஆட்சி செய்வீர்கள்? உங்களுடைய முதல் ஜன்மத்தில் 9-லக்ஷம் கூட பிரஜைகள் மற்றும் ராஜ குடும்பத்தினர் இல்லாவிட்டால், யார் மீது ஆட்சி செய்வீர்கள்?

மதுபன் வாசிகள் என்ன நினைக்கிறார்கள்? 9-லக்ஷம் வேண்டுமா? வேண்டாமா? 9-லக்ஷம் வேண்டும். முக்கியமாக பாண்டவர்கள் என்ன நினைக்கிறார்கள்? வேண்டுமா? வேண்டாமா? ஆகி விடும். எப்போது 9-லக்ஷம் வருவார்களோ, அப்போது சாதனங்கள் தானாகவே சேர்ந்து விடும். பயப்பட வேண்டாம். ஹால் தயார் செய்ய வேண்டும். பாருங்கள், வருங்காலம், மிக மிக பிரகாசமாக இருக்கிறது. எல்லா சாதனங்களும் கிடைத்து விடும். ஹால் ரெடிமேடாக கிடைத்து விடும். தயார் செய்ய வேண்டியதிருக்காது. இது மாத்திரம் செய்யுங்கள். இந்த ஆண்டுக்கு சுலோகம் கொடுக்கப்பட்டிக்கிறதல்லவா! பயன்படுத்துங்கள் (கஜானாக்களை), வெற்றி நிச்சயிக்கப்பட்டிருக்கிறது! நல்லது. பாண்டவர்கள் கை அசையுங்கள்.

டீச்சர்ஸ்: டீச்சர்கள் இப்போது உங்களை பயன்படுத்துங்கள். பயன்படுத்தச் செய்யுங்கள். சேவையில் விருத்தி வர வேண்டும். அதாவது கஜானாக்களை பயன்படுத்தினோம், பயன்படுத்தச் செய்தோம். ஆதலால் இந்த ஆண்டு, இந்த சுலோகத்தை நடைமுறையில் கொண்டு வந்தால், தானாகவே விருத்தியாகிக் கொண்டேயிருக்கும். தைரியம் கொடுங்கள். பாப்தாதா பார்த்திருக்கின்றார். சிற்சில இடங்களில், தைரியம் கொடுக்கும் சக்தி குறைவாக இருக்கிறது. தைரியம் கொடுங்கள். ஒவ்வொரு காரியத்திலும், மனம், சொல், சம்மந்தம், தொடர்பு, கர்மத்திலும் கூட தைரியம் கொடுங்கள். டீச்சர்ஸ் ஆசனம் என்றால், தைரியமாக இருப்பது. தைரியம் கொடுப்பது ஏன்? ஏனென்றால் டீச்சர்களுக்கு பாபாவின் முரளி படிப்பதற்கு எந்த ஒரு வாய்ப்பு மற்றும் சிம்மாசனம் கிடைத்திருக்கிறதோ, இது கூடுதலான உதவி ஆதலால் தைரியம் மற்றும் மகிழ்ச்சியை உண்டாக்குங்கள். முழு வகுப்பும் ஆன்மீக ரோஜா மலர்ந்திருக்கும் காட்சி தெரிய வேண்டும். டீச்சர்ஸ் கேட்டீர்களா? வகுப்பை மகிழ்ச்சியில் கொண்டு வாருங்கள்.

சேவை வாய்ப்பு இந்தூர் ஜோன்: நல்லது. இந்தூர் குரூப் எழுந்திருங்கள். நல்லது. சேவை செய்வதற்கு டைமண்டு சான்ஸ் கிடைத்திருக்கிறது. ஒன்று கர்மனா மற்றொன்று சுய உன்னதி இரண்டுக்குமான வைரசமமான வாய்ப்பு கிடைத்துள்ளது. நல்லது. எல்லோரும் நல்ல தைரியத்துடன் செய்தார்கள். சேவையில் ஆர்வமும் நன்றாக இருந்தது. எல்லாவற்றிலும் பெரிய குரூப்பை சமாளித்திருக்கிறீர்கள். ஆகவே, இந்த தைரியத்திற்கு பிரதிபலனாக பாப்தாதா பதம் குணா (நூறு மடங்கு) நல்வாழ்த்துக்களை அளிக்கின்றார். சதா வைரம்போல, சேவையில் வைரமான வாய்ப்பை எடுத்துக் கொண்டேயிருக்க வேண்டும். நல்லது. மிகவும் நல்லது.

ஜூரிஷ்ட் விங் சகோதர, சகோதரிகளின் மீட்டிங் நடந்து கொண்டிருக்கிறது. இன்டர்நேஷனல் தானே! (பன்னாடுகள் சேர்ந்து) எப்போது இத்தனை வக்கீல்கள், நீதிபதிகள் வந்து விட்டீர்களோ, அப்போது கீதையின் பகவான் யார் என்பது உறுதியாகி விடும். நல்லது. மிகவும் நல்லது. வேறு யாரும் இது வரை செய்யாத பிளான் ஒன்று தயார் செய்யுங்கள். நிறைய வர்க்கங்கள் தயாராகி விட்டதல்லவா! ஆகவே உங்களுடைய வர்க்கம் (விங்) மற்றவரை விட நம்பர் ஒன்னாக இருக்கும்படி எடுத்துக் கொள்ளுங்கள். நல்லது. குரூப் நன்றாக இருக்கிறது ஆனால் பிளான் எப்படி இருக்க வேண்டுமென்றால், பாம்பு சாக வேண்டும், கம்பும் ஒடிந்து விடக்கூடாது. பிரத்யக்ஷம் ஆக வேண்டும், பிரச்சினை ஏற்படாமல் அற்புதம் நிகழ்த்த வேண்டும். நல்லது. இன்னும் அதிகமான எண்ணிக்கை கூட்டுங்கள். (பிளான் தயார் செய்து விட்டீர்கள்) நல்வாழ்த்துக்கள். நல்லது.

கல்ச்சுரல் குரூப்: நாட்டியம் எல்லோருக்கும் எளிதாக ஆட வருகிறது. பாபாவின் குணங்களைப் பற்றிப் பாடவும் தெரிகிறது. மேலும் சந்தோஷமாக நாட்டியம் ஆடவும் வருகிறது. நன்றாயிருக்கிறது. கலாச்சாரம் (கல்ச்சர்) மூலமாக பாரதத்தினுடைய ஒழுக்கத்தை பிரசித்தம் செய்யுங்கள். கலாச்சாரம் இருக்கட்டும் ஆனால் சிரேஷ்டமான ஒழுக்கம் எது என்பது உறுதியாகி விடும்படியாக இருக்க வேண்டும். (இது தான் சரியான ஒழுக்கம் என்பது) நல்லது. எப்போதிருந்து வர்க்க சேவை (விங்) ஆரம்பமானதோ, அது முதலாக

தனித்தனியே, சேவை செய்து கொண்டிருக்கின்றார்கள். அற்புதம் நிகழ்த்திக் காட்ட வேண்டும். எல்லோரும் அற்புதம் நிகழ்த்திக் காட்டுபவர்கள் தானே? அற்புதம் செய்ய வேண்டும் அல்லவா? ஒவ்வொரு வர்க்கமும், இப்போது புதிய புதிய பிளான் தயார் செய்ய வேண்டும். இந்த வர்க்கம் (விங் சேவை) ஆரம்பித்து எத்தனை ஆண்டுகள் ஆகின்றன. (20-ஆண்டுகள்) பாப்தாதா எல்லா வர்க்கத்தினருக்கும் ஏற்கனவே கூறியிருக்கிறாரல்லவா? நினைவிருக்கிறதா? ஒவ்வொரு சாராரும், அவரவர் வர்க்கத்தின் விசேஷ சேவையில் மைக் (பிரசித்தமானவர்கள்) ஆக வேண்டும், வாரிஸ் ஆக வேண்டும், இப்படிப்பட்ட ஒரு மொத்த குரூப் தயார் செய்யுங்கள். இப்போது உங்களுடைய கலாச்சார வர்க்கத்தில் யார் தயாராகியிருக்கிறார்கள். கொண்டு வந்திருக்கிறீர்களா? அப்படியானால் பாபாவின் செய்தியை கொடுப்பதற்காக உங்கள் சார்பில் (பம்பாயில் பிரசித்தி பெற்ற ஆக்டர்) பரிச்சயமுள்ள (அறிமுகம்) சஹானி பரிவாரம்). பாப்தாதா எதிரில் நின்று கொண்டிருக்கிறார்கள். எல்லோரும் சுண்டுவிரல் (உதவி) கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நல்லது. பிளான் தயார் செய்யுங்கள். தைரியம் உங்களுடையது. உதவி பாபாவினுடைய உதவி இருக்கவே இருக்கிறது.

நல்லது. ஒரு வினாடியில் மனப்பயிற்சி நினைவு இருக்கிறதா**?** ஒவ்வொருவரும் முழு நாளில் எத்தனை முறை இந்த டிரில் செய்கிறீர்கள்? இதைக் குறித்து வையுங்கள். இந்த மன டிரில் எத்தனை முறை செய்கிறீர்களோ, அவ்வளவு சகஜயோகி, சரலயோகி ஆவீர்கள். ஒரு பக்கம் மனசா சேவை, இன்னொரு பக்கம் மனப் பயிற்சி. உடனுக்குடன் நிராகாரி, உடனுக்குடன் பரிஸ்தா, பிரம்மாபாபா பரிஷ்தாக்களாகிய உங்களை அழைக்கின்றார். பரிஷ்தா ஆகி பிரம்மாபாபாவுடன் தங்களுடைய வீட்டுக்கு நிராகார ரூபத்தில் வர வேண்டும். பிறகு தேவதையாக வேண்டும். நல்லது.

நாலா பக்கங்களிலுமிருந்தும் மிகுந்த அன்பு நினைவுகள், கார்டுகள், கடிதங்கள், ரூபத்தில் பாப்தாதாவிடம் வந்து சேர்ந்திருக்கின்றன. ஒவ்வொரு குழந்தையும், எனது அன்பு நினைவை பாப்தாதாவிடம் தெரிவியுங்கள் என்று கூறுவதை பாப்தாதா அறிவார் ஆனால் கிடைத்து விட்டது. அன்பு நினைவுகளை அளித்த செல்லமான குழந்தைகள்

பாப்தாதாவின் எதிரில் இருக்கின்றனர். ஆதலால் பாப்தாதா கூறுகின்றார், ஒவ்வொரு குழந்தையும் அவரவர் பெயர் சார்பில் வாழ்த்துகளையும், உள்ளபூர்வமான ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்ள வேண்டும். உங்கள் எல்லோருக்கும் கூட நவஜீவன் (புதிய வாழ்க்கை) நவயுகம், மற்றும் புத்தாண்டுக்கு மிக மிக அநேக எண்ணற்ற நல்வாழ்த்துக்களையும் உளப்பூர்வமான ஆசீர்வாதங்கள், அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

தாதி ஜானகிஜியுடன்: நீங்கள் இருவரும் ஒற்றுமையாக, முழு பரிவாரத்தையும் நடத்திச் செல்வதற்கு நிமித்தமாயிருக்கிறீர்கள். இவர்கள் எல்லோரும் உங்களுடைய துணைவர்கள். ஏற்கனவே கூறினேன் அல்லவா, பயன்படுத்திக் கொண்டே செல்வீர்களானால், மாயாஜீத் ஆகியே தீர்வீர்கள். தாதிகள் கூறுகின்றார்கள். எல்லோரும் இந்த ஆண்டில் ஒற்றுமையாக இருப்பவர்கள் ஆகி விடவேண்டும். யாரைப் பார்த்தாலும், ஒருவராகவேத் தெரிய வேண்டும். எப்படி தாதிகளைப் பார்த்து, கூறுகின்றீர்கள் அல்லவா, ஒன்றாகவே இருக்கிறார்கள் என்று, இதே போல மற்ற தாதிகளும் மூத்த சகோதரர்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். இதற்கான சுலோகன்: உடனுக்குடன் பாலகன் (குழந்தை) உடனுக்குடன் மாலிக் (எஜமான்). எல்லோரும் குழந்தையாக இருக்க வேண்டிய நேரத்தில் மாலிக் ஆகி விடக் கூடாது. ஆகவே, தாதிகளுக்கு எந்த ஒரு சங்கல்பம் வந்திருக்கிறதோ அதை யார் முடித்துக் காட்டுவார்கள்? சேர்ந்து செய்வீர்கள் அல்லவா? ஒருவேளை கருத்து வேறுபாடு வந்தால், அந்த சமயத்தில் என்ன செய்வீர்கள்? நல்லது. எல்லோரையும் பார்த்து, பாப்தாதா மகிழ்ச்சியடைகின்றார். ஒரு நாள் வரும். மிக சீக்கிரமாக வரும். அப்போது நாங்கள் எல்லோரும் சுய பரிவர்த்தனை செய்யக்கூடிய சக்தி, பாண்டவ சேனை என்று கூறுவீர்கள். சுய பரிவர்த்தனை. சென்ற ஆண்டுக்கு விடை கொடுப்பதுடன், மாயைக்கும் விடை கொடுத்து விடுங்கள். அதுவும் (மாயா) களைப்படைந்து விட்டது. விடை கொடுத்தல், நல்வாழ்த்துக்களை அளித்தல் இரண்டும் சேர்ந்து.

புத்தாண்டு **2003**'ன் சுப ஆரம்பம் -டிசம்பர் **31, 2002** இரவு **12.00** மணிக்குப் பிறகு பாப்தாதா எல்லா குழந்தைகளுக்கும் புத்தாண்டு நாள் வாழ்த்துக்களை அளித்தார்! நாலா பக்கங்களிலுமுள்ள மிகவும் இனிய,

மிகவும் அன்பான குழந்தைகளுக்கு நூறாயிரம் மடங்கு புத்தாண்டு வாழ்த்துக்கள்! இப்போது எந்த நேரம் கடந்து விட்டதோ அதற்கு விடை கொடுத்தல் மற்றும் வரவேற்கும் நேரம். ஒரு பக்கம் விடை கொடுக்க வேண்டும். அதாவது எது தன்னில் சம்பன்னமாகாமல் குறைவாக இருக்கிறது என்று அனுபவம் செய்கிறீர்களோ, அதற்கு விடை கொடுத்தல். சதா காலத்திற்கும் விடை கொடுத்து விட வேண்டும். மேலும் முன்னேறி பறந்து செல்வதற்காக நல் வாழ்த்துக்கள், நல்வாழ்த்துக்கள், நல்வாழ்த்துக்கள்! நல்லது. ஓம் சாந்தி.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂